பரணர்

சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர்
பேராசிரியர் ஔவை. துரைசாமி பிள்ளை

கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர்...
1995.

பரணர்

சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர்,

பேராசிரியர் ஔவை. துரைசாமி பிள்ளை

இந்நூல் அரிய தமிழ் நூல்களை வெளியிட
நிதியுதவி வழங்கும் தமிழ்நாடு அரசின்
திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்றது.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,

தஞ்சாவூர்.

1995

முதற் பதிப்பு : 1–1–1995

உரிமை : கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்.
Karanthai Tamil Sangam, Thanjavur.

விலை : ரூ. 35-00

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின்
பிற வெளியீடுகள்

1. "தமிழ்ப் பொழில்" திங்கள் இதழ்
2. செய்தி மலர்
3. நக்கீரர்
4. கபிலர்
5. அஞ்ஞானத்தின் வழக்கீடு
6. தொல்காப்பியம் தெய்வச் சிலையார் உரை
7. தமிழரசி குறவஞ்சி
8. வெள்ளிவிழா மலர்
9. கவியரசு நினைவு மலர்
10. யாழ் நூல்
11. தமிழவேளின் நூற்றாண்டு மலர்
12. கட்டுரைப் பூங்கா
13. கட்டுரைப் பொழில்
14. இராசராசன் முடிசூடிய 1000-வது ஆண்டுவிழா மலர்
15. கரந்தைத் தமிழ்ச் சங்கச் செய்திமலர் சிறப்பிதழ்
16. எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டு நினைவு மலர்
17. Service Unto Language and Culture
    Life Sketch of Tamilavel T. V. Umamaheswaram Pillai.

கிடைக்குமிடம் :

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.



செந்தமிழ்ப் புரவலர் தமிழவேள்

த. வே. உமாமகேசுவரனார், பி.ஏ., பி.எல்.,

சங்கத்தின் முதற்றலைவர்.



சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர்,
பேராசிரியர் **ஔவை. துரைசாமி பிள்ளை**

தமிழ் வாழ்க

முன்னுரை

கரந்தைத் தமிழ்ச் சங்கமும் உரைவேந்தரும்

திருவளரும் இப்பெரு நாட்டில் தோன்று தொட்டு வழங்கி, நமது வாழ்க்கையை வழிப்படுத்தி நிற்கும் மொழிகள் பல. அவற்றினுள் முதன்மையானது **தமிழ்.** இதன் தோன்றற் காலம் இன்னது என்று அறிய முடியாதது. மற்றை மொழிகளைத் தனது துணைவேண்டா வென்றியால் அடிமை கொண்டு, தன்னையொத்த சிறந்த மொழிகள் பலவற்றிற்கும் தான் தாயாகி வேற்று மொழிகள் சிதைந்தொழிந்த காலத்தும் தான் தன் பண்டைய இளமை மாறாது, என்றும் ஒருபடித்தாய்த் திகழ்வதும், தன்னை வழங்கும் மக்கட்கு அவர் தன்னிழலிற் பிறந்தமையினாலே உரிமைபல அளித்து உயர்வடையச் செய்வதும் **தமிழ்.** இதன் பண்டைப் பெருமை எல்லையற்றது.

உலகத்து முந்தை மனிதர் பேச நாவியக்கமின்றிக் குறிகாட்டித் திரிந்து, வனங்களிலும் குகைகளிலும் விலங்கினத் தோடொப்ப வாழ்ந்த போது, பைய நாவையசைத்துப் பொருள் கட்குப்பெயர் பொறித்து, வாழ்க்கையின் இனிய சாறுகளைச் சுவைக்க இடம் கொடுத்தது **நந்தமிழ் !** தழையும் தோலுமே உடுக்கையிற் சிறந்தவையென மற்றையோர் அணிந்தபோது பாம்புரிவை போன்ற பட்டுடையுடுத்தது **தமிழ் !** முற்காலத்துக் கல்வி அறிவொழுக்கங்களிற் சிறந்தயவனர், புலவர்க்கும் பரணர்க்கும் இலை முடியளித்தபோது, புனைதேரும், முகபடாஅம் போர்த்த களிறும், பொற்றாமரையும் வரையாது வழங்கியது **தமிழ்!** பெருமாண்புடையார் அவ்வவர் வாழ்நாட்குப் பின்னும் நிலைபெற்றிருக்கச் செய்யும் விரகு மற்றையோர் அறியா திருந்த போது, அவருக்கு உருவச்சிலை நாட்டி வழிகாட்டியது **தமிழ் !** பொருள் வேண்டின் கொள்ளை கொள்வதையே மற்றையோர் தொழிலாகக் கொண்ட காலத்தில், திரைகடல் ஓடித் திரவியம் தேடியது **தமிழ் !** இரண்டொரு பயிரேயன்றி வேறுவளர்க்க அறியாது மற்றையோர் இருந்த நாளில், பதினெண்வகைக்கூலங் களைப்பயிர் செய்து பாருக்கு அளித்தது **தமிழ் !** ஒரு குலத்துக் கொருநீதி வழங்கிய காலத்தே துலாக் கோலன்ன நடுநிலைமை குன்றாதிருந்தது **தமிழ் !** நமது முன்னோர் தாய்மொழியைத்

தமது உயிரும், அதனோடு மூத்து அதனினும் சிறந்த தம் புகழேயும் போற் போற்றி வளர்த்தனர். தமது கடமையும் அதுவேயென அறிவுறுத்தினால் நந்தமிழ்மக்கள் ஊக்கம் பெறுவர். மனவலி மிகுந்து தாய்மொழித் தொண்டியற்றும் திண்ணியவராவர்.

'தமிழ் மக்கள் யாம்' என்று சொல்லிக் கொள்வோரே, அவர் மொழியைப் புறக்கணித்துத் தம்மைத் தாமே மதியாது வேற்றுமொழிகளில் நாட்டங்கொண்டு கற்கத் தொடங்கினர். தனித்தமிழ் மொழியாகிய தமிழும் படிப்படியாக இந்த நாட்டை வென்றோர் மொழிகளையெல்லாம் ஒருவாறு தழுவிக், கடையாக ஆங்கிலமும் கலப்புண்டு நிற்கும் நிலையை எய்திற்று. தன்மதிப்புடைய நாட்டவரெவரும் விரும்பா நிலையில் நந்தமிழ் நிற்றலைக்கண்டு அவ்வப்போது அதன் சீரும்செம்மையும் பேரும் திறனும் வெளிவர நம்மவரிற் சிற்சில பெரியோர் ஆன்றோர் தலைமையில் பலகழகங்கள் நிறுவித்தமிழ் வளர்க்கலாயினர்.

பனிமா மலைவரை பரந்து விளங்கும் தனிமாநிலமதைத் தன்னடிப்படுத்தியும் - காடு கெடுத்து நாடு பல தோற்றியும் - கலங்கரை விளக்கமொடு கடற்றுறை கண்டும் - காவிரி சிறக்கக் கல்லணை அமைத்தும் - முதியவர் போற்ற முறைமை நல்கியும் - பொன்றாப் பெரும்புகழ் போர்வலி பெற்ற கரிகாற்பெருவளத்தான் அரசு கட்டிலில் அமர்வதற்குப் பல்லாண்டுகளின் முதலினின்று, சொல்லாற்றலும் பொருளாற்றலும் இலக்கண இலக்கிய அமைவும் ஒருங்கே யமையப் பெற்றுத் தமிழக மூவேந்தர் போற்றிப் புரந்த தாலும் - சங்கம் வைத்து அங்கம் தழைக்க வளர்த்ததாலும் தனி யரசு செலுத்தி வீறுற்றுயர்ந்த நம் தமிழ்த்தாய் சில்லாண்டு களின் முன்னர் சிறுமையுறு மாறிருந்ததை யுணர்ந்த நம் சான்றோர்களிற் சிலர், அன்னையின் அடிமலர் பொலிவு ஆங்காங்கு தமிழ்ச் சங்கங்கள் நிறுவி அச்சிறுமையினைப் போக்க முற்பட்டனர்.

அந்நிலையிற்றான் நமது தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கம், நாவுக்கரசப் பெருநாவலனின் நற்றமிழ்ப் பேறுபெற்ற கருந்திட்டைக்குடியில் விரோதிகிருதியாண்டு வைகாசித்திங்கள் முதல்நாள் 14 - 5—1911 அன்று, திருவருளின் துணையும் தமிழ்த் தாயின் தண்ணளியும் கொண்டு, செல்வத் திருமகள் - திருவளர் மேலோன் திரு. த. வே. இராதாகிருட்டினப்பிள்ளை. பி. ஏ. அவர்களால் தொடங்கப்பெற்றது. தொடங்கிய காலந்தொட்டு

இவரின் தமையனார் த.வே.உமாமகேசுவரனார் பி.ஏ.,பி.எல்., அவர்கள் சங்கத்தின் தலைமைப் பொறுப்பினையேற்று முப்பதாண்டுகள் தன்னலங்கருதாத தமிழ்த் தொண்டாற்றியதைத் தமிழ்கூறு நல்லுலகத்துத் தமிழ்ச் சான்றோர் நன்கறிவர்.

சங்க இலக்கியங்களின் சிறப்புக்களையும் - தெய்வப் பனுவல்களின் பெருமைகளையும் தமிழராயினார் அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சிலப்பதிகாரம் பெரியபுராணம் கம்பராமாயணம் முதலான நூல்களைக் கிழமைகள்தோறும் பாடம் நடாத்தி மக்கள் தாமே தமிழ் நூல்களைப் பயிலுமாறு செய்தது கரந்தைத் தமிழ்ச்சங்கம். தமிழ்ப்பெரும் புலவர்களை அழைத்துவந்து திங்கள் தோறும் கூட்டங்கள் நடாத்தி எட்டுந் தொகைபத்துப்பாட்டு ஆகிய சங்கஇலக்கியங்களைப்பற்றித்தமிழராயினார் அறிந்துகொள்ளுமாறு செய்தது கரந்தைத்தமிழ்ச்சங்கம். பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசியும் எழுதியும் வந்த காலத்து, "திரு - திருவாளர் - திருமண அழைப்பிதழ் - சொற்பொழிவு" முதலான தனித்தமிழ்ச் சொற்களைத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தியது கரந்தைத் தமிழ்ச்சங்கம். பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களால் எழுதப்பெற்ற "நீராருங் கடலுடுத்த ..." என்று தொடங்கும் தமிழ்த் தெய்வ வணக்கப் பாடலைச்சங்கக்கூட்டங்களிற் பாடியும் தமிழராயினார் அதனைப் பயிலவும் பாடவும் வேண்டுமென்பதற்காகத் துண்டுத் தாள்களில் அச்சிட்டு வழங்கியது கரந்தைத் தமிழ்ச் சங்கம். தமிழ்ச் சிறார்கள் எல்லாப்பாடங்களையும் தாய்மொழி வழியே பயில வேண்டுமென்பதற்காகச் "செந்தமிழ்க் கைத்தொழிற் கல்லூரி" என்னும் பள்ளியைத் தோற்றுவித்து ஏட்டுக் கல்வியும் தொழிற்கல்வியும் பயிற்றுவித்துத் தமிழகத்திற்கு வழிகாட்டியது கரந்தைத் தமிழ்ச் சங்கம். புத்தகசாலை - இலவசப்படிப்பகம் - இலவச சித்த மருத்துவமனை - ஏழை மாணவர் இல்லம் ஆகியவற்றை ஏற்படுத்தி மாணாக்கர்க்கும் - மக்களுக்கும் ஏற்பன இயற்றித் தொண்டு செய்தது கரந்தைத் தமிழ் சங்கம். தமிழ் மொழியின் மேன்மையைப் பேணுதற் பொருட்டு "தமிழ்ப் பொழில்" என்னும் தமிழாராய்ச்சித்திங்கள் இதழை 1925-ஆம் ஆண்டில் தொடங்கி தொடர்ந்து நடாத்தி வருவது கரந்தைந் தமிழ்ச் சங்கம். தமிழ் மொழிக்கென ஒரு தனிப்பல்கலைக் கழகம் இருக்க வேண்டுவது இன்றியமையாததென்று சங்கக்கூட்டங்களில் முடிபுகள் இயற்றியும் - மாநாடுகள் நடாத்தியும்-முதற்குரல் எழுப்பியது கரந்தைத் தமிழ்ச் சங்கம். தமிழகத்துத் தமிழ்ப் பெரும்புலவர்களின் - சங்கப் புலவர்களின் எழுத்தோவியங்களை - ஆய்வுக்கட்டுரைகளை -

மறுப்புரைகளைத் ''தமிழ்ப் பொழில்'' இதழில் வெளியிட்டுத் தமிழை வளர்த்தது கரந்தைத் தமிழ்ச் சங்கம். நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் எழுதிய ''நக்கீரர்'' ''கபிலர்'' என்னும் புத்தகங்களையும் பா. வே. மாணிக்கர்நாயக்கர், பி.இ., அவர்களால் எழுதப்பெற்ற ''அஞ்ஞாநம்'' என்னும் நூலையும் - அருட்டிரு.விபுலானந்த அடிகளாரால் எழுதப்பெற்ற ''யாழ்நூல்'' என்னும் இசைத்தமிழ் நூலையும், ''தொல்காப்பியம் - சொல்லதிகாரம்-பேராசிரியர் உரையைக்' கரந்தைக் கவியரசு அரங்க. வேங்கடாசலம் பிள்ளை அவர்களைக் கொண்டு பதிப்பித்தும் - ''தொல்காப்பியம் சொல்லதிகாரம் – தெய்வச் சிலையார் உரையை'' வெளியிட்டும் தமிழ்த்தாய்க்கு அணிசேர்த்தது கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

கரந்தைத் தமிழ்ச்சங்கக் கல்லூரி என்னும் பள்ளியில் புலமை மிக்கவர்களாய சிவ. குப்புசாமி பிள்ளை ஔவை. சு. துரைசாமி பிள்ளை முதலானோரை ஆசிரியராய் அமர்த்தித் தமிழை வளர்த்தது கரந்தைத் தமிழ்ச்சங்கம், தமிழகத்து உயர் நிலைப்பள்ளிகளில் தனித்தமிழ் கற்பிக்கும் தமிழாசிரியர்கள் இல்லாக்குறையைப் போக்க 1938-ஆம் ஆண்டில் கரந்தைப் புலவர் கல்லூரியைத் தோற்றுவித்து ஆயிரக்கணக்கான புலவர் பெருமக்களைத் தமிழகத்திற்கு வழங்கியது கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

பேராசிரியர். ஔவை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள் சங்கத்தில் ஆசிரியப் பணியாற்றிய நோடமையாது தொல்காப்பியம் - சொல்லதிகாரம் – தெய்வச் சிலையார் உரை - பதிப்பிக்கும் காலத்துச் சுவடிகளை ஒப்புநோக்கிப் பதிப்பிக்கும் பணியிலும் - தமிழ்ப் பொழில் வெளியீட்டுப் பணியிலும் கரந்தைக் கவியரசு அவர்களுக்குத் துணையாயிருந்து தொண்டாற்றியவர். சங்கத்திலும் ஐயம்பேட்டை கிளைச் சங்கத்திலும் திருமுருகாற்றுப்படை-திருநீலகண்டர் என்னும் பொருள்களில் சொற்பெருக்காற்றியவர். சங்கவிழாக்களிலும் - வெள்ளி விழாவிலும் முக்கியப் பங்கேற்றுப் பணியாற்றியவர். தொல்காப்பியத்தில் எழும் ஐயங்களைத் தமிழவேள் அவர்களிடம் பாடம் கேட்டுத் தெளிவு பெற்றவர் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகளிடம் சைவ சித்தாந்தம் அறிந்தவர். பேராசிரியராகப் பணியாற்றிய காலத்தும் சங்கத்தார் விழாக்களுக்கு அழைத்த போதெல்லாம் தாய்வீடு நோக்கி வரும் சேயைப் போல் பாசத்தோடு வந்து பங்கு பற்றியவர். தமிழ்ப் பொழில் திங்கள் இதழில் தொடர்ந்து ''வள்ளல்கள் வரலாறு'',''முடத்தாமக் கண்ணியார்'', ''மதுரைக்

காஞ்சி யாராய்ச்சி'', ''ஆர்க்காடு'' ''பரணர்'' முதலான தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகளையும் - ஆங்கிலக்கதைகளைத் தமிழ்வழிப்படுத்தியும் எழுதியவர். காவிரிப்பாக்கம்-திருவத்திபுரம் போளூர்-செய்யாறு முதலான ஊர்களில் பணியாற்றிய காலத்தும் தமிழ்ப்பொழில் இதழுக்குத் தன் பங்களிப்பை அளிக்கத் தவறினாரில்லை. சங்கந்திற்குச் செய்யும் தொண்டினைத் தமிழ்த் தாய்க்குச் செய்யும் தலைத் தொண்டாகக் கருதி வாழ்ந்தவர்.

எதிர்வரும் 1995 சனவரி 1 முதல் 5-ஆம் நாள் வரை தமிழ் வளர் தஞ்சையில் நடைபெறும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினை முன்னிட்டுத் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறை இயக்கத்தார், தமிழில் இதுநாள் வரை வெளிவராத, வெளிவந்தும் கிடைக்காத தமிழ்ப் பெரும் புலவர்களால் எழுதப்பெற்ற அரியதொரு நூலினை வெளியிடுமாறும் - அதற்கு அரசு நிதியுதவி அளிக்கும் என்றும் அறிக்கை அளித்தார்கள்

அதன்படி, நம் சங்க வெளியீடாகிய ''தமிழ்ப் பொழிலில்'' 1925-ஆம் ஆண்டிலிருந்து வெளிவந்த துணர்களையெல்லாம் படித்தறிந்து ஆராய்ந்து - தமிழ்வளர்க்கும் சங்கத்தின் பாலும் தமிழ்வளர்த்த தமிழவேள் அவர்கள் மாட்டும்அன்பும் மதிப்பு முடையாரும்-சங்கத்தில் கல்விப் பணியாற்றியவரும் ஆகிய உரைவேந்தர்-சித்தாந்த கலாநிதி-பேராசிரியர் ஔவை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள் தமிழ்ப் பொழில் இதழில் 1931-ம் ஆண்டிலிருந்து துணர் 6, 7, 8, 11, 12 ஆகியவற்றின் இதழ்களில் பரணர் என்னும் தலைப்பில் தொடர்ந்து எழுதிய கட்டுரைகளைத் தெரிவுசெய்து தொகுத்து நூலாக வெளியிடலாமென்று உமாமகேசுவர மேனிலைப்பள்ளி முன்னாள் உதவித் தலைமை ஆசிரியர் புலவர் மீ. இராமதாசு, எம். ஏ., எம். எட்., அவர்கள் கொடுத்தார்.

சங்கத்தின் புகழுக்கும் தமிழின் பெருமைக்கும் பரணர் என்னும் நூல் சிறந்த தெரிவென்றோர்ந்து இதன் நகலை உரை வேந்தர் திருமகனாரும் தமிழ்ப்பல்கலைக் கழகத் துணை வேந்தருமாகிய முனைவர் ஔவை. நடராசன் அவர்களிடம் கையளித்தபோது அவர்கள் பேரன்பும் பெருமகிழ்ச்சியும் கொண்டு ஏற்று, படித்துப்பார்த்துத் திருத்தம் செய்ததோடு ஒப்பம் அளித்துப் பாராட்டுரையும் வழங்கியுள்ளார்கள். அவர்கட்கு என் நன்றியை உள்ளன்போடு தெரிவிக்கின்றேன்.

கரந்தைத் தமிழ்ச் சங்கச் சார்பில் பதிப்பிக்கப்பெற்ற தரமும் திறமும் வாய்ந்த வண்ணமிகு இந்நூலினை எட்டாவது உலகத் தமிழ் மாநாடு கொண்டாடப்பெறும் வேளையில் தமிழக அரசின் அரிய நூல்களை வெளியிடும் திட்டத்தின்கீழ் நிதியுதவி செய்தும் - தம் திருக்கரங்களால் வெளியிட்டும் அருளிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர் களுக்கும் தமிழக அரசுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை உரித் தாக்குகின்றேன்.

இக்கட்டுரைகளைத் தொகுத்ததோடு அமையாது பிழை திருத்தம் செய்தும் பதிப்புக்குதவியும் வரும் புலவர் மீ. இராமதாசு அவர்களுக்கும் - பகலென்றும் இரவென்றும் பாராமல் நூல் வெளியீட்டுக்குரியன அனைத்தும் செய்தும் - பதிப்புக்குதவியும் வரும் உமாமகேசுவர மேல்நிலைப்பள்ளி K. ஜெயக்குமார் எம்.எஸ்ஸி., பி.எட்., இவருக்கு உறுதுணையாய் உதவிய S. வாசுதேவன், க. சண்முகசுந்தரம் ஆகியோருக்கு என் நன்றி என்றும் உரியன.

பரணர் என்னும் பைந்தமிழ்நூலைப் பாங்குற அச்சிட்டுக் கொடுத்த தஞ்சை, லக்மி அச்சகத்தார்க்கும் வண்ணமிகு அட்டையினை வடிவமைத்துப் பதிப்பித்துக் கொடுத்த தஞ்சை என். எஸ். பி லித்தோஸ் நிறுவனத்தார்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

''தங்குபுகழ்ச் செந்தமிழ்க்கோர் அன்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்குங் கடவு ளாரே''

கரந்தை.
1-1-95.

ச. இராமநாதன்,
தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

பாராட்டுரை

பேராசிரியர்
முனைவர் **ஔவை. நடராசன்**
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

எந்தையார் உரைவேந்தர் சித்தாந்த கலாநிதி ஔவை துரைசாமி அவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் தம் வாழ்நாள் முழுவதும் பரிவு கொண்டிருந்தார், தமிழவேள் உமாமகேசுவரனாரிடம் பேரா அன்பும் பெருமதிப்பும் கொண்டிருந்ததோடு தமிழவேளின் மறைந்த நாளை ஆண்டு தோறும் நினைந்து உண்ணாநோன்பிருந்து வந்தார். சில ஆண்டுகள் அச்சங்கத்தின் நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியதைப் பிற்காலத்தில் மிக மகிழ்ந்துரைப்பார்கள். அந்நாளில் சங்கத்தொடு இணைந்திருந்த அறிஞர் எல். உலகநாத பிள்ளை, நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு அரங்க வேங்கடாசலம் பிள்ளை, பள்ளியகரம் நீ. கந்தசாமி பிள்ளை, சிவ. குப்புசாமி பிள்ளை முதலானாரொடு நெருங்கிப் பழகியதைப் பல நூல்களில் குறித்தார்கள், இயல்பாகவே தமிழில் தேர்ந்த பயிற்சி பெற்றிருந்த என் தந்தையாருக்கு ஆழ்ந்த தமிழ்ப் புலமை பெறுதற்கு இந்நல்லாரிணக்கம் துணைநின்றது.

எந்தையாரவர்களின் அறிவாற்றலையும் புலமையையும் நன்கு தெரிந்திருந்த தமிழவேளவர்கள் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்ற வேண்டிய நீங்கள் இந்த இடைநிலைப் பள்ளியில் கட்டுண்டிருத்தல் கூடாது, உயர்நிலைப்பள்ளியிலாவது பணியாற்றல் வேண்டும் என வற்புறுத்தினமையால் அதனை ஏற்று மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றச் சென்றார்கள்.

தமிழவேள் விரும்பியாங்குக் காவிரிப்பாக்கம் பின்னர் சேயாறு உயர்நிலைப்பள்ளியிலும் தமிழாசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் தமிழவேளவர்களின் தூண்டலால் 'பரணர்' என்னும் ஆராய்ச்சிக் கட்டுரையைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் இலக்கிய இதழாகிய **''தமிழ்ப் பொழிலில்''** வெளியிட்டு வந்தார்.

இக்கட்டுரையை இற்றைக்கு நோக்கும் பொழுது தொடக்க காலத்திலே எந்தையார் எய்தியிருந்த செறிந்த புலமை நலமும் சிந்தனை வளமும் கட்டுரை எழுதும் கலைத்திறனும் வியப்பை அளிக்கின்றன. இத்தகு பெரும் புலமையே பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், மதுரைத் தியாகராசர் கல்லூரியிலும் பேராசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பினை நல்கியது எனல் வேண்டும்.

'பரணர்' என்னும் இக்கட்டுரையின் ஆராய்ச்சியமைப்பினை நோக்குமிடத்துப் பின்னர், புறநானூறு, பதிற்றுப்பத்து முதலிய சங்க இலக்கியங்களுக்கும் யசோதரகாவியம் முதலிய சிற்றிலக்கியங்களுக்கும், நாட்டாரையா அவர்கள் விட்டுச் சென்ற மணிமேகலைக் கரவியத்தின் காதைகளுக்கும் நல்லுரை வரையும் ஆற்றல் கால் கொண்டிருந்தமை புலனாகிறது. மேலும் சேர மன்னர் வரலாறு முதலிய வரலாறுகளை எழுதியமைக்கு இக்கட்டுரையின் ஆய்வுச் சிந்தனையே அடிப்படை எனலாம்.

தமிழ்ப்புலமை என்னும் அளவில் நில்லாமல் ஆங்கில மொழியிலும் ஆழ்ந்த பயிற்சி பெற்றிருந்தமையால் அக்காலத்தில் தமிழ், தமிழர் பற்றி ஆங்கிலம் வல்லார் ஆங்கிலத்தில் எழுதிய வரலாற்று நூல்களையெல்லாம் ஆராய்ந்து பயின்று அவற்றில் தேர்ச்சியும் பெற்றிருந்தமையை இக்கட்டுரையின் முதற்படலம் நன்கு தெளிவிக்கின்றது. அந்நாளிலேயே தமிழக வரலாற்றிலும் கல்வெட்டுத் துறையிலும் எந்தையார் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தமையும் அறியலாம்.

'பரணர்' என்னும் இக்கட்டுரையை நூலாசிரியர் எழுதிய காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் பேரறிஞர்கள் பலர் இலக்கியங்களை மட்டுமே சான்றாகக் கொண்டு சங்க இலக்கியப் புலவர்களைப் பற்றியும் மூவேந்தர் குறுநில மன்னர் ஆகியோரைப் பற்றியும் வரலாறுகளை எழுதிச் சென்றனர். அதனால் காலம் பற்றிய ஆய்வுகளும் பிறவும் தடுமாற்றத்திற்குள்ளாயின. வரலாற்றுச் செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் நுண்ணிதின் அறிந்து நுவலும் மனப்பாங்கும் கடப்பாடும் எந்தையார் கொண்டிருந்ததும் இக்கட்டுரை நூலால் புலனாகின்றது.

இக்கட்டுரைக்குரிய தலைவரான பரணர் சங்ககாலப் புலவர் சிலரொடு இணையாகப் பேசப்படும் பெருமிதம் உடையவர். தொகைநூல்களில் கபிலரை ஒப்ப மிகுதியான பாடல்களைப்

புனைந்தவர். பதிற்றுப்பத்தில் ஐந்தாம்பத்தினைப் பாடியவர். பதினோராந்திருமுறையில் இவர் பாடியனவாகச் சில பாடல்கள் உள்ளன. இவர் நக்கீரனார், பெருங்குன்றூர்க்கிழார், ஔவையார் முதலாய சங்கப்புலவோர் பலரால் மதிப்புடன் பாராட்டப் பெறுபவர்.

இவர் இயற்றிய பாடல்களில் சேரன் செங்குட்டுவன், கரிகாற் பெருவளத்தான் ஆகியோர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் மிகுதியாகவும், நன்னன், பிண்டன், அதிகன், கோசர், தித்தன், வெளியன், மிஞிலி, அஞ்சிஆய்ஆண்டிரன் வேள்எவ்வி, நள்ளி, பேகன், மத்தி, தழும்பன், ஆதிமந்தி, ஆட்டனத்தி முதலாய குறுநில மன்னர் பலரின் வரலாற்றுக் குறிப்புகள் ஓரளவும் காணப்படுகின்றன. அவற்றையெல்லாம் இவர் பாடிய பாடல்கள் வாயிலாக நயம்பட கட்டுரையாசிரியர் விளக்கியிருப்பது இலக்கிய வாயிலாக வரலாற்றுச் செய்திகளை எவ்வாறு கண்டறிய வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

ஆராய்ச்சி பரணர் பற்றியதாயினும் அவரால் மதிக்கப் பெற்ற, பாராட்டப்பெற்ற வேந்தர்கள் குறுநில மன்னர்கள் என்னும் முறைமையில் சேரன் செங்குட்டுவன் வரலாறும் சோழன் கரிகாற்பெருவளத்தான் வரலாறும் தனி ஆராய்ச்சிக் கட்டுரை யாக அமைந்திருப்பது இவ்வாராய்ச்சி நூலின் சிறப்பாகும்.

கரிகால் வளவன் மற்றும் சில குறுநில மன்னர்களைப் பற்றிய பரணர் பாடல்களைப் பண்டைய நிகழ்ச்சிக் கூறலாகக் கொண்டு விளக்கந்தருகின்றார். அவற்றுள் பல பாடல்கள் முன்னிலையில் வைத்து நேருக்கு நேர் கூறுவது போல அமைந்தன, அதனாற் பரணர் என்னும் பெயருடையார் பலராக இருக்கலாம் என்றும் எண்ணத் தோன்றுகின்றது. இக்கால ஆய்வாளர் பலரும் அவ்வாறே எண்ணுகின்றனர்.

இதன்கண் கல்வி, அறிவு, புலமை என்பவை தம்முள் தொடர்புடைய வேறு தன்மைகளையும் ஆற்றலையும் கொண்டவை என்பதை இக்கட்டுரையாசிரியர் விளக்கிய பாங்கு எக்காலத்திற்கும் பொருந்தும் விழுமியவுரையாக அமைந்திருப்பது பெரிதும் போற்றிப் பேணத்தக்க ஒன்றாகும். புலமையின் தன்மையையும் ஆற்றலையும் விளக்கப் பரணர் பாடியுள்ள வற்றுள்

ஊருண்கேணி உண்துறை தொக்க
பாசியற்றே பசலை காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழிவிடுவுழிப் பரத்தலானே'' என்னும்

பாடலை எடுத்துக்காட்டி அதன்கண் அமைந்த உவமை நலத்தையும் பொருள் ஆழத்தையும் விளக்குவது இவர் உரைவேந்தர் எனப் புலவோருலகம் பாராட்டும் உண்மைக்குச் சான்றாக உள்ளது. சங்க இலக்கியங் களை ஆராயப்புகுவோர்க்கு இக்கட்டுரை நூல் தக்க வழி காட்டி யாக அமைந்திருப்பதை இதனைப் பயில்வோர் நன்குணரலாம். இத்தொடரின் இரண்டாம் படலத்தாடு இந்நூல் நிற்கிறது. தொடர்ந்து பரணரின் பாடல்களின் சிறப்புகளையும் நயங்களை யும் எழுதவுள்ளதாகக் குறிப்புக் காணப்படுகிறது. அவற்றை உணர்வதற்கு இக்கட்டுரைப்பகுதிகளும் துணையாக உள்ளன.

ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்குமுன் ''தமிழ்ப் பொழிலில்'' வெளிவந்த இக்கட்டுரையைத் தொகுத்து ஒரு நூலாக இலக்கிய உலகமும் ஆராய்ச்சி உலகமும் பயன் கொள்ள வெளியிடும் **புலவர் மீ. இராமதாசு** அவர்களின் நல்லுழைப்பையும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கும் இன்றைய தலைவராக அமர்ந்து அருஞ்செயல்கள் பலபுரிந்து சங்கத்தைப் பலரும் போற்றத்தக்க முறையில் வளர்த்து வரும் திருமிகு **''கரந்தைத் தமிழ்ச் செம்மல்'' ச. இராமநாதன்** அவர்களுக்கும் எனது பாராட்டுதலையும் உளம் நிறைந்த நன்றியினையும் மனநெகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள் கிறேன். ஒருமாமணியாய் உலகிற் கோங்கிய திருமாமணி யாய் எட்டாம் உலகத்தமிழ் மாநாடு தஞ்சைப் பேரூரில் எழிலுற நடக்கும் இந்நாளில் இந்நூல் வெளிவருதல் காலத்தாற் கனிந்த கனியாக நம்கைக்குக் கிட்டுகிறது. இங்ஙனம் அரிய நூல்களைத் தொடர்ந்து வெளியிடும் பணியைச் சங்கம் மேற்கொண்டு தொடர்ந்து நற்பணிபுரிய வேண்டுமென்னும் என் விருப்பத் தையும் தெரிவித்துச் சங்கத் தொண்டு பல்லாற்றானும் பெரிதும் வளரத் தமிழ் செழிக்க வாழ்த்துகின்றேன்.

எந்தையார் பேரிமயம் யானோ அதிற்பிறந்து
வந்த சிறுகல்லாய் வாழ்பவன்காண் சந்தமுறக்
கரந்தைத் தமிழ்ச்சங்கம் காணுமவர் நூலாம்
பரணர்க்கென் வாழ்த்துப் பணிந்து
எந்தையார் புகழெங்கே நான் எங்கே.

பரணர்

பகுதி - ௧

சீரிய பேரிலக்கியங்களாகவமைந்துள்ள சங்க நூல்களை ஒருவன் கற்கத் தொடங்குவதன் முன்னமே அவற்றையாக்கிய புலவர் பெருமக்களுள் கபிலர். நக்கீரர், இக்கட்டுரைத் தலைவ ராகிய பரணர் ஆகிய இம்மூவர்களை அறிந்துகொள்ளுகின்றான். இவருள் நக்கீரரைப் பற்றிய செய்திகளைப் பலர் பலபடக் கூறுவது மிகுதியாக இருந்தலின், அவரை யறிதல் அருமையன் றாதலின் கபிலர் பரணராகிய இருவரையும் சிற்றிலக்கியங் கண்டு நன்னூல் சின்னூல்களாகிய இலக்கணங்களைக் கற்கும்பொழுது தான் அறிகின்றான். நன்னூலில் ''பொதுப் பெயருயர்திணைப் பெயர்கள்'' என்று தொடங்கும் புணரியற் சூத்திர வுரையிலும், சின்னூலில் ''உலைவில் உயர்திணை மேலும்மைத் தொகைதான் பலர் சொன்னடைத்தாய்ப் பயிலும்'' என்னும் சூத்திரவுரையிலும், முறையே, ''கபிலபரணர்'' எனவும் ''கபிலபரணர் வந்தார் என உம்மைத்தொகை பலர் சொன்னடைத்தானவாறு'' எனவும் வருதல் காண்க. இங்ஙனமே, இவை யிரண்டற்கும் முதனூ லாய்த் திகழும் தொல்காப்பியத்துள் ''உயிரீ றாகிய வுயர் திணைப்பெயரும்'' என்று தொடங்கும் எழுத்ததிகாரச் சூத்திரத் தும்,''உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே,பலர்சொன் னடைத்தென மொழிமனார் புலவர்'' என்னும் சொல்லதிகாரச் சூத்திரத்தும் உரையாசிரியர் முதல் நச்சினார்க்கினியர் ஈறாக எல்லா ஆசிரியர்களும் உரை கூறுகின்றனர். இச்சிற்றிலக்கியங்க ளுள்ளும் திருவிளையாடற் புராணங்கள் இரண்டனுள் பெரும் பற்றபுலியூர் நம்பி திருவிளையாடல்,

''முன்னமோர் காலம் சங்கமண் டபத்து
முறைமையி னிருப்பதற் கியைந்தே
பன்னிய பனுவற் காரண மாகி
விளங்குபே ராசனம் விரும்பிப்
பன்னியல் வாணர் கபிலர்நக் கீரர்
பரணர் முன் னாகவா லயத்துத்
தொன்னெறி யடியார்க் கினியன கொடுக்கும்
சொக்கனுக் குரைப்பமென் றடைந்தார்.''

எனவும்,

''வாங்கருந் தெய்வப் பல்கையைச் சங்க
மண்டபத் திடைநடு விட்டாங்
கோங்கமுன் கீர ரிருந்தனர் பின்னர்

உயர்புளோர் ஒருவருக் கிருப்ப
ஆங்கது வளர்தல் கண்டுநன் கபிலர்
இருந்தனர் அன்பொடு முன்போல்
தாங்குதல் கொடாது வளர்ந்திட விருந்தார்
பரணருந் தலமெலாம் மதிப்ப''

எனவும், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் இச் சங்கப் பலகை கொடுத்த செய்தியைக் கூறுமிடத்து ''வேறுபல் வகை யாற் பூசை வினைமுடித் திறைஞ்சிக்கீரன்-ஏறினான் கபிலனோடு பரணனும் ஏறினானே'' என்றும், சங்கத்தார் கலாம் தீர்த்த படலத்தின்கண்,

''இத்தன்மைய னாகிக்கலை வல்லோர் தமிழெல்லாம்
சித்தங்கொடு தெருட்டுஞ்சிறு வணிகன்தெருள் கீரன்
முத்தண்டமிழ் கபிலன்தமிழ் பரணன் தமிழ் மூன்றும்
அத்தன்மைய னறியுந்தொறும் அறியுந்தொறுமெல்லாம்''

என்றும் கூறுகின்றன. இவற்றால், நாம் இக்கட்டுரைக்குத் தலைப் பொருளாகக் கொண்ட பரணர் தமிழ்கற்போரனைவரும் முன்னரே யறிந்துகொள்ளும் சங்கச் சான்றோர் என்பது பெறப் படுகின்றது. மேலும், பரணர் கூறப்படுமிடங்கடோறும் கபிலரோடு உடன் கூட்டியே கூறப்பெறுதலைக் காணுமிடத்து இவருக்கும் கபிலருக்கும் நெருங்கிய நட்பு உளதாகல் வேண்டு மென்பது தெரிகின்றது. ஆனால், இதற்குச் சிறந்த சான்றாவது **கபிலபரணர்** என்னும் தொடரே யன்றி வேறொன்றும் கிடைத் திலது. இவரது தோழரான கபிலர் ''உலகுடன் திரிதரும் பலர் புகழ் நல்லிசை, வாய்மொழிக் **கபிலன்**'' என நக்கீரனாராலும்,

''வயங்கு செந் நாவின்
உவலை கூராக் கவலையி னெஞ்சின்
நனவிற் பாடிய நல்லிசைக்
கபிலன்''

என்று **பெருங்குன்றூர்க்கிழா**ராலும், ''வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் **கபிலன்**'' என்றும், ''பொய்யா நாவிற் **கபிலன்**'' என்றும் முறையே **பொருந்திலிளங்கீரனார், மாறோகத்து நப்பசலையார்** முதலியோராலும் புகழப்பெற்றது போல, இவரும் ''இன்றும் **பரணன்** பாடினன் மற்கொல்'' என **ஔவை**யாரால் புகழப் பெறுதலானும், குறுந்தொகை முதலிய தொகை நூல்களிற் கபிலரையொப்பச் சொன்னலம் பொருணலம்

சிறக்கக் கவிபாடும் சிறப்பினாலும் அவர் பெயரோடு இணைத்துக் கூறப்பெறும் தகுதி யுடையராயினார் என்பது யாவரும் கொள்ளற்பாலதொன்றாம்.

இங்ஙன், புலவர் பாடும் புகழ்படைத்த பரணரது பிறந்தவூர், பெற்றோர் பெயர் முதலியன இதுகாறும் கிடைத்தில. எனினும் பதினோராம் திருமுறையிலுள்ள சிவபெருமான் திருவந்தாதியைப் பாடிய **பரணதேவநாயனார்** என்பவரும் இவரேயாயின், இவரது சமயம் சைவசமயமாகும். மற்றுத் திருவள்ளுவ மாலையின்கண் இவர் பாடியதாகக் காணப்பெறும்

''மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞால முழுதும் நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவரும் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து'' என்னும்

வெண்பாவைக் கொண்டு இவர் திருமாலை வழிபடும் சமயத்தாராதல் வேண்டும் என்கின்றனர்! இங்ஙனம் உவமை முகத்தாற் புகழ்ந்துரைத்ததனையே கருவியாகக் கொண்டு முடிபு செய்வதாயின், இவர்,

''ஞால நாறு நலங்கெழு நல்லிசை
நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்
ஆல முற்றங் கவின்பெறத் தைஇப்
பொய்கை சூழ்ந்த பொழின்மண மகளிர்
கைசெய் பாவை துறைக்க ணிறுக்கும்
* * *
புகார் நன்னாட்டதுவே.'' (அகம். 181)

என்னும் செய்யுளின்கண் புகார்நாட்டு மகளிரை விதந்துகூறு முகத்தால் பொய்கையோடு ''முக்கட் செல்வ'' னையும் உடன் கூட்டிப் புகழ்ந்த துணையானே இவரது சமயம் சைவசமயமே யென்பது துணியப்படுவதாம். இது எத்துணை வலியுடைத்தாயிற்று !

பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்து முற்றும் கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவனை இவர் பாடியிருப்பதோடு அமையாது,

"படைநிலா விலங்குங் கடல்மருள் தானை
மட்டவிழ் தெரியல் மறப்போர்க் குட்டுவன்
பொருமுரண் பெறாஅது விலங்குசினஞ் சிறந்து
செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி
ஓங்குதிரைப் பௌவம் நீங்க வோட்டிய
நிர்மா ணெஃகம்" என

அகத்திலும், "இருப்புமுகஞ் செறித்த ஏந்தெழில் மருப்பின்" என்று தொடங்கும் ஏர்க்களவுருவகப் பாட்டினைப் புறத்திலும் பாடிப் பரிசில் பெற்றமையான், இவர் இக் குட்டுவன் காலத்திலி ருந்தவர் என்பது வெளிப்படையாதலாலும், இச்செங்குட்டுவன் ஐந்தாம் நூற்றாண்டிலிருந்தவனா ல் கூடும் என்று **சேரன் செங்குட்டுவன்** என்னும் சிறந்த ஆராய்ச்சி நூலொன்று கூறுவ தனாலும் இவர் காலமும் ஐந்தாம் நூற்றாண்டேயாகும். ஆயினும் இவர், "நன்னன், நறுமா கொன்று நாட்டிற் போக்கிய, ஒன்று மொழிக் கோசர்" என்றும், "ஒன்று மொழிக் கோசர்க் கொன்று முரண்போகிய,கடுந்தேர்த் திதியன்" என்றும் கோசரது வரலாற் றினைக் கூறுகின்றார். இக்கோசர் துளுநாட்டு வாழ்நர் ஆவர். *இவர்கள் பாடலிபுரத்து அரசர் மரபின் ஒரு கிளையாகித் துளு நாட்டின் புறத்து வாழ்ந்த மோரியரோடு கூடித் தமிழ்நாட்டிற் புகுந்தனராதலாலும், அவர்கள் அக்காலத்து அரசுபுரிந்த முதலாங் கீர்த்திவர்மன் என்னும் சாளுக்கிய வேந்தனுக்குப் பகைவராய் வெளிவந்தமையாலும், அவ்வேந்தன் காலம் கி.பி.566-597 எனத் தெரிதலாலும், இவர் காலமும் ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியும் ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதி யுமாம் என்று கொள்ளும் வகையில் கிடக்கின்றது.

இனி இவரது புலமையியல் பல புலவர் பெருமக்களாலும் "அளக்க லாகா ஆழ முடைத்து" எனக் கருதப்பெறுகின்றது. புலமையாவது அறிவுடைமையாம் தன்மையென்பது. அறிவு என்பது கல்வி கேள்விகளினாலாய அறிவோடு உண்மையறிவு கூடியது. இவ்வறிவு உலகிற் பிறந்த மக்கள் அனைவருக்கும் கருவிலே வாய்த்த திரு. அது இயற்கையில் ஆகாயம் போல் வண்ணம், அளவு, வடிவு, சுவை முதலியனவின்றித் தானே தனக்கு நிகராய் மிகத்தூயதாய் இருப்பது; மேலும், மக்களது மனத்தின்கண் நிலைபெற்று, அதன் தொழிலாய் விளங்குவது மாகும்.

* Vide Pages 510 to 522. History of the Tamils.

இங்ஙனம், மனத்தின் தொழிலாய்த் தன் தொழிலை நடாத்துமிடத்துத் தனக்குக் கருவியாக, இது பொறிபுலன்களைக் கொண்டு, உலகினை யாராய்கின்றது. அதனாற்றான், இவ்வுலகும் கட்புலனாம் பொருள், செவிப்புலனாம் பொருள் என முறையே ஐவகைப் பகுப்பின்கண் எஞ்சுதலின்றி அடங்குகின்றது. இவ்வறிவு கட்புலனைத்துணையாகக்கொண்டு பொருள்களை உற்றுக் கண்டதனைக் கண்டாங்கே மனத்திடத்து நிலைபெறச் செய்து பிறிதோரமையத்து முற்கண்ட பொருளோடு முற்றுமோ ஒருபுடையோ ஒப்புமையுடைய வேறோர் பொருளைக் கண்டவிடத்து அவ்விருபொருளையும் ஒப்புநோக்கி, அவற்றின் பெற்றி இது என்னும் முடிபினைச் செய்கின்றது. இங்ஙனம் பொருள்களைக் காண்டலும் ஏற்றுக்கோடலும், ஒப்புநோக்கலும் முடிபு செய்தலுமாகிய தொழில்களால் முடிந்தவற்றை மனத்தின் கண் நிறுத்தி, மேன்மேலும் பொருள்களை யாராய்தற்குக் கருவியாகவும் செய்து கொள்ளுகின்றது. இச்செயலால் அறிவு உரம்பெற்ற காலத்தே புலமை எய்துகின்றது. இப் புலமை வலுப்பட்டுநின்ற காலத்துத்தான், பொருள்களை நெடுநேரம் உற்று அவற்றின் திட்பநுட்பங்களை ஒருவன் அறிந்து கொள்ளுதல் இயலுகின்றது. இற்றாக, இவ்வண்ணம் அறிந்தபொருள்களை மீட்டும் பிறர் மனத்து நிலைபெறச் செய்யுங் காலத்து அவரது புலன்களைத் தன்வயம் கவர்ந்து அவை வாயிலாகத் தான் உணர்த்தப்புகும் பொருள்களை உணர்த்துவது தான் அதற்குச் சிறப்பாகின்றது. இச்சிறப்புத் தொழிலால் தான் அறிவு புலமையெனச் சிறப்பிக்கப் பெறுகின்றது. இவ்வுண்மை கருதித்தான், ஒருவன் பொருளுணர்ச்சியிடத்து எத்துணைத் திண்மை பெற்றிருப்பினும், அப்புலமை அவன் தன் உட்பொருளைப் பிறர்க்கு உரைக்குமிடத்தே பிறரால் அறியப்படுகின்றதென்றும், உரைத்திறத்தில் வழுவிய வழி அப்புலமை பெருமை குன்றி மறைகின்றதென்றும், எனவே, ஒருவன் பொருளுணர்ச்சி பயிலுமிடத்தே அப்பொருளை உரைக்குந் திறத்தும் பயிலுதல் வேண்டும் என்றும் அறிவாளிகள் எல்லாமொழியின் கண்ணும் உரைத்துள்ளார்கள். ஆகவே, புலமையுடைமையென்பது பொருள்களை அவற்றின் உண்மை நிலை வழாது அறிதலும், அறிந்ததனைப் பிறர்மனத்தும் நீங்காவகையில் எஞ்சாமல் நிலை பெறுத்தலுமே யாகும் என்பது தெளிவாயிற்று.

இப்புலமை யாவர்க்கும் ஒராங்கு உண்டாதல் அரிது. அதனாற்றான் உலகிற் புலவர் சிலரே காணப்பெறுகின்றனர். அதுபற்றியே தான் உள நூல்களிலும் "எல்லாம் அறிவுடையவர்,

மற்றுப் புலமையுடைய வராகார்'' என்று பெரியோர்கள் கூறு கின்றார்கள். சிலர்புலவராவார்கல்விகேள்விகளிற்சிறந்தவரென்று கருதுகின்றனர். யார் யார் எவ்வெத் துறையில் பயின்று அத் துறையிற் காணப்பெறும் திட்பநுட்பப் பொருள்களை யுணர்தலி லும் பிறர்க்கு உணர்த்துதலிலும் சிறக்கின்றார்களோ அவர்களே அத்துறையிற் புலமையுடைய புலவராவர். இசைவல்லார் இசைப்புலவராதலும், ஓவியம் வல்லார் ஓவியப்புலவராதலும் இன்னோரன்னோராதலும் ஆகும். இங்கு, நாம் தலைவராகக் கொண்டவர் கல்விகேள்வியிற் புலமைமிக்காராவர்.

கல்விப்புலமை யுடையார் ஏனைப் புலவர்களைப் போல் ஒரே துறையிற் பயின்றவராதல் கூடாது. அவர் காட்சிக் குட்படு வன பெரியோர் தாம் தம் வாழ்விற் கண்ட நுண்பொருளைக் குறித்துள்ள நூல்களும், அவர் வாழ்விற்கு நிலைக்களனான உலகு மாம். இவ் வியைபுநோக்கி உலகினையும் ''**நுவலாநூல்**'' என வழங்குப. ஏனை நூல்களிலும் இந் ''நுவலாநூல்'' பரந்து பட்டதாய், அறிவார் அறிவையும் கடந்து நிற்பதாய்த் தோன்றி அவர்தம் அறிவின்கண் அறிவாயும் நுணுகி நிற்பதாய் விளங்கு வது. ஓவியப் புலவ னொருவன் இந்நூலின் ஒரு காட்சியைப் பிறர்க்குணர்த்துவான். எழுதியவிடத்து அவ்வோவியம் அவன் காட்சிக்குட்பட்ட வளவே நிற்பினும், ஆண்டுக் கண்ட ஒலி இயக்கம் முதலியவற்றைக் காட்டாது; ஆயினும், அங்குத் தோன்றிய வண்ணம் வடிவு முதலியன பெற்றுக் காண்பார்க்கு இன்பம் பயக்கும். எடுத்துக்காட்டாக, நீர்வீழ்ச்சி யொன்றன் படத்தினைக் காண்போமாயின், அதன் நீரின் வண்ணம், வரும் ஆறு அருகுள்ள மரஞ்செடி கொடி முதலியன, பாறைக்கூட்டம், நீர்வீழ்தலால் எழும் பிசிர், துவலை ஆகிய இவையும் பிறவும் அதன்கண் காணப்பெறுவோமே யன்றி அந்நீரின் கடுவரவும் பெருங்கலிப்பும் அறிதல் கூடாது. ஆயினும், அதன் வண்ணமும் தோற்றமும், இன்பம் பயவாதொழிதல் இல்லை. இவ்வண்ணமே இசையுமாகும். இதனால், கல்வியொழிந்த ஏனைப் புலவரது செயல் பிறர் மனத்தை எளிதிற் பற்றி இன்பம் செயும் என்பது பெறப்படும். கல்விப்புலவரது செயல் ஏனைப் புலவரது செய லெல்லாம் தன்னகத்தேகொண்டு பிறர் மனத்தில் அச்செயல் களையும் செய்து தன் செயலால் இன்பத்தையும் விளைவிக்கும். இதனால் இதன்கண் இருவகை யின்பம் எழுகின்றமை விளங்கும். ஒன்று காட்டுதும்,

''ஊருண் கேணி உண்துறை தொக்க
பாசி அற்றே பசலை காதலர்

தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே.''

இது பரணர் பாடிய புலமை சிறக்கும் பாடல்கள் பலவற்றுள் ஒன்று. இதன்கண் ஒருத்தி தன் தோழிக்குத் தன் பசலையின் இயல்பு இத்தன்மைத் தென்று கூறுகின்றாள். பசலை யென்பது ''மகளிர் கணவனைப் பிரிந்தகாலத்து அவர்க்கு முன்புள்ள நெற்றியின் ஒளி கெட்டுக் கண்ணாடியில் வாயினா லூதிய பொழுது ஆவி படர்ந்து ஒளி மழுங்குவது போல வேறுபட்டுக் காட்டுந் தன்மை'' இதனைப் பாடிய புலவர் பெருமகனாரது புலமை வயங்கு செய்யுள் நம் மனத்து இசைப்புலவர், ஓவியப் புலவர் ஆகிய இருபுலவரது செயலைச்செய்து தன் சீரிய செயலையும் செய்து இன்பம் செய்தல் எளிதிற் காணப்பெறு கின்றது. இப் பாட்டின் முதலடியில் உள்ள ஊருண்கேணி யென்பது ஊரார் உண்ணுநீர்க் கொள்ளும் குளம் என்பது. உண் துறையாவது இறங்கி நீர் எடுக்கும் துறை. இந்த ஊருண்கேணி யுண்துறை யென்ற தொடர், ஓர் அழகிய தெருக்களமைந்த ஊரின் காட்சியும் அதனடுவில் சிறந்த படிக்கட்டுகள் நாற் புறத்தும் சூழ விளங்கும் குளக்காட்சியும் அக்குளத்தின் நீர்மேற் பாசி படர்ந்து பசுங்கம்பளம் விரித்தாற்போல் தோன்றும் காட்சி யும் நீர்த்துறையில் மகளிர் இறங்கி ஒளிவீசும் கலங்களோடு நீர் கொண்டு ஒசிந்தது நுடங்கும் இடை துவள ஏறுதலும் இறங்கு தலும் செய்யும் காட்சியும், கலங்களில் நீர் முகக்குங்கால் அப் பாசி வட்டமாக விலகியும் கூடியும் வரும் காட்சியும் வன்மை மிக்க ஒவியம் வல்ல புலவனொருவன் எழுதிய படம் போல் மனத்தில் காட்டி அவ் வுருவுகிளர் ஓவிய வின்பத்தினைச் செய் கின்றது. ஊருண்கேணி என்று தொடங்கிக் காதலர் என்பது வரையில் சமநிலத்தி லோடும் நீரோட்டம் போல் மெத்தெனச் செல்லும் ஓசைநலம் பின்னிரண்டடிகளிலும் சலசல வெனச் செல்லும் நீரோட்டம் போல ஓடிச் சுதியொடு கூடிப் பரத்தலானே என மெத்தென முடிதல் தமிழ் கமழும் விழுமிய இழுமெனோசை இசையின்பத்தைப் பயந்து நிற்கின்றது. இங்ஙனம் இருவகைப் புலமைச்செயல் செய்து கல்விப்புலமை யான தனக்கெனச் சிறந்த செயலைச் செய்தல் தலைவி தன் னொத்த மகளிர்க்கு இயல்பாகவுள்ள நீர்கொள்ளும் செயலுக்குப் பயிற்சி மிக்க கேணியை உவமித் திருத்திருத்தலாலும், முட்டைப் பாசிகளால் எளிதில் அடையப் பெறுவன ஊருண் கேணிகளே யாதலால் அதனை யெடுத்தாளல் புலமையி னியல்பாதலாலும், நன்கு கட்புலனாகாத பசலையினை விளக்கிக் கூறுதற்குப் பலரும் எளிது காண்பதோர் பொருளையே உவமித்தல்

வேண்டுமாதலாலும், தொடுவுழி நீங்கி விடுவுழிப் படர்வதற்குச் சமயவாதிகள் கூறும் செம்பிற்களிம்பு நுணுகி நோக்குவார்க் கன்றி ஏனையோர்க்கும் பாசி போல விளங்கக் காணப்பெறாமை யாலும் அதனை விலக்கிப் பாசியினையே கூறியிருத்தலாலும், விளங்குகின்றது. அன்றியும் பாசி தொக்கவிடத்து நீர் பொலிவு குன்றுதல் போலப் பசலை நீங்காது மிக்கவிடத்து என் பொலிவு "கன்று முண்ணாது கலத்தினும் படாது நல்லான் தீம்பால் நிலத் துக்காங்கு" "எனக்கும் ஆகாது என்னைக்கும் ஆகாது" "குன்றி யழியுமே எனத் தலைவனது பிரிவாற்றாது தலைவி அழுங்குதலும், "தொடுவுழித் தொடுவுழி" என்றதனால், தலைவன் இரவினும் பகலினும் களவொழுக்கம் பூண்டு வருகின்றா னென்பதும், இப்பிரிவு அவன் வரைவிடை வைத்த பிரிவு என்பதும் இவைபோல்வன பிறவும் ஆயும்தொறும் சிறப்பின்பத்தைத் தருதல் பெறப்படும். இவ்வாறு கல்விப்புலமை சிறந்திருத்தல் பற்றியே பெரியோர் "புலவர்" என்னும் சொல் கல்விப்புலமையுடையாரையே குறிக்கும் வகையில் வழங்கி வருகிறார்கள். இதன் இயல்பினை இன்னும் விரிப்பிற் பெருகும். நிற்க,

புலமை மிக்காரது நல்லிசைப் புலமையை யாராயுமிடத்து அதன்கண் பல சிறப்பியல்புகள் வெளிப்படுகின்றன. அவை பண்டைக்கால நிகழச்சிகூறல், உவமைநலம், உலகவழக்கு, பழமொழியாளல், உய்த்துணரவைப்பு முதலியனவாம். இவற்றை முறையே இவரது பாடல்களிற் காண்போம்.

1. பண்டை நிகழ்ச்சி கூறல்

பண்டைநிகழ்ச்சிகளுட் சிறப்பாக இவர் பாடலில் அரசர், குறுநிலமன்னர் முதலியோர் பலர் போர்செய்ததும், கற்புடை மகளிர் செய்த செய்கைகள் சிலவும் காணப்பெறுகின்றன.

அரசர்களுள் இவராற் பாடப்பெறும் தகுதியுடையாரயினார் சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன், கரிகால், கரிகால் வளவன் முதலியோராவர். இவருள் வேல்கெழுகுட்டுவனை இவர் பதிற்றுப்பத்து ஐந்தாம்பத்திற் புகழ்ந்து கூறியிருக்கிறார். இக்குட்டுவன் "குடவர் கோமான் **நெடுஞ் சேர லாதற்குச்** சோழன் மணக்கிள்ளி யீன்ற மகன்" என்று மேற்கூறிய ஐந்தாம் பத்தின் பதிகம் கூறுகின்றது. முத்தமிழிலக்கியமும், இச் செங்குட்டுவனது இளவல் இங்கோவடிகளா லியற்றப்பெற்றது

மாகிய சிலப்பதிகாரத்து மூன்றாங் காண்டத்து இவன் கூறப் பெறுகின்றான். ஆயினும் அங்கு இவன், ‘‘குமரியொடு வட விமயத் தொருமொழிவைத் துலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற் றேழ்பரி நெடுந் தேர்ச் சோழன் தன்மகள் நற்சோணையீன்ற மக்கள்’’ என **அடியார்க்கு நலலாரது** உரையின்கட் கூறப்பெறுகின்றான். அன்றியும் மேல் பதிற்றுப்பத்தின் நான்காம்பத்தின் தலைவனான **களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலாத**னுக்குத் தந்தை ‘‘ஆராத்திருவிற் **சேரலாதன்**’’ என்றே கூறுதலால், அந் நார்முடிச் சேரலுக்கும் இச் செங்குட்டுவனுக்கும் தந்தை சேரலாதனே யென்பதும், அவனது தாய் ‘‘வேளாவிக் கோமான் பதுமன் தேவி’’ என்று அப்பதிகம் கூறுதலாலும் இவன் ‘‘சோழன் மணக்கிள்ளி யீன்ற மகன்’’ என்று இப்பதிகம் கூறுதலாலும் இவ் விருவர்க்குந் தாய்மார் வேறு என்பதும் தெரிகின்றன. தெரியினும், இச் செங்குட்டுவனது பிறப்பினைக் ‘‘குடவர் கோமான் நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மணற்கிள்ளி யீன்ற மகன்’’ என்று கூறுவது போலன்றிச் சிலப்பதிகாரம் ‘‘சோழன் மகள் நற்சோணை யீன்ற மக்கள் இருவர் என்று கூறுவதால் இவனது தாய் **நற்சோணை** யென்பாள் என்று விளங்குகின்றது. இது ‘‘சேரன் செங்குட்டுவன்’’ என்னும் நூலுடையார்க்கும் உடன்பாடு.

நிற்க. திரு. பி. டி. **சீநிவாசஐயங்கார் அவர்கள்** சிலப்பதிகாரத்திற் கூறப்பெறும் செய்தியை அறவே யொதுக்கிவிட்டு நம் கட்டுரைத் தலைவராய பரணரது பதிற்றுப்பத்துப் பாடலின் பதிகம் ஒன்றனையே சான்றாகக் கொண்டு உண்மை காண வியலாமைபற்றி ஒரு சங்கை விடுக்கின்றனர் α. இவர் சிலப்பதிகாரத்திற் செங்குட்டுவனைப் புகழ்ந்து கூறும் பகுதியாகிய வஞ்சிக்காண்டம் ஏனைய இரண்டு காண்டங்களையும் பாடிய ஆசிரியரால் இயற்றப்படாது அவருக்குப் பிற்போந்த ஓர் அறிஞரால் இயற்றிச் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டுமெனச் சில சிறந்த காரணங்களால் எண்ணுகின்றார். இதனாலே, இதன்கட் கூறப்பெறும் நற்சோணையை விடுத்து (1) ‘‘குடவர் கோமான் நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளி யீன்ற மகன்’’ என்றிருப்பது தவறுடைத்து. ஓர் ஆண்மகன் பிறனொருவனுக்கு மனைவியாதல் கூடாது. இப் பதிற்றுப்பத்தின் பதிப்புக்குக் கர்ரணமாயிருந்த மூலவோலைச் சுவடிகளை ஆராய்தலும் இனி முடியாத செயலாகும். இராமபாணம் முதலிய பூச்சிகளால்

α History of the Tamils P 602-606 a Pa 512

அரிக்கப்பெற்றுச் சிதர்ந்து கிடக்கும் ஓலைச் சுவடிகளைக் கண்டவர்கள் இத்தவறு எவ்வண்ணம் உண்டாயிருத்தல் கூடும் என்று ஆராயவும் துணியார். திரு. **எம். சீநிவாச ஐயங்கார் அவர்கள்** ஒருவாறு முன்வந்து இவ் வைந்தாம் பதிகத்துக் கூறப் பெறும் சோழன் மணக்கிள்ளி என்பான் குடவர் கோமானான நெடுஞ்சேரலாதன் உடன்பிறந்தான் ஒருத்தியின் கணவனா தல் வேண்டும் என்று கூறி இக்காலத்து மலையாளத்து வழங்கும் "மருமக்கள் தாயம்" என்னும் உரிமை அக்காலத்தும் நிலவிற்றெனக் கொண்டு, செங்குட்டுவன் தன் அம்மான் அரசுரிமையைத் தான் அடைந் வனாகல் வேண்டும் என்று கூறுகின்றார். சேரர்களோ தமிழர்கள். மருமக்கள் தாயத்தைக் கையாளும் மலையாளிகளோ பத்தாம் நூற்றாண்டிற்குப் பின் வந்தவர்களாவர். அன்றியும், குட்டுவனது தந்தையான நெடுஞ் சேரலாதனும் தன் தந்தையின் அரசுரிமையை எய்தினவனே யன்றித்தாய் அம்மான் அரசுரிமையைப் பெற்றவனல்லன்." என்று கூறுகின்றார்.

இனி இச் செங்குட்டுவன் பல அரசர்களை வென்று அடிப்படுத்தியும் பல புலவர் பெருமக்களை ஆதரித்தும் பொன் றாப் புகழ்படைத்தும் புலவர்பாடும் பெருமையுடையனாயினான்.

இங்ஙனமாதற்கு இன்றியமையாத கல்வியறிவுடைமையும் குன்றா வீரமுடைமையும் இவனை விதந்துகூறும் சொற்றொடர் களால் இவனிடத்தில் அமைந்து கிடந்தன வென்பது தோன்று கின்றது. "தொலையாக் கற்பநின் நிலைகண் டிகுமே" என்ற பதிற்றுப்பத்தின் தொடரும், "புரையோர் தம்மொடு பொருந்த வுணர்ந்த அரச ரேறே", "புலவரை யிறந்தோய்" என்ற சிலப் பதிகாரத் தொடர்களும் இவனது கல்விமாண்புக்குச் சான்று பகருகின்றன. குன்றாவீரமுடைய னென்றற்குப் பரணர் பாடிய பதிற்றுப்பத்தினும் வேறு சான்று வேண்டா. சுருங்கக் கூறின் அப்பத்தின் இறுதிக்கண் வரும் பதிகமே சாலும். அது,

"வடவ ருட்கும் வான்றோய் வெல்கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சேர லாதற்குச்
சோழன் மணக்கிள்ளி யீன்ற மகன்,
கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டிக்
கானவில் கானங் கணையிற் போகி
ஆரிய வண்ணலை வீட்டிப் பேரிசை
இன்ப லருவிக் கங்கை மண்ணி

இனந்தெரி பல்லான் கன்றொடு கொண்டு
மாறா வல்வில் இடும்பிற் புறத்திறுத்(து)
உறுபுலி யன்ன வயவர் வீழச்
சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி
அக்கரை நண்ணிக் கொடுகூர் எறிந்து
பழையன் கா ஞுங் கருஞ்சினை வேம்பின்
முரரை முழுமுதல் துமியப் பண்ணி
வரலிழை கழித்த நறும்பல் பெண்டிர்
பல்லிருங் கூந்தல் முரற்சியால்
குஞ்சர வொழுகை பூட்டி வெந்திறல்
ஆராச் செருவிற் சோழர்குடிக் குரியோர்
ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத் திறுத்து
நிலைச்செருவின் ஆற்றலை யறுத்துக்
கெடலருந் தானையொடு

கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனைக் கரணமமைந்த, காசறுசெய்யுட் பரணர் பாடினார் பத்துப்பாட்டு. அவைதாம்:- சுடர்வீவேங்கை...... ...வெருவருபுனற்றார். இவை பாட்டின் பதிகம் என்பது.

இனி இச்செங்குட்டுவன் ஐம்பத்தையாண்டு வீற்றிருந்தான் என்று இப்பதிகத்தின் இறுதி உரைக்குறிப்பால் தெரிகின்றது. சிலப்பதிகாரம்

''வையங் காவல் பூண்டநின் நல்யாண்டு
ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்
அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோ யாயினை'' என்பதனால்

இப்பதிகத்தின் முதற்கட் கூறப்பெறும் ''கடவுட் பத்தினிக்கற் கோள் வேண்டிக் கானவில் கானம் கணையிற்'' போகிய காலம் இவனது ஐம்பதாம் யாண்டே என்பது அறிதலாம். மேலும், மாடலன் இவனுக்குப்பல்வேறுநிலையாமைகளையுணர்த்துபவன் ''திருஞெமி சகலத்துச் செங்கோல் வேந்தே, நரைமுதிர் யாக்கை நீயுங் கணடனை''என்றுகூறுதலால், இப்பதிகத்துக் கூறப்பெறும் போர்ச்செயல்கள் யாவும் கற்கோள் வேண்டிப் போன செய்திக்கு முன்னமே நடந்தன வென்பது விளங்குகின்றது. இச்செயல் சிலப்பதிகாரத்துப் பரக்கக் கூறப்பெறுதலால் அதனை நாம் இங்குக் கூறுகின்றிலம்.

நிற்க, "ஆரிய வண்ணலை வீட்டிப் பேரிசை இன்பல் அருவிக் கங்கை மண்ணி"ய செய்தி சிலப்பதிகாரத்தும்.

> "உடன்று மேல்வந்த ஆரிய மன்னரைக்
> கடும்புனற் கங்கைப் பேர்யாற்று வென்றோய்!" எனக்

கூறப்பெறுகின்றது β. பின்னர், இவன் "மாறா வல்வில் இடும்பிற் புறத்திறுத்த" செய்தி நெடுந்தேர்த்தானையொடு இடும்பிற்புறத் திறுத்திக் கொடும்போர் கடந்து" என்று இளங் கோவடிகளால் கூறப்படுகிறது. இப்பதிகத்தின் உரைக்குறிப்பில் "இடும்பில் என்றது இடும்பாதவனத்தை. புறம் அவ்விடம்" என்பது காணப்படுவதால், இவ் விடும்பாதவனம் **சம்பந்த சுவாமி**களால் "இனமாதவர் இறைவர்க்கிடம் இடும்பாவன மிதுவே" என்றும் "மடுக்கண்மலர் வயல்சேர் செந்நெல் மலி நீமலர்க்கரைமேல், இடுக்கண்பல களைவானிடம் இடும்பாவன மிதுவே" என்றும் முதற்றிருமுறையிற் பாடிப் பரவியுள்ள இடும்பாவனமாகும் என்று கருதலாம். சிலர், இப்பதிகமும் சிலப்பதிகாரமும் இடும்பிற்புறம் என்றே கூறுவதால், இஃது இடும்பாதன்ன மென்றோ இடும்பான்ன மென்றோ கூறல் அமையாது என்று அவ்வுரைக்குறிப்பையும் ஒதுக்கிக் கூறுகின்றனர். சிலப்பதிகாரத்தும் இவ் 'இடும்பிற்புறத்'' தைப்பற்றி ஒரு குறிப்பும் குறிக்கப்பெறவில்லை. எனினும், இதனையடுத்தே, "உறுபுலி யன்ன வயவர் வீழச், சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி" என்று இப்பதிகத்தும், "கறிவளர்சிலம்பிற் றுஞ்சும் யானையின் சிறுகுரல் நெய்தல் வியலூர் எறிந்தபின்" என்று சிலப்பதிகாரத்தும் வருதலை நோக்கின், இவ்வியலூர் கடற் சார்ந்த வூர் என்பது, விளங்குகின்றது. இவ்வூரும் சம்பந்த சுவாமிகளால் "விரிநீர் வியலூர்" எனப் புகழப்பெறுகின்றது. இவ்வியலூரேபோல் இடும்பிலும் இடும்பாவனமென்றே துணியப்பெறின் இவை யிரண்டும் கீழ்க்கடற்கரைப் போரெனவும், "அக்கரை நண்ணிக் கொடுகூர் எறிந்து" என்று பதிகங் கூறுவது மேலைக்கடற்கரைப் போ ரெனவும் கோடல் கூடும் ‡. கொடுகூர் என்னும் பெயரிய நாடொன்று சேரநாட்டின் பகுதியாக விருந்ததென இரவிதத் தனென்னும் சிற்றரசன் ஒருவனது பழைய சாசனம் ஒன்று தெரிவிக்கின்றது. இக்கொடுகூர் "வெண்ணிநாட்டுவெண்ணி," "மிழலை நாட்டு மிழலை" யென்றது போலக்கொடுகூர் நாட்டுக்

β கங்கை மண்ணியென்று பதிகங் கூறுவது செங்குட்டுவன் தன்தாயை கங்கையில் நீராட்டினன் என்று சிலப்பதிகாரத்துக் கூறபடும் செய்தி என்று சொல்லுவாருமுளர் **P. 805, H. A. Dravidians.**

‡ **An. Rep. p. 45. L. T. S. 1905.**

கொடுகூர் என்று கொள்ளலாம். ஆகவே, சேரநாடு மேலைக் கடற்சார்ந்த நாடாதலாலும், அதன்பகுதியே இதுவுமாதலாலும் கொடுகூர்ப்போர் மேலைக்கடற்கரைப் போரென்றல் வலிபெறுவ-தாகும். வேறுசில அறிஞர்கள் இக் கொடுகூர் நாடு இப்போதைய மைசூர் அரசாங்கத்தின் தென்பகுதி யாதலால் இதனை மேலைக் கடற்கரைப் போரென லாகாது; கொடுகூர் என்னும் ஊரொன்று திருச்சிராப்பள்ளி சில்லாவிலுள தென்றும் அதுவே கொடுகூர் என அக்காலத்து வழங்கப் பெற்றிருத்தல் மேண்டுமென்றும் கருதுகின்றனர்.

இனி, இப்பதிகத்துப் போர்ச்செய்திகளாக இதுகாறும் கூறிப் போந்தவை, இதனகத்தும் சிலப்பதிகாரத்துமே காணப் படுகின்றனவே யன்றி, இச்செங்குட்டுவனை விரிவாகப் புகழ்ந்-துள்ள பரணரால் அவர் செய்யுட்களுள் யாண்டும் கூறப்பட்டில. இப்பதிகமோ அவராற் பாடப்பெற்ற தன்று; அவருக்கு பிற்போந்த சான்றோ ரொருவரால் ஆக்கப்பெற்ற தாகும். இப் பதிகத்தில் ''வெந்திறல் ஆராச் செருவிற் சோழர்குடிக் குரியோர் ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத்து இறுத்த'' செய்தியும் சிலப்பதிகாரத்து,

''மாடல மறையோன் மன்னவற் குரைக்குநின்
மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
இளவரசு பொருஅர் ஏவல் கேளார்
வளநா டழிக்கு மாண்பின ராதலின்
ஒன்பது குடையும் ஒருபக லொழித்தவன்
பொன்புனை திகிரி ஒருவழிப் படுத்தோய்'' எனவும்
''வியலூ ரெறிந்தபின்
ஆர்புனை தெரியல் ஒன்பது மன்னரை
நேரிவாயில் நிலைச்செரு வென்று'' எனவும்

கூறப்படுகிறதே யன்றிப் பரணர் பாடலுள் இல்லை, இவை யொழிந்த பழையன் போர், கடல் பிறக்கோட்டிய செய்தி ஆகிய இவ்விரண்டுமே இக்கட்டுரைத் தலைவர் பாடல்களிற் பயின்று வருகின்றன. இவற்றுட் கடல்பிறக்கோட்டிய செய்தி, ''படுந் திரைப் பணிகடல் உழந்த தாள்'' என்றும்,

''இனியா ருளரோ நின்முன்னு மில்லை
மழைகொளக் குறையாது புனல்மிக நிறையாது
விலங்குவளி கடவுந் துளங்கிருங் கமஞ்சூல்
வயங்குமணி யிமைப்பின் வேலிடுபு
முழங்குதிரைப் பனிக்கடல் மறுத்திசினோரே''

என்றும்,

"கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்டு
உடைதிரைப் பரப்பிற் படுகட லோட்டிய
வெல்புகழ்க் குட்டுவற் கண்டோர்
செல்துவ மென்னார் பாடுபு பெயர்ந்தே."

என்றும்,

"நீர்புக்குக்
கடலொ டுழந்த பனித்துறைப் பரதவ!"

என்றும் வரும் பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்துப் பாட்டுகளிலும்,

"மின்னுவசிப்
பரவுக்கால் கடுப்ப மறவி மைந்துற்று
விரவுமொழிக் கட்டூர் வேண்டுவழிக் கெரளீ இப்
படைநிலா விளங்கு கடன்மருள் தானை
மட்டவிழ் தெரியல் மறப்போர்க் குட்டுவன்
பொருமுரண் பெறா அது விளங்குசினஞ் சிறந்து
செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி
ஓங்குதிரைப் பௌவம் நீங்க வோட்டிய
நீர்மா ணெஃகம் நிறத்துச்சென் றழுந்தக்
கூர்மத னழியரோ நெஞ்சே" எனவரும்

இவாது அகப்பாட்டிலும் கிடந்து மிளிர்கின்றது.

* இச்செய்தியினிடத்து ஆராய்ச்சியாளர்கள் பெருங் கலக்கங் கொண்டு, "இவ்வண்ணமும் ஒன்று நிகழ்ந்திருத்தல் கூடுமோ" என் றையுற்றுப் "பெருங்கடற் பரப்பும் தன் அரசிற் குட்பட்ட தே யென்றற் கறிகுறியாகச் செங்குட்வன் தன் வேலினைக் கடலின்கண் எறிந்திருத்தல் வேண்டும். அச்செய்தி இங்ஙனம் திரிந்து வந்ததாகும்" என்று கருதுகின்றனர். மேலும், "முந்நீர் விழவின் நெடியோன், நன்னீர் பஃறுளி மணலினும் பலவே" என்ற புறநானூற்று ஒன்பதாம் பாட்டு அடிகளைக் கொண்டு, "முந்நீர்க்கண் வடிம்பலம்ப நின்ரு னென்ற வியப்பால் நெடியோ னென்ரு ரென்ப" எனவரும் உரைக்குறிப்பையும் துணையாக்கி முந்நீர்விழவு ஒன்று இத்துணைப் பெருஞ்செயலாகக் கூறப் பெற்றுள்ளது என்று அவர்கள் முடிபு செய்கின்றனர். அன்றியும்

---

* 'It is difficult to gues what this oft repeated enlogy means. Kuttuvan's spear did apparently succeed in doing what Canute's loudly-utterred order could not. Probably the throwing of the spear was solemnly performed by him as a symbol of Kuttuvan's lordship of the sea." History of tha Tamils p. 514-5.

"சேர மன்னர்களுள் நெடுஞ்சேரலாதன் காலத்தே ஆரியர் நாகரீகம் அந்நாட்டிற் பரவியிருந்தமையின், அவர்களது வீரருட் பரசுராமனென்பான் தன் வேலெறிந்து கடல்பிறக்கிட செய்ததாக அவ்வாரிய ஆசிரியர்களாற் கற்பிக்கப்பெற்றது கொண்டே இது செய்தானாதலுங்கூடும். இச்செய்தி பின்னர்த் திருவிளையாடற் புராணத்து உக்கிர பாண்டிடியன்மே லேற்றப்பெற்ற தாதல் வேண்டும்" என்றும் கருதுகின்றனர்.

இனி பழையன் மோகூர்ப்போர்தான் பரணரால் பெரிதும் சதுரப்பாடமைய விளக்கப்பெறுகின்றது. செங்குட்டுவன் செய்-துள்ள போர்களில் இப்பழையனெடு செய்த போர்தான் மிக வீரஞ்சிறந்த போர் என்றல் பொருத்தமாகும். இச்செயல் பதிற்றுப் பத்தின் ஐந்தாம் பத்துப் பதிகத்துள்

"பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்
முரரை முழுமுதல் துமியப் பண்ணி
வாலிழை கழித்த நறும்பல் பெண்டிர்
பல்லிருங் கூந்தல் முரற்சியால்
குஞ்சர வொழுகை பூட்டி "யென்று கூறப்படுகின்றது.

இதனைப் படிக்கும் நம் நெஞ்சமே இத்துணைத் துடிப்புக் கொள்ளுமாயின், அப்போர்ச்செயல் எத்துணைக் கடுமையாக விருந்திருத்தல் கூடும் என்பதைப் படிக்குந் திருவாளர்களே அறிந்து கொள்ளல் வேண்டும்!

பழையன் என்பவன் பாண்டிய மன்னர்களின் கீழிருந்த ஒரு குறுநில மன்னன் என்று சிலர் கூறுகின்றனர். இவர் கட்குச் சான்றாவது இவன் தனக்குக் காவன்மரமாக வளர்த் தோம்பியது ஒரு வேப்பமரம் என்பது. பதிற்றுப்பத்தின் உரை ரர் இவனைப்பற்றி இதுபற்றியொன்றும் குறித்திலர். பழையன் என்யான் ஒருவனது வரலாறு அகத்திலும் நற்றிணையிலும் கூறப்பெறுகின்றது. அவனது நகரங்களுள் போ ஓர் என்பது மிகப்பலவாய்ப் புகழப்படுகின்றது. பழையன் மாறன் என்னும் வேறொருவன் அகநானூற்று 346-ஆம் பாட்டினுள் கூடற் பறந்தலையுள் கிள்ளிவளவனால் தோல்வியுற்றானென்பது தெரிகிறது. பதிற்றுப்பத்து 9-ஆம் பத்தின் பதிகத்தின்கண் "வித்தையாண்ட இளம்பழையன் மாறன்" என்று ஒரு பழையன் கூறப்பெறுகின்றான். மற்று, இவ் விளம்பழையன் மாறன் இளஞ்சேரலிரும் பொறையின் காலத்தவனாதலாலும், இப்பொறை, "கடலிகுப்ப வேலிட்டும், உடலுநர் மிடல்சாய்த்

தும், மலையவும் நிலத்தவும் அருப்பம் வெளவிப், பெற்ற பெரும் பெயர் பலர்கை யிரீஇய, கொற்றத் திருவின் உரவோ ரும்பல்'' எனப் பெருங்குன்றூர்கிழாரால் புகழப்படுதலினாலும் கடலோட்டிய செங்குட்டுவன் காலத்துப்பழையன் இவனாகான் என்பது தெளியலாகும், மேலும், செங்குட்டுவன் தன் மைத்துனனான கிள்ளிவளவன் சோழனாட்டிற்கு இளவரசனாதலைப் பொறாது அவன் ஏவலையும் கேளாது பகைத்தெழுந்த ஒன்பது மன்னர் களை நேரிவாயில் என்னுமிடத்து வெற்றிகொண்டு வளவ னரசுரிமையும் நிலைபெறச் செய்தானென்று சிலப்பதிகாரம் கூறுகின்றமையின், இக்கிள்ளி வளவனொடு பொருத பழையன்மாறன் என்பான் செங்குட்டுவன் காலத்தவனே யாதல் பெறப்படும். அன்றியும், தனக்குப் பகையான வளவனுக்குத் துணை செய்தமைப்பற்றிச் செங்குட்டுவன் மீதும் இவன் பகைகொண்டிருத்தல் கூடுமாதலின், இவனே பதிற்றுப்பத்தில் பரணரால் கூறப்படும் பழையன் எனத் தெளிதல் வேண்டும். இவனைப் ''பழையன் மோகூர்'' என்று கூறுவதுமுண்டு. மோகூர் என்பது இவனது தலைநகரம். இங்ஙனம் ''பழையன் மோகூர்'' எனக்கூறிய பரணர் அகத்தில் ''பழையன் என்றே கூறி அவனது போஒர் என்னும் ஊரினையும் சிறப்பிக்கின்றார். இக்கூறியவாற்றால், செங்குட்டுவனோடு பொருது தோல்வியுற்றபோழ்து பழையன் தன் மோகூரினையிழந்து ''போஒர்'' என்னும் ஊரினைச் சீர்செய்து புலவர் பாடும் புகழ்பெறுவா னாயினன் என்று கொள்ளல் வேண்டும்,

இனி, இப் பழையன் காவிரிபாயும் சிறந்த நாடுடையன். இவனது நான் மழைவளம் பொய்த்தலின்றி விளைவுநலம் பிழையாப் பெருமையினை உடையது; இவன் சிறந்த பிழைத்தலறியாத வேல் ஏந்திய வீரமுடையவன்; பகை தலைவந்தோர்க்குப் பணியா வாய்மையன், இவை,

> ''மழையொழுக் கறாஅப் பிழையா விளையுள்
> பழையன் மோகூர்''
>
> என்று மதுரைக் காஞ்சியும்,
>
> ''வெண்கோட் டியானைப் போர் கிழவோன்,
> பழையன் வேல்வாய்த் தன்ன நின்
> பிழையா நன்மொழி''

என்று நற்றணைப் பத்தாம்பாட்டும் ''வென்வேல், மாரியம்பின் மழைத்தோற் பழையன்'' என்று பரணரது பாட்டும் கூறியதனால் அறியப்படுகின்றன. இப்பழையனது அவைக்களத்தில் கோசர்

என்னும் ஒருவகை மரபினர் இருந்து தம் வஞ்சின மொழியாலே மேம்பாடுற்று விளங்கினர். அது ''பழையன் மோகூர் அவையகம் விளங்க - நான்மொழிக் கோசர் தோன்றியன்ன'' என மாங்குடி மருதனாராலும், துனைகா லன்ன புனைதேர்க் கோசர் ....மோகூர்'' என மாமூலனாராலும் கூறப்படுதல் காண்க. பழையன் இவர்களது வரிசை யறிந்து ஆதரித்து வந்தான். நிற்க,

இக் கோசர் துளுநாட்டுமக்கள். இவர்கள்,

''மெய்ம்மலி பெரும்பூண் செம்மற் கோசர்
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாக லார்கைப் பறைக்கட் பீலித்
தோகைக் காவின் **துளு** நாடு'' (அகம். 15)

எனவும்,

''அருந்திறற் கடவுட் **செல்லூர்க்** குணாஅது
பெருங்கடன் முழக்கிற் றாகி யாணர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கருங்கட் கோசர் நியமம்'' (அகம். 90)

எனவும்,

''மாவீசு வண்மகிழ் அஃதைப் போற்றிக்
காப்புக்கை நிறுத்த பல்வேற் கோசர்
இளங்கள் கமழும் நெய்தலஞ் செறுவின்
வளங்கெழு நன்னாடு'' (அகம். 113)

எனவும், '' தந்தை
கண்கவி னழித்ததன் றப்பற் றெறுவா
ஒன்றுமொழிக் கோசர்க் கொன் றுமுரண் போகிய
கடுந்தேர்த் **திதியன்**'' [அகம். 196]

எனவும்,

''வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை
வளங்கெழு கோசர்.'' [அகம். 205]

எனவும்,

''கடலாடு மகளிர் கொய்த ஞாழலும்
கழனி யுழவர் குற்ற குவளையும்
கடிமிளைப் புறவிற் பூத்த முல்லையொடு

பல்லிளங் கோசர் கண்ணி யயரும்
மல்லல் யாணர்ச் **செல்லி** [அகம். 216]

எனவும்,

"வாய்மொழித் தந்தையைக் கண்களைந் தருளாது
ஊர்முது கோசர் நவைத்த சிறுமையின்
கலத்து முண்ணான் வாலிதுமுட அன்
[அன்னிமிஞிலி]" [அகம். 262]

எனவும், " வென்வேல்

இளம்பல் கோசர் விளங்குபடை கன்மார்
இகலினர் எறிந்த அகலிலை முருக்கின்
பெருமாக் கம்பம்". [புறம். 169]

எனவும்,

"வலம்புரி கோசர் அவைக்களத் தானும்" [புறம். 283]

எனவும்,

"நனைக்கள்ளின் மனைக் கோசர்
தீந்தேறல் நறவுமகிழ்ந்து
தீங்குரவைக் கொளைத்தாங்குந்து" [புறம். 396]

எனவும்,

"பறைபடப் பணில மார்ப்ப இறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நல்லூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்று". [குறுந். 15]

எனவும்,

" நன்னன்
நறுமா கொன்று நாட்டிற் போக்கிய
ஒன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே" [குறுந்73]

எனவும் வரும் நல்லிசைச் சான்றோர்களின் அணிதிகழும் சொற்பொருளை நோக்குமிடத்து, இக்கோசராவார் துளுநாட்டு மக்கள் என்பதும், இவர்கள் வாய்மை தவறாத மாண்புடையவர் என்பதும் இவர்கள் செல்லூர், நல்லூர் முதலிய ஊர்களிலிருந்து சிற

பெய்தினவ ரென்பதும், இவர்கள் படைப்பயிற்சி மிக்குப் பல வேந்தரோடு பொருது அப்போர் செய்தற் கேற்ற சூழ்ச்சித் திறத்தால் வென்றி கொண்டு விளங்கின ரென்பதும், இவர்கள் தொன் மூதாலத்துப் பொதியிலில் இருந்து தம் மொழியின் வாய்மையும் படைப்பயிற்சியும் மேம்படச் செய்வ ரென்பதும் பெறப்படுவதோடு செல்வக்காலை அல்லற்காலை ஆகிய இருகாலும் ஒரு பெற்றியராய் நட்பாடும் இயல்பினர் என்பதும் தெரிகின்றன. மேலும் யானை முதலியவற்றை வரையாதுவழங்கும் வள்ளன்மை மிக்க அகுதை யென்பானொடு நட்புப்பூண்டு அவனுக்கு உற்றவிடத்து உதவி செய்தனர்; அன்னிமிஞிலி யென்பானது தந்தையின் கண்ணை இவர்கள் களைந்தாராகத் திதியன் குறும்பியன் முதலியோரால் கொல்லப்பட்டனர். இவர்கள் செல்லூரின்கண் மகளிர் கொய்த ஞாழல், உழவர் கொய்த குவளை, புறவிற்பூத்த முல்லை முதலிய மலர்களாற் கண்ணிவேய்ந்து சூடிக் களித்தலும் இளங்கள் ளுண்டு குரவையாடுதலும் பிறவும் செய்து மகிழும் இயல்பினர்.

படைப்பயிற்சி மிகுதியால் இரும் பிடம்படுத்த வடுவுடை முகத்தராய் இக்கோசர் விளங்குதலைக் கண்ட பழையன் இவர்களைத் தன் அவைக்களத்தே கொண்டு போர்த்தொழில் மேற்கொண்டு வேற்று மன்னரை மதியாது செம்மாந்து வருவானாயினான். அக்காலத்து மோரியர் என்னும் ஒருவகை வீரர்கள் வடநாட்டிலிருந்து படையெடுத்து வரலாயினர். இவர்களை "விண்பொரு நெடுவரை இயல்தேர் மோரியர்," "மாகெழுதானை வம்ப மோரியர்," "மோரியர் தென்திசை மாதிர முன்னிய வரவிற்கு" "வென்வேல், விண்பொரு நெடுங்குடைக்கொடித்தேர் மோரியர்" என்று அகத்தும் புறத்தும் சான்றோர் சிறப்பித்துக் கூறுகின்றார்கள். தென்திசை மாதிரம் முன்னிவந்த இவர்கள் தம் தேர்கள் எளிது வருப்பொருட்டு மலையொன்றைக் குறைத்து வழி செய்தனர். இவ்வரிய செயல் பல விடத்தும் உவமிக்கப் பெற்றுளது. இவர்கள் தம் வெற்றியை நிலைநாட்டக் கருதித் தென்திசை வேந்தர்களை அடிப்படுத்த ஞான்று, பழையன் இம்மோரியரது வரவுக்குச் சிறிதும் அஞ்சுதலின்றிப் பணியா னாயினான். அக்காலத்து இவனுக்குச் சிறந்த படைவலி தந்தவர்கள் மேற்கூறிய கோசர்களே யாவர். எனினும் மோரியரே வெற்றிபெற்றனர். இது ஆசிரியர் மாமூலனாரால்

"வெல்கொடித் துனைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத்து அரும்பணைப் பொதியில்

இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி உருளிய குறைத்த
விலங்குவெள் ளருவிய வரை'' என்று கூறப்பெறு
கின்றது.

இங்ஙனம் வெற்றியும் தோல்வியும் பெற்றும் புகழும் வீரமும் குன்றாது மேம்பட்டுவரும் பழையன், நாம் மேற்குறித்தபடி செங்குட்டுவன் மைத்துன வளவனோடு பகைவனானது காரணமாக அக்குட்டுவனோடும் பகைகொள்வா னாயினான். இஃது ஒரு காரணமாக, அறுகை யென்னும் அரசன் ஒருவன் சேரனாட்டுக்குச் சேய்மையி லுள்ளதொரு நாட்டினை யாண்டுவந்தான். அவனால் ஒருதவியும் செங்குட்டுவன் பெறவில்லை யெனினும் அவனைத் தன் ''கேள் என மொழிந்து'' ஒழுகி வருகையில்யாது காரணத்தாலோ அவ் அறுகை யென்பானுக்கும் பழையனுக்கும் பகைமை யுண்டாய்விட்டது. செங்குட்டுவன் பழையனோடு பொருதற்கு இதுவுமோர் காரணமாயிற்று இவ்விரு காரணத்தாலும் பெருஞ் சினங்கொண்டு செங்குட்டுவன் போர் செய்தலை மேற்கொண்ட செயலை பதிற்றுப்பத்தில் பரணரால் பெரும்பான்மையும் புகழப் பெறுகின்றது.

போர்மேற்கொண்ட செங்குட்டுவன் பழையனது மோகூர் அரண்களைத் தகர்த்து, நகருண் ணுழைந்து அவனது வெற்றி முரசினைக் கைப்பற்றி அங்கிருந்த காவல்மரமான வேம்பினை அடியோடு தடிந்து முரசு செய்துகொள்ளும்பொருட்டு அதனைத் துண்டங்களாகச் செய்து வண்டிகளிலேற்றிக் களிறுபல பூட்டித் தன்னாடு திரும்பினன். இது,

''நுண்கொடி யுழிஞை வெல்போர் அறுகை
சேண னாயினுங் கேளென மொழிந்து
புலம்பெயர்ந் தொளித்த களையாப் பூசற்கு
அரண்கள் தாவுநீஇ யணங்குநிகழ்ந் தன்ன
மோகூர் மன்னன் முரசங் கொண்டு
நெடுமொழி பணித்து அவன் வேம்புமுதல் தடிந்து
முரசுசெய முரச்சிக் களிறுபல பூட்டி
ஒழுகை யுய்த்த (ஆடுநடை யண்ணல்)'' என வருவ

தனாலும், இங்ஙனம் எதிர்த்த செங்குட்டுவனோடு பழையன், தன்னிடத்தே யமைந்திருந்த கோசர் ஒழிந்த, வேளிர்பலரும் வேந்தர்பலரும் துணைசெய்யப் பெரும்படை கொண்டு எதிர்த்தும் பயன்பெறா தொழிகின்றான்: துணைசெய்ய வந்த வேளிரும் வேந்தரும் போரிற் பட்டொழிகின்றனர்; ஒழிந்தார் உடலின் குருதி மழைநாட் புனல்போல் பள்ளம் நோக்கிப் பாய்கின்றது; குட்டுவனது வெற்றிமுரசம் நடுவட் சிலைப்ப வாளேந்திய வயவரது பிணங்கள் அக் குருதிப்புனலின் மிதப்ப "மழை யொழுக்கறாப் பிழையா விளையுட் பழையன் மோகூர்" என மாங்குடி மருதனார் புகழ்ந்த விளையுள் வளன் அற நிகழ வாழுநர் பலர் பட்டொழிகின்றனர்; செங்குட்டுவன் கருஞ்சினை விறல் வேம்பறுத்து வென்றி மேம்படுகின்றான்.

"களிறு பரந்தியலக் கடுமா தாங்க
ஒளிறுகொடி நுடங்கத் தேர்திரிந்து கொட்ப
எஃகு துரந் தெழுதருங் **கைகவர் கடுந்தார்** *
வெல்போர் வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து
மொய்வளஞ் செருக்கி மொசிந்துவரும் மோகூர்"

எனவரும் இது பழையன் வெல்போர் வேந்தரும் வேளிரும் தற்சூழ மொய்வளம் செருக்கி வருதலை விளக்குதல் காண்க. இங்ஙனம்,

α "மொய்வளம் செருக்கி மொசிந்துவரும் மோகூர்
வலம்படு சூழுஉ நிலை யதிரமண்டி
நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர் Ψ
நிறம்படு குருதி நிலம்படர்ந் தோடி
மழைநாட் புனலின் அவற்பரந் தொழுகப்
படுபிணம் பிறங்கப் பாழ்பல செய்து
படுகண் முரசம் நடுவட் சிலைப்ப
† வளனற நிகழ்ந்து வாழுநர் பலர்படக்

---

* மாற்றார் படையில் வகுத்து நிறுத்தின கைகளைச் சென்று கவரும் கடிய தூசிப் படை எ.று.

α மொய்வளம் செருக்கி யென்பது வலியாகிய செல்வத்தானே மயங்கி எ.று.

Ψ பகைவருடலில் தாங்கள் எறிந்த வேல் முதலிய கருவிகளைப் பறிக்கின்ற காலத்து அவருடைய வுடலுகு குருதியை அணைந்து சிவந்த கையையுடைய மறவர்.

† நிகழ்ந்து - நிகழவெனத்திரிக்க. வளனற நிகழ்ந்து என்றது: செல்வமானது அறும்படியாகக் கொள்ளை நிகழ எ.று.

கருஞ்சினை விறல் வேம்பறுத்த
பெருஞ்சினக் குட்டுவற் கண்டனம் வரற்கே'' யாமும் செல்லுதும், நீயிரும் வம்மின்'' என ஆசிரியர் பரணர் கூறும் பாடற்பகுதி இப் போர்ச்செயலை விளக்குகின்றது.

இனி, செங்குட்டுவன் பழையனது கருஞ்சினை வேம்பினைத் தடிந்து முரசுசெய முரச்சிக் களிறு பல பூட்டி ஒழுகை யுய்த்த செய்தியை உரைகாரர், 'முரசுசெய முரச்சி யென்றது அவ் வேம்பினை முரசாகச் செய்தற்கு முற்றுவித் தென்றவாறு முற்றுவித்தலாவது ஒழுகை யேற்றலாம்படி துண்டங் களாகத் தறிப்பித்தல். களிறென்றது மோகூர்மன்னன் களிற் றினை. களிறுபல பூட்டி யென்றது அவனேறும் யானைகளை யவமதித்துச் ∅ சாட்டிற்குக் கடாவோபாதியாகப் பூட்டி யென்றவாறு. பூட்டி யென்றதற்கு ''வாலிழை கழித்த நறும்பல் பெண்டிர், பல்லிருங் கூந்தல் முரற்சியால், குஞ்சர வொழுகை பூட்டி என இதன் பதிகத்து வந்தமையால் அம் மகளிர் கூந்தல் மயிர்க்கயிற்றாற் பூட்டி யெனக்கொள்க'' என்று கூறுதலையும் பதிகத்தையும் நோக்குமிடத்து ஆசிரியர் பரணரால் கூறப்படாத செய்தி யொன்று வெளியாகின்றது. பழையன் செங்குட்டுவனோடு போர்புரிந்த காலத்து வேந்தர் வேளிர் களோடு தானும் வீழ்ந்துபட்டான்; விழவே, அவனது உரிமை மகளிர் பலர் தம் வாலிய இழைகளைக் களைந்து அலமந்து புலம்ப, அவர்களைக் குட்டுவன் பற்றிக் கூந்தல் களைந்து, கயிறு திரித்து, குஞ்சரம் பூட்டிய வண்டியில் அவ் வேம்பின் துண்டங்களைக் கட்டிக் கொணர்ந்தான் என்பது.

இது பரணருக்குத் தெரிந்திருந்தால் அவர் குறியாது விடார். ஏனெனில், நல்லிசைச் சான்றோர்களாற் பாடப்பெறும் புகழ்படைத்த நன்னன் என்பவன் கற்றோரை யாதரிக்கும் கல்விவள்ளலா யிருந்துப் பெண்கொலை யொன்று புரிந்தமையை ''பெண்கொலை புரிந்த நன்னன் போல, வரையா நிரயத்துச் செலீ இயரோ அன்னை'' யெனக் குறுந்தொகைக்கண் விதந்து பாடியவர் இப்பரணர் ஆதலால், இவருக்குப் பிற்போந்தவர் பதிகம் பாடுவார் இச் செய்தியை மிகைப்படுத்திக் கூறியிருத்தல் வேண்டுமே யன்றி உண்மைச் செய்தி யாகாது என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். இக்கருத்தே பற்றிச் சரித்திர ஆராய்ச்சி வல்லுநரான திரு. P, T. சீநிவாச அய்யங்கார் அவர்கள் இச் செய்தியை மறுக்கின்றனர்.

∅ சாடு - வண்டி, கடாவோபாதி - கடாக்களையொப்ப

இனி, இப் பழையன் மோகூரைப் பற்றிய வரலாற்றிற் சேர்ந்த மோரியர் என்பார் பாடலிபுரத்து மோரிய வரசரது குடிக்குறியோர் என்றும், அவர்கள் முதலாங் கீர்த்திவர்மன் என்னும் சாளுக்கிய வேந்தனது பகைவர்கள் என்றும் "பம்பாய் கெசட்டீர்" என்னும் வரலாற்று நூல் கூறுகின்றது. ஆசிரியர் மாமூலனார், மோரியர் வடநாட்டு வாழ்நராவர்; இவர்கட்கு முன் தென்றிசை நோக்கி வடுகர் வந்து தம் வன்மையால் வளம் பெறக் கண்டு, இம்மோரியர் தென்திசையிலும் தம் வென்றிச் சீர் விளங்குதல் வேண்டும் என்று கருதி வந்தனர் என்றும் அதுபோது அவர் மலையைக் குறைத்துத் தம் தேர்களுக்கு வழிசெய்து கொண்டனர் என்றும் கூறுகின்றார். அது

"முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிர முன்னிய வரவிற்கு
விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி உருளிய குறைத்த
அறையிறந் தவரோ சென்றனர்" (அகம். 281)

என்பது.

இனி, ஆசிரியர் பரணரால் பாடப்பெறுந் தகுதிபெற்ற அரசர் பெருமக்களுள் ஒருவனான கரிகாலன் வரலாற்றினைச் சிறிது காண்பாம்.

பகுதி - உ

கரிகாலன்

பரணர் என்னும் புலவர் பெருமகனாரால் தம் பாடலின்கண் உலகம் பொன்றுங்காறும் பொன்றாப் புகழ் தரப்பெற்ற தமிழ் நாட்டு முடியுடை வேந்தர்களுட் கரிகாற் சோழன் வரலாறு ஈண்டு ஆராயப்பெறுகின்றது. இவனது வரலாறு பல அறிஞர்களால் சீரிய முறையில் ஆராய்ந் தெழுதப்பட்டிருத்தலின் அதனை முற்றிலும் ஈண்டுக் கூறின் இக் கட்டுரை மிகப் பெருகு மென்றஞ்சிச் சிறிதே கூறுகின்றோம்.

சோழ நாட்டை யாண்ட அரசர்களுட் டலைமையாகக் கூறப்படுபவன் இக் கரிகாலனே. இவன் காலத்துத்தான் சோழ னாடுமிகச்சிறந்த புகழ் பெறுவதாயிற்று. "சோழ வளநாடு சோறுடைத்து" என ஔவையார் கூறுதற்கு ஏதுவான நெல்வளம் இவன் ஆட்சி யிற்றான் மேம்பட்டது. இதுபற்றித்தான்,

"ஏரியும் ஏற்றத்தி னாலும் பிறர்நாட்டு
வாரி சுரக்கும் வளனெல்லாம் - தேரின்
அரிகாலின் கீழுகூஉம் அந்நெல்லே சாலும்
கரிகாலன் காவிரிசூழ் நாடு" என்று சான்றோர் புகழ் வாராயினார். சுருங்கக் கூறின், ஒரு நாடு சீரிய புகழ் பெறுதற்கு வேண்டுவன யாவையோ அவை முற்றவும் ஆக்கி அமைத்த அறிவு, ஆண்மை, பொருள், படையாகிய ஆற்றல் படைத்த அரசரேறு இக் கரிகாலன் என்பது பொருத்தமாகும்.

கரிகாலன் **உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி**யென்பானது அருமைத் திருமகன். இவன் தன் இளமைப் பருவத்தே தந்தையை யிழந்து தன் அம்மான் **இரும்பிடர்த் தலையார்** என்பாரைத் துணையாகக் கொண்டு கருவூரில் இருந்து வந்தான். அக்காலத்துச் சோழநாடு அரசிழந்து அலமந்து வருந்தக் கழுமலத்தி லிருந்த சான்றோர் அரசுவா ஒன்றை அணிசெய்து மாலை யளித்தனுப்ப, அவ்யானைகருவூரிலிருந்த கரிகாலனைக் கொணர்தர,அச்சான்றோர் ஒன்று கூடி யவனை யரசனாக்கினார் அக்காலை அவன் மிக்க இளையனா யிருந்தது கண்ட புற மன்னர் பலர் கூடி யெதிர்த்து அந்நாட்டைக் கைக்கொண்டு கரிகாலனையும் சிறைப்படுத்தினர். இவன் அச் சிறையினின்றுந் தப்பி வெளிப்போந்து, தனக்குவேண்டும் படைத்துணை கொண்டு அப்பகை மன்னரை வென்று தன் நாட்டினைத் திரும்பப் பெற்று அரசுபுரிந்தனன்;மேலும் இவன்இளமைக் காலத்தே தன் மதிநுட்பத்தால், சான்றோர் வியப்பெய்த,வேற்றுருவங் கொண்டு வழக்கொன்று கொண்டு போந்த முதியோர்கள் உள்ளம் உவப்ப அதனைத் தீர்த்து முடிபுசெய்தான்; நாங்கூர் வேளிடை மகட் கொண்டு இவன், பத்தினிக் கடவுளெனப் பரவிப் புகழ்பெறும் **கண்ணகியால்,** "உரைசான்ற மன்னன் கரிகால் **வளவன்** மகள்" எனப் புகழப்பெற்ற **ஆதி மந்தியார்** என்னும் கடவுட் கற்பும் கல்விப்புலமையும் மிக்க பெண்மகளைப் பெற்றான்; உறையூரினின்றும் காவிரிப்பூம்பட்டினம் போந்து,அதனைத்தன் தலை நகராகக் கொண்டு, செல்வங் கொழுத்த திருநகராக்கி-னன்; வெண்ணி, வாகை முதலிய விடங்களிற் றன்னை யெதிர்த்த வேந்தர் வேளிர்களை வென்று சிறப்பெய்தினான்; வடநாடு சென்று மேற்செல்லாவாறு, இமயம் தடுப்பச் சினந்து அதன் சென்னியிற் புலிக்கொடி பொறித்துத் திரும்பினன்; தன் நாட்டின் கண் காடு கொன்று நாடாக்கிக் குளந் தொட்டு வளம் பெருக்கிக் குடிபெருகக் கோலோச்சி வந்தனன். வாணிபம் கைத்தொழில் முதலியன ஒருபுடை விளங்க, கல்விநலம் **மேன்மேலும்**

வளர்ந்தது சான்றோர் பலர் தழைத் தோங்கினர். **முடதாமக் கண்ணியார்**, **கடியலூர் உத்திரங்கண்ணனார்** முதலிய நல்லிசைப் புலவர் பலர் கரிகாலன் மீது நறுந்தமிழ்ப் பாட்டுக்கள் பாடுவாராக, அவர்கள் வரிசை யறிந்து இவனும் தருவன செய்து அவர் புலமைநலம் வளம்பெறச் செய்தனன்.

இனி, இவன் பிறக்குங் காலத்துத் "தாய் வயிற்றிருந்து தாயம் எய்திப்" பிறந்தானென ஆசிரியர் முடத்தாமக்கண்ணியார் கூறுகின்றார். அதற்கு ஆசிரியர் **நச்சினார்க்கினியர்** "தாயுடைய வயிற்றிலே யிருந்து அரசுரிமையைப் பெற்றுப் பிறந்து எ. று. தான் பிறக்கின்ற காலத்துப் பிறவாதே நல்ல முகூர்த்தம் வருமளவும் தாயுடைய வயிற்றிலே யிருந்து பிறக்கையினாலே அரசவுரிமையைப் பெற்றுப் பிறந்து என்றார்" என்று உரைவகுத்துள்ளார்,

இதனை யாராயுமிடத்துப் புனைந்துரையெனக் காணப்படுகிறதேயன்றி உண்மையாகக் கோடற்கு இடமின்று. ஏனெனின், பிரசூத வாயுவானது, கருவுயிர்க்கு மாதர், நிற்கினும், இருக்கினும்-கிடக்கினும் வேறு எந்நிலை மேவினும் மகவை வெளிப்படுத்தும் தன்மையது என்பதும்; அதனைத் தடுத்திடின் தாய்க்கும் குழந்தைக்கும் இறுதி பயக்கும் என்பதும் **மருத்துவ நூல்** (Midwifery) வல்லார் கண்டறிந்தன வாகலால் பிறக்கின்ற காலத்திற் குழந்தையைப் பெறாமல் வேண்டுமளவும் தாங்கி வைத்துப் பெறுவது எவர்க்கும் முடியாத காரியமேயாம். ஆனால் தாய்க்குப் பேற்றுவலி தொடங்கிய போது, அயலிற் சூழ்ந்துள்ளார், "இன்ன நல்லோரையில் இக்குழந்தை பிறக்குமனின் நன்று" எனப் பகர்வது பெருவழக்கு. சிற்சிலவமையத்து இவர்கள் கருதிய நேரமும் குழந்தை பிறக்குங்காலமும் "காகதாலிய நியாயம் போல்" தம்மில் வந்து இயைவதும் உண்டு அங்ஙனம் நேர்ந்த இதனை இங்ஙனம் புனைந்துரைத்தனர் போலும்.

"இக்கரிகாலன் நெடுநாளைக்குப் பின்னரேயே **தன்** அரசுரிமையை எய்தப்பெற்றனன் என்பது விளங்கிக் கிடத்தலால் "தாய் வயிற்றிருந்து தாயம் எய்திப் பிறந்து" என்பதற்குத் "தொழு தெழுவார்" என்றதை "எழுந்து தொழுவார்" எனப் பொருள்கொண் டாங்குத் "தாய் வயிற்றிருந்து பிறந்து பின்னர்த் தாயம் எய்தி" எனப் பொருள் கோடல் நேரிதாகக் காண்கின்றது" ∅.

∅ சோழன் கரிகாற் பெருவளத்தான். P.21. குறிப்பு

நிற்க, "கோச் செங்கட் சோழர் இங்ஙனம் பிறந்தன ரென்பது **திருத்தொண்டர் புராணத்தால்** அறியலாவது. **செவ்வந்திப் புராணம் பராந்தகன்** மகனாகிய (ஒரு) கரிகால னுக்கு இச்செய்தியை உரிமையாக்குகின்றது. இவ்வாறாய கதைகளில் ஒன்றை யுட்கொண்டே நச்சினார்க்கினியரும் இங்ஙனம் பொருள் கூறினாராவர். ஆனால் தாய்வயிற்றி லிருந்து பிறக்கு முன்னரே தந்தை விண்ணுல கெய்தினனாக லின் அப்பொழுதே அரசுரிமை யெய்திப் பிறந்தனன் என்று கூறுவது ஏற்புடைத்தாகத் தோன்றுகிறது" †

இவன் கருவூரிலிருந்து அரசுவரவாற் கொணரப்பெற்று அரசுரிமை யெய்திய செய்தி,

Ψ "கழுமலத் தியாத்த களிறுங் **கருவூர்**
விழுமியோன் மேற்சென் றதனால்—விழுமிய
வேண்டினும் வேண்டா விடினும் உறப்பால
தீண்டா விடுத லரிது."

என்னும் **பழமொழி** வெண்பாவும், "கழுமலம் என்னும் ஊரின் கண்ணே பிணித்து நின்ற களிறும், கருவூரின் கண்ணே யிருந்த **கரிகால் வளவன்** கடிது இளையனாயினும் அவன் சிறப் புடையனாதலால் அவன்மேற் சென்று தன்மிசை யெடுத்துக் கொண்டு அரசிற் குரிமை செய்தது" எனவரும் அதன் உரைப் பகுதியும். கூறுகின்றன. இவன் வேற்றுருக்கொண்டு வழக்கு முடிபு காட்டியது **பொருநராற்றுப்படையில்**

"முதியோர்,

அவைபுகு பொழுதிற்றம் பகை முரண் செலவும்" எனவரும் அடியின் உரையாலும்,

⊕ "உரைமுடிவு காணான் இளமையோ னென்ற
நரைமுது மக்க ளுவப்ப - நரைமுடித்துச்
சொல்லான் முறைசெய்தான் **சோழன்** குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்"

என்னும் பழமொழி வெண்பாவோடு, "தம்முள் மறுதலை யாயி- னாரிருவர் தமக்கு முறைமை செய வேண்டி வந்து சில சொன்னால் அச் சொன் முடிவு கண்டே ஆராய்ந்து முறை

---

† **The Cholas Part I. P.** 37.

Ψ பழமொழி நானூறு. செய். 62. பழையவுரை.

⊗ பழமொழி. 21

செய்ய அறிவு நிரம்பாத இளமைப் பருவத்தா னென்றிகழ்ந்த நரைமுதுமக்களுவக்கும்வகை நரைமுடித்து வந்து முறை வேண்டிவந்த இரு திறத்தாரும் சொல்லிய சொற்கொண்டே ஆராய்ந்தறிந்து முறை செய்தான் **கரிகாற் பெருவளத்தா** னென்னும் சோழன்'' என வரும் அதன் உரைப் பகுதியாலும், ''இளமை நாணி முதுமை யெய்தி உரை முடிவு காட்டிய உரவோன் மருக'' எனவரும் **மணிமேகலை** யடிகளாலும் தெரிகிறது. ''வெண்ணிற்றாக்கிய, கண்ணார் கண்ணிக் **கரிகால்** வளவன்'' எனவரும் பொருநராற்றுப்படையி னடிகளுரையில் இவன் கால் நெருப்பாற் சுடப்பட்டமையால் கரிகாலன் என்னும் பெயரின னாயினன் என்பது தெரிகிறது. இது

β ''சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் பேரானைப் பெற்றுக்-கடைக்கால்
செயிரறு செங்கோல் செலீஇயினான் இல்லை
உயிருடையா ரெய்தா வினை.'' என்னும் பழமொழி

வெண்பாவாலும் அறியப்படுகின்றது. மேலும், இதன்கண் கரிகால்ன் அம்மான் இரும்பிடர்த் தலையாரைத் துணைக் கொண்டமையும் தோன்றுதல் காண்க.

இனி, இவன் இளமைக் காலத்து அரசுரிமை பெற்ற ஞான்று பகைமன்னராற் சிறைப்படுத்தப் பெற்ற செய்தியும், பின்னர் இவன் அச் சிறையினின்றும் வெளிப்போந்த செய்தியும் ஆசிரியர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் உவமை நலம் பொலிய, **பட்டினப்பாலை** யென்னும் செழுந்தமிழ்ப் பாட்டினுள்

''கூருகிர்க்
கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர், பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி
அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதின் உணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்(து)
உருகெழு தாயம் ஊழின் எய்திப்
பெற்றவை மகிழ்தல் செய்யான்'' என்று கூறுவதனால்

அறியப்படுகின்றன. இதன்கண், இவன் சிறைக்கண்ணே ஆற்றல் சிறந்தான் என்பது ''குருளை கூட்டுள் **வளர்ந்தாங்கு**'' என்னும் உவமையால் விளங்குதல் காண்க.

β பழமொழி. 510

மேலும், இப் பாட்டின் பகுதியின்கண் இவன் சிறைக்களத்தினின்றும் வெளிப்போந்த செய்திக்குத் தரப்பெற்றுள்ள, பிணியகத் திருந்து, குழிகொன்று, வெளிப்போந்த பெருங்கை யானை பிடிபுக்காங்கு என்னும் உவமை இவன் தன் மனைவியையும் உரிமை மகளிரையும் அடைந்து கூடினன் என்று தெரிவிக்கின்றது. இவன் **நாங்கூர்வேளிடை** மகள் கொண்டனன் என்னும் செய்தி "மன்னர் பாங்கிற் பின்னோராகுப" என்னும் **தொல்காப்பிய அகத்திணையியற்** சூத்திர வுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியரால் கூறப்படுகின்றது. இச் சூத்திரத்திற் பின்னோராவார் வேளாளவராவர். "அவர், உழுதுண்போர், உழுவித்துண்போர் என இருவகையின ராவர். "அவருள், உழுவித்துண்போர் மண்டிலமாக்களும் தண்டத்தலைவருமாய்ச் **சோழநாட்டுப் பிடவூரும், அழுந்தூரும், நாங்கூரும், நாவூரும், ஆலஞ்சேரியும், பெருஞ்சிக்கலும், வல்லமும், கழாரும்** முதலிய பயிற்றோன்றி வேளெனவும் அரசெனவும் உரிமை யெய்தினோரும், பாண்டியனாட்டுக் காவிதிப் பட்டமெய்தினோரும் குறுமுடிக் குடிப்பிறந்தோர் முதலியோருமாய் முடியுடை வேந்தர்க்கு மகட்கொடைக்குரிய வேளாள ராகுப ... உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி **அழுந்தோர்வேளிடை** மகட் கோடனெறும் அவன் மகனாகிய **கரிகாற் பெருவளத்தான் நாங்கூர்வேளிடை** மகட்கோடலுங் கூறுவார்" என்பது இச் சூத்திரத்து காணப்பகுதி.

இக்கூறிய செய்திகளுள் கரிகாலன் கால்நெருப்புற்றதும், கபிலத்து யாத்த களிறு கொணர்ந்து அரசுரிமை யெய்துவித்ததும் ஆராய்ச்சிக்குட் படலாகாத செய்திகளாமென அத்துறையின் வல்லுநர் கூறுகின்றனர். Φ நிற்க.

கரிகாலனது போர்ச்செயல்களுள் முதற்கண் நிகழ்ந்தது வெண்ணிப் புறந்தலைப்போர். அதுபோது இவனோடு எதிர்த்து பொருதவர் பதினோரு வேளிரும் வேந்தர் பலருமாவர். இது,

> காய்சின மொய்ம்பிற் பெரும்பெயர்க் கரிகால்
> ஆர்கலி நறவின் வெண்ணி வாயிற்
> சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
> இமிழிசை முரசம் பொருளகத் தொழியப்
> பதினோரு வேளிரொடு வேந்தர் சாய
> மொய்வலி யறுத்த ஞான்றைத்
> **கொய்யா வழுந்தூர்** ஆர்ப்பினும் பெரிதே" என

Φ His. of the Tamils p. 369-70.

இக்கட்டுரைத் தலைவர் ஆசிரியர் பரணர் கூறுவதனாலறிதலாம். இவ்வெண்ணிப்போர் ஆசிரியர் முடத்தாமக்கண்ணியாரால் பொருநராற்றுப்படையுள்,

"இரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை
அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்
ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்
கண்ணார் கண்ணிக் **கரிகால் வளவன்**" எனவும்,

"நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழி லாண்ட வுரவோன் மருக!
களியியல் யானைக் கரிகால் வளவ!
சென்றமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற
வென்றோய்! நின்னினும் நல்லன் அன்றே
கலிகொள் யாணர் **வெண்ணிப் பறந்தலை**
மிகப்புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே" என

வெண்ணிக் குயத்தியார் என்னும் புலவர் பெருமாட்டியின் அரிய பாட்டினாலும் கூறப்பெறுவது காண்க.

இக்காட்டிய பாட்டுக்களால் கரிகாலனுடைய போர்களில் இப்போரே சிறந்ததெனச் சான்றோரால் கருதப்பட்டிருத்தலை அறிதல் வேண்டும். இவற்றால், இப் பறந்தலையின்கண் பொருதவர், முடிவில், பதினொரு வேளிரும் சேரபாண்டியர்களாகிய இரு பெரு வேந்தரும் அவர்க்குத் துணைப்போந்த குறுநில மன்னருமாவர் என்பது பெறப்படுகின்றது. இம் மன்னர்கள் தோல்வியுற்றோடிய போழ்து ஒரு வேந்தன் தான் பெற்ற புறப்புண்ணிற்கு வருந்தி வடக்கிருந்து உயிர் நீத்தானென்பது வெண்ணிக் குயத்தியார் பாடலாற் றெரிகின்றது. ஆனால், 'மண்முழா மறப்பப் பண்யாழ் மறப்ப' என்னும் **கழாத்தலையார்** பாடிய புறப்பாட்டு, "சேரமான் **பெருஞ்சேரலாதன்** சோழன் கரிகாற் பருவளத்தானோடு பொருது புறப்புண்ணாணி வடக்கிருந்தானைப்" பாடியதாகக் கூறப்பட்டிருத்தலின், கரிகாலனோடு போர் செய்த சேரன் சேரமான் பெருஞ்சேரலாதன் என்பது வெளிப்படுகின்றது. இது **மாமூலனாரால்** அகநானூற்றில்

"ஒண்படைக்
கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருதுபுண் நாணிய சேரலாதன்
அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென
இன்னா வின்னுரை கேட்ட சான்றோர்
அரும்பெற லுலகத் தவனொடு செலீஇயர்
பெரும்பிறி தாகி யாங்கு" எனப் புகலப் பெற்றிருக்கின்றது. அச் சேரலாதன் வடக்கிருந்து உயிர்துறப்ப, அவன் பிரிவாற்றாத சான்றோர் சிலர் தாமும் உயிர் நீத்தனர் என்பதும் அறியவேண்டுவ தொன்று.

இங்ஙனம் வெண்ணிப்பறந்தலையின்கண் கரிகாலன் வென்றி கொள்ளப் பிறக்கிட்டோடிய சேரலாதன் சேரமான் பெருஞ்சேரலாதன் ஆவான் என்பதும் அவன் சான்றோர் பலரால் அன்பு செயப்பெற்றதும் அறிஞர் பலராலும் மேற்கூறிய சான்றுகளால் கொள்ளப்பட்டிருக்கின்றன. மற்று, தமிழர் வரலாறுடையார், "புறத்தின் பதிப்பாசிரியர் வெண்ணிக்குயத்தியார் கரிகாலனோடு போர்செய்து பிறக்கிட்டோடிய மானத்தால் வடக்கிருந்தான் ஒரு வேந்தன் என்றதனாலும், அகத்தில் மாமூலனார் கரிகாலனோடு போர்புரிந்து வடக்கிருந்து உயிர் துறந்தவன் நெடுமை பெருமை முதலிய அடையின்றி வறிதே, "சேரலாதன்" என்றதனாலும், புறத்திற் கழாத்தலையார் பாடிய சேரன் "பெருஞ்சேரலாதன்" என அடைபெற்றோன் ஆதலினாலும், சேரலாதனும் பெருஞ்சேரலாதனும் ஒருவராகார். மேலும், பெருஞ் சேரலாதன் என்பான் ஒருவனே புறத்திற் கூறப்படுகின்றான். ஆகலின், அவனைப்பற்றி விளங்கத் தெரிதற்கு வேறு சான்றேயில்லை" என்று கழறுகின்றார்.

இனி, இவன் வாகைப் பறந்தலையின் கண்ணும் ஒரு போர் செய்து அங்குத் தன்னை யெதிர்த்த ஒன்பது மன்னர்களை வெற்றி கொண்டான் என்பது தெரிகிறது. இது, ஆசிரியர் பரணரால்

"பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகை பறந்தலை யாடுபெற
ஒன்பது குடையு நன்பக லொழித்த
பீடின் மன்னர் போல
ஓடுவை மன்னால் வாடைநீ யெமக்கே" என

அகநானூற்று 125 ஆம் பாட்டின்கட் கூறப்பெறுகின்றது.

இனி இவன் வேறு சில மன்னர்களோடும் வேற்று நாட்டு மக்களோடும் போர்செய்து நிறைந்த திருவும் சிறந்த புகழும் பெற்று விளங்கினான் என்பதற்கு இவன் காலத்தே பாடப்பெற்ற பட்டினப்பாலை யென்னும் நூலே சான்றாகின்றது. அது

''பல் ஒளியர் பணியொடுங்கத்
தொல் அருவாளர் தொழில்கேட்ப
வடவர் வாடக் குடவர் கூம்பத்
தென்னவன் திறல்கெடச் சீறி மன்னர்
மன்னெயில் கதுவும் மதனுடைய நோன்றாள்
மாத்தானை மறமொய்ம்பின்
செங்கண்ணாற் செயிர்த்துநோக்கிப்
புன்பொதுவர் வழிபொன்ற
இருங்கோவேள் மருங்குசாய'' என்பது. மேலும் அந்

நூல், இவன் நாடுவளம் படுத்திச் செல்வநிலை மிகுதிபடுத்திய செய்தியை மிக வழகுபெறச் சுருங்கச் சொல்லி விளக்குகின்றது. அது:

''காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கிப்
பிறங்குநிலை மாடத்து உறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீ இ
வாயிலொடு புழையமைத்து
ஞாயிறொறும் புதைநிறீ இ'' என்பது

இதன் கண் இவன் உறையூரினின்றும் தன் தலைநகரை மாற்றிக் கொண்ட செய்தி ''உறந்தை போக்கி'' யென வருதலாற் காண்க.

இனி இவன் காலத்து வாணிபநலம் மேம்பாடுற்றும் வணிகர் தம் அறுந்திறம்பாது பண்டம் பகூர்ந்து வயங்கியும் நிலவ இவன் நாடு சிறந்ததற்கு,

''நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடற் றுகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெளிய ஈண்டி

வளந்தலை மயங்கிய நனந்தலை, மறுகு'' எனவும்

''புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்
கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங்
குறைபடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்
தொல்கொண்டித் துவன்றிருக்கை'' எனவும் வருவன வற்றால் அறியப்படும்.

வேறு, **சிலப்பதிகாரத்தில்** இவன் வச்சிரநன்னாடு, மகத நாடு, அவந்தி நாடு முதலிய நாடுகளைத் தான் வடதிசை நோக்கிச் செல்லுவோன். ''அசைவில் ஊக்கத்து நசைபிறக் கொழியப், பகை விலக்கியது இப் பயங்கெழு மலை யென, இமையவ ருறையும் சிமையப் பிடர்த்தலைக்கொடுவரி யேற்றிக், கொள்கையிற் பெயர்ந்து'' வருங்கால் அடிப்படுத்து அவ்வந். நாட்டு வேந்தர்களாற் றரப்பட்ட கொற்றப்பந்தர், பட்டி மண்டபம், தோரணவாயில் முதலிய பெற்றுச் சிறப்பெய்தினான் என்பது கூறப்படுகிறது. அன்றியும் **கலிங்கத்துப் பரணி**யில் **ஆசிரியர் சயங்கொண்டாரால்**

''செண்டு கொண்டுகரி காலனொரு காலிமயச்
சிமய மால்வரை திரித்தருளிமீளவதனைப்
பண்டு நின்றபடி நிற்கவிது வென்றுமுதுகிற்
பாய்பு லிப்பொறி குறித்தது மறித்த பொழுதே''

எனப் ''பயங்கெழு மாமலை பகைவிலக்கிய'' செய்தியும் அவன் புலிப்பொறி வைத்த செய்தியும் கூறப்படுதல் காண்க. இங்ஙனமே கரிகாலன் இமயம் சென்ற செய்தி மட்டில், **தக்கயாகப் பரணி ஆசிரியர் ஒட்டக்கூத்தரால்**'' பொறைசூழ் வரையிற் புலியே றெழுநும், பொன்மே ருவரைப் பெருமான் மகளார்'' எனக் கூறப் படுவதோடு அதன் உரையாசிரியராலும், ''பொன்மலை யிவன தாதற்குக் காரணம் மகாமேருவின் அடி முதல் முடி கடை சோழர் களால் எழுதப்பட்ட புலிப்பொறியே யாதலாலும்'' கரிகாலன் கைச்செண்டால் திரித்தான் என்னும் கதையுண்டாதலாலும்'' என்று கூறப்பெற்றுள்ளது. ஆனால் இவையனைத்தையும் இற்றைக்காலச் சரித்திர ஆராய்ச்சியாளர் ஒல்லாத செயல்களா மென மறுத்துவிடுகின்றனர்.

இனி, இவன் காவிரியாறு ஆண்டு தோறும் பெருவெள்ளத் தாற் சோழநாட்டின் வளனைக் குறைத்துக்கொண்டு வந்தமை காரணமாக, அதன் இருமருங்கும் தடங்கரை கட்டி அப் பெருக்கினையும் தக்கமுறையில் பயன்படுத்திக் கொண்டனன் என்னும் செய்தியொன்று **சிலோன் தேசசரித்திரமும் தெலுங்கு நாட்டுக் கால்வெட்டுக்கள்** சிலவும் வெளியிடு கின்றன. இவற்றுட் சிலோன் தேச சரித்திரம் "காவிரி கரை செய்தற்குச் சிங்களர் பன்னீராயிரவரைச் சிறைகொண்டு சென்றான்" என்று கூறுதலை அறிஞர்கள் பலர் மறுத்துக் கல்வெட்டுச் செய்தியை உறுதி செய்து கொள்ளுகின்றனர்.

இது காறும் கூறப்பெற்ற செயல்களுட் கரிகாலன் செயல் களென நல்லிசைச் சான்றோர்களான தொகை நூலாசிரியர்கள் கூறுவன வெண்ணிப்போர், வாகைப்போர், உறையூரினின்றும் பெயர்ந்தது, நாடு வளம்படுத்தது முதலியனவே யன்றிக் காவிரிக்குக் கரைகட்டிய செய்தியும் மேருவரையைச் செண்டா லடித்துப் புலிப்பொறி வைத்தசெய்தியுமல்ல.

இவன் மகள் ஆதிமந்தியென்பாளது வரலாறு தனியே பின்னர் ஆராயப்படுகின்றமையின், ஈண்டுக் கூறிற்றிலம்.

இனி, இவன் பல புலவர்களை யாதரித்து அவர்தம் அரிய தமிழ்க்கவிகளை யேற்று அவற்றின் சொற்பொருட்சுவை யோர்ந் தும் நுகர்ந்தும் புலமை சிறந்திருந்தான். இவன் காலத்து இவனால் சிறப்புச் செய்யப்பெற்ற புலவர் பெருமக்களுட் சிறந் தார் கடியலூர் உருத்திரங் கண்ணனார்' முடத்தாமக்கண்ணியார் வெண்ணிக்குயத்தியார், கழாத்தலையார் முதலியோர் ஆவர். இவருள் கடியலூர் உருத்திரங்கண்ணனார் இவன் மீது பட்டினப்பாலையென்னும்'அழகிய பாட்டினைப் பாடிப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசு தரப்பெற்றார். இது, "தழுவுசெந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன் பத்தொ டாறுநூ றாயிரம்பெறப் பண்டு பட்டினப்பாலைகொண்டதும்" எனவரும் கலிங்கத்துப் பரணி பாடலால் அறியக் கிடக்கின்றது.

இனி இவனது காலம் பல அறிஞரால் பலவேறு வகையாக முடிபுசெய்து கூறப்பட்டுள்ளது. சிலர் கி.மு. முதல் நூற்றாண் டென்பர்; சிலர் கி. பி. முதல் நூற்றாண்டென்பர் வேறு சிலர் கி. பி. மூன்று நான்காம் நூற்றாண்டுகளென்று கூறுவர். திருவாளர் பி. டி. சீநிவாச அய்யங்கார் அவர்கள் "இவனது காலம் கி. பி. நான்காம் நூற்றாண்டின் இறுதியும் ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியு மாகும்" என்று சில சிறந்த சான்றுகளுடன் முறையே ஆராய்ந்து கூறுகின்றார்.

இனி இவன் காலத்துச் சிறந்திருந்த நகரங்களுள் உறையூர், காவிரிப்பூம்பட்டினம் ஆகிய இரண்டுமே மேற்கண்ட செய்யுட்களில் நாம் அறிந்தனவாகின்றன. அவற்றோடு இடையாறு என்றும் ஒருநகரம் அவன் நாட்டின்கண் இருந்ததென்றும் அது மிக்க செல்வம் சிறந்த நகரமென்றும் கொள்ளல் வேண்டும். அது, தண்டமிழ்ச் சான்றோருட் டலைவரெனக் கருதப் படும் **ஆசிரியர் நக்கீரனாரால்** அகத்தில்

"துவரப் புலர்ந்து தூமலர்க் கஞலித்
தகர நாறுந் தண்ணறுங் கதுப்பிற்
புதுமண மகடூஉ அயினிய கடிநகர்ப்
பல்கோட் டடுப்பிற் பாலுலை யிரீஇக்
கூழைக் கூந்தற் குறுந்தொடி மகளிர்
பெருஞ்செந் நெல்லின் வாங்குகதிர் முறித்துப்
பாசவ லிடித்த பருஉக்கா மூலக்கைக்
கடிதிடி வெரீஇய கமஞ்சூல் வெண்குருகு
தீங்குலை. வாழை ஓங்குமடல் இராது
நெடுஞ்கான் மாஅத்துக் * குறும்பறை பயிற்றும்
செல்குடி நிறுத்த பெரும்பெயர்க் கரிகால்
வெல்போர்ச் சோழன் இடையாற் றன்ன
நல்லிசை வெறுக்கை தருமார் (சுரனிறந்தோர்)" என்று

---

* An interpretation of the lines printed antic is given by the author of the History of the Tamils and I quote it for examination.

"Having conquered these (அருவர், ஒளியர், இருங்கோவேள் etc). Karikal subjugated the Northern kings (வடவர்) ie the Pallava Rajas of Kanci. He pushed beyond and brought under his sway the Poduva chieftains, who ruled over the Cudappa and Karnool districts. The word Poduvar means herdsman cheif and must refer to the rulers of the pastoral tribes that inhabited the Mullai region, north of the Marudam lands belonging to the Pallavas. The herdsmen brought under Karikal's sway were Kurumbas (குறும்பர்கள்) like those who inhabit these districts even to-day and weave the famous kambalis of that region." Then the author begins to intertrpret as: "The famous victor, the Sola Karikal, protected the families of the Kurumbar who tend (flocks) on

பாராட்டப்பெறுகின்றது. விளைத்த ஒன்று ஆயிரமாக விளையும் காவிரி புரக்கும் நாடுகிழவோன் இவனாதலால், இவனுடைய இந்நகர் செல்வஞ் சிறத்தல் அருமை யன்றன்றே !

இவன் காலத்தே ஆரியரது நாகரிகம் தமிழ் நாட்டிற் பரவிவிட, அதன் பயனாக வந்த வேட்டல் வேட்பித்தல் என்பன போன்ற நெறிகளுள் வேட்டல் என்பதனைக் கரிகாலனும் ஏற்றுச் செய்துள்ளான், என்பது இவன் இறந்த போழ்து இவன் பிரிவாற்றாது உலகினை நோக்கி வருந்திக் கூறும் கருங்குழலாதனார் என்பாரால், படிப்போருள்ளம் நெக்கு உருகும் வகையிற் பாடப்பெற்றுள்ளது அது :

''அருப்பம் பேணாது அமர்கடந் தூஉம்
துணைபுண ராயமொடு தசும்புடன் தொலைச்சி
இரும்பா ணொக்கல் கடும்பு புரந்ததூஉம்
அறமறக் கண்ட நெறிமா ணவையத்து
முறைநற் கறியுநர் முன்னுறப்புகழ்ந்த
தூவியற் கொள்கைத் துகளறு மகளிரொடு
பருதி யுருவிற் பல்படைப் புரிசை
யெருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்
வேத வேள்வித் தொழில் முடித்ததூஉம்
அறிந்தோன் மன்ற அறிவுடையாளன்
இறந்தோன் தானே, அளித்து இவ்வுலகம்.
அருவி மாறி அஞ்சுவரக் கடுகிப்
பெருவறங் கூர்ந்த வேனிற் காலைப்
பசித்த வாயத்துப் பயனிரை தருமார்
பூவாட் கோவலர் பூவுட னுதிரக்
கொய்துகட் டழித்த வேங்கையின்
மெல்லியன் மகளிரும் இழைகளைந் தனரே.''

என்பது.

43-ம் பக்கத் தொடர்ச்சி

the hill tops '' Then he justifies his interpretation stating that ''There is also plenty of epigraphical evidence to support the fact deduced from this poem that Karikal's sway extended north up to the Ceded districts, which will be discussed presently.'' But குறும்பறை means the partner bird, (Vide புறம் 67 கோழி, உயர்நிலை மாடத்துக் குறும்பறை யசைஇ and its comment, குறும்பறையென்றது பேடையை) and it may also mean a bird having small wings. Despite the epigraphical evidence, this deduction is hence incorrect.

இதுகாறும், கரிகாலனது வரலாற்றினை நாம் தொகை நூல்களையே பெரும்பான்மை துணையாகக் கொண்டு கூறி வந்தோமே யன்றி, சிலப்பதிகாரத்து இவன் செய்திகளெனக் கூறப்பெறுவனவும், தொகைநூல்களுள்ளும் இவன் இருங்கோ வேளை வென்றதும், வேங்கடவரைப்பைத் தனதாக்கியதும் பிறவும் விரிவஞ்சிக் குறித்திலோம்.

இனி, ஆசிரியர் பரணரால் சிறப்பிக்கப் பெற்ற குறுநில மன்னர், தலைவர் முதலாயினோருள் பெரும்பாலும் புகழ்ந்து பாராட்டப்பெறும் நன்னன் என்பானது வரலாற்றினைக் காண்போம்.

பகுதி - ங

நன்னன்

நன்னன் என்பவன் சேரநாட்டைச்சேர்ந்த பகுதியினை ஆண்டுவந்த குறுநிலமன்னர்களுள் ஒருவன். இவனது நாடு கொண்கான நன்னாடு என்பது. அதனருகில் புள்ளுநாடு என்றோர் நாடு அதிகன் என்னும் குறுநில மன்னனால் ஆளப் பெற்று வந்தது. இவன் அவ்வதிகனைக் கொன்று அந்நாட்டை யும் அடிப்படுத்திக் கொண்டபின் அதுவும் இவனதாகக் கூறப் படலாயிற்று. அது "நன்னன் புள்ளுநாடு" எனவருவது. இப் புள்ளுநாடு என்பது பூழிநாடாதல் வேண்டும் என்று கருதினோர், இதனைப் பூழிநாடு என்றும், இவனும் அப் பூழி நாட்டை யாண்ட குறுநில மன்னன் என்றும் கூறுவாராயினர். மற்று, இவனது நாடு கொண்கானநாடு என்பது ஆசிரியர் **பாலை பாடியபெருங்கடுங்கோவால்** "பொன்படுகொண்கான நன்னன் நன்னாடு" என்று பாராட்டப்படுவதால் அறியப்பெறுகின்றது.

† இக் கொண்கான நாடு பின்னர்க் கொங்குநா டென்றும் கொங்கணநா டென்றும் மருவி வழங்கி வரலாயிற்று என்றும் இந் நன்னனும் "நன்னன் உதியன்" (அகம். 258) என வழங்குதல் கொண்டு, சேரனாதலால், இந்நாடும் சேரனாட்டின் ஒரு பகுதி யாதல் வேண்டு மென்றும் ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றனர், வேறுசிலர் இவை யிரண்டும் வெவ்வேறு நாடுகளாம் எனக் கூறிப் பண்டை யிலக்கியங்களிற் கூறப்படும் கொண்கான நாடு இக்கால மைசூர் நாட்டின் தென்பகுதியும் சேலம் கோயம்புத்தூர் ஆகிய நாடுகளும் கிழக்கு மலைத்தொடர்

---

† இதனைத் துளுநாடு என்பர் திரு. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள்

நீலகிரி, மேலகிரி முதலிய மலைப்பகுதிகளும் தன்னகத்தே கொண்டிருந்ததென்றும், கொங்குநாடு இக்கால மைசூர்ப் பீட பூமியின் தென்பகுதியும், திருநெல்வேலி, இராமநாதபுரம், கீழ் மதுரை, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தென்னார்க்காடு முதலிய நாடும் கொண்டிருந்ததென்லும் கூறுப.ß

இனி, இவற்றுட் கொங்குநாடு வேறு பிரிக்கப்பட்டமையை யேற்று, அது "கொங்கர் குடகட லோட்டிய ஞான்றை" எனவும் "கொங்குபுறம் பெற்ற கொற்ற வேந்தே" எனவும் வரும் புறப் பாட்டடிகளையும் பிறவற்றையும் அடிப்படையாகக் கொண்டு, பண்டு தொட்டே தனி நாடாகக் கொள்ளப்பட்டுள்தென்றும், இது சேரனாட்டினைச் சேர்ந்தது என்றதற்குக் கூறும் சான்றா வனவாய திருப்புகழ், தலபுராணங்கள் ஆதியவற்றைப் பிற்காலத் தாரது கேள்விமாத்திரையாற் பெறக்கொண்டெழுதியவாமென்று கூறியும், கொங்குநாட்டு மக்களது நாகரிகம்,ஒழுக்கம்,முதலியன ஏனைச் சேர கேரள நாட்டு மக்களின் நாகரிகம், ஒழுக்கம்

ß Lower down, between Coimbatore and Anaimalais' there is the broad Palghat gap cut across the Ghats by a river of a former geological epoch which links up the Konkan Coast with the upper reaches of the Kaveri· This region merges imperceptibly into the South Maisur region through the lowlands on either side of the Shervaroys gap so that South Mais r, Coimbatore and Salem form one natural plateau region studded with uneroded remnants of the Easten Ghats, like the Nilgiris and the Melagiris. The whole of this natural region was also called Kongu Nadu, as is proved by the fact that the book which narrates the legendary history of the early kings of this country is called Kongu Desa Rajakkal· This was the Konganam of early Tamil Literature. whereas the word Kongu Nadu was more often used in a more restricted sense, viz being applied to the region between the south of the Maisur plateau and the region less than 500 feet above sea-leval which form Tinnevelly, Ramnad Lower Madura, Pudukottah, Trichiropoly, Tanjore and South Arcot" –A paper on "Geographical Control of Early Kongu History" read by Mr. P. T. Srinivasa Iyengar M.A., University Reader of Indian History, at the first conference of the Madras Geographical Association. May 1930, at Coimbatore.

முதலியவற்றின் வேறுபட்டிருத்தலே மிக்க சான்றாம் என்றும் கொங்குநாட்டின் வரலாறு கூறும் கரணபரம்பரைச் செய்திக்கு வேறு ஆதாரமில்லை யென்றும் சிறந்த முறையில் ஆராய்ந்து, **திரு. C. M. இராமச்சந்திர செட்டியார் B.A.B.L.,** அவர்கள் அழகு பெற முடிபு செய்கின்றார் .ஆனால் இவ்வாராய்ச்சியின் கண், கொங்குநாட்டின் பண்டைக்கால எல்லை முடிபு கூறப் பெற வில்லை. நிற்க.

இனி, இவனது கொண்கான நாட்டின்கண் **பாரம் பிரம்பு வியலூர்** என்னும் ஊர்களும் **பாழி, எழில்** முதலிய மலைகளும் இருந்தன. இவற்றுள் பாழி யென்பதனை ''முன்பு வடுகர் கைப் பற்றி ஆண்டுவருநாளில் சோழன் நெய்தலங்கானலிலுள்ள இளஞ்சேட் சென்னி யென்பவன் படையொடு சென்று பொருது வடுகர்களைக் கொன்று பாழியை யழித்து மீண்டான். அதனால் அவன் செருப்பாழி யெறிந்த இளஞ்சேட் சென்னி யெனவும் கூறப்படுவன்,'' இதுபற்றியே இவனை,

⊗''தென்பரதவர் மிடல்சாய
வடுவடுகர் வாளோட்டிய
தொடையமை கண்ணித்திருந்துவேற் றடக்கைக்
கடுமா கடைஇய விரிபரி வடிம்பின்
நற்றார்க்கள்ளின் சோழன்'' என ஆசிரியர் **ஊன் பொதி பசுங்குடையார்** தம் நகைச்சுவை ததும்பும் புறப்பாட்டினிற் புகழ்ந்துரைப்பா ராயினர். இங்ஙனம், இப்பாழிச்சிலம்பு இளம்பெருஞ் சென்னிக்கும் வடுகர்க்கும் நடந்த பெரும்போர்க்கு இடனாயிருந்தமை

''எழா அத் திணிதோட் சோழர் பெருமகன்
விளங்குபுகழ் நிறுத்த இளம்பெருஞ் சென்னி
குடிக்கட னாகலின் குறைவினை முடிமார்
செம்புறழ் புரிசைப் பாழி நூறி
⊕ வம்ப வடுகர் பைந்தலை சவட்டிக்
கொன்ற யானைக் கோட்டிற் றோன்றும்
அஞ்சுவரு மரபின் வெஞ்சுரம்'' (அகம். 375) என

⊗ புறம்,378.

⊕ வம்பவடுகர் : புதியராய் வந்த வடநாட்டினர்.

ஆசிரியர் இடையன் சேந்தன் கொற்றனார் விரித்துரைத்த வதனால் விளங்குகின்றது.

இக்கொண்காணம் புலவர் பாடும் புகழுடையது. இந்நாடு கொண்காணம் என்னும் மலையைத் தன்னகத்தே யுடைமை யான், இப்பெயர் பெற்றது. இம்மலை, "அறுவைத் தூவிரி கடுப்பத்துவன்றி மீமிசைத் தண்பல இழிதரும் அருவி"களை யுடையது. மலைபடு பொருளான பொன்னை மிகவுடையது †. இது "பொன்படு கொண்கான நன்னன் நன்னா"டெனப் பாலை பாடிய பெருங்கடுங் கோவாலும்.

"இன்களி நறவின் இயல்தேர் நன்னன்
விண்பொரு நெடுவரைக் கவாஅன்
பொன்படு மருங்கின் மலை" என முள்ளியூர்ப் பூதியா

ராலும் முறையே நற்றிணையிலும் அகநானூற்றிலும் புகழப்படு கின்றது. மேலும். ஆசிரியர் மோசிகீரனார் தாம் இயற்கையாகவே பாடும் பொருளாழமும் அணிகலமும் அமையும் முறையில் இம் மலையை,

"ஒன்றுநன் குடைய பிறர்குன்றம் என்றும்
இரண்டுநன் குடைத்தே கொண்பெருங் கானம்
நச்சிச் சென்ற இரவலர்ச் சுட்டித்
தொடுத்துணக் கிடப்பினும் கிடக்கும் அஃதான்று
நிறையருந் தானை வேந்தரைத்
திறைகொண்டு பெயர்க்குஞ் செம்மலு முடைத்தே"

எனக் கொண்கானங்கிழான் என்னும் வள்ளலைப் புகழுமுகத் தாற் சிறப்பிப்பது மிக்கசுவை தருகின்றது.

இந் நாட்டின்கண் விளங்கிய நகரங்களுள் பாரம், பிரம்பு வியலூர் என்பனவற்றுள் பாரம் என்பது, "பாரத்துத் தலைவன் ஆர நன்னன்" என்பதனால் இவனுக்கே உரித் தெனினும், பரப்புடைமையும் சேய்மையும் உடைமையின் இவனது படையின் தலைவன் மிஞிலி யென்பவனால் காக்கப்பட்டு வந்தமையின், "வில்லோர் பெருமகன், பூந்தோள் யாப்பின் மிஞிலி காக்கும் பாரம்" என்று நற்றிணையிற் கூறப்படலாயிற்று. இதன்

† Journal of the Madras Geographical Association nos. 2 & 3 Vol. 5,

அண்மையிலேமே பாழிச்சிலம்பும் பாழி யென்னும் நகரும். இருந்தன வாதலால், அவையும் மிஞிலியின் காவற்குள்ளிருப்ப வாயின.

பிரம்பென்பது நீர்வளம் மிக்க ஊர்போல் தோன்று கின்றது. மலைநாடாதல் பற்றிச் சிறு குன்றங்களில் வீழ்தரும் அருவிகளும், அருவிநீர் நிறைந்து ஆம்பல் முதலியன தழைத்த துறைகளையுமுடையது. இதனை, "அருவி யாம்பல் கலித்த மூன்றுறை, நன்னன் 'ஆஅய் பிரம்பு" என்றனர் **ஆசிரியர் பரணர்.** இந்நகரத்துக்கு "ஆஅய் பிரம்பு" என்பதும் பெயர் போலும் **வியலூர்** என்பது பசலைக்கொடி படர்ந்த வேலியுடையதென்றும். இது நன்னனுக்கு உரித்தென்றும் ஆசிரியர் மாமூலனார் கூறுகின்றார். அது

"நறவுமகி ழிருக்கை நன்னன் வேண்மான்
வயலை வேலி **வியலூர்**" (அகம். 97)என வருவதாகும்.

பாழி யென்பது பாழி மலையை யடுத்திருந்த சீரிய காவ லமைந்த பேரூராகும். 'இவ்வூரில் யாழ்வல்லவர் பலர் வாழ்ந் தனர். இது தன் "முறையியல் வழாஅது ஆற்றிற் பெற்ற" நகரம். இங்கே, நன்னன் தான் ஈட்டிய பொருளை வேளிர் பலர் காப்ப வைத்திருந்தான். இப்பாழிச் சிலம்பில் கடவுளர் இருந்து காவல் புரிந்தனர் ; எங்கும் பெரிய அடை பொருந்திய தேன் தூங்கி நலம் பயக்கும். இது,

"சூழி யானைச் சுடர்ப்பூண் நன்னன்
பாழி யன்ன கடியுடை வியனகர்" (அ. 15) எனவும்,

"முறையியல் வழா அது ஆற்றிற் பெற்ற
கறையடி யானை நன்னன் பாழி" (அ. 142) எனவும்,

"நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்
தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த
பொன்னினும் அருமை" (அ, 258) எனவும்,

"அருந்தெறல் மரபின் கடவுள் காப்பப்
பெருந்தேன் தூங்கு நாடுகாண் நனந்தலை
அகங்குடை வரைப்பிற் பாழி" (அ. 372) எனவும்,

ஆசிரியர் பரணர் பல விடத்தும் கூறுவது கொண்டு உணரப் படும்.

இனி, நன்னன் என்னும் பெயர் அக்காலத்திற் பல விடத்தும் பயின்று வந்த தென்பது, சிலப்பதிகாரத்தில் "இளங்கோ வேண்மா ளுடனிருந் தருளி" என்ற காட்சிக் காதை யடியின் அரும்பதவுரை, "இளங்கோ வேண்மாள்— பெயர், நன்னன் வேண்மாள், உதியன் வேண்மாள்" என்று கூறுதலாலும், மலைபடு கடாம் என்னும் கூத்தராற்றுப்படையின் தலைவன் ஒருவன் செங்கண் மாத்து வேள் நன்னன் சேய் நன்னன் என்ற பெயருடன் வருதலாலும் தெரிகின்றது. இந் நன்னனும் நன்னன் வேண்மான் என்று வழங்கப் பெறுதலும் உண்டு.

நாம் மேற்கண்ட கொண்கான நாட்டின் பகுதியான சேல நாட்டின் அருகும் திருவண்ணாமலைக்கு மேற்கிலும் உள்ள செங்கண்மா என்னும் நகரம் கொண்கான நாட்டினைச் சேர்ந் திருத்தல் கூடும் என்று உணரவும் கிடக்கின்றது. அதனால், இந் நன்னன் சேய் நன்னன் என்பாரும் இந்தக் கொண்கான நன்னனது குடிப்பிறந்தாரே யென்று துணிய வேண்டும்.

இனி, நன்னன், வேண்மான் என்று வழங்கப் பெறுதலால் இவன் வேளிருள் ஒருவன் என்று கொள்ளல் வேண்டும். வேளிர் என்பார் மலைய மாதவனால் வடநாட்டினின்றும் கொணரப் பெற்றவர் என்பது தொல்காப்பிய நச்சினார்க்கினியர் உரையால் தெரிகின்றது. இவர்கள் முடியுடை வேந்தர்க்கு மகட்கொடை நேர்தற்கு உரிய வேளாளருமாவர். இவர்களுட் சிறந்த நன்னன் குணங்களா லுயர்ந்த வள்ளலாவான். இவன்,

"மலர்போல் மழைக்கண் மங்கையர் கணவன்
முனைபாழ் படுக்கும் துன்னருந் துப்பின்
இசைநுவல் வித்தின் நசையே ருழவர்க்குப்
புதுநிறை வந்த புனலஞ் சாயல்
மதிமா றோரா நன்றுணர் சூழ்ச்சி
வில்நவில் தடக்கை மேவரும் பெரும்பூண்" நன்னன் ஆவான். இவன்,

"தொலையா நல்லிசை உலகமொடு நிற்பப்
பலர்புறங் கண்டவர் அருங்கலம் தரீஇப்
புலவோர்க்குச் சுரக்கும் ஈகை மாரியும்
இகழுநர்ப் பிணிக்கும் ஆற்றலும் புகழுநர்க்கு
அரசுமுழுது கொடுப்பினும் அமரா நோக்கமொடு

வீயாது சுரக்கும் நாண்மகி ழிருக்கையும்
நல்லோர் குழீஇ நாநவில் அவையத்து
வல்லாராயினும்புறமறைத்துச் சென்றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நல்லிதின் நயக்கும் சுற்றத் தொழுக்கமும்,
ஞாயி றன்ன வசையில் சிறப்பும்'' பொதுவாக

வுடையன். சிறப்பாக, பகைவர் தேயம் சேணிகந் திருப்பினும், ஆண்டுச்சென்று அவர்தம் தூசிப்படையைக் கொன்று குவித்து, ''புரைத்தோல் வரைப்பின் வேல்நிழற் புலவோர்க்குக்-கொடைக் கடன்'' இறுக்கும் பேராண்மை படைத்தவன்.

இவன் பலர் புறங்கண்டு அவர் அருங்கலம் கொணர்ந்-ததும், ''இடனின்றி இரந்தோர்க்கு இல்லென்றல் இழி'' வெனக் கருதி வரையாது வீசும் வள்ளன்மையும் புலவர் பாடும் பொன்றாப் புகழை இவனுக்குத் தந்தன எனல் வேண்டும். இவனிடத்தில் எண்ணில் அடங்கா யானைகளும் தேர்களும் இருந்தன என்பது ''சூழியானைச் சுடர்ப்பூண் நன்னன்''என்றும்,''கறையடி யானை நன்னன்'' என்றும் ''இசை நல் ஈகைக்களிறுவீசு வண்மகிழ்ப் பாரத்துத் தலைவன் ஆர நன்னன்'' என்றும், ''இயல்தேர் நன்னன்'' என்றும் வருவனவற்றால் உணரப்படுகின்றது. செம்மையில் திறம்பல் இல்லாத செம்மொழி யுடையராய்ப் பாடிப் பரிசில் வேண்டி வருபவர்க்குத்தான் பகைப்புலத்துக் கவர்ந்த அருங்கலங்களைத் தனக்கென ஓம்பாது, ஓம்புதலையும் ஆரா யாது, கொடுக்கும் இவனது கொடை, ஆசிரியர் மாமூலனார்,

''ஞெமன்ன்
தெரிகோ லன்ன செயிர்தீர் செம்மொழி
உலைந்த ஒக்கல் பாடுநர் செலினே,
உரன்மலி யுள்ளமொடு முனைபா ழாக
அருங்குறும் பெறிந்த பெருங்கல வெறுக்கை
சூழாது சுரக்கும் நன்னன்'' (அகம். 349) என்று

கூறுதலால் விளங்குகின்றது. இவன் நாட்டுப் பாழிச்சிலம்பு கொண்கானமலை, எழிற்குன்றம் முதலியன பெருந்தேன் தூங்கும் நெடுவரைகளாதலின், இவன் இருக்கையிற் கள்ளுண்டு மகிழ்தல் மிக்கிருந்தது. அது ''இன்களி நறவின் இயல்தேர் நன்னன்'' எனவும், ''நறவுமகிழ் இருக்கை நன்னன் வேண் மான்'' எனவும் வருவனவற்றால் அறிக. இவன் பல அரசர்ளை வென்று புறங்கண்ட மேம்பாடுடையன் என்பது,

"பொற்புடை
விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வேந்தரோட்டிய ஏந்துவேல் நன்னன்" என வருத லாலும் உணர்தலாம்.

இவன் காலத்தில், "நாண்மங்கலம்" என ஆசிரியர் ஐயனாரிதனாராற் கூறப்பெறும் பிறந்த நாட் கொண்டாட்டம் நிகழ்ந்தது. இந்நாண்மங்கலம் ஆசிரியர் தொல்காப்பிய னாரால்,

"சிறந்த நாளணி செற்ற நீக்கிப்
பிறந்த நாள்வயிற் பெருமங்கலம்" எனக் கூறப்பெறு கின்றது, இக்காலத்தில், அரசர்கள் வெள்ளிய உடையணிந்து செற்றம் நீக்கி அருளே நிறைந்த மனமுடையவராய்ச் சிறை விடுதல், செருவொழிதல், கொலையொழிதல், இறை தவிர்தல், தானம் செய்தல், வேண்டின கொடுத்தலாகிய, சிறந்த தொழில் களையே செய்வர். இவ்வாறு கிள்ளி ஒருவன் (இச்சோழன் பெயர் தெரிந்திலது.) தான் பிறந்த நாளாய இரேவதி நாள் விழவயர்ந்த செய்தி,

"அந்தண ராவொடு பொன்பெற்றார் நாவலர்
மந்தரம்போன் மாண்ட களிறூர்ந்தார்—எந்தை
இலங்கிலைவேற் கிள்ளி இரேவதிநாள் என்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு" என வரும் முத்தொள்ளாயிரச் செய்யுளாற் றெரிகின்றது. ⊗ இவ்வழக்கம் இந்நன்னன் காலத் தும் நடைபெற்றதென மதுரைக்காஞ்சி யென்னும் ஒரு சிறந்த பாட்டு கூறுகின்றது. அது

"பேரிசை நன்னன் பெறும்பெயர் நன்னாள்
சேரி விழவின் ஆர்ப்பெழுந்தாங்கு" என வருவதாம்.

இனி, நன்னன் மேற்கூறிய வண்ணம் சிறப்பும் செல்வமும் ஓங்க ஆளும் திருவுடையனா யிருந்ததோடு புலமைமிக்கானா யிருந்தமை, ஏனைப் புலவர்களை யாதரித்தும் அவர் வேண்டும்

⊕ இவ்வழக்கம் 12, 13 ஆம் நூற்றாண்டிலும் நடை பெற்றதென அக்காலத்துப்பராந்தகதேவபாண்டியன்என்பானது கல்வெட்டினால் தெரிகிறது. Vide Travancore Archeo'gical Series, Vol, I p 22

பரிசில் அளித்தும் வந்தமையால் விளங்குகின்றது. ஏனெனில் "புலமிக்கவரைப் புலமை தெரிதல் புலமிக்கவர்க்கே புலனாம்" என்பர் முன்றுறையரையர்.

இங்ஙனம், புலமையும், புலமைக்கேற்ற வள்ளன்மையும், அதற்கேற்ற அருளுடைமையும், சுற்றத்திடத்து அன்பும் பிறவுமாய, மக்களின் நல்வாழ்விற்கு இன்றியமையாச் சிறப்புக் குணங்கள் பலவற்றையும் உடையனாயிருந்ததோடு சேர்ந் தாரைக் கொல்லும் சினமும் மிகக் கொண்டிருந்தான். அதனால் இவன் வழிவந்தோர்க்கும் பழியொன்று நிலைபெறுவதாயிற்று. இவனது நாட்டில், யாற்றில் நீராடுதற்குச் சென்றாள் ஒரு பெண், அவ்வியாற்று நீரில் மிதந்து போந்த முற்றும் பழுக்காத பசுங்காய் ஒன்று கண்டு எடுத்து உண்டொழிந்தாள். அதனை யுண்ணல் வேண்டும் என்பது நன்னனது வேட்கைபோலும், அன்றி அது அவனது பொழில் பயந்தது போலும். அக்காய் இங்ஙனம் யாது காரணத்தாலோ யாற்றில் வீழ்ந்துவர இப் பெண் உண்டற்குரியதாயிற்று. இதனை இவன் ஆராயாது அக்காயை அவளுண்டதை யறிந்து, அக்குற்றம் நோக்கி, அவளைக் கொலைசெய்யத் துணிந்தான். இதனையுணர்ந்த அப் பெண்ணின் தந்தை, அக்குற்றத்தீடாக எண்பத்தொரு களிறு களையும், அப்பெண்ணின் நிறையளவு தூய பொன்னாற் செய்த பாவையையும் கொடுத்தான். கொடுப்பவும் கொள்ளானாய், ஆறாச் சினங்கொண்ட நன்னன் அப்பெண்ணைத் தான் கருதிய வண்ணம் கொலையே புரிந்தனன். இவனது புகழை நிலை பெறச் செய்து பலபடப் பாராட்டிய புலவர் பெருமகனான பரணர், இவனது இத் தீச் செயலையும் விளக்கிக் கூறியுள்ளார். அது,

"மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் றப்பிற்(கு)
ஒன்பதிற்றொன்பது களிற்றொடு அவள்நிறை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரயத்துச் செலீ இயரோ அன்னை
ஒருநாள், நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக ஊரிற் றுஞ்சலோ விலளே" எனவரும்

குறுந்தொகைப் பாடற்கண் கூறப்பெறுகின்றது.

இது நிகழ்ந்த சின்னாட்களுள் ஒருநாள் ஔவையார் இவனிடம் சென்று அழகிய பாட்டுக்கள் பாடியும், அவற்றின் ஆழ்ந்த சொற்பொருளின்பங்களை எடுத்துக் கூறியும் இவனை மகிழ்விக்க முயன்றனர். இவன் அவற்றைத் தன் செவியிற் கொள்ளாமலும், அவர்க்குப் பரிசிலொன்றும் நல்காமலும் விடுப்ப, மனத்தில் வெறுப்புக் கொண்டு, அவர், இவனை நோக்கி,

"இருள்தீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
குருடேயும் அன்றுநின் குற்றம்-மருள்தீர்ந்த
பாட்டும் உரையும் பயிலா தனவிரண்டு
ஓட்டைச் செவியும் உளை." எனப்பாடிச்

சென்றனர். ⊕

† இவையே, பின்னர், ஒருகால் இளங்கண்டீரக்கோ என்பவனும் இளவிச்சிக்கோ என்பவனும் ஒருங்கிருந்தவழிப் பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் பெருமான் சென்று அவருள் இளங்கண்டீரக் கோவைப் புல்லி, இளவிச்சிக்கோவைப் புல்லாராயினார். அது கண்ட விச்சிக்கோ, "என்னை என் செயப் புல்லீராயினீர்" என்று வினவ, அதற்கு அவர், "நீ பொலந்தேர் நன்னன் மருகன் அன்றியும் வயங்கு மொழிப் பாடுநர்க் கடைத்த கதவு காரணமாக எமர் வரைந்தனர்" என்று கூறி விடுதற்குக் காரணமாயிருந்தன என்று தோன்றுகின்றது இதன்கண் நன்னனது தீச்செயல் நினைவுறுத்தப்படுதல் காண்க.

மேலும், இச் செயல் புலவர் பலர்க்கு வெறுப்பை இவன் மாட்டு உண்டாக்கினமையும் இதனாற் பெறப்படுகின்றது. படினும், ஆசிரியர் பரணர் முதலிய சான்றோர் சிலர், "அரிய கற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்-இன்மை அரிதே வெளிறு" என்னும் பொய்யா மொழியையும், "குணங்குற்றங் களும் ஒன்றேயுடையார் உலகத்"திலர் என்னுங் கொள்கையையுமுடையராய் இவன் மாட்டுக் காணப்பெறும் குணம் நாடி, குற்றமும் நாடி அவற்றுள் இச்செயல் இவனது குணம் நோக்க மாணச் சிறிதெனத் தேர்ந்து இவனைப் பாராட்டுவாராயினர்.

அற்றேல் இக்கொடுஞ் செயலைப் பரணர் கூறியதற்குக் காரணம் யாதாம் எனின், இதுபற்றி வெறுப்புற்ற சான்றோர் இவனது வரலாற்றினைப் பிற்காலத்தார் உணர்ந்து கோடற் கேற்ற குறிப்புக்களைச் செய்யாராகப் பழுமரம் உள்ளிப் பழந்

⊕ தமிழ் நாவலர் சரிதை. இச்செய்யுள் இவனைக் குறிக்கின்றமை ஆராய்ச்சிக் குரியதொன்று.

தேர் வாழ்க்கைப் பறவை படர்தல்போல் பரிசிலர் பலர் இவனை யுள்ளி வருதலும், வருவார்க்கு இவன் வரையாது கொடுக்கும் வள்ளன்மையும், பகைவர் பலர் புறங்கண்டு வென்ற வெற்றிச் சிறப்பும் வழிவருவார்க்குப் பெரிதும் பயன் தருவனவாம் எனும் நோக்கத்துடன், இவன் வரலாற்றுக் குறிப்பினுள் இதனையும் ஒன்றாகக் கூறினார் போலும் என்று கோடல் ஒருவாறு பொருந் துவதாம்.

இனி, இவனது போர்ச்செயல்களை யாராய்வாம். மேற் கூறிய செய்தியில் இவன் ஒருகால் கொண்ட வஞ்சினம், தொழி லால் முற்றுப்பெருங்காறும், அது தணியான் எனப் பெறப்படுவது கொண்டே, இவன் தன்னை யெதிர்த்தாரை எங்ஙனம் வென்றிருப் பான் என்பது நன்கு விளங்கும். உய்த்துணர்வது சொல்லில்வழி யாதலின் அதனை விரியக்கூறுகின்றோம்.

இவன் அரசுரிமை யெய்திய காலத்து இவனது கொண்கான நாட்டின் புறத்தே சில குறுநிலமன்னர்கள் ஆண்டுவந்தனர். அவர்களுள் பெரும்பாலார் முடியுடை வேந்தருட் சேர மன்னர் தம் ஆணை வழி நிற்போ ராவர். அவருள் **பிண்டன், அதிகன்** என்போர் சிறந்தோராவர். இவருட் பிண்டன் என்பான் மிக்க மெய்வலி யுடையவன். இதுபற்றியே இவன் பரணரால் ''மொய்ம் மூசு பிண்டன்'' என சிறப்பிக்கப் படுகின்றான். அதிகன் என் பான் பாண்டியன் ஆணைவழி நிற்கும் குறுநில மன்னன். அதனால் இவன் அதிகன் **பசும்பூட் பாண்டியன்** என்றும் வழங்கப் பெற்றான். இங்ஙன் ஒரு பேரரசன் பெயரே அவன் கீழாண்ட சிறறரசரும், தண்டத்தலைவரும் பெற்றிருத்தல் கல் வெட்டாராய்வார்க்குப் புதுமையாகாது. இவன் போர்த் தொழி லில் மிக்க வன்மையுடையவன்; நல்லிசை தரும் இரவலர்க்குப் பெரும் பொருள் அளித்து அழியாப் புகழ் பெற்றவன்; வில்லேந்திய படைவீரர் பலர் கொண்டவன். இது **''பசும்பூட் பாண்டியன் வினைவல் அதிகன்''** என்றும், ''வாய்மொழி நல்லிசை தருஉம் இரவலர்க்கு உள்ளிய நசை பிழைப் பறியாக் கழல்தொடி **அதிகன்** ⊗ ⊕ ⊗ வில்கெழு தானைப் **பசும்பூட் பாண்டியன்''** என்றும் குறுந்தொகை யிலும் நற்றிணையிலும் **ஆசிரியர் பரணரால்** புகழப் பெறு

⊗ கொங்கர் : கொங்குநாட்டு மக்கள். இந்நாடும் நன்னனுக்குரியதே. மற்று கொண்கானநாடு வேறு, இக் கொங்கரது நாடுவேறு. **Vide Footnote** கொண்கானநாடு.

கின்றான். இவனது நாடு புள்ளுநாடு என்று முன்னர்க் கூறினாம். நன்னன் இந்த அதிகன், பிண்டன் முதலானோரை வென்று பெரும்பொருள் கொண்டதோ டமையாது அப்பொருள்களை அவர் நாட்டு யானை மீதேற்றி அவர்தம் மகளிர் கூந்தலால் கயிறு திரித்துப் பிணித்துக் கொணர்ந்து தனது மிக்க காவல் செறிந்த பாழி யென்னும் நகரின்கண், தன் சுற்றமாய வேளிர் பலர் காப்ப வைத்தனன். இப்போர் வாகைப் பறந்தலை யென்னு மிடத்தில் நிகழ்ந்தது. இவ்வெற்றி கேட்ட -கொங்கர் மிக்க மகிழ்ச்சி கொண்டார்த்தனர். இச்செய்தி,

"மொய்ம்மூசு பிண்ட
னுண்முர ணுடையக் கடந்த வென்வேல்
இசைநல் லீகைக் களிறுவீசு வண்மகிழ்ப்
பாரத்துத் தலைவ னார நன்னன்" (அ. 152) என்றும்,

"புள்ளிற் கேம மாகிய பெரும்பெயர்
வெள்ளத் தானை அதிகற் கொன்று வந்[து]
ஒள்வா ளமலை யாடிய ஞாட்பு" [அ. 142] என்றும்,

"கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூட் பாண்டியன் வினைவல் அதிகன்
களிறொடு பட்ட ஞான்றை
ஒளிறுவாட் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே"
[குறு. 393] என்றும்,

"பொற்புடை
விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வேந்த ரோட்டிய ஏந்துவேல் நன்னன்
கூந்தல் முரற்சி," [நற். 270] என்றும்,

"பொலம்பூண் நன்னன் புள்ளுநாடு கடிந்தென"
(அக 396) என்றும்,

"அருந்தெறல் மரபின் கடவுள் காப்பப்
பெருந்தேன் றூங்கு நாடுகாண் நனந்தலை
அணங்குடை வரைப்பிற் பாழி யாங்கண்
வேண்முது மாக்கள் வியனகர்க் கரந்த
அருங்கல வெறுக்கை" (அகம். 396) என்றும்,

"நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்
தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த
பொன்." (அகம். 258) என்றும்,

பரணர் ஒருவராலே பாடப்பெற்று வருவனவற்றால் அறியப் படுகின்றது. இனியும், நன்னன் வேறுபல குறுநில மன்னர்களை வென்று கவர்ந்து கொணர்ந்த பொருளைப் பரிசிலர்க்கு வழங் கினமை, முன்னரே கூறினாம்.

இவன் காலத்தும், அதற்குச் சிறிது முன்னும் வடநாட்டி னின்றும் நம்நாடு போந்து துளுநாட்டினையும், செல்லூர், நல்லூர் முதலிய ஊர்களையும் தமவாக்கி வாழ்ந்த கோசர்களை வென்று, அவர்தம் காவல் மரமான மாமரம் ஒன்றைத் தடிந்து தன் வெற்றி மேம்படச் செய்ததுமன்றி, அக்கோசரையும் வேறு நாட்டிற் போக்கினன். இதனை ஆசிரியர் பரணர், ⊗ ''நன்னன் நறுமா கொன்று நாட்டிற் போக்கிய ஒன்றுமொழிக் கோசர்', எனக் குறுந்தொகையின்கட் கூறுகின்றார்.

⊕ நன்னன் .... கோசர் என்பதற்கு ''நன்னனது சிறந்த யானையைக் கொன்று அவனது நாட்டிற் போகவிட்ட வாய்மைபொருந்திய சொல்லினையுடைய கோசர்'' என்று அதன் உரையாளர் கூறுகின்றார். நறுமா என்றதற்கு யானையெனப் பொருள் கோடலாகாமையாலும், கொன்ற யானையை மீட்டும் நாட்டின்கட் போக்குதல் ஆகாமையாலும், கோசர்கள் படைப் பயிற்சிக்கும் வாய்மைக்கும் சிறப்புடையரெனலேயன்றி இன்னோ ரன்னசெயல் செய்துளரெனற்குச் சான்றின்மையாலும், யாம் கூறிய பொருளையேற்றலாற் கவியின்பொருள் சிறத்தலேயன்றி இழுக்காமையாலும் அது பொருளன்மையுணர்க. மற்று உரை யாளர்உரையினைஅடிப்படையாகக்கொண்டுதிரு·எஸ்·கிருஷ்ண சாமி அய்யங்கார் அவர்கள் துளுநாடு அல்லது கொண்கானநாடு நன்னனது நாடாமெனவும், அவன் வம்பவடுகரான கோசரொடு பொருது, தன பட்டத்து யானையை யிழந்ததோடு, பெருந் தோல்வியடைந்தான் எனவும் கூறுகின்றார். Beginning of South Indian History pp. 84-85) இதனை மறுத்து திரு. பி.டி. சீநிவா சய்யங்கார் அவர்கள் நன்னனது நறிய மாமரத்தினைக்கொன்று தம் நாட்டிற்குக் கொண்டு சென்ற கோசர்போல வன்கட் சூழ்ச்சி யும் வேண்டும்'' என்று கூறினர். (History of the Tamils pp. 521, 2, Footnote 57) வன்கட் சூழ்ச்சி செய்து கவர்ந்தது ''நறுமா'' வேயாயின் அது அவனது காவன்மரமாதல வேண்டுமாகலானும் ''பொலந் தேர் நன்னன் சுடர்வீ வாகைக் கடிமுதல் தடிந்த'' எனவும் ''அவன் பொன்படுவாகை முழுமுதல் தடிந்து'' எனவும் பதிற்றுப் பத்துக்கூறுதலின் அவனது காவல்மரம் வாகையாதலி னாலும் துவும் பொருன்ளமையுணர்க.

இங்ஙனம் செல்லுமிடமெல்லாம் தன் வென்றியே விளங்கச் செய்த நன்னனுக்குத் தோழராகச் சில குறுநிலமன்னர் இருந்தனர். அவர் **ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை** முதலியோராவர். இவர்சுள் ஒருங்கு கூடிக் **கழுமலத்தில்** அக்காலத்துவிளங்கிய **சோழன் பெரும்பூட் சென்னி**யை அவனது நகரருகே எதிர்த்தனர். இவருள் ஏற்றை, அத்தி, கங்கன் புன்றுரை ஆகிய இவர்கள் புலவர் கூறும் பேறு பெற்றிலர். கட்டி யென்பான் ஒருகால் உறையூரின் கட் சிறப்புற் றோங்கிய † **தித்தன் வெளியன்** என்பானோடு பொரற்கெனப் பெரும்படை கொண்டு சென்று, அத்தித்தனது நாளவையின்கண் எழுகின்ற கிணைப்பாடு கேட்டு அஞ்சிப் பொராது ஓடினன் என்று **ஆசிரியர் பரணர்** கூறுகின்றார். அது,

> "தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்
> பாடின் தெண்கிணைப் பாடுகேட் டஞ்சிப்
> போரடு தானைக் **கட்டி**
> **பொரா அ தோடிய** ஆர்ப்பினும் பெரிதே (அகம். 226)
> (நீ வெய்யோளொடு முன்னா ளாடிய கௌவை)"

என்பது. ஏற்றை முதலானோருடன் நன்னன் சென்னியை யெதிர்த்தகாலை, அவனது படைத்தலைவனான **பழையன்** என்பான் முதற்கட் போரிற் பட்டனன், கண்ட சென்னி பொறானாய் இவர்களை யடர்த்து வென்றிகொண்டதே யன்றி இவர் படைவீரருள் ஒருவனான **கணையன்** அகப்பட அவனைச் சிறைகொண்டு கழுமலத்தையும் உரிமை செய்துகொண்டு சென்றான். இங்குக் கூறிய கணையன் என்பானும் கட்டிபோலச் சிறந்த வீரமுடையவனல்லன். அவன் ஒருகால் தன்னொத்த பாணன் என்னும் வீர னொருவனுடன் கூடி, **ஆரியப்பொருநன்** என்ற மல்லன் ஒருவனுடன் மற்போர் செய்து தோல்வியுறத் தான் மிகநாணி மறைந்திருந்தான் என **ஆசிரியர் பரணரே** கூறுகின்றார். அது,

> "பாணன்
> மல்லடு மார்பின் வலியுற வருந்தி
> யெதிர்தலைக் கொண்ட ஆரியப் பொருந

---

† வெளியன் : வெளியம் என்னும் ஊரினன்

னிறைத்திரள் முழவுத்தோள் கையகத் தொழிந்த
திறன்வேறு கிடக்கை நோக்கி நற்போர்க்
கணையன் நாணியங்கு மறையினள்.'' (அகம். 386)

என்பது. இவற்றால், போர்வலிமிக்க நன்னன் அஃதில்லாத ஏனை ஏற்றை முதலானோரோடு கூடிப் பொறாது தோற்ற செய்தியைக் குடவாயிற் கீரத்தனார்,

''நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி
துன்னரும் கடுந்திறற் கங்கன் கட்டி
பொன்னணி வல்விற் புன்றுறை யென்றாங்கு
அன்றவர் குழீஇய வளப்பருங் கட்டூர்ப் ∅
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்
கண்டது நோனா னாகித் திண்டேர்க்
கணையன் அகப்படக் கழுமலம் தந்த
பிணையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி'' (அகம்44)

என்று பாடுகின்றார்.

இனி, இவனது வெற்றிக்கெல்லாம் சிறந்த காரணமாக விளங்கிய தானைத் தலைவன் மிஞிலி யென்பவன். அவன் நன்னனது பாழி, பாரம் முதலிய நகரங்களை நலம்பெற ஆட்சி செய்து வந்தான். நன்னனது வரலாற்றின் பிற்பகுதிக்கு இம் மிஞிலியின் வரலாறு இன்றியமையாமையி னீண்டுக் கூறுகின்றோம்.

பகுதி-௩

முன்னைய கட்டுரைக்கண் நன்னனது வரலாற்றில் மிஞிலி யென்பானது வரலாறு சிறப்புமுறையில் வழங்குதலின்,அதனைக் கூறுகின்றேம் என்றது நண்பர்கட்கு நினைவிருக்கும், அம் மிஞிலி யென்பவன் நன்னன் படைத்தலைவன். இவன், வினைசெயல்வகையில் வல்லனும் வினைத்தூய்மை யுடையவனுமாய் விளங்கினமை காரணமாக, நன்னன் தனது நகரங்களுள் பாரம், பிரம்பு முதலியவற்றையும் அவற்றைச் சூழ்ந்த நாட்டின் பகுதியையும் இவன் வசம் ஒப்பித்து ஆட்சிபுரியுமாறு விடுத்திருந்தான். இதனை நாம் முன்னரே கூறியுள்ளோம் மேலும், இவன் விற்பயிற்சி மிக்சு வில்லேருழவர்களுட்டலைவனாகவும் விளங்கினன் என்று,

---

∅ கட்டூர் - பாடிவீடு.

"இறுகுபுல் மேய்ந்த வறுகோட்டு முற்றல்
அள்ளல் ஆடிய புள்ளி வரிக்கலை
வீளை யம்பின் **வில்லோர்** பெருமகன்
பூந்தோள் யாப்பின் **மிஞிலி** காக்கும்
பாரத் தன்ன ஆர மார்பு" (நற். 265) என

வரும் பரணர் பாட்டுக் கூறுகின்றது.

இங்ஙனம் புரவலர் விரும்பும் வின்மையும், வீரமும் படைத்த காளையாகிய இம் மிஞிலி தன் தலைவனை யொப்ப வள்ளன்மையும், "நெடுந்தேர் மிஞிலி" "ஒன்னார் ஓம்பரண் கடந்த வீங்குபெருந் தானை, அடுபோர் மிஞிலி" "இழையணி யானை இயல்தேர் மிஞிலி" எனப்புலவர் பாடும் புகழும் பெற்றிருந்தான். "இகலடு கற்பின் மிஞிலி" எனக் கூறப்படுதலை நோக்க இவன் வீரமேயன்றி, வீரமுடைமைக் கேற்ற கல்வியும் வல்லனா யிருந்தமை புலனாகின்றது. Φ இவ் வீரனை மகனாகப் பெற்ற பெரியோன் **அன்னி** யெனப்படுவா னாவன். இது நோக்கியே, மிஞிலியும் **அன்னிமிஞிலி** யெனவும் கூறப்படுவானாயினன். அது "கொடுங்குழை **அன்னிமிஞிலியின்** இயலும் எனவும், **அன்னி** மிஞிலிபோல" எனவும் ஆசிரியர் பரணரே கூறுமாற்றால் உணரப்படும்.

அன்னியென்பான் சோழ நாட்டில் வாழ்ந்த ஒரு சிறந்த வீரனாவான். **அன்னிகுடி** யென்னும் ஊர் ஒன்று தஞ்சை சில்லாவில் இருக்கின்றது. அதுவே இவன் வாழ்ந்த ஊராதல் கூடும் எனறும் சிலர் முடிபு செய்கின்றனர். இவன் காலத்தில் அழுந்தை யென்னும் ஊரில் **திதியன்** என்னும் வேளிர் மரபினனொருவனும் வைப்பு என்னும் ஊரில் **எவ்வி** யென்னும் வேளிர் மரபின னொருவனும் சிறப்புற் றிருந்தனர்.

திதியன் என்பான் மிக்க செல்வ முடையவன். மேலும் இவனுக்குப் பொதியில் மலை உரியதாயிருந்தது. அது பிறையெயிற்றுக் கேழல் குழுமும் சாரலும், குறவர்க்குப் பெரும் பயன் தரும் தேனும், முயலுநர் முயற்சி முற்றற் காற்றாச் சிமையமும் கொண்டது. இது,

---

Φ கற்பு இப் பொருட்டாதல் "தொலையாக் கற்பநின் நிலைகண்டிகுமே" எனவரும் பதிற்றுப்பத்தினுங் காண்க. இதனை யறியாது மிஞிலியைப் பெண்ணெனக் கருதி மயங்கினாருமுளர்.

"உருமிசைக்
களிறுகண் கூடிய வாண்மயங்கு ஞாட்பின்
ஒளிறுவேற்றானைக் கடுந்தேர்த் திதியன்
வருபுனல் இழிதரு மரம்பயில் இறும்பிற்
பிறையுறழ் மருப்பிற் கடுங்கட் பன்றிக்
குறையார் கொடுவரி குழுமுஞ் சாரல்
அறையறு தீந்தேன் குறவர் அறுப்ப
முயலுநர் முற்றா வேற்றரு நெடுஞ்சிமைப்
புகலரும் பொதியில் [அகம். 322] எனவரும்

பரணர் பாடலால் பெறப்படுகின்றது. மேலும் இவன் மிக்க போர் வன்மையும் வரையா வீகையும் உடையன் என்பதும், ஒரு காலத்துத் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனோடு பொருத சிறப்புடையவன் என்பதும் முறையே,

"என்றும்
அருந்துறை முற்றிய கருங்கோட்டுச் சிறியாழ்ப்
பாண ரார்ப்பப் பல்கலம் உதவி
நாளவை யிருந்த நனைமமிழ்த் திதியன்
வேளிரொடு பொரீஇய கழித்த
வாள்" (அகம் 331) என மாமூலனாராலும்,

"பொருநர்
செல்சமங் கடந்த வில் கழு தடக்கைப்
பொதியிற் செல்வன் பொலந்தேர்த் திதியன்
(அகம். 25)

எனப் பூதப்பாண்டியனாலும்

"கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங் கானத் தகன்றலை சிவப்பச்
சேரல் செம்பியன் சினங்கெழு திதியன்
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி
நாரரி நறவின் எருமை யூரன்
தேங்கம ழகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான் இயறேர்ப் பொருநனென்
றெழுவர் நல்வல மடங்க வொருபகல்
முரசொடு வெண்குடை யகப்படுத் துரைசெலக்
கொன்றுகளம் வேட்ட ஞான்றை" (அகம். 36)

என மதுரை நக்கீரராலும் கூறப்படுதலால் அறியப்படுவனவாம்.

எவ்வி என்பான் வேளிருள் ஒருவன் "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினும் கொடுப்பாரில்லை" எனச் சுந்தரரால் திருமுறையிற் பாராட்டப்பெறும் பேறுபெற்ற பாரியென்னும் வள்ளல் பிறந்தகுடிக்கு முதல்வனாவான். இவனது நாடு மிழலைக் கூற்றம், முத்தூற்று முதலியவாம். இவனது சிறப்புப் பின்னர்ப் பரணர் இவன்மீது பாடிய பாடலை ஆராயுங் காலத்துக் கூறப் படும்.

நிற்க, திதியனுடைய சிறந்த ஊர்களுள் ஒன்றான குறுக்கை யென்னும் ஊரின்கண் பெரிய அழகிய புன்னைமர மொன்றனைத் தனக்குக் காவல் மரமாகக் கொண்டு திதியன் பெரிதும் ஆர்வத்தோடு அதனை ஓம்பி வந்தனன். இதனைக் கண்ட அழுந்தூர் வாழும் அன்னி, இத் திதியன் தலையாலங் கானத்துப் பாண்டியன் நெடுஞ்செழியனால் தோல்வியுற்றதே இவனது வலியொடுக்கத்துக்குக் காட்டாகுமெனக் கருதி, அப் புன்னை மரத்தைத் தடிதற்கு எண்ணி, வைப்பூர் கிழவனான வேள் எவ்வியிடம் உசாவினன். அவன், சமயம் வரின் இடித் துரைத்துத் தக்கவழிச் செலச்செய்வது சால்புடையோர் செயலா தலின், திதியன் போர்வன்மை, படைவன்மை முதலியவற்றை விளங்க வுரைத்து அவனை அம் முயற்சியை விட்டொழியுமாறு கூறினன். கூறினும் என்! அன்னி அடங்கானாய் அப்புன்னை யைத் தடிந்து வீழ்த்தினன்.

இச் செய்தி யறிந்த திதியன் ஆறாச் சினங்கொண்டு பெரும் படையுடன் சென்று அன்னியைக் குறுக்கையிலே எதிர்த்து யாண்டும் குருதியாறு பெருகப் பெரும்போர் உடற்றி அன்னியைப் புறங்கண்டு தன் சிறப்பினை நிலை நிறுத்தினன். இவனது புன்னையின் வீழ்வு பல புலவர் பெருமக்களாலும் எடுத்துக் கூறப்பெற்றுளது. இச்செய்தி,

"மலைமிசைத் தொடுத்த மலிந்துசெலல் நீத்தம்
தலைநாள் மாமலர் தண்டுறை தயங்கக்
கடல்கரை மெலிக்கும் காவிரிப் பேரியாற் (று)
அறல்வார் நெடுங்கயத் தருநிலை கலங்க
மாலிருள் நடுநாள் போகித் தன்னையர்
காலைத் தந்த கணைக்கோட்டு வாளைக்
கவ்வாங் குந்தி யஞ்சொற் பாண்மகள்
நெடுங்கொடி நுடங்கு நறவுமலி மறுகிற்
பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்

கழங்குறழ் முத்தமொடு நன்கலம் பெறூஉம்
பயங்கெழு வைப்பிற் பல்வேல் எவ்வி
நயம்புரி நன்மொழி அடக்கவும் அடங்கான்
பொன்னிணர் நறுமலர்ப் புன்னை வெஃகித்
திதியனொடு பொருத அன்னி போல
விளிகுவை கொல்லோ'' (அகம்126) எனவும்,

"அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
தொன்னிலை முழுமுதல் துமியப் பண்ணிப்
புன்னை குறைத்த ஞான்றை'' (அகம். 45) எனவும்,
"பெருஞ்சீர்
அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
தொன்னிலை முழுமுதல் துமியப் பண்ணிய
நன்னர் மெல்லிணர்ப் புன்னை போலக்
கடுநவைப் படீஇயர் மாதோ'' (அகம். 145)எனவும்,

"அன்னியும் பெரியன் அவனும் விழுமிய
இருபெரு வேந்தர் பொருகளத் தொழித்த
புன்னை விழுமம்'' (நற். 180) எனவும்

வருவனவற்றால் உணரப்படுகின்றது.

இங்ஙன், பொருதற்கரிய திதியனது புன்னையை வீழ்த்தி அவனுக்குப் புறமுங் கொடுத்தோடிய அன்னி பின்னர் வட வரும் வலியுள்ளவரும் ஆகிய கோசர் பலருடன் போர் தொடுத்தான். அவர்கள் இவனை வென்று இவனுடைய கண்களையும் களைந்தனர். இக் கோசர் திதியனது நாளவையிலும் படையிலும் இருந்து அவற்குப் பெரும்புகழ் தந்தோராவர்.

இவ்வாறு, தந்தையின் கண்களைக் கோசர் களைந்து திதியனுக்குப் புகழ்விளைத்துக் கொடுத்தனர் என்ற செய்தி மிஞிலியின் செவிக் கெட்டியது. அவன் மறலிய சினங்கொண்டு திதியனை வெல்லுமாறு யாதெனச் சூழ்வானாயினன், தன்வலியும் மாற்றான் வலியுமாகிய இருவலியும் தூக்கித் தன்வலி குறைவாதல் கண்டு, ஒத்த வலியுடைய குறும்பியன் என்பானைத் தனக்குத் துணைசெய்யுமாறு வேண்ட, அக் கொற்றக் குறும்பியன் மிஞிலியை நட்பினாற் றழுவி அக் கோசரை மரபோடழியக் கொன்றொழித்தான். அதுகாறும், மிஞிலி பரிகலத்துண்ணாமலும் படிவ மாறாமலும் வெள்ளாடை யுடாமலும் இருந்து, பின்னர்த் திதியன் இறந்த செய்தி கேட்டு, அவனது அழுந்தைக்கண், மிக்க ஆரவாரத்தோடு சென்று, பெருமிதங்கொள்வானாயினன்.

இதனால், இவன் தன் தந்தைக்குக் குற்றம் செய்தாரை ஒறுக்கும் ஆறறிந்து ஒறுத்த செய்கையால் மிக்க மதிநுட்பமும் ஊராண்மையோடு கூடிய பேராண்மையும் உடையவன் என்பது தேற்றமாம். இச்செய்தி,

"வாய்மொழித் தந்தையைக் கண்களைந் தருளாது
ஊர்முது கோசர் நவைத்த சிறுமையிற்
கலத்து முண்ணான் வாலிது முடாஅன்
சினத்திற் கொண்ட படிவ மாறான்
மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்
செருவியல் நன்மான் திதியற் குரைத்தவர்
இன்னுயிர் செகுப்பக் கண்டுசினம் மாறிய
அன்னி மிஞிலி போல மெய்ம் மலிந் (து)
ஆனா வுவகைய மாயினேம்"

(அகம் 262) எனவும்,

"தந்தை
கண்களின் அழித்ததன் தப்பற் றெருவர
ஒன்றுமொழிக் கோசர்க் கொன்றுமுரண் போகிய
கடுந்தேர்த் திதியன் அழுந்தைக் கொடுங்குழை
அன்னி மிஞிலியின் இயலும்" (அகம்.196) எனவும்

வருவனவற்றால் காண்க.

நிற்க, வெளியம் என்னும் ஊரில் வேளிர் மரபில் ஆய் **எயினன்** என்பானொரு வீரன், சேரனது படைத்தலைவனாக விளங்கினன். இவன் மிக்க போர்வன்மையும் வள்ளன்மையும் உடையன் என்பது.

"யாம விரவின் நெடுங்கடை நின்று
தேமுதிர் சிமையக் குன்றம் பாடும்
நுண்கோல் அகவுநர் வேண்டின் வெண்கோட்(டு)
அண்ணல் யானை யீயும் வண்மகிழ்
வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்" எனவும்,

"கடும்பரிக் குதிரை ஆஅய் எயினன்" எனவும் வரும் பரணர் பாடல்களாற்றெரிகின்றது. சுருங்கக்கூறின், இவனது பகைக்கஞ்சி அகுதை யென்னும் வீரனொருவன் அடங்கிக் கிடந்தான் என்பதே சாலுவதாம்.

இந்த ஆஅய்எயினன் **களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்** என்னும் சேரவேந்தன் ஒருவனது படைத்தலைவ னாயி னன். இச்சேரல் ஆராத் திருவினையுடைய சேரலாதனுக்கு வேளாவிக் கோமான் பதுமன் தேவி யென்பாளிடம் பகைவர் பனிப்பப் பிறந்து பலர்புகழ் பல்புகழ் வளர்த்தவன்; பிறர்க்கென வாழும் பெற்றியுடையவன். ''ஆன்றவிந் தடங்கிய செயிர்தீர் செம்மல்'' எனவும், ''துளங்குகுடி திருந்திய வளம்படு வென்றி'' யுடையோன் எனவும், ''வளந்தலை மயங்கிய பைதிரம் திருத்திய களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்'' எனவும் ஆசிரியர் காப்பியாற்றுக் காப்பியனாரால் பதிற்றுப்பத்தினுள் பாடப்பெற்றி-ருப்பதையும் அங்ஙனம் பாடிய புலவர்க்கு, ''நாற்பது நூறாயிரம் பொன் ஒருங்கு கொடுத்துத் தான் ஆள்வதிற் பாகங் கொடுத்தான் அக் கோ'' என அப் பாட்டின் பதிகம் கூறுதலையும் நோக்கின் இவன் நிறைந்த கல்வி கேள்வியுடையவனாய்ப் பொருளிடங்-களால் தளர்ச்சியுற்ற குடிகட்கு வேண்டுவன வுதவி யாதரித்தும், தன் காலத்துத் தளர்ச்சியுற்று வலிகுன்றிக் கிடந்த அரண்களைத் திருத்திச் செம்மை செய்தும் விளங்கினான் என்பது தோன்று கிறது. இவன் மனைவி சிறந்த கற்புமேம்பாடுடையள். அவள்

''வண்டுபட
ஒளிந்த கூந்தல் அறஞ்சால் கற்பின்
குழைக்கு விளக்காகிய ஒண்ணுதல் பொன்னின்
இழைக்கு விளக்காகிய அவ்வாங்கு உந்தி.
விசும்பு வழங்கு மகளி ருள்ளும் சிறந்த
செம்மீன் அனையள் நின் தொன்னகர்ச் செல்வி''

எனப் புகழப்பெறுகின்றாள். இவனுக்கும் நன்னனுக்கும் யாது காரணத்தாலோ பகைமை யுண்டாகி யிருந்தது. அதனால் இவனது படைத்தலைவனான ஆஅய்எயினன், நன்னன் படைத்தலைவனான மிஞிலியோடு பொரலாயினன்.

இங்ஙனம், எயினன் மிஞிலியோடு போர்க்கெழுவதன் முன், சிலர் அவனுக்கு மிஞிலியின் மேம்பாட்டையும், அவன்துணை யால் நன்னன் அதிகன் என்பானுடைய புள்ளுநாட்டினைக் கடிந்த செய்தியையும் விளங்கக் கூறிப் போர்தொடுக்காவாறு தடுத்தனர். தடுத்தும், எயினன் நில்லாது மிஞிலியைப் பாழி யென்னும், பறந்தலையின்கண் எதிர்த்துப் போர் செய்யத் தொடங்கினன். அக்காலை, நன்னன் தன் பேய்க்கூட்டங்களின் இடையில் நின்று ''அஞ்சாது நின்று போர் செய்க'' என்று

மிஞிலிக்குக் கட்டளையிட அதனைப் பணிவொடு ஏற்ற மிஞிலி ஏயினனைத்தாக்கிக் கொன்றொழித்தான். அதுபோது, நன்னன் போர்க்களத்தை நோக்கிச் சினஞ்சிறந்து அருள்பிறவாது நின்றான். உயிரிழந்து வீழ்ந்த ஆஅய்எயினன் மீது வெயில்படா வண்ணம் பறவைகள் தம் சிறகரால் மறைத்துச் சூழ்ந்தன. பின்னர் அவனது உரிமை மகளிர் இறுதிக்கடன் கழிப்பார் அவ்வெயினன் பேரலும் பாவை செய்து, அதனை முற்றவும் அணி செய்து, முக்கட்செல்வன் வீற்றிருக்கும் ஆலமுற்றம் போந்து, அம்முற்றத்தினையும் அழகுசெய்து அங்கு அப் பாவையை வைத்துத் தம் கடன் ஆற்றிப் பின்னர் நீரிற் போகட்டுத் தாமும் நீராடிப் பேரயினர். எயினன் இறந்த செய்திகேட்ட அகுதையும் அச்சம் நீங்கிவெளிவரலாயினன், இது,

''கொடித்தேர்
பொலம்பூண் நன்னன் புள்ளுநாடு கடிந்தென
யாழிசை மறுகிற் பாழி யாங்கண்
அஞ்ச லென்ற ஆஅய் எயினன்
இகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்தன்
உயிர்கொடுத் தனனே சொல்லிய தமையாது''

(அகம் 396) எனவும்,

''முறையியல் வழாஅது ஆற்றிற் பெற்ற
கறையடி யானை நன்னன் பாழி
யூட்டரு மரபின் அஞ்சுவரு பேஎய்க்
கூட்டெதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி''

(அகம் 142) எனவும்,

''வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்
அளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
இழையணி யானை இயல்தேர் மிஞிலியொடு
நண்பக லுற்ற செருவிற் புண்கூர்ந்து
ஒள்வாண் மயங்கமர் வீழ்ந்தெனப் புள்ளொருங்(கு)
அங்கண் விசும்பின் விளங்கு ஞாயிற்(று)
ஓண்கதிர் தெறாமைச் சிறகரிற் கோலி
நிழல்செய் துழறல் காணேன் யானெனப்
படுகளங் காண்டல் செல்லான் சினஞ்சிறந்து
உருவினை நன்னன் அருளான் கரப்பப்
பெருவிதுப் புற்ற பல்வேண் மகளிர்
குருஉப்பூம் பைந்தார் அருக்கிய பூசல்

வசைவிடக் கடக்கும் வயங்குபெருந் தானை
அகுதை களைதந் தாங்கு'' (அகம்.208) எனவும்,

''ஒன்னார்
ஓம்பரண் கடந்த வீங்குபெருந் தானை
அடுபோர் மிஞிலி செருவிற் குடைஇ
முருகுறழ் முன்பொடு பொருதுகளஞ் சிவப்ப
வண்மை யெயினன் வீழ்ந்தென ஞாயிற்(று)
ஒண்கதிர் உருப்பம் புதைய ஓராங்கு
வம்பப் புள்ளின் கம்பலைப் பெருந்தோடு
விசும்பிடை தூர வாடி மொசிந்துடன்
பூவிரி யகன்றுறைக் கணைவிசைக் கடுநீர்க்
காவிரிப் பேரியாற் றயிர்கொண் டீண்டி
யெக்க ரிட்ட குப்பை வெண்மணல்
வைப்பின் யாணர் வளங்கெழு வேந்தர்
ஞால நாறும் நலங்கெழு நல்லிசை
நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்
ஆல முற்றம் கவின்பெறத் தைஇப்
பொய்கை சூழ்ந்த பொழின்மண மகளிர்
கைசெய் பாவை துறைக்கண் இறுக்கும்''
(புகா அர்) (அகம். 181)

எனவும் வருவனவற்றால் உணர்க.

இவ்வாறு தன் படைத்தலைவன் மிஞிலியொடு பொருது உயிரிழந்தான் என்ற செய்தி களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் அறிந்ததும் பெருஞ்சினங் கொண்டு அம்மிஞிலியொடு அவனது தலைவனான நன்னனையும் கொன்று மீள்வேன் எனத்தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்து வஞ்சினங் கூறிப் போர்க்கெழுந்தனன். மேலும், இச் சேரலுக்கும் நன்னனுக்கும் இயற்கையிலே நாடாட்சி காரணமாகப் பகைமையும் இருந்ததென முன்னர்க் கூறினோமன்றோ. அதுவும் இதுபோது இவன் போர்க்கெழுதற்கு ஏதுவாயிற்று. நார்முடிச்சேரல் போர்க்கெழும் செய்தி நன்னன் அறிந்து தானும் திரண்ட தானை சூழப் பெருங்கடல் நடுவட்செலும் வங்கம் போலச் செல்வானாயினன்.

இருபடையும் **கடம்பின் பெருவாயில்** என்னுமிடத்துக் கைகலந்து பொரலாயின. அதுபோது இருங்களிற்று யானைகள் கையும் மருப்பும் இழந்து பட்டன; தேர்கள் முறிந்து கொடுஞ்சியும் கொடியும் ஒருபுடை சிதறிவிழ உருளைகள்

கழன்று துகளாயின; பெடையொடு கூடின பருந்தின் சேவல்கள் தம் மினத்தொடு போர்க்களம் புக்குக் குருதி படிந்து உண்டும், கொழுவிய தசை யருந்தியும், விசும்பகம் புதைய வட்டமிட்டன; ஒரு பெயருடைய வீரர்பலர் பட்டமையான், அவர் தலை துமிந்து எஞ்சிய மெய்கள் எழுந்தாடின ; அந்திமாலை விசும்பு கண்டன்ன அப் பறந்தலையின், உட்களத்தின் நடுவாகிய செஞ்சுடர் கொண்ட குருதி மன்றத்திற் பேய் எழுந்து குசவையும், துணங்கையும் ஆடின. சேரலும், மல்லல் உள்ளமொடு, பகைவர், முன்பு செய்துவருகின்ற போரன்றிப் புதிதாகப் பகைத்துச் செய்யும், போர்வகை பலவும் கடந்து, செருவில் மிகுகின்ற மொய்ம்பினையுடைய மறவரொடு தலைச் சென்று, பனைதடியும் புனம்போல, அவர்தம் கை கால்களைத் தடிந்து, இரண்டு படையின் வாளும் தம்மிற் றெரியாமல் மயங்குதலால், பட்ட மாவும் மாக்களும் செய்த பிணங்களை யுண்டதற்குப் போந்த எருவையும், அதன் சேவலும். குடுமி ஏழாலொடு, அம்பு, வாள் முதலிய படையுடன் குருதிச் செம்புனல் பிறவற்றையும் சுமந்து கிழக்கிழிய, உருவெழு கூளியர் உண்டு மகிழ்ந்தாடச் செருச்செய்து, நன்னனது காவல் மரமான பொன்படும் வாகைமரத்தின் முழுமுதல் தடிந்து, "குருதிச் செம்புனல் குஞ்சரம் ஈர்ப்ப, அயரா வென்றி யெய்தினன், வெந்நிட் டோடிய நன்னன் மானத்தால் வலி குன்றி யிருந்தனன். பின்னர் அச்சேரல், அவன் வலிகுன்றி யிருத்த லறிந்து, தன் முன்னோரால் இழக்கப்பெற்று நன்ன னது ஆட்சியின் கீழிருந்த நாட்டினை மீளப் பெறற்பொருட்டுப் பெரும் படை கொண்டு **வாகைப்பெருந்துறை** யென்னுமிடத்து அந் நன்னனை மீட்டும் எதிர்த்து இழந்த நாட்டைத் திரும்பப் பெற்றான். நன்னனும் பொருது களத்தேயே ஒழிந்தான். இவ்விரு போர்களுள் முன்னதைப் பதிற்றுப்பத்து நான்காம் பத்தினுள் ஆசிரியர் காப்பியாற்றுக் காப்பியனார் ஒரோவிடத் தில் (40-ஆம் பாட்டினுள்),

"பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன்
சுடர்வீ வாகைக் கடிமுதல் தடிந்த
தார்மிகு மைந்தின் நார்முடிச் சேரல்" என்று

சிறப்பாகவும் ஏனைய விடங்களிற் பொதுவாகவும் கூறியுள்ளார்; பின்னது, ஆசிரியர் கல்லாடனாரால்,

"குடாஅது
இரும்பொன் **வாகைப்பெருந்துறைச்** செருவிற்
பொலம்பூண் நன்னன் பொருதுகளத் தொழிய

வலம்படு கொற்றந் தந்த வாய்வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடு தந்தன்ன
வளம்பெரிது பெறினும் வாரலென்'' (அகம். 199)

என்றும் கூறப்பட்டுள்ளது.

இக் கல்லாடனார் பாட்டு நன்னன் நார்முடிச் சேரலால் பட்டொழிந்தான் என்ற செய்தியை வற்புறுத்துவதே யன்றிப் பதிற்றுப்பத்துக் கூறுவதனை நாட்டுவதாகத் தோன்றவில்லை. பதிற்றுப்பத்து பதிகத்தாலும் அதன் உரையாலும் இப் போர் கடம்பின் பெருவாயில் என்னுமிடத்து நிகழ்ந்த தென்பது அறியப்பட, இவ்வகப்பாட்டு இப்போர் வாகைப் பெருந்துறை யென்னுமிடத்து நடந்ததெனக் கூறுகின்றது. மேலும், இதன்கட் காவல்மரந் தடிதலும் கூறப்பட்டிலது. இவற்றால் நன்னனுக்கும் நார்முடிச் சேரலுக்கும் நடந்தது ஒரே போர் அன்று என்பது பெறப்படும். படவே காப்பியனார் கூறிய போரின்கண் நன்னன் தன் காவன்மர மிழந்து புறங்கொடுத்து ஓடினன் என்பதும், கல்லாடனார் கூறிய போரின்கண் நன்னன் இறந்தான் என்பதும் முன்னது கடம்பின் பெருவாயில் என்னுமிடத்தும், பின்னது வாகைப் பெருந்துறை யென்னுமிடத்தும் நிகழ்ந்தன என்பதும் பெற்றாம்.

சிலர் நார்முடிச்சேரல் நன்னனை வென்று பெற்ற நாடு தான் இளமைக்காலத்தே இவனொடு பொருது இழந்த நாடு என்று கூறுகின்றனர். அது நன்னனது வெற்றிச் செயல்களுள் ஒன்றாதலால் அவனைப் பாராட்டிய புலவர்பெருமக்கள் அதனைக் குறியாதிரார். அத்தகைய குறிப்பொன்றும் இன்மை யானும், அவன் கவர்ந்ததாகப் புன்னாடு ஒன்றினைத் தவிரப் பிறிதொன்றும் கூறப்படாமையானும், தன் நாட்டையும் ''முறை யில் வழாஅது ஆற்றிற் பெற்''றா னெனவே கூறப்படலாலும், வேறு தக்க சான்று கூறினாலன்றி அது கோடற்பாலதன்றாம். இதனை இன்னும் விரித்து ஆராய்வதற்கு இஃதிடமன்று.

இவ் வகப்பாட்டில் வாகைக்குக் கொடுக்கப்பெற்றுள்ள அடைமொழியே பதிற்றுப்பத்தின் நான்காம்பத்தின் பதிகத்து நன்னனது காவன்மரமான வாகைக்கும் ''பொன்படு வாகை முழுமுதல் தடிந்து'' என்புழி ''பொன்படு'' என்று கொடுக்கப் பட்டிருக்கும் ஒப்புமை நோக்கி, பெருந்துறை யென்னுமிடத்து

நன்னன் தன் பொன்படுவாகையை யிழந்து பொருது களத்து ஒழிந்தான்என்று கொள்ளுவாரும் உண்டு. "இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவிற் – பொலம்பூண் நன்னன் பொருது களந்தொழிய" என்றதற்கு வாகையாகிய காவல் மரத்தை யிழந்து, உயிரிழந்தான் என்று பொருள் கோடல் பொருத்தமாகத் தோன்றவில்லை. வருந்திப் பொருள்கோடலும் அழகன்று.

பகுதி - நான்கு

அஞ்சி

இவன் அதியமான் நெடுமான் அஞ்சி எனப்பெயர் பெறுவான். "ஆர்கலி நறவின் அதியர் கோமான், போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி" அதியர் கோமான், என ஔவை யார் கூறுதலை நோக்க, அதியர் என்பார் ஒருவகை மரபினர் என்பதும், அவர்கட்குத் தலைவன் இவன் என்பதும் விளங்கு கின்றன. இவ் வதியர் என்பார் சிறந்த வீரர்கள் என்பது இவன் செயல்களால் தெரிகின்றது. மேலும் இவனது முன்னோர்கள் விண்ணுலகத்திலிருந்து இவ் வுலகத்திற்கு. அமரரை வேண்டி ஆவுதி அருத்திப் பெறுதற்கரிய கரும்பினைக் கொண்டுவந்து விளைவித்த சிறப்பினை யுடையார். அது

"அமரர்ப் பேணியும் ஆவுதி யருத்தியும்
அரும்பெறல் மரபின் கரும்பிவண் தந்தும்
நீரக விருக்கை ஆழி சூட்டிய
தொன்னிலை மரபின் நின் முன்னோர்" (புறம். 99)

எனவும்,

"அந்தரத்து,
அரும்பெற லமிழ்தம் அன்ன
கரும்பிவண் தந்தோன் பெரும்பிறங் கடையே"
(புறம். 395)

எனவும் வரும் ஔவையார் பாடல்களால் விளங்குகின்றது. மேலும் இவர் இவனை நோக்கி,

"நீ, நின் முன்னோர் போல,
ஈகையங் கழற்கால் இரும்பனம் புடையல்
பூவார் காவிற் புனிற்றுப்புலால் நெடுவேல்
எழுபொறி நாட்டத் தெழாஅத் தாயம்
வழுவின் றெய்தியும் அமையாய்" என்று

கூறுதலாலும் இதன் உரையாலும் இவன் சேரமானுக்கு உறவின னென்றும். அதனால் இவனுக்குப் பனந்தார் உண்டென்றும்,

இவன் முன்னோர்களின் வேண்டுகோட் பொருட்டு வானோர் அவர்கட்கு வரங்கொடுத்தற்கு வந்திருந்ததொரு சோலையுடைய னென்றும் கூறுகின்றார்.

ஒரு காலத்து இவன் பெறுதற்கரியதும் உண்டா ருயிர் நெடிதிருக்கச் செய்யும் சிறப்புடையதுமானதோர் நெல்லிக்கனி பெற்று, அதனைத் தானுண்ணாது ஒளவைக்கு ஈந்தான். அது பெற்ற ஒளவையார்.

"வலம்படு வாய்வா ளேந்தி ஒன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்
போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி!
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும! நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே." (புறம். 91) எனப்

புகழ்ந்து பாடுவா ராயினர்.

இவன் மிக்க போர்வன்மையும் புலவர்மாட்டுப் பேரன் புடைமையும் கொண்டு நன்மகப்பேறு பெற்றுச் சிறந்த புகழ் பெற்றவன். இவனிடத்தில் மழவர் என்னும் ஒருவகை வீரர் பலர் இருந்து இவனுக்குப் பெரும் வெற்றியைப் பயந்தனர். இவை

"இருநிலம் மண்கொண்டு சிலைக்கும்
பொருநரும் உளரோ நீகளம் புகினே" எனவும்,

"ஒன்னார்

"கடிமதி லரண்பல கடந்த
நெடுமா னஞ்சிநீ அருளன் மாறே"

எனவும் வருவனவற்றாலும், ஒளவை முதலிய அருந்தமிழ்ப் புலவர் பெருமக்களால் "ஆசா கெந்தை", "என்னை" எனும் உரிமைச் சொற்களாற் கூறப்பெறுதலினாலும், "ஒளிறிலங்கு நெடுவேல் மழவர் பெருமகன்" "வழுவில் வன்கை மழவர் பெரு மகன்" என்பனவற்றாலும் உணரப்படுகின்றன. "அதியமான் தவ

மகன் பிறந்தவனைக் கண்டானை அவர் பாடியது'' என்றும் ''அவன் மகன் பொருட்டெழினியைப் பாடியது''என்றும் வருவன அவனது மக்கட்செல்வத்தை யுணர்த்துவனவாம்

இவனுடைய ஊர் தகடூர் என்பது. மலை குதிரைமலை யென்பது. இவற்றைப் போல் அத்துணைச் சிறப்பில்லாத மலைகளும் ஊர்களும் பல. இத்தகடூரைப்பற்றிக் கூறுமிடத்து, **இராவ்பகதூர் வி. வெங்கையர் அவர்கள்** ''வடமொழியில் தகடா என்று சொல்லப்பட்ட இந்தவூர் தமிழில் தகடூர் என்று வழங்கி வந்ததாகத் தோன்றுகின்றது; மைசூர் இராச்சியத்தில் தகடூர் என்று சொல்லப்பட்ட ஊர் ஒன்றிருக்கிறது'' என்று எழுதுவதாக ஆசிரியர், **மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயரவர்கள்** கூறுகின்றார்கள். குதிரைமலையை ஆசிரியர்கள் ''ஊரா தேந்திய குதிரைக் கூர்வேல், கூவிளங் கண்ணிக் கொடும்பூண் எழினி'' என்றும் ''நெடுநெறிக் குதிரைக் கூர்வேலஞ்சி'' என்றும், அதன் வளத்தை

''அருவி யார்க்கும் கழைபயில் நனந்தலைக்
கறிவள ரடுக்கத்து மலர்ந்த காந்தள்
கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக் கிளையொடு
கடுங்கட்கேழல் உழுத பூமி
நன்னாள் வருபதம் நோக்கிக் குறவர்
உழுஅ அது வித்திய பரூஉக்குரற் சிறுசினை
முந்துவிளை யாணர் நாட் புதிது உண்மார்
மரையான் கறந்த நுரைகொள் தீம்பால்
மான் தடி புழுக்கிய புலவுநாறு குழிசி
வான்கேழிரும்புடை கழா அது ஏற்றிச்
சாந்த விறகின் உவித்த புன்கம்
கூதளங் கவினிய குளவி முன்றில்
செழுங்கோள் வாழை அகலிலைப் பகுக்கும்
ஊராக் குதிரை'' (புறம், 168) எனவும்,

''மைதவழ் உயர்சிமைக் குதிரைக் கவா அன்''
[அகம். 143] எனவும்

கூறுகின்றனர். தென்கன்னடம் சில்லாவில் **குதிரைமூக்குமலை** யென ஒன்றிருப்பது இக்குதிரைமலை கொல்லோ என்றெண்ணச் செய்கின்றது.

இனி, இவனது போர்ச்செயல்களுட் கோவலூரெறிந்ததும் சேரமான் பெருஞ்சேர லிரும் பொறையுடன் போர்செய்ததும் புலவர் பெருமக்களால் மிகமிகப் பாராட்டப் பெறுகின்றன. இவற்றுட் கோவலூர் என்பது மலையமான் திருமுடிக்காரிக் குரியது. இது

> "துஞ்சா முழவிற் கோவற் கோமான்
> நெடுந்தேர்க் காரி கொடுங்கான் முன்றுறைப்
> பெண்ணையம் பேர்யாற்று நுண்ணறல் கடுக்கும்
> நெறியிருங் கதுப்பின் என்பேதை" [அகம். 35] என

வருவதால் விளங்குகின்றது. இக்காரி என்பான் வள்ளல் எழுவருள் ஒருவன். கபிலர் முதலிய நல்லிசைச் சான்றோரால் புகழப்பெற்றவன். மேலும், "முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி" என்று கூறப்பெறுதல் நோக்க, இவனுக்கு முள்ளூர் என்பதும் உரித்தெனத் தோன்றுகிறது.

இக்காரி, மலையன் என்றும் வழங்கப்பெறுவன்; விற் போரிலும் ஈகையிலும் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவ னாவன். இது,

> "பல்லா நெடுநிரை வில்லின் ஒய்யும்
> தேர்வண் மலையன்" (நற். 100) என்றும்,

> "தொலையா நல்லிசை விளங்கு மலையன்
> மகிழாது ஈத்த விழையணி நெடுந்தேர்
> பயன்கெழு முள்ளூர் மீமிசைப்
> பட்ட மாரி யுறையினும் பலவே" (புறம் 123.)

என்றும் வருவனவற்றாலும் பிறவற்றாலும் உணரப்படும். ஒரு காலத்துச் சேரமான் மாந்தரஞ் சேரல் இரும்பொறையும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் பொருதவழிச் சோழற்குத் துப்பாகி வென்றி தந்து மிக்க புகழ் எய்தினான். சுருங்கக்கூறின் இவன் எத்துணை வலிமையுடையவனாயிருப்பின் முடியுடை மூவேந்தரும் துணை வேண்டிப் பொருள் கொடுத்து வேண்டி நிற்பர். இன்றேல், ஆசிரியர் கபிலர்

> "வீயாத் திருவின் விறல்கெழு தானை
> மூவரு ளொருவன் துப்பா கியரென
> ஏத்தினர் தரூஉங் கூழே நுங்குடி
> வாழ்த்தினர் வரூஉம் இரவலர் அதுவே" (புறம். 122)

என்று கூறுவாரோ?

இங்ஙனம் முடியுடை மன்னராலும் புகழ்ப்பெற்றுப் பெருங் கீர்த்தி கொண்டு விளங்கும் காரியைக்கண்ட அஞ்சி அக் கோவ லூரை முற்றுகையிட்டுப் பொருதுவென்றான். இவ் வெற்றியைப் புகழ்ந்து கூறவந்த ஔவையார்,

"செருவேட்டு
இமிழ்குரல் முரசின் எழுவரொடு முரணிச்
சென்றமர் கடந்து நின் ஆற்றல் தோற்றிய
அன்றும் பாடுநர்க் கரியை இன்றும்
பரணன் பாடினான் மற்கொல் மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரண்டு திகிரி ஏந்திய தோளே" (புறம். 99) என்று

பாடுவாராயினர்.

இப்போரில் எதிர்க்கும் ஆற்றலின்றியும் முடியுடை வேந்தரின் துணையின்றியும் போகவே, காரி தோல்வியுற்றோடிப் பெருஞ்சேர லிரும்பொறையைத் துணைவேண்டினன்.

இவ்விரும்பொறை, "பொய்யில் கடுங்கோவுக்கு வேளாவிக் கோமான் பதுமன்தேவி யீன்றமகன்." இவனது "வளனும் ஆண்மையும் கைவண்மையும் மாந்தர் அளவிறந்தன", "கேள்வி கேட்டுப் படிவம் ஒடியாது" வேள்வி பல வேட்டவன். "எண்ணியல் முற்றி ஈரறிவுபுரிந்து, சால்பும் செம்மையும் உளப்படப் பிறவும் காவற்கமைந்த அரசுதுறை போகிய வீறுசால் புதல்வனைப் பெற்றவன்; மண்ணாள் வேந்தற்குக் கண்ணென வகுத்த நீதிநன்னூல் ஓதிய நாவினன்; மக்கட்கு நல்லறிவு கூறும் நல்லறிவினன். இது,

"வண்மையும் மாண்பும் வளனும் எச்சமும்
தெய்வமும் யாவதும் தவமுடை யோர்க்கென
வேறுபடு நனந்தலை பெயரக்
கூறினை பெருநின் படிமை யானே" [பதிற். 74]

என அரசில் கிழார் பாட்டினால் விளங்குகின்றது. மேலும், அப்புலவர் பெருமகனார் இவனை, "இரும்புலி கொன்று பெருங் களிறு அடூஉம்—அரும்பொறி வயமான் அனையை" என்றும், அவன் எண்ணற்கரிய தேரும் மாவும் மாக்களும் யானையும் உடையன் என்றும், "உயிர்போற்றலையே செருவத் தானே" என்றும் கூறியதனால் இவனது போர்வன்மை தெள்ளிதா

கின்றது. இவனது கொடைமுதலிய நல்லொழுக்கத்தை ஒருவன் அறிந்துகோடற்கு, "உரவோர் எண்ணினும் மடவோ ரெண்ணினும் பிறர்க்கு நீ வாயின் அல்லது நினக்குப், பிறருவமம் ஆகா ஒரு பெரு வேந்தே" எனவும்.

"உயிர் போற்றலையே செருவத் தானே
கொடைபோற் றலையே இரவலர் நடுவண்
பெரியோர்ப் பேணிச் சிறியோரை யளித்தி
நின்வயிற் பிரிந்த நல்லிசை கனவினும்
பிறர்நசை யறியா வயங்கு செந் நாவிற்
படியோர்த் தேய்த்த வாண்மைத் தொடியோர்
தோளிடைக் குழைந்த கோதை மார்ப !
அனைய அளப்பருங் குரையை" (பதிற்.79)

எனவும் வருவனவே போதியனவாம்.

இப்பெருஞ் சேரலிரும்பொறைக்குத் தன் நாட்டின் ஒரு பகுதியிலிருந்த தேன்வளம் சிறந்த கொல்லிமலை நாட்டினையும் தான் அடைதல் வேண்டுமென்னும் வேட்கை மிகுதியு முண்டு. அதனால் அவன் தன்துணை வேண்டிப்போந்த காரியிடம் இவ் வேட்கையை யுணர்த்தவே, அவன் பெருஞ்சேனையுடன் அக் கொல்லியை யாண்ட வல்விலோரி என்பானை வென்று அதனைக் கைக்கொள்வான் சென்றான்.

வல்விலோரி கடை யெழுவள்ளல்களுள் ஒருவன். இவன் "வல்வில் ஓரி கொல்லிக் குடவரை". "ஓரி, பல்பழப் பலவின் பயங்கெழு கொல்லி", "விடர்ச்சிமை ஓங்கருங் கொல்லிப்பொருந" "கொல்லி யாண்ட வல்வில் ஓரி" எனப் புகழப்படுதல் நோக்கி, கொல்லிமலையும் அதனைச் சார்ந்த நாடும் ஓரிக்கே யுரிய வென்பது பெறப்படும். "நாளும், இழையணி யானை இரப்போர்க் கீயும், சுடர்விடு பசும்பூண் சூர்ப்பமை முன்கை, அடுபோரானா ஆதனோரி" என ஆசிரியர் வன்பரணர் கூறுதலாலும், 'நளி சினை, நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக், குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த, காரிக் குதிரைக் காரியொடு மலைந்த, ஓரியும்" என வள்ளல்க ளெழுவருள் ஒருவனாகப் பெரியோர்கள் கூறுதலாலும் இவனது வள்ளன்மையும் விளங்கு வதாகும். மேலும், இவன் ஆசிரியர் வன்பரணைக் காட்டில் கண்டு, தான் இன்னானெனக் கூறாது நிற்ப, அவர் அவனை யுணர்ந்து பாடிய அளவில், அவன் தான்வேட்டையாடிக் கொன்ற மானின் தசையைத் தந்து உண்ணச்செய்து பின்னர்ப் பொன்னும்

மணியும் மிகக் கொடுத்தினுப்பினான். இவனை "வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி" என்னும் புறப்பாட்டினுள் விரியக் காண்க.

இக்கூறிய வல்விலோரியும் திருமுடிக்காரியும் பெரும் போர் உடற்றியகாலை, ஒருவனை யொருவன் அடுதலும் தொலைதலும் புதுவதன் றாகலின், ஓரி அப்போர்க்களத்தே கொலையுண்டு இறந்தான். வென்றி கொண்ட அவனது கொல்லி நாட்டினைச் சேரனுக் கீந்த காரி அச்சேரனது துணையைப் பெற்றான். இது

"முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலற் கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி" (அகம். 209)

என வருவதால் உணரப்படுகின்றது. பேரிசையுடன் முள்ளூர்க் குரியனாய் அதன்கண் வந்து துவன்றிய ஆரியர் அலறத் தாக்கிப் பலரையும் கொன்று துரத்திய காரிக்கு, இஃதோர் அரிய செயலன்றன்றே! இவ்வுதவிக் கீடாகப் பெருஞ்சேரலிரும் பொறை தன் எண்ணி லடங்காச் சேனையுடன் அஞ்சியின் தகடூரை முற்றுகையிட்டுப் போர் தொடங்கினன். அப் போரின்கண் அதிகமான் தான் துணை வேண்டிய இருபெருவேந்தர்கள் தாழ்த்து வந்தமையாலும், தன்னூராண் மிக்க திண்ணிதாகலின் பகைவர் எளிதிற் கைப்பற்ற லாகாத தென் றெண்ணி அவர் அதனருக வரும்வரை அகத்தேயிருந்து விட்டமையாலும், சேரனால் வென்றி கொள்ளப்பட்டு உயிரிழந்தான்; துணை வந்த வேந்தரும் பின்னர்த் தோல்வியுற்றுத் தம் முரசும் குடையுமிழந்து ஓடினர். இச்செய்தி "ஒருவன் மேற்சென்றுழி ஒருவன் எதிர் செல்லாது தன் மதிற்புறத்து வருந்துணையும் இருப்பின் அஃது உழிஞையின் அடங்கும். அது சேரமான் செல்வுழித் தகடூரிடை அதிகமான் இருந்ததாம்" என நச்சினார்க்கினியரும், (தொல், பொருள், புறத், நச்சி, பக்கம் 189)

"பல்பயன் நிலைஇய கடறுடை வைப்பின்
வெல்போ ராடவர் மறம்புரிந்து காக்கும்
வில்பயில் இறும்பின் தகடூர் நூறிப்
பேஎ மன்ற பிறழநோக் கியவர்
ஓடுறு கடுமுரண் துமியச் சென்று
வெம்முனை தபுத்த காலை" (பதிற் 78) என அரிசில்

கிழாரும்,

"கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசை
பல்வேற் றானை அதிகமா னோடு
இருபெரு வேந்தரையும் உடன்நிலை வென்று
முரசும் குடையும் கலனும் கொண்டு
உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டுத்
துகடீர் மகளிர் இரங்கத் துப்பறுத்துத்
தகடூர் எறிந்து நொச்சிதந் தெய்திய
அருந்திறல் ஒள்ளிசைப் பெருஞ்சேர லிரும்பொறை"

என அவர் பாடிய பத்தின் பதிகமும் கூறுவதனாற் பெறப் படுகின்றது.

பின்னர்க் காரி தன் கோவலூரைப் பெற்று இனிது வாழ்ந்து வந்தான்.

இவ்வதிகமானைப் பற்றிய ஆராய்ச்சி யொன்று புற நானூற்றின் பதிப்பில் திரு. இராவ்பகதூர் **வி. வெங்கையரவர் களால்** குறிக்கப் பெறுகின்றது. அதில் **அதிகமான்** அதிகன், அதிகைமான், அதியமான், அதியன் ஆகிய இவ்வைந்தும சேர வமிசத்தைச் சேரந்த ஓரரசனைக் குறிக்கும் ஒரு பொருட் பலபெய ரென்றும், போளூருக் கடுத்த திருமலை யென்ற சமணக் கிராமத்தி லுள்ள ஒரு கல்வெட்டால் அதிகைமான் அதிகன் என்று கூறப்பட்டுள்ள கேரள தேசத் தரச னொருவன் இருந்தா னென்பதும் அவனுக்கு இராச இராசனென்று மற்றொரு பெய ருண்டென்பதும், அவன், வமிசத்தில் எழினி அல்லது யவனிகா என்ற ஓரரச னிருந்தா னென்பதும், இராச இராசனென்பா னுடைய மகனான விடுகா தழகிய பெருமாள், தகடா என்று சொல்லப்பட்ட வூரை ஆண்டா னென்பதும் தெரிகின்றன என்றும் ஐயரவர்கள் கூறுகின்றார்கள். இனி, அத்திருமலைச் சாசனம், "சேர வமிசத்து அதிகைமானி எழினி செய்த தர்ம யக்ஷரையும் யக்ஷியாரையும் எழுந்தருளுவித்து எறிமனியும் இட்டுக் கடப்பேரிக் (காலு)ங் கண்டு குடுத்தான் ஸ்ரீமத் கேரள பூப்ருதா யவநிகா நாம் நா ஸௌதர்மாத்மகா, துண்டீராஹ்வய மண்டலார் ஹஸௌ கிரௌய க்ஷேஸ்வரௌ கல்யிதௌ, பஸ் சாத்து குலபூஷணாதிக ந்ருப ஸ்ரீராஜராஜாத்மஜௌ வ்யாமுக்த சர்வணோஜ்வலேந்நே தகடாநே தேந ஜீர்ணோத்ரதௌ ; வஞ்சியர் குலபதி எழினி வகுத்த இயக்கர் இயக்கியரோ(டு)- எஞ்சிய அழிவு திருத்தியிவ் வெண்குண இறைதிரு மலைவைத்தான். அஞ்சிதன் வழிவரும் அவன்வழி

முதலிகல் அதிகன் θ யவனிகன் நூல் விஞ்சையர் தலம்புனை தகமையர் காவலன் விடுகா தழகிய பெருமாளே'' என்று கூறுகின்றது. இங்குக் கூறப்படும் தகடா என்பது தமிழில் தகடூர் என மருவியிருக்கும் என்றெண்ணி, அதுவே அதிய மானுக்கு உரிய நகரா யிருந்த தென்றும், அது இதுபோது தர்மபுரி † என்று வழங்கப் பெறுகின்றது என்றும் சிலர் கூறுகின்றனர். இவற்றை நோக்க, அதிகமானது மரபு பெருஞ் சேரலொடு பொருது தகடூரை யிழந்த போதிலும் எஞ்சாது நீடித்து வந்த தென்பதும், அன்றி அதிகமானது சிறப்பு நோக்கியும் அவன்மகன் எழினியின் பெருமை நோக்கியும் தகடூரையாண்ட பிற்கால மன்னர்களும் அவர்தம் பெயரே தாமும் புனைந்து வந்தன ரென்பதும் அறியக் கிடக்கின்றன,

பகுதி - ஐந்து

⍾ ஆஅய் அண்டிரன்

இவனும் ஆசிரியர் பரணரால் உலவாப் புகழ் தரப்பெற்ற உரவோருள் ஒருவனாவான். மோசி கீரனார் என்னும் புலவர் பெருமானை மிக ஆதரித்து ''மோசி பாடிய ஆயும்'' எனப்பெருஞ் சித்திரனார் தந்த புகழைப் படைத்தவன். கடையெழு வள்ளல் களுள் ஒருவன். ஆஅய் எயினன் என்பான் வேறு; இவன் வேறு.

ஒருகாலத்து இவன் ஒரு பாம்பினிடம் நீலஉடை ஒன்று பெற்று ஆலின்கீழமர்ந்த சிவபெருமானுக்கு அதனை அளித்தான் என்பது

''நீல நாக நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆஅயும்'' எனவரும்

θ அச்சுப்பிரதியில் ''அ (தி) கனவகன்...நூல்'' என்றுளது. அது அணுகி நோக்குமிடத்து ''யவனிகன் நூல்'' என்றாகிக்கு முறையில் கிடக்கின்றது. S. I. I. Vol. I P. 106

† Journal of the Madras Geographical Association No. 2 & 3

⍾ ''அண்டிரன் என்பது ஆந்திரனென்னும் தெலுங்கச் சொல்லின் திரி பாதலின் இவன் தெலுங்க நாட்டினன் எனவும், அகத்திய முனிவர் பதினெண்குடி வேளிரைக் கொணர்ந்தா ரென்றிருத் தலானே இவன் அவராற் கொண்டுவரப்பட்ட வேளிர் மரபின னெனவுங் கூறுவர். பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரவர்கள் நற்றிணை. பாடப்பட்டோர் வரலாறு, பக். 86.

சிறுபாணாற்றுப் படையால் அறியப்படுகின்றது.

"கழல்தொடி ஆஅய் மழைதவழ் பொதியில்" எனக் குறுந்தொகையிலும், புறத்திலும் வருதலையும், "வடதிசையதுவே வான்றோய் இமயம், தென்றிசை ஆய்குடி யின்றாயிற், பிறழ்வது மன்னோஇம் மலர்தலை யுலகே" என வருதலையும் நோக்கின், தென்னாட்டில் உயர்ந்து விளங்கும் பொதியில்மலை இவனுக்கு உரித்தென்பதும் அதன்கீழுள்ள ஊர் ஆய்குடி என்பதும் தெரிகின்றன.

இவன் ஒரு காலத்துத் தன்னோ டெதிர்த்த கொங்கர்களைக் குடகடல்வரைத் துரத்தி வென்று பெருமை யெய்தினான் என்பது "கொங்கர்க் குடகட லோட்டிய ஞாற்றை, தலைப் பெயர்த் திட்ட வேலினும் பலவே" என்பதனால் தெரிகின்றது. அன்றியும் இவனது வீரமும், வீரர் பலருடைமையும், "ஆடியல் – மடமயில் ஒழித்த பீலி வார்ந்துதம்—சிலைமாண் வல்வில் சுற்றிப் பலமாண். அம்புடைக் கையர் அரண்பல நூறி, நன்கலம் தரூஉம் வயவர் பெருமகன், சுடர்மணிப் பெரும்பூண் ஆஅய்" என வருதலால் விளங்குவனவாம்.

இவன் பிறர்க்கு ஈதலால் வரும் இன்பமே இன்பமாகக் கொண்டு செய்த கொடை, புலவர் பெருமக்களால் பலபடப் பாராட்டப்பெறுகின்றது. 'வல்லினும் வல்லா ரஃயினும் சென்றோர்க்குச்- சாலவிழ் நெடுங்குழி நிறைய வீசும், மாஅல் யானை ஆஅய்" என்பதனால் இவன் சோறு போடும் திறமும்,

"ஆஅய் அண்டிரன் அடுபோ ரண்ணல்
இரவலர்க் கீத்த யானையிற் கரவின்று
வான் மீன்பல பூப்பின் ஆனாது
ஒருவழிக் கொருவழி யின்றிப்
பெருவெள் ளென்னிற் பிழையாது மன்னே"

எனவும்,

"மழைக்கணம் சேக்கும் மாமலைக் கிழவன்
வழைப்பூங் கண்ணி வாய்வாள் அண்டிரன்
குன்றம் பாடின கொல்லோ
களிறுமிக வுடையஇக் கவின்பெறு காடே"

எனவும் வருவனவற்றால் இவனது யானைக்கொடையும் விளங்குகின்றன. மேலும் யானைக்கொடைக்கண், இவன் தன்னையுள்ளி இரவலர் வரும்பொழுது அவர்க்குக் கொடுத்தல் கருதி யானைகளைத் தொகுத்து வைத்திருந்து கொடுப்பன் என நற்றிணையில் "வியப்புடை, இரவலர் வரூஉம் அளவை அண்டிரன்,

புரவெதிர்ந்து தொகுத்த யானை'' என்பதனால் ஆசிரியர் காரிக் கண்ணனார் கூறுகின்றார்.

இவனது நாட்டில் கவிரம் என்னும் மலையுண்டென்றும் இவனது கானத்திற் செல்லும் வழியில் முதற்கண்ணே மிக வுயர்ந்த மலையொன் றுண்டென்றும் அப் பகுதிக்குத் தலையாறு என்பது பெயரென்றும், அம்மலையில் மூங்கில்கள் செறிந்திருந் தன என்றும் ஆசிரியர் பரணர் கூறுகின்றார்.

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் என்றெண்ணும் அற விலை பகரும் வாணிகனாதலின்றி, ஈதலின்பமே வெஃகிப் பெருங் கொடை செய்த இவ் வள்ளல் காலனென்னும் கண்ணிலி யுய்ப்ப மேலோர் உலகம் எய்தினன். இவன் வருகின்றானென்று விசும்பின்கண், வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுள் போர்ப்புறு முரசம் கறங்க, ஆர்ப்பெழுந்தது. மகளிர் பலர் உடன்கட்டை யேறினர்.

வேள் எவ்வி பகுதி - ஆறு

இவன் வள்ளல்களுள் மிக்க பாரி யென்பான் பிறந்த சீரிய குடிக்கு முதல்வன் என முன்னரே கூறினோம். ''தாங்காஷ்றை யுள் நல்லூர் கெழீஇய, ஓம்பா வீகை மாவேள் எவ்வி, புனலம் புதவின் மிழலையொடு'' என்றும் ''பயங்கெழு வைப்பு'' என்றும், ''யிறிசை மறுகின் நீடூர் கிழவோன்'' என்றும்,'புலம்பூண் எவ்வி நீழல் என்றும்' வருவனவறறால், இவன் மிழலை நாடும், வைப்பு நல்லூர், நீடூர், நீழல் முதலிய வூர்களும் உடையன் என்பது விளங்குகின்றது. இவற்றுள், மிழலைநாடும், அந்நாட்டு நல்லூரும் ''நெல்லரியும் இருந்தொழுவர்'' என்று தொடங்கும் புறப்பாட்டிலும், நீழல் என்னும் ஊர் ''தாழ்சினை மருதம் தகைபெறக் கவினிய'' என்று தொடங்கும் அகப்பாட்டிலும் விரியப் புகழப்பெற்றுள.

''பெரும்பூண், போரடு தானை எவ்வி மார்பின், எஃகுறு விழுப்புண் பல'' என்று கூறப்படுதலையும், ''பல்வேல் எவ்வி'' ''வாய்வாள் எவ்வி'' என வருதலையும் நோக்கின், இவன் வில்வாட் பயிற்சி மிக்கோன் என்பதும், விழுப்புண் பல பெற்ற மையான் இவனது பேராண்மையும் தெரியநிற்கின்றன. இவனது ஏவலை விரும்பி அடங்கிநில்லாத பகைவர் பலர் வன்மையிழந்து இவன் ஆணைவழி நிற்ப, அவர்தம் அரிமணவாயில் என்னும் உறத்தூரின்கண் பசும்பூண் பொருந்திலர் என்னும் ஒருவகை வீரர் கள்ளுண்டு களிப்பெய்தினர் என்பது, பரணரால் அகத்தில்,

"யாழிசை மறுகின் நீடூர் கிழவோன்
வாய்வாள், எவ்வி ஏவல் மேவார்
∅ நெடுமிடல் சாய்த்த பசும்பூட் பொருந்திலர் ய

அரிமண வாயில் உறத்தூர் ஆங்கட்
கள்ளுடைப் பெருஞ்சோற்று எல்லிமி ழன்ன
கவ்வை யாகின்று" (அகம்.266.) என்று கூறப்பட்

டுள்ளது. இம் மேம்பாடு கருதித்தான் அன்னி யென்பான் திதிய னொடு பொருதல் வேண்டி இவனோடு உசாவுவானாயினன். இச்செய்தி முன்னர்க் கூறினாம்.

இது நிற்க, இவனது கொடை, எங்கும் பரவ நாற்றிசை யினின்றும் இரவலர் பலர் இவனைப் பாடிப் புகழுவாராயினர். "எவ்வி யிழந்த வறுமையாழ்ப் பாணர்" என்றும், இரும்பா ணொக்கல்" என்றும், "உலகபுகத் திறந்த வாயில் பலரோடு உண்டல் மரீஇயோன்" "ஓம்பா ஈகை மாவேள் எவ்வி" என்றும் எழுந்த புகழ், தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் முதலானோர்க்கு எட்டுதலும் அவர் இவன் மீது படைகொண்டு சென்று போர்உடற்றி வெற்றி பெற்றனர். இது,

ஓம்பா ஈகை மாவேள் எவ்வி
புலனம் புதவின் மிழலையொடு கழனிக்
கயலார் நாரை போர்விற் சேக்கும்
பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர்
குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய" என

ஆசிரியர் மாங்குடி கிழார் அந்நெடுஞ்செழியனைப் பாடிய பாட்டால் அறியப்படுகின்றது. இவன் நாட்டில் மீன்விற்கும் நுளைச்சியர் அம்மீனுக்கு மாறாக முந்திரிைப் பெறுவர் என ஆசிரியர் நக்கீரர் கூறுகின்றார்.

போர்க்கண் இறந்துபட்ட எவ்வியின் மகளிர் கைம்மை நோற்றுச் செயலற்று வருந்தினர். அக் கையறு நிலை,

---

∅ நெடுமிடல் என்னும் பெயருள்ள வீரனொருவன் பதிற்றுப் பத்து எட்டாம் பத்தினுட் கூறப்படுகின்றான். ய பொருந்தில் என்பது ஒரு ஊர். பொருந்தில் இளங்கீரனார் என வருதல் காண்க.

நோகோ யானே தேய்கமா காலை
பிடியடி அன்ன சிறுவழி மெழுகித்
தன்னமர் காதலி புன்மேல் வைத்த
இன்சிறு பிண்டம் யாருண் டனன்கொல்
உலகுபுகத் திறந்த வாயில்
பலரோடு உண்டல் மரீஇ யோனே'' என்று

வெள்ளெருக்கிலையார் என்னும் புலவரால் விளக்கப்பட்டிருக்கின்றது. இவன் பின்னர் கையற்றிரங்கிய புலவர் பாடல்கள் தொகை நூல்களுட் பல கிடைக்கின்றன,

பகுதி-ஊ

நள்ளி

இவன் கண்டீரக் கோப் பெருநள்ளி யெனவும் வழங்கப் பெறுவன். இவள், ''கரவாது, நட்டோ ருவப்ப நடைப்பரி காரம்' முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத் துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு, நளிமலை நாடன் நள்ளி'', எனச் சிறுபாணாற்றிலும், ''ஆர்வமுற்று,உள்ளி வருநர் உலைவு நனி தீரத், தள்ளா தீயும் தகைசால் வண்மைக் கொள்ளா ரோட்டிய நள்ளி'' எனப் புறத்திலும் கடையெழு வள்ளல்களுள் ஒருவனாக வைத்துப் போற்றப்படுகின்றான்.

''இரும்பு புனைந் தியற்றாப் பெரும்பெயர்த்தோட்டி
அம்மலை காக்கும் அணிநெடுங் குன்றிற்
பளிங்கு வகுத்தன்ன தீநீர்
நளிமலை நாடன் நள்ளி'' (புறம். 150) எனவும்,

''வல்வில் இளையர் பெருமகன் நள்ளி
சோலை யடுக்கத்துச் சுரும்புண விருந்த
கடவுட் காந்தள்'' (அகம். 152) எனவும்,

''இரப்போர்க்கு
இழையணி நெடுந்தேர் களிற்றொ டென்றும்
மழைசுரந் தன்ன ஈகை வண்மகிழ்க்
கழல்தொடித் தடக்கைக் கலிமான் நள்ளி
நளிமுகை யுடைந்த நறுங்கார் அடுக்கத்துப்
போந்தை முழுமுதல் நிலைஇய காந்தள்'' (அகம்.238)

எனவும் வரும் சான்றோர் பாடற் பகுதிகளால் இவன் தோட்டி என்னும் மலையும் அதனைச் சார்ந்த பிறமலைகளும் கொண்ட மலைநாட்டுத் தலைவன் என்பதும், அம்மலைகள் பளிங்கு போலுந்தெள்ளிய வெள்ளிய தூய நீர்நிறைந்த அருவிகளும்

சாரல்களில் செறிந்த காந்தளும் உடையனவாம் என்பதும், இவன் வில்லேந்திய வீரர் பலர்க்குத் தலைவனென்பதும், ஆர்வ முற்றுத் தன்னை யடையும் பாணர் முதலிய இரவலர்க்கு யானை, தேர், பொன் முதலியவற்றை நிரம்ப வளிப்பவ னென்பதும் தோன்றுகின்றன. இவனை அகத்திற் பாடியவர் பரணரும் கபில ருமாவர். புறத்தில் வன்பரணர் தாம் சிறக்கப் பாடியுள்ளார். மேலும், வன்பரணரும், பரணரும் வேறு வேறாவர் என்று அறிஞர் கூறுகின்றார்கள். நள்ளி வன்பரணரை வரவேற்றுக் கொடைக்கடன் இறுக்கும் திறம் படிப்போர்க்குப் பேரின்பம் பயக்கின்றது.

ஒருகாலத்து வன்பரணர், வறுமை மிகுதியால், நள்ளியை யுள்ளித் தன் சுற்றம் சூழ்ந்துவர, சுரல்வருந்த நடந்து, அவனது கானத்தை யடைந்து, மேலும் நடக்கும் ஆற்றல் குன்றி ஓர் பலா மரத்தின் அடியிற் றங்கினர். இவர் உடுத்த உடையும் நல்ல தின்றிக் கிழிந்திருந்தது. அது கண்டார்க்குக் கழியவும் வெறுப்பே விளைத்தது. அக்காலை குருதி தோய்ந்து சிவந்த வீரக்கழல் அணிந்த காலும் வெள்ளியவொளிவீசும் நீலமணி கிடந்து விளங்கும் உச்சியும் உடைய வல்வில் வீர னொருவன் அவரிடம் வந்தான். அவனுடைய நடையும் தோற்றமும் அவன் ஒரு சீரிய செல்வன் என்பதை நன்கு உணர்த்தின. உணர்ந்த புலவர் சட்டென்று அஞ்சலி பண்ணிக்கொண்டே எழுந்தனர். எழக்கண்ட அவன் அவரை எழாவண்ணம் கைகவித்து இருத்தி, தன்னோடு உடன் போந்த துணைவர் வருமுன்னரே, தன்கையிலிருந்த ஊன் தசையை யெடுத்து, ஒரு புறம் வைத்து, கடைகோலால் தீயுண் டாக்கி, அதன்கண் இத்தசையைச் சுட்டு அவர்க்கும் அவரது சுற்றத்திற்கும் வழங்கினன். ஆரப் பசித்தார்க்கு நீரும் பாலே யாம் என்றபடி அத் தசையை அமிழ்தென உண்டு. அருகோடும் அருவிநீர் பருகி, அடுபசி நீக்கியபின், அவனை நோக்கிப் புலவர் தம் சுற்றத்தோடு அவனிடம் விடை வேண்டினர். வேண்டவும், நள்ளி, "யான் காட்டுநாட்டில் வாழ்பவன். ஆதலால் பெருமை யமைந்த நல்ல அணிகலன்கள் எம்மிடத்து இவை தவிர இல்லையென்று கூறித் தன்மார்பிற் கிடந்த முத் துவடம் பூண்ட ஆரத்தையும் முன்கைக் கணிந்த கடகத்தையும் தந்தனன்.

பின்னர்ப் புலவர், இங்ஙனம் ஆற்றா மக்கட்கு ஆற்றுந் துணையாகி விளங்கும் ஆண்டகை நள்ளியென் றறியாராய், அறிய வினாய பொழுது, அவன் நாடும் பேரும் கூறாது நீங்கினன். பின்னர், இவர் வழிவருவோரை வினவி உண்மை யறிந்து

பெருமகிழ்ச்சி கொண்டு அவனைப் புகழுவாராயினர். இது அவராலேயே, புறநானூற்றில்,

"கூதிர்ப் பருந்தின் இருஞ்சிறகு அன்ன
பாறிய சிதாரேன் பலவுமுதல் பொருந்தித்
தன்னும் உள்ளேன் பிறிதுபுலம் படர்ந்தவென்
உயங்குபடர் வருத்தமும் உலைவும் நோக்கி
மான்கணம் தொலைச்சிய குருதியம் கழற்கால்
வால்கதிர்த் திருமணி விளங்குஞ் சென்னிச்
செல்வத் தோன்றல் ஓர் வல்வில் வேட்டுவன்
தொழுதனன் எழுவேற் கைகவித்து இரீஇ
இழுதின் அன்ன வால்நிணக் கொழுங்குறை
கானதர் மயங்கிய இளையர் வல்லே
தாம்வந் தெய்தா அளவை ஒய்யெனத்
தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டுநின்
இரும்பேர் ஒக்கலொடு தின்மெனத் தருதலின்
அமிழ்தின் மிசைந்து காய்பசி நீங்கி
நன்மரன் நளிய நறுந்தண் சாரல்
கன்மிசை யருவி தண்ணெனப் பருகி
விடுத்தல் தொடங்கினேன் ஆக வல்லே
பெறுதற் கரிய வீறுசால் நன்கலம்
பிறிதொன் றில்லை, காட்டுநாட்டேம்" என
மார்பிற் பூண்ட வயங்குகாழ் ஆரம்
மடைசெறி முன்கைக் கடகமொடு ஈந்தனன்
"எந்நா டோ?" என நாடும் சொல்லான்
"யாரீ ரோ?" எனப் பேரும் சொல்லான்
பிறர்பிறர் கூற வழிக்கேட் டிசினே
இரும்புபுனைந்து இயற்றாப்பெரும்பெயர்த் தோட்டி
அம்மலை காக்கும் அணிநெடுங் குன்றிற்
பளிங்குவகுத் தன்ன தீநீர்
நளிமலை நாடன் நள்ளி எனவே,"

என்று விரித்துக் கூறப்பெற்றுள்ளது.

பகுதி-அ

வையாவிக் கோப் பெரும் பேகன்.

இவன், "பெருங்கல் நாடன் பேகன்" என்று சிறப்பிக்கப் படுதலால், மலைநாட்டிலிருந்த வள்ளல் என்பது பெறுதும். இவனும் கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகப் பாராட்டப்

படுகின்றான். மேலும், "அது மன் எம்பரிசில் ஆவியர் கோவே" எனவும், "அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன். பெருங்கல் நாடன் பேகன்" எனவும் வழங்கப்படுதலால், ஆவியர் குடியிற் பிறந்தவன் என்பதும் பெறுதும்.

ஆவியர் என்பார் அதியர் போன்ற ஒரு குடியினராவர், அதியர் என்பார் அதிகை என்னும் ஊரிற் றோன்றினவர். அவர்கள் அதிகையர் என வழங்கப்பெற்றுப் பின்னர் அதியர் என மரூஉமொழியால் வழங்கப் படலாயினர் என்பர் சில அறிஞர். அவர்களைப்போல, இவர்தம் தொடக்க வரலாறு அறியக்கூடவில்லை; சிலர், "முனா அது, முழவுறழ் திணிதோள் நெடுவேள் ஆவி, பொன்னுடை நெடுநகர்ப் பொதினி" என்றும் "உருவக் குதிரை மழவ ரோட்டிய, முருகன் நற்போர் நெடுவே ளாவி, அறுகோடியானைப் பொதினி" என்றும் வரும் வழக்காறு கொண்டு, இந்த ஆவியென்பான் குடியில் வந்தோர் ஆவியர் என வழங்கப்பட்டார் என்று கோடல் நேரிது என்பர். வேறுசிலர் நெடுவேளாவி என்ற சொற்றொடர்க்கு அகநானூற்று அரும்பத வுரைகாரர் "ஆவிநெடுவேள் குறுநில மன்னன்" என்று கூறுதலை ஆவியர் குலத்து நெடுவேள் எனக்கொண்டு அக்குலமுதல் விளங்கிற்றன்று என்றும் கூறுவர்.

வேளாவியே ஆவியர்குலத்து முதல்வனாவான் என்று கொண்டு, அவனது நகரமான பொதினி யென்பது இப்போதைய பழனி என்றும், அதுவே பேகனுக்கும் நகராமென்றும், அங்குள்ள வையாவிக்குளம் பேகனுக்கு அந் நகர்க்குள்ள உரிமையை வற்புறுத்தும் என்றும் பலரும் கொள்ளுகின்றனர்.

இனி, இப் பேகனது மலைநாடு தீவிய நீரோடும் அருவிகளும் மலைவளம் சிறத்தலால் குறவர் குடிவாழும் மேன்மையும் உடையது. இம்மலை நலத்தை, ஆசிரியர் பரணர், "பூமலிந்து, அருவி யார்க்கும் அயந்திகழ் சிலம்பின், நுண்பல் துவலை புதன் மிசை நனைக்கும், வண்டுபடு நறவின் வண்மகிழ்ப் பேகன் கொண்டகன் மாமலை" என்று கூறுகின்றார். இம் மலைவாழ் குறவர் மழைவேண்டுங் காலத்துப் பெய்வித்தற்கும், வேண்டாக் காலத்து ஒழித்ததற்கும் பலி தூவிக் குறவர் கடவுளைப் பரவுவர். இது இக்காலத்துப் பர்மியர்களால் கையாளப்பெற்று வருகின்றது ‡. இது ஆசிரியர் கபிலரால்,

‡ "A Trip to Burma"-Cap Gilbert. pp 69-70

"மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்
மாரி ஆன்று மழைமேக் குயர்கெனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்" (புறம். 43) எனப்

பாராட்டப் படுகின்றது.

ஒருகால் இவன் உலாப்போந்தவன் குளிர்ந்த வாடை வீசவும், விசும்பின் முகிற்குலம் திரண்டு மூடிக்கொள்ளவும், அது கண்டு மயிலொன்று தன் தோகையை விரித்தாடுதலைக் கண்ணுற்று மகிழ்வுற்றான். பின்னர் அவன் அதன்மாட்டு இரக்கங்கொண்டு, அது குளிராற் பனிக்குமென்று எண்ணிப் போர்வை ஒன்றைத் தந்து போந்தான். இச்செய்கையறிந்த புலவர் பெருமக்கள் யாவரும்,

"மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக" எனவும்,

"உடாஅ போரா ஆகுத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக்கு ஈத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்" எனவும் கூறிப்

புகழ்வாராயினர், இங்ஙனம், மயிலையும் தன்னையொப்பக்கருதி அதற்குப் போர்வை தந்து பேரருள் செய்தவள்ளல் ஏனை இரவலர்க்கு வேண்டுவன ஈதல் ஓ அரிய செயலாகுமோ ? இது பற்றியே, ஆசிரியர், இவனை,

"அறுகுளத் துகுத்தும் அகல்வயற் பொழிந்தும்
உறுமிடத்து உதவாது உவர்நிலம் ஊட்டியும்
வரையா மரபின் மாரிபோலக்
கடாஅயானைக் கழற்காற் பேகன்
கொடைமடம் படுதல் அல்லது
படைமடம் படான் பிறர் படைமயக் குறினே"

எனப் பழிப்பது போன்று புகழ்ந்து பாராட்டினர். இங்ஙனம் கொடை மடம் படுதலும் மறுமை குறித்தாதல், புகழ்குறித்தாதல் அன்று; 'பிறர் வறுமை நோக்கின்று அவன் கைவண்மை" என்ப.

இவ்வண்ணம் கொடையினாலுயர்ந்த வள்ளலாகிய பேகன் ஒருகால், தன்மனைவி, கண்ணகி என்பாளை மறந்து வேறே ஒருத்தியின் நலன் நயந்து அவளுறையும் நல்லூருக்கு அடிக்கடி சென்று வரலாயினன், இதனையுணர்ந்த கண்ணகி, தன் கணவனது பிரிவாற்றாது மிகமிக வருந்துவாளானாள். இவன்

செய்கை யுணர்ந்த புலவர் பெருமக்கள் இவ்விருவரையும் கூட்டிவைக்க முயன்று, தம் சதுரப்பாட்டினால், வென்று, இருவரும் நல்ல இன்பவாழ்வு பண்டேபோல் நடாத்தக்கண்டு களிப்பெய்தினர், இம்முயற்சியில் முயன்ற பெருமக்கள் கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் முதலியோராவர்.

இவருட்கபிலர், "பேக! என் ஒக்கல் பசியால் வருந்துவது கண்டு நின்னையுள்ளி வந்து நின்னையும் நின்மலையையும் யாம் பாடினோம். அதுகண்டு, ஒருத்தி கண்ணீர் முலையகம் நனைப்ப விம்மிக் குழல் இனைவது போல் பெரிதும் அழுதனள். அவள் யார் கொல்! அவள்பால் நீ அருள்பண்ணத்தகும்" என்றும், நின் மலையிற் குறமக்கள் கடவுட்பேணி மழை வேண்டிய பொழுது பெற்றுத்தாம் வேண்டும் உணவும் நுகருமாறு போல இவளும் நின் அருள்பெற்று இன்பம் நுகர்வாளாக வேண்டும் என்பதொரு நயமும் தோன்றப்பாடினர். அப்பாட்டுப் புறத்தில் "மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்" எனத் தொடங்குவது.

பரணரது பாட்டுப் பின்னர் அவர் பாடல்களின் ஆராய்ச்சியிற் கூறப்படும்.

அரிசில்கிழார். "ஏ! அடுபோர்ப் பேக! நின் அருங்கல வெறுக்கைகளாகிய அவை பெறல் வேண்டேம்; மற்று, நின் வன்புல நன்னாடு பாடியதற்காக என்னை நீ நயந்து பரிசில் நல்குவையாயின், நீ நல்காமையினால் கண்டார் இரங்க மெலிந்து அருந்துயர் உழக்கும் நின் திருந்திழை அரிவை தன் கூந்தற் கண் புகை கொளுவி நின் தண்கமழ் கோதை புனையும் வகை நெடுந்தேர் பூண்டு சென்று, அவளை அருள்வாயாக" என்று கூறினர். ஆசிரியர் பெருங்குன்றூர் கிழாரும் இவரைப் போலவே, பரிசில் வேண்டாது, கண்ணகிமாட்டு அவன் செய்யும் அருளே தனக்குப் பரிசிலாவது என்று கூறினார். இவ்விருவர் பாடல்களும் புறத்தில், முறையே, "அன்னவாக நின் அருங் கலவெறுக்கை" எனவும், "கன்முழை யருவிப் பன்மலை நீந்தி" எனவும் தொடங்குகின்றன.

பகுதி-ஏழு

தித்தன்

இவன் உறையூரையாண்ட சிறந்த சோழவேந்தருள் ஒருவன்; தலைநகராகிய உறையூர் இவன் காலத்தே அரணும் கிடங்கும் திண்மையும் பிறநலமும் பெற்றுச் சிறந்தோங்கியது.

இதன் உறுதியுடைமை நோக்கிப் புலவர் பெருமக்கள், ''நொச்சி வேலித் தித்தன் உறந்தை'', எனவும், ''மாவண் தித்தன் பிண்ட நெல்லின் உறந்தை'', ''தித்தன் வெளியன் உறந்தை'' எனவும் பலபடப்புகழுவாராயினர். இவனுக்கு **ஐயை** என்னும் கற்பிற் சிறந்த மகளும் வீரங்குன்றாப் **போர்வைக்கோப் பெருநற்கிள்ளி** என்னும் மகனும் இருந்தனர்.

''சினங்கெழு தானைத் தித்தன் வெளியன்'' என்றும், ''வீரை வெளியன் தித்தனார்'' என்றும் வழங்கப்படுதலாலும், ''பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொண்மூ'' என்று தொடங்கும் அகப்பாட்டொன்று இவன் பெயரால் காணப்படுவதாலும், இச்சோழ வேந்தன், தித்தன் வெளியன், வெளியன் தித்தன், வீரை வெளியன் தித்தன், வீரைவேண்மான் வெளியன் தித்தன் என்றெல்லாம் வழங்கப்பட்டனன் என்பது பெறுதும். ''வீரை வெளியன் தித்தனார்'' என்று அழைக்கப்பட்டதனாலும், இவனது செய்யுளும் சான்றோர் செய்யுளுள் ஒன்றாகத் தொகுக்கப் பட்டிருப்பதனாலும், இத்தித்தன் ஒரு சிறந்த நல்லிசைப் புலவன் என்பது விளங்குகின்றது.

இனி, இச்சோழனது புலமை நலத்தை யாராய்வதன் முன் இவனது ஆட்சிநலன், மக்கள்நலன் ஆகிய நலன்களை ஒரு சிறிது நோக்குதல் நேரிது.

இவன் ஆட்சியில், உறந்தை பகைவரால் எளிதிற் கைப் பற்ற இயலாத கல்முதிர்ந்த காட்டரண் கொண்டிருந்தது. இந் நகரருகே காவிரியாறு ஓடக்கோல் விடினும் நிலைத்த லாற்றாத பெரும் பெருக்கிட்டோடிற்று. இக் காவிரியாயும் நீர் நாட்டிற் கானலம் பெருந்துறைக்கண் தனம தரும் நன்கலம் பல காலினும் கோலினும் வந்தெய்தும், இந்நற்கலங்களின் இடையே கிடத்தப் பெறும் இறாக்களின் குப்பை செறிந்து விளங்கும்.

இவனது தலைநகரின்கண் காலை, மலையாகிய இரு போதும், அவற்றை யெதிர் கொள்ளுவதுபோல, முரசம் முதலிய வாச்சியங்கள் ஒலித்தன. இஃது எல்லா அரசர் தலைநகரங்களி னும் நிகழ்வதாயினும், இவனது முரசவொலியும், ஏனைத் தெள்ளிய கிணை முதலியவற்றின் ஓசையும் பிறநகரங்களின் ஓசையினும் சிறந்தனவாதல் பற்றியே ஆசிரியர் முதுகூற்றனார், பரணர் முதலியோர் விதந்து கூறுவாராயினர். மேலும் இவனது கிணைப்பாடு கேட்டு அஞ்சிப் பொராது ஓடின வீரனொருவனும் உளன். அவன் பெயர் கட்டி என்பது. அவன் பாணன் என்பா

னொருவனைத் துணைப்பெற்று, இத்தித்தன் உறந்தையைக் கைப்பற்ற எண்ணி, முற்றுகையிட்டவன், இவனது நாளவைக் கண் எழுந்த, கிணையொலி கேட்டு அஞ்சிப் போர் செய்யாமல் ஓடி விட்டான். இச்செய்தியும் பிறவும்,

"வீரை வேண்மான் வெளியன் தித்தன்
முரசுமுதற் கொளீஇய மாலை," (நற் 58)எனவும்

"வலிமிகு முன்பிற் பாணனொடு மலிதார்த்
தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்
பாடின் தென்கிணைப் பாடுகேட் டஞ்சிப்
போரடு தானைக் கட்டி
பொராது ஓடிய ஆர்ப்பு (அகம்.226)எனவும்

வருவனவற்றாற் பெறப்படும்.

இவனது மகள் ஐயை என்பாள் புலவர் பாடும்புகழ் பெற்றவள். அவள் அரிபெய்த சிலம்பும், ஆம்பல் மலரால் தொடுக்கப்பெற்ற மாலையும், அரத்தாற் போழப்பட்ட அழகிய வளையும் அணிந்தவள். இழைகள் பல அணிந்து, மூங்கில் போல் சிறந்த தோளை உடையவள். இவள் பெய்யெனின் மழைபெய்யும்; அத்துணைச் சிறந்த கற்புமேம்பாடு உடையவள். இதனால், இவள் தந்தை "ஐயை தந்தை தித்தன்" என வரும் புகழ்க்குரியனானான்.

இவன் மகன் போர்வைக் கோப்பெரு நற்கிள்ளி யென்றோ மன்றோ. இவன், ஆசிரியர் தொல்காப்பினார் * "தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால்" என்று கூறுதலால் ‡ "சீர் சான்ற விழுச்சிறப்பின், சிறுகண் யானைப் பெறலரும் தித்தன்" என நக்கீரனார் பாராட்டும் தித்தனுடைய "அந்தமில் சிறப்பி" னையுடைய மகனாய், யானைபோலும் மெய்வலியும் ஈகைச் சிறப்பும் உடையனாவான் என்பது பெறப்படும் படினும், யாது காரணத்தாலோ, இவன் தன் தந்தையுடன் வெறுந்து, வெளிப் போந்து, தன் நாட்டையும் இழந்து, வறுமையால் மிகவருந்திப் புல்லரிசிக் கூழுண்டிருந்தான். இருப்பினும், தன் கட்டழகுலும், போர் வன்மையிலும், சிறிதும், இவன் குன்றாமை கண்டு,

ஆடு ஆடு என்ப ஒருசா சோசே
ஆடன் றென்ப ஒருசா ரோரே

---

* தொல், பொருள் சூ. 147

‡ புறம். 395

நல்ல பல்லோர் இருநன் மொழியே !
அஞ்சிலம் பொலிப்ப ஓடி எம்மின்
முழாவரைப் போந்தைப் பொருந்தி நின்று
யான்கண் டனள்அவன் ஆடாகுதலே" என்று

இயற்கை நலம் சிறக்கப் பாடியுள்ளார்.

இனி, இச்சோழன் தித்தனது நல்லிசைப் புலமையை விளக்குதற்கு, இவன் பாடிய அகநானூற்றுப் பாட்டு ஒன்றின் ஆராய்ச்சியே அமையுமாதலின், அதனை யீண்டுச் செய்வாம்;

"பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொண்மூ
இருண்டுயர் விசும்பின் வலனேர்பு வளைஇப்
போர்ப்புறு முரசின் இரங்கி முறைபுரிந்து
அறநெறி பிழையாத் திறனறி மன்னர்
அருஞ்சமத் தெதிர்ந்த பெருஞ்சே யாடவர்
கழித்தெறி வாளி னனிப்பன விளங்கும்
மின்னுடைக் கருவியை யாகி நாளும்
கொன்னே செய்தியோ அரவம் பொன்னென
மலர்ந்த வேங்கை மலிதொட ரடைச்சிப்
பொலிந்த ஆயமொடு காண்டக இயலித்
தழலை வாங்கியும் தட்டை ஓப்பியும்
அழலேர் செயலை அந்தழை அசைஇயும்
குறமகள் காக்கும் எனற்
புறமுந் தருதியோ வாழிய மழையே."

என்பது அப்பாட்டு. இது இரவிற் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது. என்றது, தலைவன் இரவிலும் பகலிலும் களவொழுக்கம் பூண்டு வருதலால் பலர் அறிந்து கொள்வர் என்றஞ்சியும், தலைமகளது பிரிவாற்றாமை கருதியும், தலைவனை வரைந்து கோடலைவேண்டிய தோழி மழைமேல் வைத்துக் கூறுதல்.

இதன்பொருள்-பெரிய கடல்நீரை முகந்த கரிய கிளை மேகங்களுடன் கூடிய மேகமே! கருத்து, உயர்ந்த வானத்தின் கண் வலமாக எழுந்து வளைத்து, நல்ல எருதினது தோலால் மூடப்பட்ட முரசத்தைப் போல் அதிர்ந்து, யாவர்க்கும் ஒப்ப நீதியைச் செய்தலால் வரும் அறப்பயனைப் பெறுதற் கண் தப்பாத கூறுபாட்டினை அறியும் மன்னரது கிட்டுதற்கரிய போரின்கண் எதிர்ந்த, மிக்க பெரிய செயலையுடைய வீரர்களின் உறைகழித்து வீசப்படும் வாளைப்போலப் பெயலாகிய பயனைத்

தருவனவாய் விளங்கும் மின்னுக்கொண்ட தொகுதியுடையை யாய், மழையே! நீ நாளும் பெருமுழக்கத்தினை ஒருவகைப் பயனுமின்றிச் செய்கின்றனையோ? அன்றி, பொன்போல் மலர்ந்த வேங்கையினது, மிக்க பூக்களால் தொடர்ப் படத் தொடுத்த மாலையினைச் சேர்த்திப், பொலிவுற்ற ஆயத்தாரோடு அழகு தக்கிருக்கும்படி நடந்து சென்று, தழலை, தட்டை முதலிய கருவிகளை வாங்கிக், கிளி முதலிய பறவை ஒட்டியும், நெருப்பொக்கும் அசோகினது அழகிய தழையினை இடையிற் கட்டியும், குறவர் மகளிர் காவல் செய்யும் தினைப்புனத்தைப் பாதுகாக்கின்றனையோ? யாது செய்கின்றனை? கூறுவாயாக என்பது.

"போர்ப்புறு முரசம்" எனக் கூறினமையால். சிறப்புடைய எருதினது தோல் கொள்ளப்பட்டது; "ஓடா நல்லேற் றுரிவை தைஇய, பாடுகொள் முரசம்" (1) எனவும், "கொல்லேற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த மாக்கண் முரசம்" (2) எனவும் கூறப்படுதல் காண்க. "முறைபுரிந்து மன்னர்" என்பதற்கு, ஒறுங்குங்கால் கண்ணோடாது செய்தலே முறையாவது என்னும் நெய்தற் கலியால், கண்ணோடாது முறைசெய்து, அறவழியி னின்றும் பிறழாத நெறிமையினையறிந்த மன்னர் எனினுமாம். பெருஞ்செய் ஆடவர் என்பது இப்பொருட்டாதல். "களிறு களம் படுத்த பெருஞ் செய்யாடவர், ஒளிறுவாள்" (3) எனவும், "புரவெதிர் கொள்ளும் பெருஞ் செய்யாடவர்" (4) எனவும் வருவனவற்றால் உணர்க. "வாளின் நளிப்பன" எனக்கொண்டு செறிந்தனவாய் என்று கொள்ளினுமாம், நளியென்னும் சொல் வினைச்சொற்கு அங்கமாகி வருமாதலாலும், (5) நளிந்து பலர் வழங்காச் செப்பம்" (6) என்றவிடத்து நளியென்னும் சொல் வினையாகி வந்தமையாலும். "தழலாவது கையாற் சுற்றின காலத்துத் தன்னிடத்துப் பிறக்கும் ஓசையாற் கிளி முதலிய வற்றை ஓட்டும் கருவி; கவணென்பாருமுளர். தட்டையாவது மூங்கிலைக் கண்ணுக்கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசையுண்டாக ஒன்றிலே தட்டுவதோர் கருவி" என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். (குறிஞ்சிப்பாட்டு. 43-4. உரை.) "மாண்ட அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என்பவாகலின், "அற நெறி பிழையா மன்னர்" என்றார். தலைமகன் குறிப்புணர்ந்து

(1) அகம்-334. (2) மது-காஞ்சி 732, 3.
(3) நெடு-வாடை 171. (4) புறம் 199.
(5) தொல்-சொல் சூ. 292. தெய்வச்சிலையார்.
(6) மலைபடு. 197.

செயற்கரிய செய்து வெற்றியே பெறுதன் மாலையராகலின் அவரைப் பெருஞ் செய்யாடவர் என்றார். செய் என்பது முதனிலைத் தொழிற்பெயர், மிக்க செயலைச் செய்யுங்காலத்து அவர் விரைந்து செய்வாராதலினாலும், அச்செயற்கு அவரது வாள் பலமுறையும் தீட்டுதல் பெறுதலினாலும் மின்னுக்கு உவமை கூறினார் இருங்கிளைக் கொண்மூ என்றது விளி.

இப்பாட்டின் பொருள் இரண்டு வினாக்களுள் அடங்கு கின்றது. ஒன்று முகிலே, நீ, கிளை முகிலோடு சூழ்த்து கருத்து யர்ந்து வானந்தை வளைத்து, முரசின் அதிர்ந்து, வாளின் மின்னுடைக் கருவியுடையையாய்வறிதே அரவம் செய்கின்றனை யோ? என்பது, மற்றொன்று, குறமகள் வேங்கை மலிதொடர் அடைச்சி,ஆயமொடு இயலிச்சென்று தழலை வாங்கியும் தட்டை ஒப்பியும் செயலையந் தழையினை இடையிற் கட்டியும் காவல் செய்யும் ஏனற் புனத்தைப் புறந்தருதியோ? என்பது.

இவற்றுள், மழை மின்னல் இடி முதலியவற்றுடன் விசும் பெங்கும் இருண்டு பரவுதலால், பேரிருள் எங்குப் சூழ்ந்து கொள்ள, அக்காலை தலைமகன் வருதல் கூடாது ஆதலின், அவன் பிரிவாற்றாத தலைமகள் வருந்துவாளென்பதையுட் கொண்டு அஞ்சி வருந்துகின்ற தலைமகட்கு, ஆற்றுதல் கூறு வாள்,தோழி, ''கொன்னே அரவம் செய்தியோ'' எனவும் ''ஏனற் புறமுந் தருதியோ'' எனவும் கூறினாள். எங்ஙனம் ஆற்றாமை தீர்ப்பதாயிற்று எனின், மின்னுடைக் கருவியதாகி, மழைபெய்த லின்றி, அரவம் மட்டில் செய்தலால், தலைமகன் ஆற்றின்கண் ஏதமின்றி, இடையறாது மின்னும் மின்னுத் தொகுதி தன் கை வேல் ஆகிய இவற்றின் ஒளியால் நெறி, பற்றி, மழையின்மை யால், விரைந்து வருவன் எனத் தலைமகள் உணர்ந்து ஆற்றி யிருப்பள்.ஏனற் புறந்தருதலால், தினைமுற்றி விளைவு கொண்ட காலம் வரைதற் கேற்ற காலமாதலறிந்தமைவள் என்பதாம். இது பறறியே, வேங்கை மலர்ந்தமையும், கிளி முதலாய பறவைகள் படிதலையும் உடன் கூறினாள்,

> உடனுறை யுவமம் சுட்டுநகை சிறப்பெனக்
> கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே'' என்ற

ஐந்தனுள் ''சுட்டு'' என்பதன்பாற் படுவதனால் இப்பாட்டுத் தலைவனுக்கும் கூறியதாயிற்று. சுட்டு என்பது, ''உடனுலை உமவம் இன்றி, நகையும் சிறப்பும் பற்றாது ஒன்று

தொல்-பொருள்-பொருளியல் சூ.48

நினைந்து ஒன்று சொல்லுவது.'' அங்ஙனமாகுங்கால், தலைவனைநோக்கி, ''கொன்னே அரவம் செய்தியோ'' என்றதனால் ''நீ இன்னமும் பயனின்றி அலர் விளைத்தியோ'' எனவும், புறமும் தருதியோ'' என்றதனால், ''காலம் நோக்கித் தாழ்க்காது வரைந்து கொள்வையோ'' எனவும் கூறினாளாம். முதலாவது கடல்போலும் கல்வியும் ஆண்மையும் பெருமையும் பெற்று வில்லேந்திய இளையர் பலர் சூழ வளர்ந்து உலகுபுகழ்ச் சீலத்தால் உயர்ந்து, இவ்விரவின்கண் களவொழுக்கம் பூண்டு வேலும் வாளும் துணையாக இவளை யருள்பவர்போல் வருகின்றீர் பெரும ! நும் வரவு இவளை யருளுவதுபோலத் தோன்றினும், வரைதலாகிய பயனின்றிக் கொன்னே பலரறி சொல்லான அலராகி விளைகின்றது. இது செய்வது நின்கருத்தோ? என்பது. இரண்டாவது வேங்கை மலருருங்காலம் வரைதற்கேற்ற காலம் என்று எண்ணி, பொன்னோடு சான்றோர் பலரை விடுத்து வரைந்து கொள்ளுவையோ ?'' என்பது.

இங்ஙனம் வினாவுகின்றவிடத்து ''பயனின்றி அலர் விளைத்தியோ'' என்பதுபோல வினாதல் தோழிக்கு இலக்கணமன்று; ஆயினும், வரைதல் வேட்கை மிகுதியால் அவள் வினவுகின்றமையின், அமைந்தது.

இக்கருத்துக்களனைத்தும் அகத்தேகொண்டு மழைமேல் வைத்து உலகியல்கூறுவார் போன்று புலமைத்திறம் நன்கு அமையப்பாடிய இவரது செய்யுள் ஆயுந்தோறும் மிக்க சுவை தருகின்றது. அதனால், அதனை அன்பர்கள் பெறவிடுத்து மேற்செல்லுகின்றேன்.

பகுதி - பத்து தழும்பன்

இவன் கடல்சார்ந்த நிலப்பகுதியொன்றில் விளங்கிய தலைவன். இவனது ஊர் ஊணூர் என்பது. அது கடல்சார்ந்ததெனினும் நீர்வளம் சிறந்து நெல் விளையும் நல்வளம் பொருந்தியது. இது ''முழங்குகடலோதம் காலைக்கொட்கும், பழம்பல் நெல்லின் ஊணூர்'' என்று ஆசிரியர் மருதனின் நாகனார் பாட்டினாற் தெரிகின்றது. இந்நெல் வயற்கண் வந்து படியும் பறவைகள், உழவர் எழுப்பும் தண்ணுமை ஓசைகேட்டு அஞ்சி அருகிருக்கும் பெண்ணை முதலிய மரங்களின் மடற்கட் சென்று அமரும். அங்குத் தேனீக்கள் ஈட்டிய தேன்கூடு அழிவுற்றுத் தேனைச்சொரியும், அதனைக்கொண்டும் அருகு ஓலமிடும் கடற்கண்வாழும் சிறுமீன்களைக் கொண்டும் வாழும் பாணரது சேரி இவ்வூணூரின்கட் சிறந்து நிற்கின்றது. இந்நகரைச் சுற்றிச்

சிறந்த காவலமைந்த அரண் விளங்கிற்று. இதன் மேற்பால் மிக்கு விளங்கும் சீரிய செல்வத்தால் பெருமையுற்ற மருங்கூர்ப் பட்டினம் என்னும் பெரிய நகரமொன்றுளது என மருதனிள நாகனார், "கடிமதில் வரைப்பின் ஊணூர் உம்பர், விழுநிதி துஞ்சம் வீறுபெறு திருநகர் மருங்கூர்ப் பட்டினம்" என்பதனால் அறியப்படுகின்றது.

இத்தழும்பன் "பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்" என்றும், இவனைத் தூங்கல் என்னும் புலவர் ஒருவர் பாடியுள்ளாரென்றும், அந்நாகனார் பாட்டே கூறுகின்றது, ஆசிரியர் பரணர், "பெரும்புண் ஏஎர் தழும்பன்" என்று கூறுதலால் இவன் போரிற் "பெரும்புண் பட்டதனால் வந்த தழும்பு செய்த அழகுடையவன் என்று தோன்றுகின்றது. தோன்றவே, இவன் இயற்பெயர் இன்னதெனத் தெரிதற்கியலாது ஒழிகின்றது'

"பெரும்புண் ஏஎர் தழும்பன்" என்றும், "வாய்வாள் தமிழகப்படுத்த தழும்பன்" என்றும் வழங்கப்படுதலை நோக்கின் இவன் சிறந்த போர்வீரன் என்பதும், ஒரு காலத்து, இவன் தமிழரையோ, தமிழ் நாட்டின் ஒரு பகுதியையோ தன்னாட்டின் அகப்படுத்தினன் என்பதும் அறியப்படுகின்றன.

மேலும், இவன் சிறந்த கொடையாளி என்பதும், வாய்மை குன்றாதவன் என்பதும்,

"வாய்வாள்
தமிழகப் படுத்த இமிழிசை முரசின்
வருநர் வரையாப் பெருநாளிருக்கைத்
தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசைப்
பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்" என்றும்,
(அகம். 227)

"பெரும்புண்,
ஏஎர் தழும்பன் ஊணூ ராங்கண்
பிச்சை சூழ்பெருங் களிறு போல" (நற். 300) என்றும்,

"வெண்ணெல் அரிஞர் தண்ணுமை வெரீஇக்
கண்மடற் கொண்ட தீந்தே னிரியக்
கள்ளரிக்கும் குயம்சிறுசின்
மீன்சீவும் பாண்சேரி
வாய்மொழித் தழும்பன்." (புறம். 348) என்றும்,

வருவனவற்றாற் பெறப்படுகின்றன.

பகுதி-பதினொன்று கழுவுள் :

இவன் காமூர் என்னும் ஊரின்கண் இருந்த மிக்க வள்ளன்மை பொருந்திய தலைவனாவான். இவன்து காமூரின் கண் பூதத்தால் தரப்பட்டதோர் வேங்கைமரம் இருந்தது. அது மிக்க மணங் கமழுவதாகும்,

இக்கழுவுள் என்பான் வேலேந்திய வீரர் தலைவன். இது பற்றியே இவனைப் பரணர் ''வென்வேல், மாவண் கழுவுள்'' என்றார். இவன் தன் வள்ளன்மையாலும் வேல் வெற்றியாலும் மிக்க சிறப்புடையனாதல் கண்டோ, வேறு எக் காரணத்தாலோ போர்த் தொழிலால் அழியாப் புகழ் படைத்து வானளாவும் பெரிய கொற்றக் குடையுடையராய பதினான்கு வேளிர்கள் ஒருங்குகூடி இவனை எதிர்த்துப் பொருதனர். அப்போரின்கண் கழுவுள் இறந்தொழிந்தான். அவன் நகரும் பாழ்பட்டது. இதனைக் கண்டு இரங்கிய ஆசிரியர் பரணர்,

''அடுபோர்,

வீயா விழுப்புகழ் விண்டோய் வியன்குடை
ஈரெழு வேளிர் இயைந்துஒருங் கெறிந்த
கழுவுள் காமூர் போல,
விளிந்தன்று மாதவர்த் தெளிந்தஎன் நெஞ்சே'' (அகம்.

135) என்று பாடுவராயினர்.

இனி, இப்பெயருடைய இடையர் தலைவன் ஒருவன் சேரமான் பெருஞ் சேரலிரும் பொறையின் காலத்துக் குறும்பு செய்திருந்தான். அவன் தனக்கென அரண்செய்துகொண்டு வாழ்ந்து வருநாள், அவ்விரும்பொறையுடன் பகைத்துக் கொள்ளலும், அவன் சினங்கொண்டு,

''ஏனொடு

கன்றுடை யாயம் தரீஇப் புகல்சினந்து
புலவுவில் இளையர் அங்கை விடுப்ப
மத்துக்கயிறு ஆடாவைகற் பொழுது நினையூஉ
வான்சயம் வாழ்நர் கழுவுள் தலைமடங்கப்
பழிபாழாக வேறுபுலம்படர்ந்து''

வெற்றியால் பகைத்தவரிடத்துத் திறைகொண்டு பெயர்ந்தனன் என்று பதிற்றுப்பத்தில் அரிசில்கிழார் கூறுகின்றார். இச் செய்தியே மீட்டும் பெருங்குன்றூர் கிழாராலும் ''பொரு முரண்

எய்திய கழுவுள் புறம் பெற்று, நாம மன்னர் துணிய நூறிக் கால்வல்புரவி அண்டரோட்டி'' என்று ஒன்பதாம் பத்தினும் கூறப்பட்டது.

இவ்விடையர் தலைவனும் காமூர்த் தலைவனும் ஒருவனே யாயின் இவன் சேரமானிடம் பொருது தலைவணங்கி திறை செலுத்தியுய்ந்து, பின்னர் வேளிர் பதினால்வராலும் எறியப் பெற்றானென்று கொள்ளுதல் வேண்டும்.

பகுதி பன்னிரெண்டு மத்தி

இவன் காவிரிக்கரையிலுள்ள கழார் என்னும் ஊருக்குத் தலைவன். அவ்வூர் கீரனெயிற்றியார் முதலாய புலவர் பெருமாட்டிகள் பிறந்தவூராகும். இவ்வூர்க்கண் குறிய வளையலையுடைய மகளிர் நிறம்பெருந்திய நீராடுதலை வெறுப் பாராயின் பஞ்சாய்க் கோரையைக் கோதி வயற்கண் வந்து பாடியும் வெண் குருகுகளை ஓப்புவர். சுடர்போலும் அழகிய பூக்களையுடைய நிறைந்த நீர்மிக்க வயல்களில் தங்கும் நீர் நாய்கள். அழகிய தூம்பினையுடைய வள்ளைக் கொடியின் நிலையை நெகிழ்த்து, அங்குவந்து தங்கும் வாளைமீனை யுண்டு முள் பொருந்திய தண்டினைக் கொண்ட பிரம்பினது பழமையான தூறுகளிலே தங்கி வாழும். இது,

> ''குறுந் தொடிமகளிர் குரூஉப்புனல் முனையின்
> பழனப் பைஞ்சாய் கொழுதிக் கழனிக்
> கரந்தையஞ்செறுவின் வெண்குருகோப்பும்''(அகம்126)

எனவும்,

> ''சுடர்ப்பூந் தாமரை நீர்முதிர் பழனத்து
> அந்தூம்பு வள்ளை ஆய்கொடி மயக்கி
> வாளை மேய்ந்த வள்ளெயிற்று நீர்நாய்
> முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறியுந்
> பல்வேன்மத்தி கழாஅர்'' (அகம். 6) எனவும்

வருதலால் உணரப்படுகின்றது.

இம்மத்தியென்பான் பரதவர் என்னும் ஒருவகை குறுநில மன்னர்க்குத் தலைவன். ''தென்பரதவர் மிடல்சாய'' எனவும் ''தென் பரதவர் போரேறே'' எனவும் வருவனவற்றால் இவர்கள் தென்திசைக் கண்ணே வாழ்ந்தவர் என்று தெரிகின்றது மேலும், இவன் பலவேற் படையுடன் வலிமையான தோள்களையுடை யவன். இதனாற்றான், இவனை யாவரும் ''பல்வேன்மத்தி'' என்நற அழைப்பாராயினர் ஒருகாலத்துப் இவன் வெண்மணி

யென்னுமிடத்துப் பனித்துறை ஒன்று கட்டி ஆசிரியர் மாமூலனாரால் புகழப் பெற்றான. இவ்வெண்மணி வாயிலின் கண்·

"குழியிடைக் கொண்ட கன்றுடைப் பெருநிரை
பிடிபடு பூசலின் எய்தா தொழியக்
கடுஞ்சின வேந்தன் ஏவலின் எய்தி
நெடுஞ்சே ணாட்டிற் தலைத்தார்ப் பட்ட
கல்லா எழினி பல்லெறிந் தழுத்திய
வன்கட் கதவின் வெண்மணி வாயில்
மத்தி நாட்டிய கல்கெழு பனித்துறை" (அகம் 211)

என வருதல் கொண்டு எழினி என்பானது பல்லைப் பிடுங்கிக் கதவில் வைத்து அழுத்தினான் என்று சிலர் கூறுவர். அச்செய்தி நன்கு விளங்கவில்லை.

ஆதிமந்தி பகுதி - பதின்மூன்று

இவர் ஒரு நல்லிசைப்புலவர் பெருமாட்டியார்; சோழன்கரிகாற் பெருவளத்தானது மகள்; புகார் நகரத்துக் கற்புடை மகளிர் எழுவருள் ஒருவர்· இவரது கணவன் வஞ்சிவேந்தனான ஆட்டனந்தி என்பானாவன். அவன் அழகிலும் நீரிலாடும் கூத்துவகைகளிலும் மிகச் சிறந்தவன்,

ஒரு காலத்து, ஆதிமந்தியார் தம் கணவனோடு கழார் நகரத்துக் காவிரியின் முன்றுறைக்கண் நிகழ்ந்த புதுநீர் விழாவின் கண், நீராடுவராயினர். அக்காலை அவள் தந்தை கரிகாலன் தன் சுற்றம் சூழ எழுந்தருளியிருந்தனன். ஆட்டனத்தி, தன் காலிற் சிலம்பு கிடந்து ஒலிப்ப, இன்னிசை வல்லார் யாழ்கொண்டிசைக்க, கஞ்சதாளம் ஒருபுடை மணியொடு கறங்க, கச்சணிந்து, தழல்யாத்து, மணமிக்க மாலையணிந்து ஆடத்தொடங்கினன். அங்ஙனம் ஆடினவனைக் கண்ட காவிரி அவனது அழகை விரும்பிக் கொண்டுபோய் ஒளித்துவிட்டது; என்றது நீரில் மறைந்து விட்டான். ஆதிமந்தி அலமரலானாள். இது,

"ஒலிகதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறைக்
கலிகொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதங் கொண்டு தவிர்ந்த இன்னிசை
ஒண்பொறிப் புனைகழல் சேவடிப் புரளக்
சுருங்கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்று
கருங்கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்று

இருப்பொலம் பாண்டில் மணியொடு தெளிர்ப்பப்
புனல்நயந் தாடும் அத்திஅணி நயந்து
காவிரி கொண்டொளித் தாங்கு''. (அகம். 376)

எனவும்,

''மந்தி
பனிவார் கண்ணள் பலபுலந் துறையக்
கடுந்திற லத்தி ஆடணி நசைஇ
நெடுநீர்க் காவிரி கொண்டொளித் தாங்கு''(அகம் 396)

எனவும், சான்றோர் இரங்கிக் கூறியவற்றாற் றெளியப்படும்.

இங்ஙனம் கணவனை உயிரோடே யிழந்த ஆதிமந்தியார் ஆறாக இருதடங்கண் அஞ்சன வெம்புனல்சோர, அளகம் சோரத் தன்னைவிட்டு வேறான தன் கணவனைத் தேடி எதிர் வருவாரை யெல்லாம் தன் நாயகனது உருவம், உடை முதலிய சிறப்பெல்லாம் பலபட எடுத்துக்கூறியும் ''கச்சினன் கழலினன் தேந்தார் மார்பினன், வகையமைப்பொலிந்த வனப்பமை தெரியல், சுரியலம் பொருநனை காண்டிரோ? எனவும், ''அணிகிளர் சாந்தின் அம் பட்டு இமைப்பக் கொடுங் குழை மகளிரின் ஒடுங்கிய இருக்கை, அறியா மையின் அழிந்த நெஞ்சின், ஏற்றியல் எழில்நடைப் பொலிந்த முன்பின், தோட்டிரும் சுரியல் மணந்த பித்தை, ஆட்டனத்தியைக் காணீரோ?'' எனவும் கேட்டும், நாடுகள் தோறும் ஊர்கள் தோறும் சென்று, ''என் நாயகனைக் கடல்கொண்டது என் கொழுநனைப் புனல் கொண்டது'' என்று வாய்வெருவிப் புலம்பி வரலாயினள்.

இவ்வாறு காதலனையிழந்து வரும் மந்தியார் ''யானும் அவைக்களத்து ஆடும் மகள் போன்றேன். அவனும் ஒரு களத்தில் ஆடும் மகன் போன்றான். ஆதலால், பலருங் கூடும் இடங்களாகிய மள்ளர்களம், மகளிர் துணைங்கையாடும் களம் முதலிய இடங்களிலும் தேடினேன்'' என்று சொல்லுவாள்.

''மள்ளர் குழீஇய விழவினானும்
மகளிர் தழீஇய துணங்கையானும்
யாண்டுங் காணேன் மாண்தக் கோனை?
யானும் ஓர் ஆடுகள மகளே என்கைக்
கோடீர் இலங்குவளை நெகிழ்த்த
பிடுகெழு குரிசிலும் ஓர் ஆடுகளமகனே''

என்று பாடிப்புலம்பி ''யான் இனி என் செயப் போகின்றேன்'' என்று வருந்தி தன் கொழுநனைக் கவர்ந்த கடற்கரையை அணுகினள்.

கடற்கரையைக் கண்ணுற்றுக் காதலனை நினைந்து கதறிப் புலம்பிய ஆதிமந்தியின் நிலையைக்கண்ட கல்லும் புல்லும் உருகின; வெள்ளி வீதியார் என்னும் புலவர் பெருமாட்டியார் ''யானே, காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து, ஆதி மந்தி போலப் பேதுற்று, அலந்தனென் உழல்வேன் கொல்லோ'' எனத் தம் துயருக்கு உவமை கூறி வருந்தினர்; இக்காட்சியையும் ஆதிமந்தியின் அறக்கற்பினையும் கண்ட கடல் அவ்வாட்டனத்தி யை ஒரு புறத்திற் கொணர்ந்து காட்டிற்று. கண்டதும், ஆதிமந்தி யார் துயரத்தின் கரைகாணாளாய்க் கதறிப் புலம்பலும், அயல் புறத்தே கடலாடிப் போந்த மருதி என்னும் கற்புடைய மகளொ–ருத்தி அவனைக் கொண்டுவந்து, ஆதிமந்தியாரிடம் விடுத்துச் சென்றனள். காதலனைப் பெற்ற மந்தியார், மருதிக்கு ஆற்றுவ தோர் கைம்மாறு காணாராய்த் தம்மனத்தெழுந்த நன்றியறிவி னால், அம்மருதிக்கு வாழ்த்துக்கூறி வரம்பல தந்தனர்.

இங்ஙனம், கற்புடைய மகளொருத்திக்கு உதவி புரிந்த மருதியின் செயல் சிறிதெனினும் பெரிதெனக்கொள்வார் பயன் தெரிவார். ஆதலால் புலவர் பெருமகனாரான பரணர்

''முழவுமுகம் புலராக் கலிகொ ளாங்கண்
கழாஅர்ப் பெருந்துறை விழவின் ஆடும்
ஈட்டெழில் பொலிந்த ஏந்து குவவு மொய்ம்பின்
ஆட்டனத்தி நலன் நயந்து உரைஇத்
தாழிருங் கதுப்பின் காவிரி வவ்வலின்
மாதிரந் துழைஇ மதிமருண் டலந்த
ஆதி மந்தி காதலற் காட்டிப்
படுகடல் புக்க பாடல்சால் சிறப்பின்
மருதியன்ன மாண்புகழ் பெறீஇயர்'' (அகம். 222)

என விளங்கப் பாடியருளினார்.

இச்செய்தி பின்னர்க் கண்ணகியார் தன்கணவன் கோவலன் கள்வனல்லனென வழக்குரைத்து மீள்வார் அங்குக் கோல் கோடி வீழ்ந்த பாண்டியமன்னன் தேவியிடம் வஞ்சினங் கூறுங்கால், ''பத்தினிமார் எழுவரான' மட்டார் குழலார் பிறந்த பதி (புகார்)ப் பிறந்தேன் ''என்று சொல்லுமுகத்தான், இந்த ஆதி மந்தியாரை முதற்கண் நிறுத்தி,

''உரைசான்ற
மன்னன் கரிகால் வளவன்மகள் வஞ்சிக்கோன்
தன்னைப் புனல் கொள்ளத் தான்புனலின் பின்சென்று

"கன்னவில் தோளாயோ" என்னக் கடல்வந்து
முன்னிறுத்திக் காட்ட அவனைத் தழீஇக் கொண்டு
பொன்னங் கொடிபோலப் போதந்தாள்"
[சிலம். 21-11-5]

என்று கூறுவதாக ஆசிரியர் இளங்கோவடிகள் பாராட்டுகின்றார். அன்றியும், பட்டினத்துப் பிள்ளையார் புராணத்துப் பூம்புகார்ச் சருக்கத்தும், இந்நிகழ்ச்சி,

"கரிகாலன் பெருவளவன் மகள் கேள்வன் கடல்புக்கான்
"திருவேயோ" எனவழைத்துத் திரைக்கையாற் றரக் [கொண்டான்
வரைகேள்வன் கலம் நோக்கி வருமளவும் கல்லானாள்
புரைதீரப் பிறந்தபதி பூம்புகார்ப் பட்டினமே" என்று

பாராட்டப் பெறுகின்றது.

மற்று, ஆராய்ச்சியாளர்களால் இந்நிகழ்ச்சியிற் கூறப்பட்ட காவிரி வவ்வுதலும், மீட்டும் தருதலும் ஆகிய செயல்கள், "கூத்தயர்ந்த ஆட்டனத்தி அயர்ந்து வெள்ளத்திலே வீழ்ந்து விட அவனை அவ்வெள்ளம் கடலிடம் சேர்க்க, அங்கு மீன் பிடிப்போரால் கரைசேர்க்கப்பட்டு மூர்ச்சை தெளிந்து கடற் கரையே ஆட்டனத்தி நடந்து வந்தானை" மருதிகாண்டலும், கொணர்தலும், அவன் மனைவியிடம் சேர்ப்பதுமாய் நிகழ்ந் திருத்தல் வேண்டும் என்று எண்ணுகின்றனர். எனினும், வெள் ளத்தில் வீழ்ந்தான், உயிர்துறவாது கடலடைந்து கரைவருதல் அருமையாகலின் அது ஆதிமந்தியின் கற்பின் உறுதியுடைமைப் பயனே என்று யாவரும் உணர்ந்துகொள்வர்.

ஆசிரியர் பரணர் பாடிய பாட்டுக்களின் ஆராய்ச்சியைக் கூறுதற்கு எடுத்துக்கொண்ட யான், இதுகாறும், பண்டை நிகழ்ச்சி கூறல் என்ற பகுதியின்கீழ் சேரன் செங்குட்டுவன் முதல் ஆதிமந்தி கணவன் ஆட்டனத்தி யீறாக வமைந்த அரசர், குறுநில மன்னர், வள்ளல்கள் முதலிய பலரது வரலாற்றினைப் பொதுப்படக் கூறி வந்தேன். இனி, அவர்களைத் தனித்தனியே இவர் சிறப்பித்திருக்கும் இயல்பினையும் அதனாற் பெறப்படும் இவரது புலமைத் திறனும் ஆராயப் புகுகின்றேன்.

பகுதி - பதின்மூன்று

1. சேரன் செங்குட்டுவன்

இவன் சேரநாட்டிற் சிறந்து விளங்கிய மன்னர்களுள் ஒருவன் என்பதும், இவன் தந்தை நெடுஞ்சேரலாதன் என்பதும் கடவுட் பத்தினியாகிய கண்ணகிக்குக் கல்நட வேண்டிக் கங்கைப்பேரியாறு கடந்து இமயமலையிலிருந்து கற்கொண்டு வந்தானென்பதும், அதுபோது ஆரியவரசர் பலரை வென்றா னென்பதும், பழையன் என்பானொருவனை வென்று அவன் உரிமைமகளிர் கூந்தல் களைந்து கயிறு திரித்து, அவனது காவல் மரமாகிய வேம்பினைத் தடிந்து, யானை பூட்டிய ஒழுகையி (வண்டி) லேற்றிக் கட்டிக் கொணர்ந்தா னென்பதும், ஒரு காலத்தில் கடலும் பிறக்கிடுமாறு தன் வேலெறிந்து வெற்றி பெற்றானென்பதும், பிறவும் மேலே கூறப்பட்டன வாகலின் அவற்றை யினியும் விரித்துக்கூறாது மேற்செல்லுகின்றேன்.

இவனை, ஆசிரியர் பரணர், புறத்தில், "மீன்கொடுத்து நெற்குவைஇ" என்றும், "இருப்புமுகஞ் செறித்த ஏந்தெழில் மருப்பின்," என்றும் தொடங்கும் இரண்டு பாட்டுக்களிலும், அகத்தில், "தாவில் நன்பொன் தைஇய பாவை" யென்று தொடங்கும் பாட்டிலும், பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்திலும் சிறப்பித்திருக்கின்றார்.

இவற்றுள், "மீன்கொடுத்து நெற்குவைஇ" என்று தொடங்கும் பாட்டு, இவனது வள்ளன்மை, முசுறி யென்னும் நகர்வளம் ஆகிய இரண்டும் முன்னர் உணர்த்திப் பின்னர் மகட்பாற்காஞ்சி யென்னும் புறத்திணைப் பொருளை யுணர்த்து கின்றது. இவன் தன்னை நாடிவரும் இரவலர்க்கும் பாவலர்க்கும் மலைபடு பொருள், கடல்படு பொருள் என்ற இருவகைப் பொருளும் கலந்து வழங்குவன் என்றும், அதுபோது அவர்கட்கு இனிமை மிக்க கள்ளினை நீர்போல் முகந்துண்ணத் தருவன் என்றும் கூறுவார்.

"மலைத்தாரமும் கடற்றாரமும்
தலைப்பெய்து வருநர்க்கீயும்
புனலங் கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்"

என்று கூறுகின்றார். பின்னர், அவனது முசுறி நகரத்தைச் சிறப்பிப்பார்.

"மீன்நொடுத்து நெற்குவைஇ
மிசையம்பியின் மனைமறுக்குந்து
மனைக்குவைஇய கறிமூடையால்
கலிச்சும்மைய கரைகலக்குறுந்து
கலம்தந்த பொற்பரிசம்
கழித்தோணியால் கரைசேர்க்குந்து
....
முழங்குகடல் முழவின் முசுறி"

என்றார். எனவே, இந் நகர்வாழும் பரதவர் மனைதோறும் மீன் விற்றலால் மாறப்பட்டுக் கொணர்ந்த நெல் குவிக்கப்பெற்றிருத்தலும், அவ் வீடுகளினருகே குவிக்கப்பெற்ற மிளகு பொதிகள் மிகுந்து கடற்கரைவரையிற் கலந்திருத்தலும், பிற நாடுகளிலிருந்து கலங்களாற் கொணரப்பட்ட பொன்னும் பொருளும் சிறு தோணிகளில், கழிகளின் வழியே கரை சேர்க்கப்படுதலும் எப்பொழுதும் மங்கல முழவு கடலோ சொன் றொலித்துக் கொண்டிருத்தலும் அம் முசுறிக்குச் சிறப்பென்றாராம். இதன்கண் மறுக்குந்து, கலக்குறுந்து, சேர்க்குந்து என்பவை மறுக்கும், கலக்குறும், சேர்க்கும் என்ற சொற்களே யாம். இவை "உம்உந் தாகும் இடனுமா ருண்டே" [தொல். சொல்.] என்றதனால் இவ்வாறு நின்றன.

மீன் விற்று அவற்றிற்கு மாறாகக் கொண்ட நெல்லை மூட்டைகளாகக் கட்டி வீட்டின் முன்றிலில் அடுக்கிய தோற்றம் தோணியின் மேற்புறத்தை யொத்துக் காண்பாரைத் தோணியின் மேற்பக்க மென்றும், மனையக மென்றும் அறியக்கூடாவகை மயக்குதலால் "மனைமறுக்குந்து" என்றும்; பிறநாடுகட்குக் கலத்திற் கொண்டுபோதற் பொருட்டுக் குவிக்கப்பட்டுக் கடற் கரைவரைச் சாரையாய் அடுக்கப் பெற்றிருத்தலின், "கரைகலக் குறுந்து" என்றும், கடற்கரைக்கண் அலை மிக்குக் கரையொடு பொருதலால் தோணியைச் செலுத்துதல் கூடாமையால், கடலிலிருந்து கரைப்பகுதிக்குள் கழிவெட்டி அவற்றின் வழியே தோணி செலுத்தின் தோணி இனிது கரை சேர்தலால், "கழித்தோணியால் கரைசேர்க்குந்து" என்றும் கூறினார்.

இப் பாட்டின் பிற்பகுதி,

"முழங்குகடல் முழவின் முசுறி யன்ன
நலஞ்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்பினும்
புரையர் அல்லோர் வரையலர் வளெனத்
தந்தையும் கொடாஅன் ஆயின் வந்தோர்

வாய்ப்பட இறுத்த ஏணி ஆயிடை
வருந்தின்று கொல்லோ தானே பருந்துயிர்த்(து)
இடைமதிற் சேக்கும் புரிசைப்
படைமயங்(கு) ஆரிடை நெடுநல் ஊரே''

என்பது. இதன் பொருள், கடல்போன் றொலிக்கும் முழாவினை யுடைய முசுறி நகர் போலும் நன்மை யமைந்த சீரியபொருளைக் கொணர்ந்து பணிவோடு விரும்பிக் கொடுப்பினும், இவள் தந்தை வந்தோர்க்கு ''இவள் ஒத்தவரல்லாத பிறரால் வரையப் படாள்'' என்று கூறி மகட்கொடை மறுப்பானாயின், வந்தோர் சினந்து வென்றி தப்பாதபடி படையொடு தங்கிய எல்லைக்கிடையே பருந்துகள் இடைமதிலிற்றங்கியிளைப்பாறும் பெருமதிலும் பலவகைப் படைகள் விரவி யிருத்தலால் கடத்தற்கரிய வழியு முடைய நெடிய நல்ல ஊர் வருந்துவதாகுங் கொல்லோ என்பதாம். எனவே வருந்துவது புறத்துத் தங்தம் வந்தோர்படையே யென்பதாம். இக் கருத்தே, * ''அந்தழை யல்குலும் ஆடமை மென்றோளும். பைந்தளிர் மேனியும் பாராட்டி-தந்தை; புறமதில் வைகும் புலம்பே தருமே, மறமதில் மன்னன் மகள்'' என்ற செய்யுளினும் அமைந்திருத்தல் காண்க. பலவகைப் படைகளாவன, ‡ ''வளைவிற் பொறியு மயிர்செறி நிலையும், கருவிரலூகமும் கல்லுமிழ் கவணும், பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும் காய்ப்பொன்னுலையும், கல்விடு கூடையும், தூண்டிலுந் துடக்குமாண்டலை படுப்புங் கவையும் கழுவும் புதையும் புழையு, மையவித் துலாமும் கைபெய ரூசியும், சென்றெறி சிரலும் பன்றியும் பணையு, மெழுவுஞ் சீப்பு முழுவிறற் கணையமும், கோலும் குந்தமும் வேலும் சூலமும்'' என்றிவை முதலிய பொறிகளும் படைகளுமாம்.

இது மகட்பாற் காஞ்சியென்னும் புறத்திணைப் பொருளை யுணர்த்துவதென முன்னர்க் கூறினோமன்றோ. அஃதாவது, ''நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி, மகட்பாடு அஞ்சிய மகட்பா லானும்'' எனத் தொல்காப்பித்துட் கூறப்படுவது. இதன் பொருள், ''பெண்கோள் ஒழுக்கத்தின் ஒத்து'' மறுத்தல்பற்றிப் பகைவனாய் வலிந்து கோடற்கு, எடுத்துவந்த அரசனோடு, முதுகுடித் தலைவராகிய வாணிகரும் வேளாளரும், தத்தம் மகளிரைப் படுத்தற்கு அஞ்சிய மகட்பாற் காஞ்சியானும்'' என்பது. (தொல். பொ. சூ. 79. உரை) மேலும், இவ்வுரையால் முதுகுடிமக்கள் தத்தம் மகளிரைப் படுத்தற்கு மறுப்பதன்

* பு. வெ. மாலை 123. ‡ சிலப்-அடைக்-207-216

காரணம் அரசரியல்பு தம் முயிரைப் பொருளெனப் போற்றாது வாழ்தலாகையால் அவர் நிலையின்மை நோக்கி அவர்கட்குத் தம் மகளிரைப் படுத்தற்கு அஞ்சும் அச்சமேயாம் என்றும் முது குடிமக்க ளாகையால் அவரும் தம் மகளிர் மானங்கருதிப் பொருது படத் துணிந்தவ ரென்றும் அறியலாம்.

உருவும் திருவும் ஏனை நலனும் ஒத்தாலன்றி ஒருத்திக்கும் ஒருவற்கும் அன்புண்டாகாதாகலின், அது நலம்பெறும் விழுப் பொருள் பணிந்து உவந்து கொடுப்பினும் ஒவ்வா விடத்து ஆகா தென மறுப்பான், "நலஞ்சால் விழுப்பொருள் கொடுப்பினும், புரைய ரல்லோர் வரையலள் இவள்" என மகள்மேல் வைத்துக் கூறினான். முடிகுடிப் பிறந்தோர் தனம் சிறியராயினும் மனம் சிறியராகாமையின், தனக்கு வரும் ஏத மஞ்சாது மறுக்கின்றா னாகலின், 'தந்தையும் கொடான்" என்றார். 'தந்தையும்' என்றவிடத்து உம்மை மகளே அம்மணத்தை மறுத்தமையை யுணர்த்திற்று. "புரையமன்ற புரையோர் கேண்மை" என்பது போலப்(நற் ... திணை...) புரையோர் என்பது மேலோர் என்னும் பொருளை உணர்த்துவதாகக் கொள்ளின், மகள்கோடற் குரிய ராயினும் மகளுக் குரியவர் இயல்பு தம் மியல்போடு மாறுபடுத லறிந்தும் மகள் வேண்டல் பெரியோர் செயலன்றாகலின். "புரைய ரல்லோர் வரையலள் இவள்", என்றானெனினுமாம். வந்தோர் வலிந்து கோடற் கருத்தினராயின், அவரோடு பொருது உயிர் தந்தேனும் தன் மகளின் மானம் காக்க விரைகின்றா னாகலின், அவனை வந்தோரால் வெல்லலாகாது என்பார் "வருந்தின்று கொல்லோ தானே" யென்று கூறுகின்றார்.

இனி, இருப்புமுகஞ் செறித்த ஏந்தெழில் மருப்பின்" என்ற பாட்டு, செங்குட்டுவனது போர்ச்சிறப்பினை வேளாண் மாக்களது தொழிலோடு உவமித்துக் கூறும் பகுதியும்' பரிசிற் பகுதியும் என இருபகுதியினை யுடையதாய் உருவகவணி சிறக்க நிற்கின்றது. உழவுத்தொழிலுக்கு இன்றியமையாத மேகமும், அது கருத்து மழை பெய்யுங் காலத்துச் செய்யும் மின்னலும், உடன் தோன்றும் இடிமுழக்கமும், மின்னிடித்து மழை பெய்யுங்கால் நாற்றிசையும் பரவிப் பொழியுமாறு வீசும் வளியும் இவற்றால் ஈரங்கொண்ட நிலமும் அதனை யுழுதற்கு வேண்டும் ஏரும், உழுதவழி யுண்டாகும் படைச்சாலும், அதன்கண் விதைக்கப் படும்வித்தும், அது விளைந்து முற்றிக் கதிர்தலைசாய நிற்றலும், அவற்றை யறுத்துப் போரிடுதலும் போல, போர்க்களத்திலும் கருங்கை யானை மேகமாக, மறவர் எறிதற்கு உயர்த்த வாள்

மின்னலாக, போர் முரசு முழக்கமாக, மிக்க விரைந்த செலவினை யுடைய குதிரை வீசுவளியாக, வல்வில் வீங்குநாண் செலுத்திய கணைகள் மழைத்தாரையாக இவற்றாற் கொலையுண்ட மாக்களின் உதிரந் தோய்ந்து ஈரமுற்ற போர்க்களம் வயலாக, தேர் ஏராக, ஆயுதமாகிய படைவாளால் கீழ்மேலாக மறிக்கப் பட்ட படை முதலியவற்றின், நிரை படைச்சாலாக, வெள்வேலும் கணையமும் எறியப்பட்டுச் சிதறி வீழ்தலின் விதையாக, வீரர் தம் தலைகளை வெட்டிச் சாய்த்த அச்சந்தரும் நிலை பைங் கூழாக. பேய்மகளிர் பிணமுண்பான் சூழ்ந்து வர, அவற்றைக் குவித்த குவை, போராக, அவற்றைப் பூதம், பேய், நரி முதலி யவை முகந்துண்ணும் வகையிற்றான் தன்னைப் பாடி வருவோர்க்கு அவர் வேண்டுவன ஈதற்பொருட்டு வீற்றிருக் கின்றான் என்னும் பொருளமைந்து வருவது அவ்வேர்க்கள உருவகப்பகுதி. அது,

"இருப்புமுகஞ் செறித்த ஏந்தெழில் மருப்பின்
கருங்கை யானை கொண்மூ வாக
நீள்மொழி மறவர் எறிவனர் உயர்த்த
வாள் மின்னாக வயங்குகடிப் பமைந்த
குருதிப் பலிய முரசு முழக்காக,
அரசராப் பனிக்கும் அணங்குறு பொழுதின்
வெவ்விசைப் புரவி வீசுவளி யாக
விசைப்புறு வல்வில் வீங்குநாண் உகைத்த
கணைத்துளி பொழிந்த கண்ணகன் கிடக்கை
ஈரச் செறுவயின் தேர்ஏ ராக
விடியல் புக்கு நெடிய நீட்டிநின்
செருப்படை மிளிர்த்த திருத்துறு பைஞ்சால்
பிடித்தெறி வெல்வேள் கணையமொடு வித்தி
விழுத் தலை சாய்த்த வெருவரு பைங்கூழ்
பேய் மகள் பற்றிய பிணம்பிறங்கு பல்போர்பு
கண நரி யோடு கழுதுகளம் படுப்பப்
பூதம் காப்பப் பொலிகளந் தழீஇப்
பாடுநர் கிருந்த பீடுடை யாள" என்பது

இதன்கண், யானைகள் யானைகள் போர்செய்யுங்கால் அவற்றின் கோடு எதிர்த்தவரையும் எதிர்த்தவற்றையும் மண்டித் தாக்குங்கால் அது கூர்மடிந்து மழுங்காவகை நுனியிற் கூரிய இருப்புப்பூண் செறித்தல் மரபாகலின், "இருப்புமுகஞ் செறித்த

ஏந்தெழில் மருப்பு'' என்றும், *''காலமாரியின் அம்புதைப்பினும் வயற்கெண்டையின் வேல்பிறழினும், பொலம்புனையோடை யண்ணல் யானை, இலங்குவான் மருப்பின் நுதிமடுத் தூன்றினும் ஓடல் செல்லாப் பீடுடையாள'' ராகலின், வீரரை, ''நீள்மொழி மறவர்'' என்றும், போரிடைப் பெற்ற வெற்றிக்குறியாக முழக்கும் முரசத்திற்குக் குருதியை வீரர் பலியிடுத லுண்மையின் ''குருதிப் பலியமுரசு'' என்றும், ''விரிநிற நாகம் விடருள தேனும், உருமின் கடுஞ்சினம் சேணின்றும் உட்கும்'' (நாலடியார்) என்ப வாகலின் முரசொலி கேட்டஞ்சும் அரசரை அரவொடு உவமித்து ''அரச ராப் பனிக்கும் அணுங்குறு பொழுது'' என்றும் உழுதற்குச் செல்வோர் கடும்பகலிற் செல்லின் நிலம் வெதுப்புதற்கும், ஈரங் குன்றுதற்கும் அஞ்சி விடியலிற் செல்வா ராகலின் ''விடியல் புக்கு'' என்றும் விதை வித்துவோர் அதனைப் பிடியளவாகக் கொண்டு நீட்டி வீசுதலால், ''பிடித்தெறி வெள்வேல் கணையமொடு வித்தி'' என்றும் கூறினார். பாடுநர்க்கு என்பதில் நான்காவது ''அதற்பொருட்டு''

இங்ஙனம், முற்பகுதியில் செங்குட்டுவனது போர்க்களத் தினைச் சிறப்பித்துக் கூறினவர், பின்னர்த் தான் விரும்பிக் கேட்கும் பரிசில்களைத் தருதல் வேண்டுமென்றதற்குத் தோற்று வாயாகப் பாடுநர்க்கு ஈதற் பொருட்டிருக்கும் பீடுடையோய் என்று தொடங்கி, பரிசில் வேண்டுகின்றார். வேண்டுபவர், ''பெரும! அரிக்குரல்தடாரி யென்னும் பறை பலமுறை யடிபடுத லால் சூடு பிறக்க இசைத்து நின்புகழ் பாடி வந்தேன். ஆதலா லும் நீட்டியாது பரிசில் நல்கும் தகுதி விரும்புவோ யாதலாலும்

''பாடான்று

எழிலி தோயு மிமிழிசை யருவிப்
பொன்னுடை நெடுங்கோட் டிமயத் தன்ன
ஓடை நுதல வொல்குத லறியாத்
துடியடிக் குழவிய பிடியிடை மிடைந்த
வேழ முகவை நல்குமதி''

என்று கூறுகின்றார்.

இப்பாட்டின்கண் முற்பகுதி சொல்லொழுக்கமும் பொரு ளொழுக்கமும் செவ்வனம் அமையப்பெற்றுப் படிப்போருளம் சுவைபெறச்செய்வது போலப் பிற்பகுதி யில்லை யாயினும், முற் பகுதியால் கவரப்பட்ட மனம் பின்னும் இழுக்கப் பெறின் கயப்

---

 * புறம். 287.

புறு மென்று அஞ்சித் தாம் தம் வேண்டுகோள் கூறுதற் கமை வுடைத் தாக்கினமை இவரது புலமைத் திறனை வெளிப் படுத்துகின்றது.

இனி, செங்குட்டுவனைப் பாராட்டிக் கூறும் அகப்பாட்டு அகநானூற்றில் ''தாவில் நன்பொன் தைஇய பாவை'' என்று தொடங்குவது. இது அகத்திணைக்கண் வரும் அல்லகுறிப்பட்டு நீங்குந் தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறுதல் என்னும் துறைப் பொருளுணர்த்துகின்றது.

அல்லகுறிப்படுதலாவது, தலைமகன் இரவுக்குறி வந்து ஒழுகுகின்ற காலத்து ஒருநாள் தலைமகன் செல்லாமே, அவனால் செய்யப்படும் குறிப்புக்கள் தாமே வெளிப்படுதல்; ''அக்குறிப்புக்கள் புன்னைக்காய் நீரி லிடுதலும் புள் ளெழுப்பு தலுமென இவை.'' இவை வெளிப்படுதற் குரிய காரணங்கள் இவனே யன்றி வேறும் உள. ''புன்னைக்காய் மூக்கு ஊழ்த்தும் விழும், வளி எறியவும் விழும், புள் துளக்கவும் விழும்; புட்கள் எழுமிடத்து வெருவியும் எழும், வேற்றுப்புள் வரவும் எழும். இவை கண்டு, தலைமகனால் ஆயின வெனக்கொண்டு குறியிடம் போந்து அவனி னாகாமை யுணர்ந்து, (தலைமகள்) போந்து மனையகம் புக்க பின்னை, அவன் (தலைமகன்) வந்து, அக்குறி செய்யும். செய்தக்கால், இரண்டாவது கொண்டுபோதல் ஆகா தன்றே. என்னை, சிறிது முன்னாகப் போனாரன்றே. 'அகத்தி னின்று நின்னின் ஆகாதன கண்டு வந்து நின்று பெயர்ந்தேம்' என்பதனை அவனுக்கு உணர்த்தும்; திங்கள்மே லிட்டானும் அன்னத்தின்மே லிட்டானும் ஓதத்தின்மே லிட்டானும் கூறுவள். இஃதுணர்ந்து தலைமகன், ''இவ்விரவு இவர் என் பாலராய நின்று துயிலா ராயினார் போலும்; என்னை, தாம் துயிலாது நின்றாரன்றே துயிலாதன அறிவார். இவற்றின் துயிலெழ (இவர்) வினையேன் குறியென்று வந்து பெயர்ந்தார் போலும்'' என ஆற்றானாய்ப் பெயர்வான். அக்காலை அவன் தன் நெஞ்சினை நெருங்கிக் கூறும் பகுதிகளுள் ஒன்றாகும் இத்துறை.

இங்ஙனம் அல்லகுறிப்பட்டு நீங்குந் தலைமகன் தலை மகளின் பெறுதற் கருமையும் நெருங்காவகை யுற்ற காப்பு மிகுதி யும் நினைத்து வருந்துவான், நெஞ்சினை நெருங்கிக் கூறு கின்றான்.

''தாவில் நன்பொன் தைஇய பாவை
விண்தவ ழிளவெயில் கொண்டுநின் றன்ன

மிகுகவின் எய்திய தொகுகுரல் ஐம்பால்
கிளையறி நாணல் கிழங்குமணற் கீன்ற
முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்
நயவன் தைவரும் செவ்வழி நல்யாழ்
இசையோர்த் தன்ன வின்றீங் கிளவி
அணங்குசா லரிவையை நசைஇப் பெருங்களிற்(று)
இனம்படி நீரிற் கலங்கிய பொழுதில்
பெறலருங் குரையள் என்னாய், வைகலும்
இன்னா அருஞ்சுரம் நீந்தி, நீயே
என்னை இன்னற்படுத்தினை, மின்னுவசிப்
புரவுக்கால் கடுப்ப †மறலிமைந் துற்று
விரவுமொழிக் கட்டூர் வேண்டுவழிக் கொளீஇப்
படைநிலா விலங்கும் கடல்மருள் தானை
மட்டவிழ் தெரியல் மறப்போர்க் குட்டுவன்
பொருமுரண் பெறாஅது விலங்குசினம் சிறந்து
செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி
ஓங்குதிரைப் பௌவம் நீங்க வோட்டிய
நீர்மாண் எஃகம் நிறத்துச்சென் றழுந்தக்
கூர்மத னழியரோ நெஞ்சே! ஆனாது
எளியள் அல்லோட் கருதி
விளியா வெவ்வம் தலைத்தந் தோயே''

என்பது அப்பாட்டு. இதன்கண் ''தாவில் நன்பொன் தைஇய பாவை'' என்பது முதல் ''அணங்குசால் அரிவையை நசைஇ'' என்பது ஈறாகக் கிடந்த பகுதி தலைமகளது தோற்றப் பொலிவையும், ''மின்னுவசிப், புரவுக்கால் கடுப்ப மறலி மைந்துற்று'' என்று தொடங்கி ''ஓங்குதிரைப் பௌவம் நீங்க ஓட்டிய நீர்மாண் எஃகம்'' என்பது வரையிற் கிடந்த பகுதி குட்டுவன் கடல் பிறக் கோட்டிய செய்தியையும், எஞ்சியது நெஞ்சினை நெருங்கிக் கூறுவதையும் உணர்த்துகின்றன.

தலைமகளின் தோற்றப்பொலிவு, ஓட்டற்ற நல்ல பொன்னாற் செய்யப்பட்ட பாவை விண்ணிற் றவழ்ந்து செல்லும் இளஞாயிற்றின் ஒளிகொண்டு நின்றது போல் மிகுதிபடும் அழகு பெற்ற, தொக்க கதிர்போல் நீண்ட கூந்தலையும், கிளைத்தெழுந்த ஐம்மை பொருந்திய நாணற்கிழங்கினது மணலின் கண் ஈன்ற வெள்ளிய முளைபோற் கூரிய பற்கள் பொருந்திய பவளம்

---

† வினையெச்சம் ''மெலிவுகண் டுவந்து மாதோ விருப்பொடு மறலினாரே'' (சிந் 968) என்பதனால் வினையாதல் காண்க.

போன்ற வாயினையும், ஈரமுடையா னொருவன் இசைக்கும் செவ்வழிப் பண்ணுக்குரிய நல்ல யாழினது இசையைக் கேட்டாற் போலும் இனிய தீவிய மொழியினையு முடைய கண்டார்க்கு வருத்தம் விளைக்கும் அரிவை யெனக் கூறப்பட்டது. செங்குட்டுவன் கடல் பிறக்கோட்டியது, மின்னலோடு கூடிப் புரத்தற் கெழுந்த மேகங்களைச் சவட்டும் காற்றைப் போல், மாறுபட்டு வலியும் மிகப்பொருந்திப் பலவகை மொழிகள் விரவிய பாசறைகளை விரும்பிய விடங்களில் நிறுவி, படைகளின் ஒளி விளங்கும் கடல் போலும் தானையினையும், தேன் நெகிழ்ந்து சொரியும் மாலையினையும், மறம் பொருந்திய போரினையு முடைய செங்குட்டுவன் பொருதற்குரிய மாற்றாரைப் பெறாமையால், நெறியினின்றும் பிறழ்கின்ற சினம் மிகுந்து, போர் செய்யும் வன்மையோடு கடலை முற்றுகை யிட்டு, எழுகின்ற அலை பொருந்திய கடல் விலகும்படிச் செலுத்திய மாட்சி பெற்ற நீர்மையினை யுடைய வேல் என்று விளக்கப்படுகின்றது.

இக்கூறிய தோற்றப்பொலிவினை யுடைய அரிவையைக் காதலித்து, அல்ல குறிப் பட்டமையால் அழுங்கும் நெஞ்சே! பெரிய யானைகளின் திரள்கள் வந்து படிதலால் கலக்கமுறும் நீர்போலக் கலங்கி நிற்கும் இப்பொழுதின்கண், "பெறுதற்கரியளாவாள்" என்று கருதாது, துன்பத்தைத் தரும் கடப்பதற்கரிய சுரங்கள் பல கடந்து வந்து என்னைத் துயர்க்குட் படுத்தினை. இங்ஙனம், கூடுதற் கெளியளல்லாதாளைக் கூடுதல் அரிதென்று கருதி யமையாது நீங்காத துன்பத்தையே மிகத் தந்தாய் ஆதலால், நீ, குட்டுவனது நீர்மாண் எஃகம் மார்பின் கட்புக்கு மூழ்க, நின் மிக்கவலி கெடுவாயாக எனவரும் இஃது இப்பாட்டின் கருப்பொருள்.

தலைமகட்குந் தனக்கும் அன்புமிகுதல் வேண்டி, விரைந்து வரையாது குறிவழி யொழுகுதலே மேற்கொண்டவன் வரும் வழியும் திரும்பச் சேறும் வழியும் அவளையே நினைந்து செல்கின்றா னாகலின், அழுங்கும் பொழுதினும் நெஞ்சில் மிக்கு நின்ற அவளது உருவவியல்பினை முதற்கட் கூறி, அத் தோற்றம் நினைத்தபொழுதும் வருத்த மிகுவித்தலால் அவளை "அணங்குசா லரிவை" யென்றும் கூறினான். பின்னர், நெஞ்சிற்கு நெருங்கி யுரைப்பானாய், அதுபொழுது தான் கொண்டிருந்த நிலை விரைவில் தெளியும் தன்மைத் தல்லாத பெரிய கலக்கம் பொருந்திய நிலையாகும் என்பான் "பெருங்களிற்(று) இனம் படி நீரிற் கலங்கிய பொழுதில்" என்று கூறினான். முன்னர் இயற்கைப் புணர்ச்சிக்கண் அவளைக் கண்டபோது அவளது

அழகு, என் அறிவு, நிறை, ஆண்மை முதலிய ஆண்மைக் குணங்களைக் கலக்கிக் கவர்ந்து கொண்டமையின், மிகுதிக்கண் மேற்சென் றிடித்தற்பாலையாய நீ. நின்னாற் காணப்படும் இவள், பெறுதற்கரியள் என்று கூறாது, இங்ஙனம் செலுத்தித் துன்புறுத்தினாய் எனச் சினந்தான்போற் கூறினான் எனினுமாம். அப்பெற்றியோன், சினத்தொழிலாகிய குட்டுவனது கடல்பிறக் கோட்டிய வேலை சிறப்பித்துப் பின்னர், இவ்வாறு எளிய ளல்லாதாளை எளியவள்போற் காட்டி நீங்காத் துன்பந் தந்த நீ, எதனாலும் அடக்குதற் கியலாத கடலைத் தன் வேலாற் பிறக் கிடச் செய்த செங்குட்டுவனுடைய தப்பாத வேல் மார்பிலழுந்த நின் மிக்க வலி கெடுக என்று கூறினான்.

முதற்பகுதியும் நெஞ்சினை நெருங்கிக் கூறுவனவும், அல்ல குறிப்பட்டுத் தலைமகள் கூட்டம் பெறாமையால் ஆற்றாது அழுங்கிக் கூறுவன வாகலின், இது நெய்தற்றிணை யாயிற்று. பிற்பகுதியாகிய செங்குட்டுவன் செயல் கூறுவது, அவன் பொரு முரண் பெறாது, சினம் சிறந்து, "செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி", ஓங்குதிரை பிறக்கிடும்படி பொரு தலைக் கூறுதலின் அது தும்பைத்திணை யாயிற்று. இத் தும்பைத்திணை அந் நெய்தற்றிணையின் புறமாகும். என்னை, "தும்பை தானே நெய்தலது புறனே" (தொல். பொ. 69.) என்ப. தும்பைத் திணை யென்பது "மைந்து பொருளாக வந்த வேந்தனை, சென்று தலையழிக்குஞ் சிறப்பிற் றென்ப". (தொல். பொ. 70).

இனி, ஆசிரியர் பரணர் இச் செங்குட்டுவனைப் பதிற்றுப் பத்து ஐந்தாம் பத்தினுள் சிறப்பித்திருக்கின்றா ரென்று முன்னர்க் கூறினோமன்றோ. அப் பத்தினையும் சிறிது ஆராய்கின்றேம்.

பதிற்றுப் பத்து என்னும் இந்நூலுள் ஒவ்வொரு பத்தினும் இறுதியில், பதிகங்கள் அமைந்து பாடினோர் பாடப்பட்டோர் செயல், பாடினோர்பெற்ற பரிசில் ஆகிய இவற்றைக் கூறுகின்றன இவற்றுள் ஐந்தாம்பத்தின் இறுதியிலுள்ளபதிகம், செங்குட்டுவன் செயலையும், பாடினோர் பரணர் என்பதையும் கூறிப் பின்னர்ப் பரணர் பாடிப் பெற்றபரிசில் உம்பற் காட்டு வாரியையும் தன் மகன் குட்டுவன் சேரலையும் கொடுத்தான் அக்கோ" என்று கூறுகின்றது. மற்று அந் நூலைப் பதிப்பித்த ஆசிரியர் உ. வே **சாமிநாதையரவர்கள்** முகவுரையில் "ஒவ்வொரு செய்யுளின் பின்னும் அமைந்துள்ள துறை,வண்ணம்,தூக்கு பெயரென்பவை-

கள் உரையில்லாத மூலப்பிரதிகளி லெல்லா மிருத்தலின், அவை உரையாசிரியரால் எழுதப் பட்டனவல்ல வென்றும் நூலாசிரியர் களாலோ தொகுத்தாராலோ எழுதப்பட்டனவென்றும். **பதிகங்கள் உரைப்பிரதிகளில் மட்டும் காணப்படுகின்றமையால் அவற்றை இயற்றினோர் நூலாசிரியரும் தொகுத்தோரும் அல்ல** ரென்றும் தெரிகின்றன'' என்று உரைத்தலின், நூலாசிரியரோ தொகுத்தாரோ குறியாதசெயலை உரையாசிரியரோ பிறரோ குறித்தல் எங்ஙன மமையுமென ஐயம் நிகழுமாயினும் குறித்தோர் கேள்வி மாத்திரையாற் பெற்ற செய்தியாதல் கூடு மென் றெண்ணுகிறேன். இதற்கு விளக்கம் வேண்டும்.

இப்பத்தின் முதற்பாட்டில், இவர் செங்குட்டுவனை நோக்கித் 'திண்டேர் வசையில் நெடுந்தகை! ஒன்று இரண்டல்ல பல வழிகளைக்கடந்து யான் நின்னைக் காண்டதற்கு வந்தேன்'' என்று கூறி அவன் கடல்பிறக்கோட்டிய வென்றியைச் சிறப்பித்துக் கூறுகின்றார். இக்கருப்பொருட்குத் துணையாகத் தம்முடன் வருவாரையும், வழியினது ஏதமும் உடன் கூறுகின்றார்.

இத்துணைப் பொருள்களைப் பாட்டின் முதற்கண் நிறுத்தி,

''புணர்புரி நரம்பின் தீந்தொடை பழுணிய
வணர்அமை நல்யாழ் இளையர் பொறுப்பப்
பண்ணாமை முழவும் பதலையும் பிறவும்
கண்ணறுத் தியற்றிய தூம்பொடு சுருக்கிக்
காவில் தகைத்த துறைகூடு கலப்பையர்
கைவல் இளையர் கடவுட் பழிச்ச''

எனத் தன்னுடன் வரும் யாழோரையும் ஆடலில் வல்ல இளையரையும் கூறினார். இதன்கருத்து, யாழ்வல்ல இளையர் δ வணர் பொருந்திய பேரியாழ் தாங்கிவர, முழவு பதலை முதலிய பல வாச்சியங்களைத் தூம்பு என்னும் வாச்சியத்தோடு ஒருங்கு சேர்த்துக் காவடியின் ஒருபக்கத்தும் மற்றொரு பக்கத்து ஆடற்றுறைக்கு வேண்டுவன வெல்லாம் கூடிய முட்டினையும் வைத்து, ஆடற்றுறையில் வல்ல இளைஞர் தாம் செல்லும் வழிகளில் உளவாகும் ஏதம் வாராமைப் பொருட்டுக் கடவுளைப் பரவி வர தாம் வந்தார் என்பது பின்னர்

δ வணர், யாழுறுப்பினுள் ஒன்று தீந்தொடை, யாழினிசை, தொடை, யாழ்எனல், ''தீந்தொடைச் செவ்வழிப் பாலை'' (சிலப்-கானல் எனவும், ''தேவர் பண்ணிய தீந்தொடையின் சுவை'' (சிந்தா 1328) எனவும் வருதலா லுணர்க.

"மறுப்புலிக் குழூஉக்குரல் செத்து வயக்களிறு
வரைசேர்பு எழுந்த சுடர்வீ வேங்கைப்
பூவுடைப் பெருஞ்சினை வாங்கிப் பிளந்துதன்
மாயிருஞ் சென்னி அணிபெற மிலைச்சிச்
சேஎ ருற்ற செல்படை மறவர்
தண்டுடை வலத்தர் பேரெரெதிர்ந் தாங்கு
வழையமல் வியன்காடு சிலம்பப் பிளிறும்
மழைபெயல் மாறிய கழைதிரங்கு அத்தம்"

என வழியி லுளவாகும் ஏதம் கூறுகின்றார். இதன் கருத்து வயக்களிறு என்று மலையைச் சேர வெழுத்த வேங்கை மரத்தினைப் புலியின் குழுவெனக் கருதி, அதன் பூக்கள் நிறைந்த கிளையை வளைத்து முறித்துந் தன் பெரிய தலையில் அழகுபட அணிந்து (சுமந்து) முனையில் பொருந்திச் செல்லும் படை வீரர் வலத்தே தண்டேந்திப் போர்செய்ய எதிர்ந்தது போலச் சுரபுன்னைகள் நிறைந்த அகன்ற காட்டகம் ஒலிக்கும்படிப் பிளிறுவதும் மழைபெய்து மாறிய மூங்கில் திரங்கி விளங்குவதுமாகிய வழி என்பது.

இது கூறினவர், மேலே, அத்தங்கள் "ஒன்றிரண்டல பல கழிந்து, திண்டேர் - வசையில் நெடுந்தகை காண்கு வந்திசினே" எனவரும் கருப்பொருளை யமைத்துப் பின் கடல் பிறக்கோட்டிய செய்தியைச் சிறப்பிக்கின்றார்.

"○ தாவல் உய்யுமோ மற்றே, தாவாது
▲ வஞ்சின முடித்த ஒன்றுமொழி மறவர்
முரசுடைப் பெருஞ்சமத்து அரசுபடக் கடந்து
⦸ வெவ்வ ரோச்சம் பெருகத் தெவ்வர்
மிளகெறி உலக்கையின் இருந்தலை யிடித்து
⊗ வைகார்ப் பெழுந்த மைபடு பரப்பின்
எடுத்தேறு ஏய கடிப்புடை வியன்கண்
வலம்படு சீர்த்தி ஒருங்குடன் இயைந்து

○ தாவ லுய்யுமோ என்றது வருத்தத்தில் நின்று நீங்குபோஎ. று. தாவென்னும் உரிச்சொல் தொழிற்பெயர்ப்பட்டுத் தாவலென நின்றது.

▲ வஞ்சின முடித்தல் - மாற்றார் மண்டலங்களைக் கொண்டு முடித்தல்.

⌀ வெம்மை யென்னும் [வேண்டற் பொருளில் வரும்] பண்பிற்கு வெவ்வ ரென்பதும் ஒரு வாய்பாடு.

⊗ வைகார்ப்பு-ஒருகாலும் இடையறாது தங்கின ஆரவாரம். மைபடுபரப்பு-கடற்பரப்பு,

> △ காலுளைக் கடும்பிசிர் உடைய வாலுளைக்
> கடும்பரிப் புரவி யூர்ந்தநின்
> படுந்திரைப் பனிக்கடல் உழந்த தாளே.''

என்பது அப்பகுதி. இதன் கருத்து, மாற்றார் மண்டலங்களைக் கொள்வேம் என வஞ்சினங் கூறிப் பின் அது தப்பாது முடித்த வாய்மையினையுடைய வீரர் வெற்றி முரசு ஒலிக்கும் பெரும் போரின்கண் நண்பராய்த் துணைவந்த அரசர் மேன்மேலும் உயர்வு பெருகவும், பகைவராய் எதிர்த்துவந்த தெவ்வரசர்களின் பெரிய [கரிய வெனினுமாம்] தலைகளை மிளகுகளைக் கொடி களிலிருந்து உதிர்த்தற்கு வீசும் உலக்கையினால் இடித்து அவர்கள் கெடுதலால் வென்றி யெய்தவும், ஒருகாலும் இடை யறாத ஆரவாரத்தினையுடைய கருங்கடற் பரப்பில் வேலெடுத் தெறிதல் பொருந்தவும், குறுந்தடி கொண்ட அகன்ற கண்ணினை யுடைய முரசு எழுந்தொலிக்கும் வென்றிதரும் கீர்த்தி ஒருங்கே தோன்றி நிலவவும், காற்றால் விடுபட்டுப் பறக்கும் [புகைப்படலம் போல் பறக்கும்] நீர்த்துளிகளாகிய பிசிர் எங்கும் பரவும்படி ஒலிக்கின்ற அலைபொருந்திய குளிர்ந்த கடலைப் பிறக்கிட ஓட்டிய நின்னுடைய தாள்கள் வருந்துதலில் நின்று நீங்குமோ என்பதாம். இஃது உரைகாரர் குறித்த முறையே கொண்ட பொருள்.

பாட்டுக் கிடந்த முறையே காணின், மாற்றார் மண்டலங் களைக் கொண்டு முடித்த வாய்மையினையுடைய வீரர் முரசு பொருந்திய பெரியபோரின்கண் அரசர் பலரை வென்று, அவருள் நட்பு விரும்பிய வேந்தர்க்கு உயர்வு பெருகவும், விரும்பாத தெவ்வரசரின் பெரிய தலைகளை மிளகெறி உலக்கையால் இடித்து அவர் கெடவும் செய்து, அதனோடமையாது, இடை யறாத ஆரவாரத்தினையுடைய கருங்கடற் பரப்பால், எடுத் தெறிதல் பொருந்திய குறுந்தடி கொண்ட அகன்ற கண்ணினை யுடைய முரசெழுந் தொலிக்கும் வென்றிதரும் கீர்த்தி ஒருங்கு நிலவ காற்றால் விடுபட்டுப் பறக்கும் நீர்த்துளிகளாகிய பிசிர் எங்கும் பரவும்படி ஒலிக்கின்ற அலை பொருந்திய குளிர்ந்த கடலைப் பிறக்கிட ஓட்டிய, வெள்ளிய தலையாட்ட மணிந்த விரைந்த செலவினையுடைய குதிரை யூர்ந்த, தாள்கள் வருந்துதலில் நின்று நீங்குமோ என்பது பொருளாகும்.

△ காலுளை யென்றது காற்றானே உளைதலையுடைய என்றவாறு உளைதல்-விடுபடுதல்.''-ப உரை.

இனி, இதன் இரண்டாம்பாட்டு, "பெரும! நன்னுதல் கணவ! அண்ணல் யானை யடுபோர்க் குட்டுவ!" நீ கோடியர் பெருங்கிளை வாழத், தந்த கலிமாக்களை எண்ணின், அவை புணரியிற் றோன்றும் நீர்த்திவலைகளினும் பலவாம்" என்பது பொருளாக வந்தது. இதற்குப் புடைப்பொருள்களாக அமைந்தன வீரர்மறமும் கோடியர் பெருங்கிளையை யருளுதலும், வென்றி பரவுதலுமாம்.

இவற்றுள், வீரர்மறம்,

"இரும்பனம் புடையல் ஈகை வான்கழல்
மீன்தேர் கொட்பின் பனிக்கயம் மூழ்கிச்
சிரல்பெயர்ந் தன்ன நெடுவெள்ளூசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்
* அம்புசேர் உடம்பினர்ச் சேர்ந்தோ ரல்லது
தும்பை சூடாது மலைந்த மாட்சி
யன்னோர்" என வருகின்றது.

இதன்பொருள், பெரிய பனந்தோட்டாற் றொடுத்த மாலையினையும் பொன்னாற் செய்யப்பட்ட வீரக்கழலையும் மீன் கவரும் சுழற்சியினைச் சிரல் குளிர்ந்த குளத்திலே மூழ்கி எழுகின்ற காலத்து, அதன் வாயலகை ஒக்கப் புண்களை இழைகொள்கின்ற காலத்து அப்புண்ணின் உதிரத்திலே மறைந்தெழுகின்ற ஊசியின் தழும்பும், புண்ணாலாகிய வடுவும் பரந்த மார்பினையும் அம்பாலுற்ற தழும்பு சேர்ந்த உடம்பினையு முடையாராய்த் தம்மைச் சேர்ந்தாரோ டன்றி அவ்வகையின ரல்லாப் பிறரோடு "ஒத்த வீரமுடைய ரல்லர்" எனத் தும்பை சூடிப் பொருதலைச் செய்யாத மாட்சியினையுடையோர் என்பதாம்.

இனி, அதன்பின்னதாய கோடியர் பெருங்கிளையை அருளுமாறு,

"மைந்துடை நல்லமர்க் கடந்து வலந்தரீஇ
† இஞ்சிவீ விராய பைந்தார் பூட்டிச்
சாந்துபுறத் தெறிந்த தசும்புதுளங் கிருக்கைத்
தீஞ்சேறு விளைந்த மணிநிற மட்டம்

---

* இதற்கு, "அரசன் வீரரில் அம்புசேர் உடம்பினராய்த் தம்மோடு வீரம் ஒத்தாரோ டல்லாது போர்குறித்தார் தம்மோடு தும்பை சூடாமல் மாறுபட்ட மாட்சிமையுடைய என்றவாறு," பழைய உரைகாரர்,

† இதற்கு, "மது நுகர்வுழி இடையிடைக் கறித்து இன்புறுதற்பொருட்டு இஞ்சியும், மோந்து இன்புறுதற் பொருட்டுப் பூவுமாக விரவித் தொடுத்த மாலை பூட்டி, அவ்வாறு பயன்கோடற்குச் சாந்தும் புறத்தெறிந்த எ.று. பழையவுரைகாரர்.

ஓம்பா வீகையின் வண்மகிழ் சுரந்து
கோடியர் பெருங்கிளை வாழ ஆடியல்
உளையவிர் கலிமாப் பொழிந்தவை யெண்ணின்
....
மாயிருந் தெண்கடல் மலிதிரைப் பௌவத்து
வெண்டலைக் குரூஉப்பிசிர் உடையத்
தண்பல வரூஉம் புணரியிற் பலவே''.

எனச் சிறப்பிக்கப்படுகின்றது. இதன்பொருள், வலிபொருந்திய நல்ல போரைச் செய்து வெற்றிபெற்று, அதனைப் பாடும் கூத்தர்க்கு அவரது பெரிய சுற்றம் வாழ்வுறும்வண்ணம், இஞ்சிப் பூவும் பிற நறிய பூவுமாக விரவித்தொடுத்த பசிய மாலை சூட்டி புறத்தே சந்தனமும் பூசின மதுக்குடம் அசைந்தாடும் சமனில்லா இருக்கைக்கண் வைத்த மிக்க சுவை நிறைந்த நீலமணி போலும் கள்ளினைத் தனக்கென ஓம்பாது செய்யும் ஈகைக்குணத்தால். மிகத்தந்து அதன்மேலும் கொடுக்கப்பட்ட வெற்றியுறும் தலை யாட்டத்தால் பொலியும் குதிரைகளை எண்ணியறியலுறின், அவை அளவுபடாமையான், பெரிய கரிய தெளிந்த கடலின் நுரையின் நிறம் பெற்ற பிசிர் எங்கும் பரவத் தண்ணியவும் பல வுமாய் வரும் அலைகளினும் பலவாகும் என்பது.

இனி, இதன்கட்கோடியர் பாடுதற்குப்பொருளா யமைந்த வென்றிச் சிறிப்பினை,

''மன்பதை மருள அரசுபடக் கடந்து
முந்துவினை யெதிர்வரப் பெறுதல் காணியர்
ஒளிறுநிலை யுயர்மருப் பேந்திய களிறுஊர்ந்து
மான மைந்தரொடு மன்னர் ஏத்தநின்
தேரொடு சுற்றம் உலகுடன் மூய''

என்பதனாற் கூறுகின்றார். இதன்பொருள், காணும் மக்கள் மருட்சி கொள்ளும்படி எதிர்த்த அரசர் கெடவென்று அவர் முன்னுற்ற போர்ச்செயலை எதிர்பெய்துகொண்டுவர, அதனை ஏற்றுப் பெறுதலைக் காண்டதற்கு மன்னர் பலர் மானமுடைய வீரருடன் விளக்கமுறும் நிலையினையுடைய உயர்ந்த கொம் பேந்திய யானையேறிப் போந்து ஏத்துதலைச் செய்ய, (பரவி வாழ்த்த எனினுமாம்) நினக்குச் சுற்றமாயினார் தேருடன் உலகுமுற்றும் நெருங்க, கோடியர்க்கு மாப் பொழிந்தனை என்பதாம்,

இனி, இதன்மூன்றாம் பாட்டுள், ஆசிரியர் பரணர், ''போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ ! தொலையாக் கற்ப! வண்கை வேந்தே ! ஏறாவேணியெனச் சிறப்பிக்கப்பெறும் கோக்காலியின்மேல்வைத்த குடத்திலுள்ள கள்ளினைக் கூத் தருண்டு மகிழும் நின் ஆரவாரமான மகிழ்ச்சிக்கண் நின்செல்வ நிலை கண்டேம்'' என்று கூறுகின்றார். இதற்குத்துணையாக, அவனது தானையின் செயலும், அவனது வள்ளன்மையும் உடன்சிறப்பிக்கப்பெறு கின்றன. இவற்றுள் தானையின்செயல்,

''கவரி முச்சிக் கார்விரி கூந்தல்
ஊசல் மேவற் சேயிழை மகளிர்
உரல்போற் பெருங்கால் இலகுவாண் மருப்பின்
பெருங்கை மதமாப் புகுதரின், அவற்றுள்,
விருந்தின் வீழ்பிடி எண்ணுமுறை பெறாஅக்
கடவுள் நிலைஇய கல்லோங்கு கெடுவரை
வடதிசை யெல்லை இமய மாகத்
தென்னங் குமரியொடு ஆயிடை அரசர்
முரசுடைப் பெருஞ்சமம் ததைய ஆர்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த
போரடு தானை''

எனவருகின்றது. இதன்பொருள், கல்மிக்க உயரியமலையாகிய இமயம் வடதிசை யெல்லையாக, தென்திசைக்கண்ணதாய குமரி தென்திசை யெல்லையாக, இவற்றில் இடைப்பட்ட அரசர்களின் உயர்த்துச்சொல்லப்படும் நாடுகள் எல்லாவற்றையும் முரசுடைய பெரும்போரில்சிதைவுறும்படி ஆரவாரமெழவெதிர்த்து அவற்றின் பண்டையழகுகெடுத்த போர்செய்யும் தானை என்பது. இங்கு, நெடுவரையாகிய இமயத்தைச் சிறப்பிப்பார். அது, கொண்டையிட்ட, கருத்துவிரிந்த, கவரிபோலும் கூந்தலும் ஊசலாட்டு விருப்புமுடைய செம்மையான இழையணிந்த மகளிர், உரல் போன்ற பெருங்காலும், விளங்கும், ஒளிபொருந்தியகொம்பும், பொருகின்ற கையும், மதமுமுடைய யானைகள் புகுந்தால், அவற்றின் தொகை யெண்ணிலடங்காமையால் தமக்கு விருந்தாகித் தாம் விரும்பும் பிடிகளையேயெண்ணி, அவற்றின் தொகையையும் நூறு, ஆயிரம், இலக்கம், கோடி, சங்கம், பற்பம் எனும் எண்ணுமுறைக்குள் அடக்கவியலாத அத்துணை யானைகளையும், கடவுளர் தங்கும் நிலைகளுமுடையதாகும் என்றார்.

இனி, அவனது வள்ளன்மையை விளக்கும்பகுதி

"இரும்பணை திரங்கப் பெரும்பெயல் ஒளிப்பக்
குன்றுவறங் கூரச் சுடர்சினம் திகழ
அருவி யற்ற பெருவறற் காலையும்
அருஞ்செலற் பேராற் றிருங்கரை யுடைத்துக்
கடியேர் பூட்டுநர் கடுக்கை மலைய
விரைவில் அதிர்சிலை முழங்கிப் பெயல்சிறந்[து]
ஆர்கலி வானம் தளிசொரிந் தாஅங்[கு]
உறுவர் ஆர ஓம்பா துண்டு
நகைவர் ஆர நன்கலம் சிதறி
ஆடுசிறை யறுத்த நரம்புசேர் இன்குரல்
பாடு விறலியர் பல்பிடி பெறுக
துய்வீ வாகை நுண்கொடி யுழிஞை
வென்றி மேவல் உருகெழு சிறப்பின்
கொண்டி மள்ளர் கொல்களிறு பெறுக
மன்றம் படர்ந்து மறுகுசிறைப் புக்குக்
கண்டி நுண்கோல் கொண்டுகளம் வாழ்த்தும்
அகவலன் பெறுக மாவே".

என்பது, இதன்பொருள், பெரியவயல்கள் உலரும்வண்ணம் மழை பொய்த்தலானும், குன்றுகள் வறியவாமாறு ஞாயிற்றின் வெயில் தெறுதலானும், அருவிகள் நீரற்றொழிந்த பெரிய வற்கடகாலத்தும், அரிய செலவினையுடைய நீர் நிறைந்த பெரியயாற்றின் கரையை யுடைத்துக் கூரிய ஏரினால் உழுவோர் கொன்றை மலரைச் சூட வரையின்கண் வில்லிட்டு அதிர்கின்ற சிலைத்தற் றொழிலோடு முழங்கி நீர்மிகுந்து நிறைந்த கலிப்புடைய மேகம் மழைபெய்தாற்போலத் தன்னையுறுவோர் உணவினையொழியாது ஆர உண்பித்தும், உண்டு மகிழ்வோர் மனங்கொள்ள நல்ல கலன்களை நிறைய வழங்கியும், கின்னரமென்னும் புள்ளின் இசையெழுகின்ற சிறகினைத் தோற்பித்த யாழ் நரம்பினது இனிய குரலாற்பாடும் விறலியர், பல பிடி யானைகளைப் பெறுக என்றும், துய்ப்பொருந்திய வாகைப்பூவினை முடிவிலேயுடைய நுண்ணிய கொடியாகிய உழிஞையைச் சூடிய வென்றி விரும்பும் உட்குப் பொருந்திய சிறப்பினையுடைய கொள்ளையாடும் வீரர் கொல்களிறுகளைப் பெறுக என்றும்; பொதுவிடங்களையுள்ளித் தெருக்களினிடமாகப் புகுந்துசென்ற கணுக்களையுடைய நுண்ணிய பிறப்புணர்த்துங்கோலாகிய மூங்கிலேந்திப் போர்க்களம்வாழ்த்தி அதன்கட் பெற்ற வென்றியைப்பாடும் பாணன் குதிரைகள் பெறுக என்றும் வழங்குதல் என்பது.

இனி இதன் நான்காம்பாட்டு நெடுங்காலம் வாழ்க என வாழ்த்து முகந்தான், "அண்ணால், நின்னை யெல்லா வீரரும் சொல்லிப் புகழ்தற்குக் காரணமாகிய யாக்கையாகிய, மிக்கவலி பொருந்தி, நோயின்றியன்ற உடலினைப் பாடுமகள் காண்பாளாக. ஏனைப் பறந்தலையும் மன்னர் பலரை மறைத்த தாழிகள் நிறைந்த வன்னிமரத்துப் பொதுவிடத்து விளங்கும் இடுகாடும் காணாதொழியுமாக" என்று கூறி, இவன் பாடுமகட்கு நன்கலம் வழங்குமாறும், அறுகை யென்பானைத் தழுவி மோகூர் மன்னனை வென்ற வரலாறும், பிறவுங் கூறுகின்றது

இவற்றுள், இவன் பாடுமகட்கு நன்கலம் வழங்குமாறு,
"நிலம்புடைப் பன்னவர்ப் பொடுவிசும்பு துடையூ
வான்றோய் வெல்கொடி தேர்மிசை நுடங்கப்
பெரிய வாயினும் அமர்கடந்து பெற்ற
அரிய வென்னாது ஓம்பாது வீசிக்
கலம்செலச் சுரத்தல் அல்லது கவினும்
களைகென அறியாக் கசடில் நெஞ்சத்(து)
ஆடுநடையண்ணல்நிற் பாடுமகள் காணியர்"

என வருதலாலுணரப்படும். இதன்பொருள், நிலத்தை மோதினாற்போலும் ஆர்ப்பினோடு விசும்பளாவ வுயர்ந்த தேர்மீது விசும்பின் கட்டோயும் வெற்றிக் கொடியசைய, கடத்தற்கரிய பெருமையுடையவாயினும் அவ் வமர்க்கண் வென்றுபெற்ற பொருள்கள் பெறுதற்கரியவாம் என்று கருதித் தனக்காமென ஓம்பாது வழங்கித் தன் மார்பிலணிந்த கலன்களையும் கொடுத்ததே யன்றிக் கவினையும் களைந்து ஈக என விரும்பின், அதன் நீங்ககில்லாமையை யுணராது அது செய்தற்குத் தொடங்கிய குற்றநில்லாத நெஞ்சமும், அசைந்த நடையுமுடைய அண்ணால் நின் உடலழகை நின்னைப் பாடுமகள் காண்பாளாக என்பது. எனவே, பாடுமகள் இவனைக் கண்டு பாடலும், அவட்கு இவன் போரின்கண் வென்றுபெற்ற அணிகலன்களையும் தான் அணிந்திருந்த அணிகலன்களையும் ஈதலும். அவற்றோடமையாது அவள் அவன்றன் மேனியழகை விரும்புதலும் பிறவும் இதன்கண் விளங்க உரைக்கப்பட்டனவாம்.

அறுகை யென்பானைத் தழுவிக் கோடலும் மோகூர் மன்னனை வென்ற வரலாறும்,

"நுண் கொடியுழிஞை வெல்போர் அறுகை
சேண னாயினும் கேளென மொழிந்து
புலம்பெயர்ந் தொளிந்த களையாப் பூசற்(கு)

அரண்கள் தாவுறீஇ அணங்குநிகழ்ந் தன்ன
மோகூர் மன்னன் முரசங் கொண்டு
நெடுமொழி பணித்தவன் வேம்புமுதல் தடிந்து
முரசுசெய முரச்சிக் களிறுபல பூட்டி
ஒழுகை யுய்த்த (ஆடு நடை அண்ணல்)''

என்பதனால் கூறப்படுகின்றன. இதன் பொருள், நுண்ணிய உழிஞைக்கொடியணிந்த வெல்கின்ற போரினையுடைய அறுகையென்பான் நெருங்கப்போந்து துணைசெய்ய வியலாத சேணிடத் திருந்தானாயினும் அவனைத் தனக்கு நண்பனாவான் எனத் தழுவிக்கொண்டு. இடம் பெயர்த்து சென்று ஒளித்திருந்து செய்தமாற்ற வொண்ணாத வருத்தத்தின் பொருட்டு மோகூர் மன்னனுடைய அரண்களை யழித்தற்றொழிலைத் தானே மேற் கொண்டு, தெய்வமருள் உற்றான்போல் வீரமருள் உற்று அவன் (மோகூர் மன்னன்) வெற்றி முரசைக் கைப்பற்றி, அவன் கூறிய வஞ்சினத்தைப் பொய்ப்பித்து, அவனையும் பணிவித்து, காவல் மரமாகிய வேம்பினையும் அடியோடே தடிந்து, முரசு செய்தற் பொருட்டுத் துண்டஞ் செய்து யானைகள் பல பூட்டி வண்டியிற் செலுத்திய ஆடு நடையண்ணல் என்பது.

இனி, இப்பத்தின் ஐந்தாம்பாட்டு இவன்கடல்பிறக் கோட்டிய செய்தியை வியந்து, இத்தகைய அரியசெயலைச் செய்தமன்னர், நினக்கு முன்னிருந்த மன்னருள் ஒருவருமிலர், பின்னும் ஒருவருமிலர் என்பதை, "எழுமுடி மார்பின் எய்திய சேரல்! முழங்குதிரைப் பனிக்கடல் மறுத்திசினோர் மன்னர் இனியாருளரோ! நின்முன்னுமில்லை'' என்று கூறுகின்றது. இது, "பொலம்பூந் தும்பைப் பொறிகிளர் தூணி'' என்று தொடங்கி, "எழுமுடி மார்பின் எய்திய சேரல்'' என்பது வரையில் ஒருபகுதியாகவும், "குண்டுகண் அகழிய மதில்பல கடந்து'' என்பது முதல், "அனைய பண்பிற்றானை மன்னர்'' என்பது வரையில் ஒருபகுதியாகவும், எஞ்சியது கடல்பிறக் கோட்டிய வனப்பினைக் கூறும் பகுதியாகவும் அறைந்துள்ளது.

இவற்றுள், முதற்பகுதி,

"பொலம்பூந் தும்பைப் பொறிகிளர் தூணிப்
புற்றடங் கரவின் ஒடுங்கிய அம்பின்
நொசிவுடை வில்லின் நொசியா நெஞ்சிற்
களி(று)எறிந்து முரிந்த கதுவாய் எஃகின்
விழுமியோர் துவன்றிய அகன்கண் ஞாட்பின்

எழுமுடி மார்பின் எய்திய சேரல்'' என வருகின்றது. இதன்பொருள், பொன்னாற்செய்த பூவாற்றொடுத்த தும்பை மாலையும், புள்ளிகள் பொருந்திய தூணியும் புற்றின்கண் அடங்கியிருக்கும் பாம்புபோல் ஒடுங்கியுள்ள அம்புகளும், அவற்றைத் தொடுக்குந்தோறும் துவளுநலையுடைய வில்லும் அவ்வாறு துவளுதலில்லாத நெஞ்சமும், களிறுகளைத் தாக்குதலால் முரிந்து வடுப்பட்ட வேலுமுடைய சீரிய வீரர் நெருங்கிய அகன்ற போர்க்களத்வதப்பெற்ற, "ஏழரசைவென்று அவர்களுடைய ஏழுமுடியாலும் செய்ததோர் ஆரத்தையணிந்த மார்பினையுடைய'' சேரமானே என்பது.

இரண்டாவது பகுதி, இச்செங்குட்டுவற்கு முன்னிருந்த மன்னரது சிறப்பினை விளக்குகின்றது. அது,

"குண்டுகண் அகழிய மதில்பல கடந்து
பண்டும் பண்டும்தாம் உள்ளழித் துண்ட
நாடுகெழு தாயத்து நனந்தலை யருப்பத்துக்
கதவம் காக்கும் கணையமுழு வன்ன
நிலம்பெறு திணிதோள் உயர வோச்சிப்
பிணம்பிறங்(கு) அழுவத்துத் துணங்கையாடிச்
சோறு வே(று) என்னா ஊன்றுவை யடிசில்
ஓடாப்பீடர் உள்வழி இறுத்து
முள்ளிடு(பு) அறியா ஏணித் தெவ்வர்
சிலைவிசை யடங்கிய மூரிவெண்டோல்
அனைய பண்பிற் றானை மன்னர்
இனியார் உளரோநின் முன்னும் இல்லை.'' என்பது

இதற்குப் பொருள், ஆழ்ந்த இடம் பெற்ற அகழி சூழ்ந்த மதில் பல கடந்து முன்னும் முன்னும் தாம் உள்புகுந்து அழித்துக் கொள்ளையாடிய நாடு பொருந்திய உரிமையுற்ற அரண்களின் நடுவில் திண்ணிய கதவுகளைத் திறக்காவகையில் தடுக்கும் கணைய மரமாகிய எழுப்போன்ற,மாற்றார் நிலங்களைக் கவரும் வலிய தோளை உயரச் செலுத்திப் பிணம் நிறைந்த களத்திலே துணங்கைக் கூத்தாடி, ஊனைத் துவைத்துச் சமைத்த சோறு வேறு என்றும் கருதாது ஏற்கும், புறங் கொடுத்து ஓடாத பெருமைபெற்ற வீரர் உள்ளடங்கிய இடங்களை முற்றியிருந்து முள்ளிட்டிருத்தலால் ஏறப்படாத ஏணியினையுடைய பகைவர் களின் சிலையின் வேகத்தை யடக்கிய வலிய வெண்மையான தோற் கேடகம் போலும் பண்புகொண்ட தானையையுடைய மன்னர் நினக்கு முன்னுமில்லையாகலின், இனியாவர் உளரா

வரோ என்பதாம். "தோல் அனைய பண் பென்றது, தான் அம்புபடில் தளராது பிறர்க்கு அரணமாகும் தோற்கடகு போன்ற பண்பு என்றவாறு."

இனி, கடல் பிறக் கோட்டிய வனப்பு,

"மழைகொளக் குறையாது புனல்புக நிறையாது
விலங்குவளி கடவும் துளங்கிருங் கமஞ்சூல்
வயங்குமணி யிமைப்பின்வேல் இடுபு
முழங்குதிரைப் பனிக்கடல் மறுத்தி சினோரே"

என வருகின்றது. இதன் பொருள், முகில் முகத்தலாலும், யாறு களின் வழியே நீர் மிகுதலாலும் முறையே குறைதலும் நிறைதலும் செய்யாது விலங்குகின்ற காற்றால் அலைக்கப்படும் முழங்கும் அலைகளையுடைய குளிர்ந்த கடலின்கட்புகுந்து அசைகின்ற பெரியசூல் நிறைந்த மேகத்தின் மணிபோல் ஒளிவிடும். மின்ன லை ஒத்த வேலைச் செலுத்தி, கடற்கண் ஒரு வினை செய்தல் அரிதென்னும் சொல்லை மறுத்து அதனைச் செய்து முடித் தோர், என்பதாம். இதன்கண், "மணியிமைப்புப் போலும் மின்னுக்கு மணியிமைப்பு என்பது பெயராயிற்று."

இனி ஆறாம்பாட்டு மகளிர் பாட, அவர்க்குச் செங்குட்டு வன் இனியகள் வழங்குவதும், கடலோட்டியதும் கூறுகின்றது. இவற்றுள்,

"இழையர் குழையர் நறுந்தண் மாலையர்
சுடர்நிமிர் அவிர்தொடி செறித்த முன்கைத்
திறல்விடு திருமணி யிலங்கு மார்பின்
வண்டுபடு கூந்தல் முடிபுனை மகளிர்
தொடைபடு பேரியாழ் பாலை பண்ணிப்
பணியா மரபின் உழிஞை பாட
இனிதுபுறந் தந்தவர்க்(கு) இன்மகிழ் சுரத்தலின்
வெல்புகழ்க் குட்டுவற் கண்டோர்
செல்குவ மென்னார் பாடுபு பெயர்ந்தே"

எனவரும் இஃதவன் கள் வழங்குதலைக் காட்டுவது. இதன் பொருள், இழையும், குழையும், நறிய தண்ணிய மாலையும், சுடர் விட்டு விளங்கும் தொடியணிந்த முன்கையும், வலிய ஒளி பொருந்திய அழகிய மணிகிடந்து விளங்கு மார்பும், வண்டு மொய்த்த கூந்தலிலிட்ட முடியுமுடைய மகளிர் இசைமிக்க பேரியாழில் செவ்வழிப் பாலையென்னும் பண்ணையியக்கிப்

பிறரைப் பணியுமுறைமைத்தல்லாத உழிஞைத் திணைக்குரிய உழிஞைப்பண்ணினோடு கூட்டிப்பாட, அவர்களையினிது ஏற்றுப் பேணி, இனிய கள்ளினை அவர்கட்கு வழங்குதலால், அவனைக் காண்போர் பாடிப்பெயர்ந்து செல்குவமென்று சொல்லார். எனவே, அவனிடத்தேயிருக்க விரும்புவார் என்பதாம். அவன் கடல்பிறக்கோட்டிய செய்தி, இப்பாட்டினுள்,

> ''சுரம்பல கடவும் கரைவாய்ப் பருதி
> ஊர்பாட் டெண்ணில் பைந்தலை துமியப்
> பல்செருக் கடந்த கொல்களிற் றியானைக்
> கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்(டு)
> உடைதிரைப் பரப்பிற் படுகட லோட்டிய
> வெல்புகழ்க் குட்டுவன்''

என்ற அடிகளால் கூறப்பெறுகின்றது. இவற்றின்பொருள், போரிடங்கள் பலவற்றினும் கடந்துசெல்லும் குருதிக்கரை படிந்த உருளைகளையுடைய தேர்ஊர்கின்ற பாட்டையில், யானைப் போர்க்கு அஞ்சி ஒளித்த மறவர்களின் பசியதலைகள் ஆழியின் கீழ்ப்பட்டு நசுங்க, பலவாகிய போர்களில் வென்ற பகை கொல்லும் யானைகளையும், சங்குமுழங்கும் கடல் கலங்குமாறு வேலைச்செலுத்திக்கரையையுடைக்கும் அலைமிக்க அதனைப் பிறக்கிடச் செய்த வெல்கின்ற போராற்பெறும் புகழையுமுடைய குட்டுவன் என்பது.

இனி, ஏழாம்பாட்டின்கண் நகரின்சிறப்பும் குட்டுவன் இயல்பும் கூறப்படுகின்றன. இவற்றுள், ''அட்டானானே குட்டுவன், அடுதொறும் - பெற்றானாரே பரிசிலர்களிறே........ தொன்னகர் வரைப்பின்அவன் உரை யானாவே'' என்பன குட்டுவன் இயல்பும் புகழும் விளக்குவனவாம். இவ்வடிகளின் பொருள், செங்குட்டுவன் போரில் அடுந்தோறும், போரைச் செய்து அமைந்திரான்; அவன் புகழ் பாடும் பரிசிலர் களிறுகளைப் பெற்றும் அவற்றோடு அமையார்; அவனுடைய பழையநகளிடங்களில் அவன்புகழ்கள் அமையாவாய்யாண்டும் பரவும்'' என்பதாம்,

நகர்ச் சிறப்பு,

> ''வரைமிசை யிழிதரும் அருவியின் மாடத்து
> வளிமுனை யவிர்வருங் கொடிநுடங்கு மறுகிற்
> சொரிசுரை கவரு நெய் வழிபு உராலிற்
> பாண்டில் விளக்குப் பரூஉச்சுடர் அழல
> நன்னுதல் விறலியராடும்
> தொன்னகர்.'' என வருகின்றது.

இதன் பொருள், மலையினின்றிழியும் அருவிகளைப் போல மாடங்களில், காற்றின் முன் விளங்கும் கொடிகள் அசைகின்ற தெருக்களில் நெய் சொரியும் உட்சந்து பொருந்திய திரிக் குழாய், தான் ஏற்றுக்கொண்ட நெய் வழிந்து திரியில் உலவுதலால், கால் விளக்குகளில் பருத்த சுடர்விட்டு எரிய, அவற்றின் ஒளியில்தம் ஆடல் பாடல்களுக் கேற்ப நூலுட் சொல்லப்பட்ட அழகையுமுடைய நன்னுதல் பெற்ற விறலியர் ஆடும் பழைமையான நகர் என்பதாம்.

இனி, இதன் எட்டாம்பாட்டுச் செங்குட்டுவனை வாழ்த்துதலே பொருளாக அமைந்துள்ளது. இவ்வாழ்த்தினைக் கூறுவார் முதற்கண், இவன் கடலொடுபொருது, ஆண்டுப் பெற்ற பொருளைப் பாணர் விறலியர்க்கு ஈதலும், பின்னர், பெருந்துறையின் சிறப்பும்கூறுகின்றார். இதன் கருக்கொண்ட பொருள், கடலொடுஉழந்த பனித்துறைப்பரதவ! பல்பொறி மார்ப! நின் பெயர் காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவாகிய காலம் நின்றுநிலவுமாக என்பது.

இதன் முதற்பகுதி,

''பைம்பொற் றாமரை பாணர்ச் சூட்டி
ஒண்ணுதல் விறலியர்க் காரம் பூட்டிக்
கெடலரும் பல்புகழ் நிலைஇ நீர்புக்குக்
கடலொ டுழந்த பனித்துறைப் பரதவ! ⊗
ஆண்டுநீர்ப் பெற்ற தாரம் ஈண்டிவர்
கொள்ளாப் பாடற்(கு) எளிதின் ஈயும்
கல்லாவாய்மையன் இவனெனத் தத்தம்
கைவல் இளையர் நேர்கை நிரைப்ப
வணங்கிய சாயல் வணங்கா ஆண்மை
முனைசுடு கனையெரி எரித்தலிற் பெரிதும்
இதழ்கவின் அழிந்த மாலையொடு சாந்துபுலர்
பல்பொறி மார்ப! δ நின் பெயர்வா ழியரோ,''

⊗ ''பரதவ என்றதனாற் சொல்லியது, அக்கடலின் உழத்தற்றொழில் ஒப்புமைபற்றி அக்காடற்றுறைவாழும் நுளையர்க்குப் பெயராகிய பரதவன் என்னும் பெயரான் இழித்துக் கூறினான்போலக் குறிப்பான் உயர்த்து வென்றி கூறினானாகக் கொள்க''—ப.உரை.

δ ''அம்பகட்டு மார்பின், செம்பொறி'' என்ற முருகாற்றுப் படையடியின் உரையைக் காண்க.

என்பது. பசிய பொன்னாற் செய்யப்பட்ட தாமரையைப் பாணர்க் குச்சூட்டி, ஒள்ளிய நுதலினையுடைய விறலியர்க்கு மாலைகள் அணிந்து, அழியாத பலவாகிய புகழ்நிறுவி, நீரின்கட்புகுந்து கடலொடு பொருதுநின்ற குளிர்ந்த துறையினையுடைய பரத வனே! "கடலுட் போர்செய்து அரிதிற்பெற்ற பொருளை எளிதாக மனங்கொள்ளாப் பாடலையுடையதாய் போதாதார்க்கு கொடுக்கும் கல்லாததன்மையை உண்மையாகவுடையவன் இவன் என இழித்துக் கூறற்கேற்பக் கைவல் இளையர் அடை வேதத்தம் கையைச் சுட்டி நிரைக்கும்படி இரவலரிடத்து வணக் கத்தைப் புலப்படுத்தும் மென்மையும், மானத்தால் வணங்காத ஆண்மையுமுடையனாய்ப் பகைவர்முனையிடங்களை மிக்க எரிகொளுத்துதலால் இதழ்கள் பெரிதும்வாடி அழகிழந்த மாலை யோடு பூசியசாந்தும் புலர்ந்துள்ள உத்தம இலக்கணமென்ற பலவாகிய வரிகள் மூன்றும்பொருந்திய மார்பினையுடையவனே! நின்பெயர் நின்று நிலவுமாக என்பது. இதன் பொருளாகும்.

இதன் பிற்பகுதி,

''நின்மலைப் பிறந்து நின்கடல் மண்டும்
மலிபுனல் நிகழ்தரும் தீநீர் விழவின்
பொழில்வதி வேனிற் பேர்எழில் வாழ்க்கை
மேவரு சுற்றமோ(டு) உண்டினிது நுகரும்
தீம்புன லாய மாடும்
காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே''

என்பது. இதன்பொருள் நினக்குரிய மலைக்கண்ணே பிறந்து, நின்னுடைய கடலைச்சென்று சேரும் யாறுகளிலே புதிதாக வருகின்ற இனிய புதுநீர் விழாக்காலத்து, வேனில் வெப்பத் தால் மனையில்வைகாது பொழில்களிலேவதியும் பெரிய செல்வ அழகையுடைய இல்வாழ்க்கையை விரும்பும் சுற்றத்தாரோடு அச்செல்வப்பயன்களெல்லாம் நுகர்ந்து மகிழ்கூரும் புனலாடு மாயத்தார் ஆடலயரும் காஞ்சிமரங்கள் நின்றபெரிய துறைக் கண்ணுள்ள மணலினும் பலவாகியகாலம் நின்பெயர் வாழியரோ என்பது.

பகுதி - பதின்நான்கு

கரிகாலன் :-

இவன் சோழநாட்டிற் சிறந்த அரசுபுரிந்து வந்த பேரரசன் என்பதும், இவன் தந்தை உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி யென்பதும், இவன் இளமையிற் கருவூரில் தன் அம்மான் இரும் பிடர்த் தலையாருடன் இருந்த காலை, சோழநாடு அரசிழந்து

அலமர கழுமலத்திலிருந்த சான்றோர் சிலர் அரசுவாவொன் றனுப்பி இவனைக் கொணர்வித்துத் தமக்கு அரசனாக்கிக் கொண்டமையும், அரசாட்சியில், தன்னையிளையனெனக் கருதிய சான்றோர் உவப்ப முறை செய்தமையும், நாங்கூர் வேளிடை மகட்கொண்டு ஆதிமந்தியென்னும் பெண் மகளைப் பெற்றதும், உறையூரினின்றும் போந்து காவிரிப்பூம் பட்டினத் தைத் தலை நகராக்கிக் கொண்டமையும், வெண்ணி, வாகை முதலிய விடங்களில் தன்னையெதிர்த்த வேந்தர் வேளிர் முதலிய பலரைவென்றதும், நாட்டின் கட் காடுகொன்று நாடாக் குதல், குளம்தொட்டு வளம்பெருக்குதல் முதலிய அருஞ்செயல் களால் நாடு வளம் பெறச் செய்தமையும், காவிரிக்குக் கரைகட்டி அதன் பெருக்கினைப் பயன்படுத்தினதையும் பிறவற்றையும் முன்னர் விரித்துரைத்திருத்தலின், இங்கு இவனை ஆசிரியர் பரணர் தம் பாட்டுக்களாற் சிறப்பித்த திறம்மட்டில் கூறப்படு கின்றது,

ஆசிரியர் பரணர் இவன் தந்தையாகிய சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியைப் புறத்தில் "வாள், வலந்தர மறுப்பட்டன" என்று தொடங்கும் பாட்டிலும், இவனை அகத்தில், "அரம்போழவ்வளை தோள்நிலைநெகிழ" என்றும் "பிணர் மோட்டுநந்தின் பேழ்வாயேற்றை" என்றும் தொடங்கும் பாட்டுகளிலுஞ் சிறப்பித்திருக்கின்றார்,

இப்பாட்டுக்களுள் "வாள், வலந்தர மறுப்பட்டன" என்ற பாட்டில் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின் வாள், தாள் தோல், குதிரை, யானை முதலியவற்றின் இயல்புகூறி, "நீ, இவ் வியல்பினையுடையையாகையால் நின்னை சினப்பித்தவருடைய நாடு தாயில்லாத குழந்தையைப்போல ஒழிவின்றி வருந்தியழும்" என்பார்,

> "அனையை யாகன் மாறே.........
> ஓவாது கூஉம் நின் உடற்றியோர் நாடே"

என்று பாடுகின்றார்.

இனி, இவனேந்தியவாள், "வாள் வலந்தர மறுப்பட்டன. செவ்வானத்து வனப்புப் போன்றன" என்று சிறப்பிக்கப்படு கின்றது. இதன்பொருள் :- பகைவரைக் கோறலால் குருதிக்கறை படிந்து சிவந்து தோன்றும் வாள் செவ்வானத்தின் அழகு பெற்றது என்பது. போர்க்களம் புகுந்து பகைவர் சேனையைச் சாடுங்கால் நின்றும், பெயர்ந்தும், ஓடியும் பொருதலின், காலில்

அணிந்த சுழல்கள் தம் அருப்புத் தொழில் தேய்வுற்று, கொல் லேற்றின் கோடுகளை யொத்தன என்பார், "தாள் களங்கொளக் கழல் பறைந்தன, கொல்ல் ஏற்றின் மருப்புப் போன்றன ''என்றும் இவன் கைக்கண் எடுத்த கேடகம், பகைவர் விடும் பலவாய அம்புகளால் துளைப்பட்டு, விற்பயிற்சி புரிவோர் பழக தற்குத் தொடுத்து நிறுவிய இலக்கத்தை யொத்தது என்பார், "தோல் துவைத்தம்பின் துளைதோன்றுவ நிலைக்கு ஒராஅ இலக்கம் போன்றன'' என்றும் குதிரைகள் எதிரியை எறிதற் குரிய காலம் நோக்கி இடமாகவும் வலமாகவும் செலுத்தப்பட்டுச் செல்வன, முகக்கருவியாற்றேய்ந்து குருதிதோன்றிய வாயை யுடைமைபால் மான் முதலியவற்றின் கழுத்தைக் கவ்வி உதிரம் உவற்றியுண்ட புலிகளை யொத்தன என்பார்,, மாவே, எறி பதத்தான் இடங்காட்டக் கறுழ் பொருத செவ்வாயான், எருத்து வவ்விய புலிபோன்றன'' என்றும், யானைகள், பகைவரின் மதிற் கதவுகளை முறித்துவெகுண்டு உலாவுவன நுனைதேய்ந்த வெளிய கொம்புகளையுடையவாகையால் உயிருண்ணும் கூற்றை யொத்தன என்பார், "களிறு, கதவெறியாச் சிவந்துராஅய், நுதிமழுங்கிய வெண்கோட்டான் உயிருண்ணும் கூற்றுப் போன்றன'' என்றும், நீ தான், அசைந்த தலையாட்டமணிந்த கதியையுடைய குதிரையாற் பூட்டப்பட்ட பெற்றேரின் மேலே பொலிவொடு தோன்றுதலால் கரிய கடலின் கண்ணே ஓங்கியெழு கின்ற செய்ய ஞாயிற்றினது ஒளியையுடையை'' என்னும் பொருளில். "நீயே, அலங்குளைப் பரீஇயிவுளிப், பொலந்தேர் மிசைப் பொலிவுதோன்றி, மாக்கடன் நிவந்தெழுதரும், செஞ் ஞாயிற்றுக் கவினை மாதோ'' என்றும் கூறினார்.

இதன்கண், "வாள், வலந்தரமறுப்பட்டன, செவ்வானத்து வனப்புப் போன்றன'' என்பது முதல், "நீ செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ'' என்பது வரை, மன்னவன் புகழையும், "நின்னை உடற்றியோர் நாடு, தாயில் தூவாக் குழவிபோல, ஓவாது கூவு'' மென்றது, இவனைப் பகைத்தோர் நாடு கெடுவது குறித்து இரங்குதலையும் குறித்தலின், இது "குன்றாச் சிறப்பின் கொற்ற வள்ளை'' யென்ற துறைக்கண் அடங்கும்.

இனி, "அரம் போழ்வ்வளை தேர்ணிலை நெகிழ'' என்னும் பாட்டு அகத்தில் தலைமகன் வினைமுற்றி மீண்டமை தோழி யுணரத் தலைமகள் சொல்லிய துறைப் பொருண்மை யறியக் கிடக்கின்றது.

இதன்கண், தலைவி யொருத்தி இராப் பொழுதின்கண் வாடைக் காற்று வீசுதல் கண்டு, அதனை முன்னிலை யாக்கி, அது தனக்குச் செய்யும் வருத்தத்தையும், அதனை நீக்கவல்ல தலைவன் விரைந்து வந்தவிடத்து இவ்வாடையின் குளிர் தனக்கு வருத்தம் செய்யலாகாமை குறித்து அவ்வாடை வாளாதே ஓடுமென்றும் கூறி, அதற்குக் கரிகாலன்முன் போர் குறித்து நின்ற வேந்தர் முதுகிட்டோடியதனையும் கூறுகின்றாள். இக் கூற்றில் முற்பகுதி வாடையை முனிந்து கூறுவனவும், பிற்பகுதி கரிகாலன் முன்னர் வேந்தர் வெந்நிட்டோடினமையும் உணர்த்துவனவாம். அம்முதற் பகுதி,

"அரம்போ ழுவ்வளை தோணிலை நெகிழ
நிரம்பா வாழ்க்கை நேர்தல் வேண்டி
ஈர்ங்கா ழன்ன வரும்புமுதி ரீங்கை
ஆலி யன்ன வால்வீதா அய்
வைவா லோதி மையண லேய்ப்பக்
கோளுறு குவளைப் போதுபிணி யவிழப்
படாஅப் பைங்கண் பாவடிக் கயவாய்
கடாஅ மாறிய யானை போலப்
பெய்து வறிதாகிய வோங்குசெலற் கொண்மூ
மைதோய் விசும்பின் மாதிரத் துழிதரப்
பனியடூஉ நின்ற பானாட் கங்குல்
தமியோர் மதுகை தூக்காய் தண்ணென
முனிய வலைத்தி; முரணில் காலைக்
கைதொழு மரபிற் கடவுட் சான்ற
செய்வினை மருங்கிற் சென்றோர் வல்வரின்
* * * *

ஓடுவை மன்னால் வாடை! நீ யெமக்கே" (அக. 125)

என்பது. இதன்பொருள், ஏ, வாடையே! குளிர்ந்த விதை போலும் அரும்பு நிறைந்த ஈங்கைப்புதர் ஆலங்கட்டிபோலும் வெள்ளிய மலர்கள் பரந்து, கூரியவெண்மையான மயிர் நிறைந்த கறுத்த கபோலத்தையொத்து விளங்க, கொள்ளுதலமைந்த குவளையின் அரும்புகள் முறுக் கவிழ்ந்து மலர, உறங்குதலில்லாத பசிய கண்களையும் பரந்த அடியையுமுடையவாய் மதம் பொழிந்து மாறியதனால் விளர்த்துத் தளர்ந்து நிற்கும் யானையைப்போல மழை பெய்தமைந்ததனால் விளர்த்து மேலே செல்லுதலையுடைய மேகங்கள், கரிய விசும்பின் கண், திசை தோறும் சென்று திரிய, பனிதோன்றி வருத்தும் கங்குல் யாமத்தின்கண், நின்னையெதிர்க்கும் மாறு பாடில்லாத இக்

காலத்தில் தமித்தோர் வலியுடைமையை யாராயாது தண்ணென்று வீசி யாம் நின்னை வெறுக்கும்படி எம்மை வருத்துகின்றாய். அரத்தால் அறுக்கப்பட்ட அழகிய வளை தோளிடத்திலிருந்து நெகிழ்ந்துநீங்க, தனக்குரிய இலக்கணத்தால் முற்றுப் பெறாத வாழ்க்கை முற்றுதல் கருதிப் பலரும் கைதொழும் முறைமையினையுடைய கடவுட்டன்மை யமைந்த செய்தொழிலொன்றை மேற்கொண்டு சென்ற காதலர் விரைந்து வருவராயின், நீ எம்மை நின் பணியால் வருத்துதல் இயலாது ஓடுவாய் காண் ; இனி நின் பனிப்பும் அறவேயொழிந்தது. என்பது,

''கைதொழு மரபிற் கடவுட் சான்ற செய்வினை'' என்பது தேவர் காரணமாகப் பிரிந்து செய்யும் வினையென்பர் ஆசிரியர் இளம்பூரணர். ''பலரும் கைதொழும் மரபினையுடைய கடவுட்டன்மையமைந்த செய்வினை எனவே, ஓதற் பிரிதலென்பது பெற்றாம்; ''சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'' (தொல். பொ.192) என்பதனாற் கிழவனும் கிழத்தியும் இல்லறத்திற் சிறந்தது பயிற்றாக்கால் இறந்ததனாற் பயனின்றாதலின், இல்லறம் நிரம்பாதென்றற்கு, ''நிரம்பா வாழ்க்கை'' என்றார்'' என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

நிரம்பா வாழ்க்கை நேர்தல் வேண்டிப் பிரிந்தாராயினும் அவ பிரிவினாலுளதாகிய மெலிவு தன் மெய்க்கண் நின்று தோன்றக் காட்டுதலின், ''அரம்போ ழவ்வளை தோள்நிலை நெகிழ'' என்று கூறினாள். 'ஈர்ங்கா ழன்ன வரும்பு முதிரீங்கை'' யென்ற பாடத்துக்கு இரவமரத்தின் விதையை யொப்ப அரும்பு மிக்க ஈங்கை'' யென்று பொருள் கொள்க. ''ஈர்ங்காழன்ன திரங்குகண் வறுமுலைச், செம்முதுபெண்டு'' (புறம்.276) என்றார் பிறரும். ஈங்கையென்பது ஒருவகைப் புதலாதல், ''வெண்கொடி யீங்கைப் பைம்புதல்'' (ஐங்.456) என்பதனாலு மறிக ஈங்கை, வால்வீதா அய், மையணலேய்ப்ப எனமுடிக்க. இது மாரிக்கண் மலரும் புதலாதல்பற்றி, ''ஈங்கை வால்வீ தாய்'' என்றார் மன், ஒழியிசை.

இனி, இதன் பிற்பகுதி,

''விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வெருவரு தானையொடு வேண்டுபுலத் திறுத்த
பெருவளக் கரிகால் முன்னி லச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை யாடுபெற
வொன்பது குடையு நன்பக லொழித்த
பீடின் மன்னர் (போல், ஓடுவை)'' என்பது.

இதன்பொருள், விரிந்த சாமரையால் விளங்கிய செலவினை யுடைய நல்ல குதிரைகளோடு கூடிய அஞ்சத்தக்க சேனையுடன் தான் கொள்ளக் கருதிய நாடுகளிற் றங்கி வெற்றி கொண்டமை யால் பெற்ற மிக்கசெல்வத்தினையுடைய கரிகாலன் முன்சென்று போர் செய்ய மாட்டாராய், வாகைப் பறந்தலையென்னுமிடத்து அவன் வென்றிகொள்ள, போர் செய்தற்கு ஏற்ற காலமாயினும் தம் ஒன்பது குடையும், படையும் களத்தே விட்டுச்சென்ற சிறப்பில்லாத வேந்தர் (ஓடியது போல நீயும் ஓடுவாய்) என்பது

சூடாவாகையென்பது வாகையென்னு மிடத்துக்கு வெளிப் படை; "பூவாவஞ்சி" என்பது போல. குலமன்னர்க்குத் தம்மினின்று நீக்கலாகாதன குடையுமுடியுமாதலால், குடையை யொழித்த இவ்வேந்தரைப் "பீடின் மன்னர்" என்றார். நன் பகல், என்பது அவர் வென்றியெய்துதற் குரியகாலம் வாய்த் தமையுணர நின்றது.

கரிகாலன் முன்னின்று போர் செய்தற்கு வந்தோர் ஒன் பதின் மராயினும், அவன் முன்னிற்கலாற்றாது தம் குடையும் படையும் இழந்து சென்றதுபோல, ஏ, வாடையே, நீயும் நின் இயக்கமும் பனிப்புமிழந்து நீங்குவை யென்றாளாம்.

இனி, "பிணர் மோட்டுநந்தின் பேழ்வாயேற்றை" (அகம் 246) என்று தொடங்கும் அகப்பாட்டுத் தலைமகனொருவன் புறத்தொழுக்கத்தினை மேற்கொண்டொழுகுவான், தன் மனைக் கட்போந்து வாயில் வேண்டிய வழி, தோழி, ஐயனே நீர் புறத் தொழுக்கத்தே நின்னால் விரும்பப் பட்ட பரத்தையொருத்தி யொடுநெருநல் புனலாடினையென்றும் அதனாலெழுந்த அலருரை கரிகாலன் வெண்ணி யென்னுமிடத்தே முடிவேந்தரும் வேளிரும் பொருதோட வென்றியெய்த, அச்சிறப்பறிந்த அழுந்தூர் மக்கள் செய்த ஆரவாரத்தினும் பெரிதாயிருந்த தாகலான், யாம்வாயில் நேரேம் என மறுக்கும் பொருண்மை யுணரக் கிடக்கின்றது.

இதன்கண், தலைவன் புனலாடவெழுந்த அலர் கூறித் தோழி வாயில் மறுக்கும் பகுதி

"பிணர்மோட்டுநந்தின் பேழ்வா யேற்றை
கதிர்மூக் காரல் கள்வ னாக
நெடுநீர்ப் பொய்கைத் துணையொடு புணரும்
மலிநீ ரகல்வயல் யாண ரூர!

போதார் கூந்தல் நீவெய் யோளொடு
தாதார் காஞ்சித் தண்பொழில் அகல்யா
றாடினை யென்ப நெருநை யலரே

‡ ‡ ‡ ‡

தொய்யா வழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே.''என்பது. இதன் பொருள், சருச்சரைபோலும் பெரிய வயிற்றினையுடைய, நத்தையின் அகன்ற வாயையுடைய ஆணும், கதிர்த்த மூக்கினையுடைய ஆரலும்,சுரிவளையுமாகிய இவை நெடிய நீர் நிறைந்த பொய்கையின்கண் தத்தம் துணையொடு புணர்ந்துவைகும் நீர் மிக்க அகன்ற வயல் சூழ்ந்த புதுவருவாயினையுடைய வூரனே! முன்னாள் போது களணிந்த கூந்தலினையுடைய நின்னால் விரும்பப் பட்டாளொருத்தியோடு நீ, தாது நிறைந்த காஞ்சி மரம் செறிந்த குளிர்ந்த பொழிலின் அருகோடும் அகன்ற யாற்றின் கண் புலனாட் டயர்ந் தனையென்ப. அதனாலெழுந்த அலர் வளக் குறைவில்லாத அழுந்தூர் என்னும் ஊர்க்கண் எழுந்த ஆரவாரத்தினும் பெரிதாயிரா நின்றது என்பது.

கள்வனென்றது சுரிவளையை. ''ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற்கெல்லாம், ஏற்றைக் கிளவி யுரித்தென மொழிப'' என்ற சூத்திரக் கருத்தினானே, பிணர்மோட் டுநந்தின் பேழ் வாயேற்றை'' என்று கூறினார். (பேராசிரியர். தொல் பொ. 604). ''யாறுங் குளனுங் காவு மாடிப், பதியிகந்து நுகர்தன் முரிய வென்ப'' (தொல்.பொ.149) என்றதனால், தலைவன் பரத்தையொடு புனலாடுத லமைந்தது. நந்தின் ஏற்றையும், ஆரலும், சுரிவளையும் தத்தம் துணையொடு புணரும் ஊரனாயினும், நீ அவ்வாறின்றி, பரத்தையொடு கூடிப்புனலாடி அலர் விளைக்கின்றனை என இதன்கண் இறைச்சி தோன்றியவாறு காண்க

இனி, கரிகாலனது வெற்றி கூறும் பகுதி,

''காய்சின மொய்ம்பின் பெரும்பெயர்க் கரிகால்
ஆர்கலி நறவின் வெண்ணி வாயிற்
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
இமிழிசை முரசம் பொருகளத் தொழியப்
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய
மொய் வலி யறுத்த ஞான்றைத்
தொய்யா வழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே'' யென்பது.

இதன்பொருள் : பகைவரைக் காய்தற்குரிய சினமும் வலிமையும் பெரிய பெயரையுமுடைய கரிகால் வளவன் ஒலி மிக்க கள்ளினை யுடைய வெண்ணியென்னு மிடத்துக் கீர்த்தி பொருந்திய மன்னர் கள் வெகுண்டு செய்த போரில், ஒலிக்கின்ற இசையினையுடைய முரசங்கள் போர்க்களத்தே வறிது கிடப்ப, பதினொருவகை வேளிர்களோடு வேந்தர் பலர் வீழ, அவர் தம் மிக்க வலிமையைச் சிதைத்த காலத்து, செல்வக் குறைபாடில்லாத அழுந்தூர் என்னும் ஊர்க்கண் எழுந்த ஆரவாரத்தினும் பெரிதாயிருந்தது என்பது.

பெரும் பெயர்க் கரிகால் என்பதற்கு, ''பெரும்பெயர்முருக'' (முருகு. 269) என்புழிப் போலப் பெரும் பொருளையுடைய கரிகாலன் என்றும், பொருளாவது வெற்றித்திரு என்றும் கூறினு மாம். ஆர்கலி நறவின் என்பதற்கு நீர்வெள்ளம்போல் மிக்குற்ற கள்ளினையுடைய வென்றுரைப்பினுமாம். ''புனலங் கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்'' (புறம். 343.) என்றார் புறத்தினும். தொய்யா, செல்வக்குறைவுபடாத. ''தொய்யாவுலகத்து நுகர்ச்சி யுங் கூடும்''. [புறம். 214] என்புழிப்போல உயர்ந்த விருப்பம் என்று கூறுதலுமாம்

ஊடற்பொருண்மைத்தாகிய மருதத்தின் புறமாதலால் தன்னை வெண்ணியென்னு மிடத்து முற்றிய வேந்தரையும் பதினொரு வேளிரையும் கரிகாலன் தன் படையைச் செலுத்தி அவர்தம் படையைத்தள்ளி வென்று, அவர் தரமும் தம் முரசமும் படையும் போர்க்களத் தொழியப் பொருத அகத்தோன் முற்றிய முதிர்வு எனப்படுந்துறைத்தாகிய உழிஞையைக் கூறினார். ''உழிஞைதானே மருதத்துப்புறனே'' என்பது விதி. (தொல். பொ. 64.)

பலநிலங்களினும் சென்று ஆண்டுத் தன்னை யெதிர்த்த பகை மன்னர்களைப் பொருது வென்று வாகை சூடிப்போந்த கரிகாலன் வாகைப் பறந்தலைக்கண்ணும் பல வேந்தரை வென்ற செய்தியும் வாகைத் திணையின் பாற்பட்டு, தலைவன் பிரிந்த விடத்து வருந்தும் தலைவியின் நிலைமை கூறும் பகுதியோடி ணைத்து இதன் முன்னைப் பாட்டிற் கூறப்பட்டது. ''வாகை தானே பாலையது புறனே'' என்றார் ஆசிரியர்.

இங்ஙனம், தாம் பாடத் தொடங்கிய அகப்பொருளுக் கேற்பப் புறப்பொருளும் இணைத்துக் கூறும் கருத்தினராய ஆசிரியர் பரணர், கரிகாலன், வாகைப் பறந்தலையில், வென்றி

யெய்தினமையும், வெண்ணியென்னுமிடத்துத் தன்னை முற்றி யோரைப் பொருதழித்தமையும் உவமமுகத்தாற் கூறினார். இவர், கரிகாலன் காலத்துக்குப்பிற்பட்டவர் என்று கருதுவோர் இச்செய்திகள் யாண்டும் யாவராலும் பாராட்டிக் கூறப்படும் சிறப்பு நோக்கிக்கூறினாராவர் என்பர். சேரமன்னர்கள், சோழ வேந்தர் ஆகிய இருபெரு வேந்தரையே சிறப்பித்துக் கூறிய இவர் பாண்டி மன்னருள் ஒருவரையும் சிறப்பிக்காமையாலும், அம்மன்னருட் சிறந்தோர் செயலும் யவராலும் பாராட்டிக் கூறப்படுவதுண்மையின், "யாது மூரே யாவருங் கேளிர்" எனுங் கருத்தினராய புலவர் பெருமக்கட்கு ஒருவரை வியத் தலும், ஒருவரை இகழ்தலுமின்மையின், கேள்விமாத்திரை யாற் பெற்ற பொருள் குறித்துப் பாடுவோர், அவருள் (பாண்டிய வேந்தர்) ஒருவரையும் பாடுவராகளினாலும், அது செய்யாத இவர் தம் காலத்து நிகழ்ந்த செய்தியே கூறினாரெனக் கோடல் வேண்டும்.

பரணர் என்னும் ஆராய்ச்சிநூல் ஒன்று சென்னைப் பல் கலைக் கழகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இதனை எழுதிய வர் அக்கழகத்து வித்துவான். வே. வேங்கடராஜுலு ரெட்டியார் ஆவர், இந்நூலில் எடுத்தாண்ட மேற்கோள் நூல்களால், தமிழ் தெலுங்கு, கன்னடம், மலையாளம், வடமொழி, "ப்ராக்ருதம்," ஆங்கிலம் எனப் பல மொழிகளினும் பயிற்சியும் புலமையும் உடை யவர் என்பது தெரிகிறது, இவ்வாறு தமிழ் மொழிப் புலமையோடு பிறமொழிப் புலமையும் ஒருங்குடையார் தமிழாராய்ச்சி செய்து. தமிழுலகத்திற்கு உதவிபுரிவது அரும்பணியாகும் என்பது அறிஞர் பலரும் பாராட்டும் பான்மையதாகும்.

சில நாட்களுக்குமுன், யான் இந்நூல் ஒன்று கிடைக்கப் பெற்றுப் பெருமகிழ்வு கொண்டேன். பரணர் என்னும் இப் பொருளே பற்றிச் சில யாண்டுகட்டு முன்னர் யானும் ஓர் சிற்றா ராய்ச்சி செய்து, நம் **பொழில்** வாயிலாக வெளியிட்டு வந்தேன். அதற்குத் துணையாய நூல்கள், மீட்டும் ஆராய்ந்து உண்மை துணியும் நிலையில் உள்ளன என்று பின்னர் உணர்ந்து, பிறி தொரு காலத்துத் தொடங்க வெண்ணி அவ்வாராய்ச்சியை நிறுத்தி விட்டேன். அந்நிலையிலுள்ள எனக்கு இந்நூல் நல்விருந்தா யிற்று. அதனால், இதனை ஊன்றிப் படித்து வருகையில், பரணர் பாட்டுக்கள், இலக்கண முடிபுகள், சொல்லாராய்ச்சிகள் முதலிய பல பகுதிகளில் **பொருந்தாக் குறிப்புக்கள் பல** தோன்றின. அவற்றை வெளியிடின், அறிவுடைப் பெருமக்கள் ஆராய்ந்து

உண்மையுணர்த்துவர் என்னும் துணிபுண்டாயிற்று. ஆயினும் அவையனைத்தும் வெளியிடலுறின் காலம் நீட்டிக்கும் என்ப துணர்ந்து **வகைக்கொன்று காட்டின்,** அறிஞர் உலகம் உண்மை கண்டுதுணியும் என்னும் உறுதிகொண்டுமேற் செல்லு கின்றேன்.

பகுதி-பதினைந்து

பரணர் என்னும் ஆராய்ச்சிநூல்

பாட்டுக்களுக்குத் திணை கூறுதல்பற்றி, இந்நூலாசிரியர், ஒரு முடிபு கூறுகின்றார். அஃதாவது, "பாட்டுக்களுக்குத் திணை கூறுமிடத்து, முதற்பொருளினும் கருப்பொருளும், கருப் பொருளினும் உரிப்பொருளும் சிறந்த ஏதுக்களாகும் என்றல் ஆசிரியர் தொல்காப்பியனார் கொள்கையாகும்..." என்பது. "ஆனால், கருப்பொருளை மட்டும் நோக்கித் திணைவகுக்கப் பட்ட பாட்டுக்களும் உள்ளன," என்று கூறி, "இவர் பாடிய வற்றுள், குறிஞ்சித் திணைச் செய்யுட்களே பெரும்பாலன..." என்றும், "இவர் பரணர் மருதத்திணைப் பொருளையும் அழகு பெற அமைத்துப் பாடுதலில் வல்லவர்." என்றும், "இவற்றால், இவர் மலை நாடுகளிலும் பேரூர்களிலும்வதிந்து, அந்நிலத்துப் பொருள்களையும், அங்கு நிகழும் வழக்கவொழுக்கங்களையும் நன்கறிந்து தேர்ந்தவர் எனக்கருதலாம்" என்றும் கூறினார்.

இனி, பண்டையாசிரியர் ஒருவரால், தொகை நூல்கள் திணை வகுக்கப்பட்டன என்பது யாவரும் அறிந்தது. இவர் கூறுமாறே, ஒருபாட்டின் திணைவகுப்பிற்கு மூன்று பொருள்கள் ஏதுவாகின்றன. இம்மூன்றனுள் இப்பாட்டு இன்னபொருள் ஏதுவாக இத்திணை வகுக்கப்பட்டதென்பது நூல்களிற் கூறப் படவில்லை பெரும்பான்மையும் குறிஞ்கி, மருதம் என்பன முத லாகவே கூறப்பட்டுள. இவரும் அவ்வாறு வகுக்கப்பட்டுள்ள திணைகளையே கொண்டுள்ளாரேயன்றி, முதற் பொருளாற் குறிஞ்சியாயின இத்துணை, கருப்பொருளாற் குறிஞ்சியாயின இத்துணை, உரிப்பொருளாற் குறிஞ்சியாயின இத்துணையென்று விளக்கிக் கூறிற்றிலர். ஒரு பாட்டின் கருப்பொருள் மருதத் துக்கும், உரிப்பொருள் குறிஞ்சிக்கும் உரியவாய் வருதலுண்டு; அவற்றுள், உரிப்பொருள் சிறந்தவழி, கருப்பொருள் மருதமா யினும் குறிஞ்சியென்றே திணை கூறப்படும், அவ்வாறு கூறப் பட்ட திணைகளுள், குறிஞ்சியும், மருதமும் பெரும்பான்மைய வாசிய வழி, கருப்பொருளும் குற்ஞ்சி மருதங்கட்கே யுரிய

வென ஒரு தலையாய்க் கூறலாகாது. ஆகவே, அப்பொருள் பற்றிக் கூறற்பாலதாகிய முடிபினை முடித்துக் கூறல் பொருந் தாது. பரணர் பாட்டுக்களுள் குறிஞ்சியும் மரதமும் பெரும் பான்மையவராயினும், இவர் கருத்தின்படி அவை நின்ற பாட்டி னுள் சிறந்து நின்றது கருப்பொருளே என்றல் நிரம்பாது. கருப்பொருளின் சிறப்புக் கருதிப் பாடினார் வாழ்க்கையியல் கூறல்வேண்டுதலினால், பரணர், மலைநாடுகளிலும் பேரூர் களிலும் வதிந்து அங்கு நிகழ்வனவற்றைத் தேர்ந்து கூறினா ரென்றால் நிரம்பாது. மேலும், "கருப்பொருளைமட்டுமே நோக்கித்திணை வகுக்கப்பட்ட பாட்டுக்களும் உள்ளன" என்று கூறியவர், அவை இத்துணையவென்று துணிந்து, அவற்றால் கோடற்குரிய இம்முடிபினைக் கூறாதொழிந்ததே, இந்நிரம் பாமைக் கேதுவாதல் அறிக.

இனி, "பரணர் பாட்டுக்களிற் காணும் தவறான பாடங் களும் அவற்றிற்கேற்ற அமைதிகளும்" என்ற பிரிவின்கண், இந்நூலாசிரியர், பரணர் பாட்டுக்கள் உள்ள தொகைநூல்களைப் பதிப்பித்த ஆசிரியன் மாரைப்பற்றிக் கூறுவார், நற்றிணைப்பதிப் பாசிரியர், பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய இவற்றைப் பதிப்பித்த ஆசிரியர் ஆகிய இருவரையும் பாராட்டிக் கூறிவிட்டு, குறுந்தொகை, அகநானூறு * என்ற இரண்டனையும் பதிப்பித்த ஆசிரியன்மார்களின் முயற்சியருமையினையும் கூறாதொழிந் தார். இந்நூல் உயர்வகுப்பு மாணவர்க்குப்பாடமமைக்கும் கழகத் தார் கையிலிருத்தலின், மாணவர்கள் படிக்க நேரும் நிலையும் எய்துமாகலால், ஆராய்ச்சியாளர் நடுவிகந்து செல்லுவது மாணவர் மனத்துக் கூடாக் கொள்கையைக் கொளுத்தும். அது பற்றியே, மேனாட்டாரும், "இந்நூலைக் கற்கும் ஒவ்வொரு மாணவனும் பிற்காலத்தில் தன்மொழிக்கு ஆக்கந்தேடும் தனிப்பெருமகன்," என்பதனை, அறிவாராய்ச்சி செய்து அறிவுலகத்திற்குதவும் ஒவ்வோரறிஞனும் தன் மனத்திற் கொள்ளற்பாலன் † என்பர்.

இனி, நற்றிணைப் பதிப்பின்கண் "...திருத்தமில்லாத் பாடங்களும், பொருத்தமில்லாதவுரைகளும் சில விடங்களிற்

---

* அகநானூற்றுப் பதிப்பாசிரியர் பல பாட்டுகளுக்கு உரையும் வகுத்துள்ளார்.

† "Talks to Teachers"-Sully.

காணப்படுகின்றன எனவும் கூறுதல் தவறாகாது'' என்று தொடங்கி, பரணர் பாட்டுக்களை மட்டில் வரைந்துகொண்டு அவற்றுட் சிலவற்றில், தாம் கண்ட ''திருத்தமில்லாத பாடங்களும் பொருத்தமில்லாத வுரைகளும்'' காட்டுவார். சிலவற்றில் திருத்தமுடையதனையும், திருத்தமில்லாத பாடமெனத் திரியக் கொண்டு. ''பொருத்தமில்லாதவுரை'' எழுதுகின்றார். யான் மேலே கூறியவாறே, ஒன்று காட்டுகின்றேன்.

வெண்ணெல் அரிநர் தண்ணுமை வரீஇப்
பழனப் பல்புள் இரியக் கழனி
வாங்குசினை மருதத் தூங்குதுணர் உதிரும்
தேர்வண் விராஅன் இருப்பை அன்ன என்
தொல்கவின் தொலையினும் தொலைக; சார
விடேஎன்; விடுக்கு வெனாயின், கடைஇக்
கவவுக்கை தாங்கும்; மதுகையங் குவவுமுலை
சாடிய சாந்தினை வாடிய கோதையை
ஆகில் கலங் கழீஇ யற்றும்
வாரல்; வாழிய சுவைஇ நின்றோனே, (நற். 350)

இது நற்றிணையில் காணப்படும். பரணர் பாட்டுக்களுள் ஒன்று. இதன்கண், ''கவவுக்கை தாங்கும் மதுகையங் குவவு முலை'' யென்பதும், ''ஆகில் கலங்கழீ இயற்றும்'' என்பதும் ''திருத்தமில்லாத பாடங்க'' ளென்றும், இவற்றிற்கு ஆசிரியர் **நாராயணசாமியையர்** எழுதியவுரைகள், பொருத்தமில்லாத வுரைகள்'' என்றும் கூறி, இவ்வாராய்ச்சியாளர், ''கவவுக்கை தாங்கு மதுகைய குவவுமுலை'' யென்றும் ''ஆசிலகழந்தழி இயற்று'' என்றும் திருத்திக்கொண்டு ''பொருத்தமில்லாத'' உரை கூறினர். அப்பொருத்தமின்மையை யாராய்ந்து காட்டுவதன்முன், இப்பாட்டிற்கு ஐயரவர்கள் கூறியவுரையினைக் காண்டல் வேண்டுதலின் அதனை முன்னர்க் காட்டுகின்றேன். அது -

''இது **தலைமகள் ஊடல் மறுத்தாள் சொல்லியது** எ-து பரத்தையிற் பிரிந்து ஆற்றாமை வாயிலாகப் புகுந்து பள்ளியிடத்தானாகிய தலைமகனைத் தலைமகள் நெருங்கி ஊடல் தீர்கின்றாள். ஊரனே, எனது நலன் முழுவதும் தொலையினும் என்னை நீ நெருங்கவிடேன்; நெருங்க விடுவேனாயின், என்வரைத்தன்றி என் கைநின்னையணைத்து முயங்கா

நிற்கும்; சாந்தமுதலாயினவுடையை யாதலின், நின்னை நீக்குவது கலங்கழிப்பது போலாம்; அதனால், இங்கு வாராதேகொள்; நின்னொடு அப்பரத்தை நீடுவாழ்வாளாக என வெகுண்டு கூறாநிற்பது.

''உரை:-வெள்ளிய நெற்கதிரையறுக்கும் மள்ளர் முழக்கு கின்ற தண்ணுமைக்கு அஞ்சி வயலிலுள்ள பலவாகிய புள்ளின மெல்லாம் இரிந்தோடிச் செறிதலால், வயலின் மீது தாழ்ந்து வளைந்த கிளையையுடைய மருதமரத்தே தூங்குகின்ற பூங்கொத் துக்கள் உதிராநிற்கும் † இரவலர்க்குத் தேர் கொடுக்கும் வன் மையையுடைய விரான் என்னும் கொடை வள்ளலின் இருப் பையூர் போன்ற எனது பழைய அழகெல்லாம் கெடுவதாயினும் கெடுக; என்னருகில் நீ நெருங்குமாறு விடுவேனல்லேன்; அங்ஙனம் விடுகிற்பேனாயின், என்வாயினால் நின்னை விலக்கப் பட்டும், என் அகத்திடுகைகள் நின்னைவல்லே யணைத்து முயங்கா நிற்கும; நீ தானும் வலிமையுடைய குவிந்த பரத்தையின் கொங்கையினாலே சாடப்பட்ட சந்தனத்தை யுடையை; அவள் குழைய முயங்கலாலே, துவண்டு வாடிய மாலையையுடையை; ஆதலால், நின்னைத் தீண்டுதல், கழித்தெறிந்த தாழி முதலியவற்றைத் தீண்டிய அத்தன்மை யதாகும்; அதனால், என் மனையின் கண்ணே வாராதே கொள்; நின்னை அணைத்து முயங்கும் அப்பரத்தை நின்னொடு நெடுங் காலம் வாழ்வாளாக; எ-று.''

இனி, இந்நூலாராய்ச்சியாளர் இப்பாட்டில், ''சாரவிடே என்'' என்பது முதல், ஈற்றடியின் 'வாரல்'' என்பது வரையி லுள்ள பகுதியினையும், அதன் உரைப்பகுதியாகிய, ''என் னருகில் நீ என்பது முதல், ''வாராதேகொள்'' என்பது வரையில் எழுதி, இவை ''சில தவறுடையனவாகக் காணப்படுகின்றன'' என்றும் ''இது, தலைமகள் ஊடல்மறுத்தாள் சொல்லியது என்னும் துறைக்கு பொருள் பொருந்த மற்றுப்பொலிவிழந் திருக்கின்றது'' என்றும் கூறி, தாம் திருத்தியமைத்து உரை வகுத்ததனைப் பின்னர்க் குறிக்கின்றார், இப்பகுதியின் கண், ''சில தவறுடையனவாகக் காணப்படுகின்றன'' என்றும்,

---

† இவர் கூறிய உள்ளுறையின் தூய்மையின்மை உள்ளுறை யுவமப்பகுதிக்கண் ஆராயப்படும்.

'பொநன் பொருத்நமற்றுப் பொலிவிழந்திருக்கிறது''
என்றும் தாம் கொண்ட மேற்கோளைச் சாதிப்பதற்குரிய ஏதுவொன்றும் கூறிற்றிலர். ஒருவர் ஒருபொருளின் உண்மை நிலை காண்டதற்குச் செய்யும் ஆராய்ச்சிக்கண் பிழையுள்ளன தோன்றின், அவை உளவாதற்குரிய ஏதுக்களை இயன்ற அளவு கண்டு, அவற்றின் வன்மை மென்மைகளைத் தூக்கி நோக்கி அவற்றிற்குத் தகக் கொள்ளுவதும் தள்ளுவதும் செய்யற்பாலர். தன் மனத்தின்கண் பிழையுளதெனத் தோன்றிய துணையானே, ஏதுகாணாது, பிறிதொரு முடிபு வகுத்தல் பெரும்பாலும் தவறாதல் ஒரு தலையென அறிஞர் கூறுப ∅ அம்முறையில், இவர் தம்மேற்கோளைச் சாதிக்கும் ஏது காணாமைக்கு ஏது என்னை? எனின், கூறுவல். இப்பாட்டுக்களை ஆராயத் தொடங்கும் தொடக்கத்தே, ஏடுகள் சிதைந்தும் குறைந்தும் கிடந்த இப் பண்டைத் தமிழ் நூல்களை (தொகை நூல்களை) எத்துணை ஆராய்ந்து பதிப்பிப்பினும் அவற்றில் சிற்சில இடங்களில் பிழைபாடுகள் நேராமற் போகா என்பது ஒருதலை. அன்றியும், பதிப்பிப்போரின் ஆராய்ச்சிக் குறைவினால் நேர்ந்த சில பிழைகளும் அவற்றிற் காணப்படும்'' என்னும் உணர்வு கொண்டு தொடங்கியதே தக்க ஏதுவாகும். அன்றியும், ''கவவுக்கை தாங்கும் மதுகையங் குலவுமுலை'' என்பதனைக் கிடந்தபடியே கொள்ளின்வரும் குற்றமும், '"ஆகில் கலங்கழி இயற்றும்'' என்பதன் பொருளையாராய்ந்து காணாமையும் வேறு ஏதுக்களாகும்.

இனி, இவர் திருந்திய பகுதியும், அதற்குக் கூறியபொருளும் ஆராயுமுன், இவர் ஆராயாது விடுத்தவற்றை ஆராய்கின்றேன். ''கடைஇக் கவவுக்கை தாங்கும், மதுகையங்குவவுமுலை'' என்பதனை, 'கடைஇக் கவவுக்கை தாங்கும்'' என்று பிரிந்து, ''மதுகை'' யென்பதனைக் ''குலவுமுலை'' யென்பதனோடு இயைத்து, ஊர, என் தொல்கவின் தொலையினும் தொலைக; நின்னை என்னருகு சாரவிடேன், விடுவனேல், ''என் வாயினால் நின்னை விலக்கப்பட்டும் என் அகத்திடுகைகள் நின்னைவல்லே அணைத்துமுயங்கா நிற்கும்'' என்று ஐயரவர்கள் உரை கூறினார்கள்.

''கடைஇக் கவவுக்கை தாங்கும் மதுகையங் குவவுமுலை'' என்பதனுள், கடைஇ என்பதற்கு விலக்கி என்று பொருள்

∅ ''Text book of Criticism p.273 and Trial of B.G. Tilak page 385.

கொண்டு,பின் அதனை விலக்க எனத்திரித்து,''என் வாயினால் நின்னை விலக்கப்பட்டும்'' என்று தொடர்புரை கூறினர், இதன் சொன்னிலை கடவியென்பது கடவுதலைச் செலுத்துதல், வினவுதல் என்ற பொருண்மைக்கண் சான்றோர் வழங்கியுளரேயன்றி விலக்கற்பொருளில் வழங்கியது காணப்படவில்லை. மேலும் என்வாயினால் நின்னை விலக்கப்பட்டும்'' என்பது சொற்றொடர் அமைதி பெற்றிலது. இனி, இவ்வாராய்ச்சியாளர், 'விடுக்குவெனாயிற் கடைஇக் கவவுக்கை தாங்கும் மதுகைய'' என்று கொண்டு''ஒருவேளை யான் விடுக்கினும் என் கைகள் நின்னைப் புறத்தே செலுத்தித் தடுக்கும் வலிமையுடையனவாகும் ''என்று உரைகூறினர்.ஈண்டுஇவர்கடைஇ என்பதற்குச் செலுத்தியென்று கூறிய பொருள் பொருந்தும்; 'ஒடுங்காத் தெவ்வர் ஊக்கறக் கடைஇ(பதிற். 31. 32) எனப்பிற சான்றோரும் கூறுதல் காண்க.

வன்மைப் பொருளதாகிய மதுகையென்னும் சொல், ஆண்மையும் உரனும் தோன்றக் கூறுமிடத்து வழங்கல் சிறப்பேயன்றிப் பிறபொருட்கண் சிறவாது. கொங்கைக்குவன்மை கூறுபவாயினும் அஃது அவ்வன்மைச்சொல்லாற் உணர்த்துதற் குரித்தேயன்றி, ''மதுகை'' யென்னுஞ் சொல்லானன்று. ஒருகால் இந்நெறி மாறிக் கூறப்படின் அஃது ஆசிரியர் சேனாவரையர் கூறியதுபோல, ''உலகத்தார்'' இடைத் தெரிவின்றி வழங்குகின்றார் எனவேபடும் ஆகவே நற்றிணை உரையாசிரியர், மதுகையங்குவவுமுலை'' யென்று கொண்டு கூறியபொருள் சிறவாதென்பது தோன்றிற்று. இந்நிலையில் இந்நூலாராய்ச்சியாளர், அவ்வாறு இயைக்காமை பொருந்துவதாயிற்று.

கவவுக்கையென்பதற்கு நற்றிணையுரைகாரர், **அகத்திடு கைகள்** என்றும், தாங்கும் என்பதற்கு **அணைத்து முயங்கா நிற்கும்** என்றும் பொருள் கூறினர் இந்நூலாராய்ச்சியாளர் கவவு என்னும் உரிச்சொல்லிற்கு அதுவே பொருளாக ஆசிரியர் **தொல்காப்பியனார்** கூறினமையின், அதனைவிடுத்து, 'என் கைகள்' என்றே பொருளெழுதியொழிந்தார் போலும். ஆகவே ''கடை இக் கவவுக்கை தாங்கும் மதுகையங்குவவுமுலை'' என்பதனை நற்றிணை யுரைகாரர் கொண்டு கூறிய பொருளினும் இந்நூலாராய்ச்சியாளர், ''கடைஇக் கவவுக்கை தாங்கும் மதுகைய'' என்று பிரித்துக் கொண்டது சொன்னெறியிற் பொருந்துவதாம். பொருணெறியிற் பொருந்தாமையினைப் பின்னர்க் கூறுவல்.

இனி, ''ஆகில்கலங்கழீ இயற்றும்'' என்பதற் நற்றிணை யுரைகாரர், துறைவிளக்கங் கூறியவிடத்து, ''நின்னை நீக்கு வது கலங்கழிப்பது போலாம்'' என்றும், உரையின்கண், ''நின்னைத் தீண்டுதல்,*'' கழித்தெறிந்த தாழி முதலியவற்றைத் தீண்டிய அத்தன்மையதாகும்'' என்றும் கூறினார். இருவழியும் பொருள் ஒன்றே. இனி, இந்நூலாராய்ச்சியாளர், இதன் பொருளை யாராய்ந்து உணரமாட்டாது, இது பிழையாமெனக் கருதியதோடு நில்லாது; இஃது ''ஆசிலகலந்தழீஇயற்று'' என்று ''இருக்கத் தக்க'' தென்று கூறி, இதற்குப் ''பரத்தை யினது குற்றமில்லாத மார்பைத் தழுவிய அத்தன்மையுளது'' என்றொரு பொருத்தமில்லாத உரையும் கூறி, ''குற்றமில்லாத மார்பு என்றது குறிப்பு'' என அதன்மேலுமொரு விசேடமும் கூறி ''ஆசினகல'' மெனப் பாடமிருப்பினுமமையும், (பாடங்களை நாமே படைத்துக் கொள்ளலாம் போலும்!) என்றும் கூறினர். இந் நிலையில், பழைய நூல்களைப் பதிப்பிக்கும் செயல்பற்றிச் சில கூறல்வேண்டுதலின், அதனைக்கூறி, மேற்செல்லுகின்றேன்.

பண்டைத் தமிழ் நூல்களை ஏட்டுப் பிரதிகளிலிருந்து பெயர்த்தெழுதி வெளியிடும் பெருந்தொண்டினை மேற்கொள் வோர் அஃகியகன்ற அறிவும், அதன் பயனாகப்பெற்ற மனத் தூய்மையு முடையராவர். அவ்வேட்டுப் பிரதிகளிற் காணும் எழுத்துக்களுள் மெய்யெழுத்துக்கள் புள்ளியின்றியும், உயிர் மெய்யெழுத்துக்களுள் கொம்பு சுழிக்கப்படுவன சுழிக்கப்படா மலும், கை, சை, என்பனவும், ஙப, யை, மை, என்பனவும் வேறு பாடுதோன்றாமலும் பிறவாறும் இருக்கும், இந்நிலையினை, நம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்ட தொல்காப்பியச் சொல்லதிகாரத் தெய்வச்சிலையாருரை பதிப்பாகுங் காலத்தில் டாக்டர் உ.வே சாமிநாதையரவர்கள் உதவிய ஏட்டுப் பிரதியை வைத்துக்கொண்டு ஒப்புநோக்குதல்,பெயர்த்தெழுதுதல் முதலிய முன்னணி வேலைகளை, இதுபோது நாமக்கல் போர்டு உயர்கலாசாலையில் தமிழாசிரியராகவிருக்கும் திரு.மா.வீ.உலக வூழியரவர்களோடு யானும் எங்கள் ஆசிரியர். திரு. வேங்கடா சலம் பிள்ளையவர்கள் ஆணைவழி நின்று செய்து வந்த காலத்தில் ஒருவாறு அறிந்தேன். பின்னர், எங்கள் வீட்டிலிருந்த ஞானாமிர்த நூலின் * ஏட்டுப் பிரதியிலிருந்து பெயர்த்தெழுதிய

---

* இங்குக் ''கலம்'' என்னும் சொல் வேண்டாமையின் ஒழிக்கப்பட்டது,

* இஃது இப்பொழுது ''சித்தாந்தம்'' என்னும் பத்திரிகை யில் வெளி வந்து கொண்டிருக்கிறது.

காலத்து, இவ்விடரினை நன்கு கண்டேன். அதுபோது பதிப்பாசிரியன்மார் மேற்கொள்ளும் மனத்தூய்மையும், அதற்கேதுவாகிய அவரது அறிவொட்பமும் எங்களுக்குப் புலனாயின. இம்மாண்பே, நற்றிணைப்பதிப்பாசிரியர்மாட்டும் அமைந்திருந்ததென்று கூறுதல் மிகையே. அவர் இப்பாட்டினை யுணர்ந்து உரையெழுதிப் பதிப்பித்த காலத்துப் பிற்கூறுமாறு துணிந்து கூறியிருப்பரென்று நினைக்கின்றேன்.

ஏட்டுப் பிரதியில், ''ஆகில் கலங்கழீ இயற்றும்'' என்பது ''ஆகில கலங்கழீ இயற்றும்'' என்று தோன்றிற்று. இந்நிலையில் பொருள் விளங்காமையின், பிற பிரதிகளைநோக்கி, ஆண்டும் அதுவே தோன்றக்கண்டு, அதன் பொருளாராய்ச்சியில் அவர் கருத்தைச் செலுத்தியிருப்பர். இத்துணை வருத்தமேன்? ஆசிலகந்தழீ இயற்று' என்று திருத்திக் கொண்டால் என்னை? எனின், அது திருத்துவோர் கருத்தாமேயன்றி, நூலாசிரியர் கருத்தாகாது; அன்றியும், அஃது அந்நூலைப் படிப்பாரை வஞ்சித்தலுமாம் என்பது அப்பெருமங்கள் கருத்து. இதற்கு டாக்டர். உ. வே சாமிநாதையரவர்களே நிலைத்த சான்றாவர். பிரதிகளில் விளங்காமை தோன்றியவிடத்து, ஒப்புநோக்கல், பிற நூல்களைத் துணைகொண்டு உண்மை நிலைகாண்டல் முதலியனவும், இலக்கணப்பிழை, எழுத்துப்பிழை முதலிய பிழையுறு பகுதிகளைத் திருத்துதல் செய்தலும் ஆகிய இவையே பதிப்பாளர் செயற்குரியர். நிற்க, நற்றிணையுரைகாரர், ''ஆகில் கலங்கழீ இயற்றும்'' என்றிருப்பது கண்டு, பிற நூல்களையாராய்ந்தவழி, அகநானூற்று 196-ஆம் செய்யுளைக்கண்டு, 'தொடு கலங் குறுகவாரல்'' என்ற பகுதிக்கண் தம்கருத்தைச் செலுத்தியிருப்பர் அப்பாட்டை யெழுதியவரும் பரணரே யாதலும், அதன் பொருளும் இப்பாட்டினது போலத் தலைமகன் புறத்தொழுகிப் போந்தானைத் தலைமகள் புலந்து கூறியதாகவேயிருத்தலும கண்டு ''கெடுத்துப் படுநன்கலம் எடுத்துக் கொண்டாங்கு'' மகிழ்ச்சியுற்றிருப்பர். அவ்வக நானூற்றுப்பாட்டில், தலைமகள், தலைமகனை நோக்கி, 'நின்னலத் தகுவியை முயங்கியமார்பு, தொடுகலம் குறுகவாரல்'' என்றனள். இதன்கண், தலைமகள் குறுகவந்தவழி, அவன் தீண்டுதலால் ''தொடுகலம்'' தொடாக்கலமாய் இப்பாட்டுக்கூறும் ''ஆகில்கல''மாம். ஆகவே, அது நீக்கற்பாலதேயன்றி, நீக்காது கோடற்பாலதன்றாம். அக்கருத்தால், ஈண்டும், தலைமகள், தலைமகனை நோக்கி, ''நின்னைச் சார விடுக்குவெனாயின், தூய்மையில்லாத நின்மார்பைக் கோடல் நேர்தலின், அஃது ஆகில் கலத்தை அமைதிப்பெறக் கழுவிக்

கொண்டாற்போலும்'' என்றாளாம், எனவே, ''ஆகில் கலங்கழீ இயற்றும்'' என்ற பாடமே பரணர் கருத்தொடு பட்டபாட மாதல் விளங்குதலின், ''ஆசில கலந்தழீ இயற்று'' என்று இலேசாகத் திருத்திக் கொள்ளுதல் **நம்மனோர்க்கு ஆகாத** செய லாயிற்று. ஆகவே, இத்துணையும் கூறியவாற்றால், இந்நற்றி ணைப் பாட்டின்கண், ''கடைஇக், கவவுக்கை தாங்கு மதுகையங் குவவுமுலை'' என்பதனை, ''கடைஇக், கவவுக்கை தாங்கு மதுகைய குவவுமுலை'' என இந்நூலாராய்ச்சியாளர் கொண்டது பொருணெறியாற் **பொருந்தாதாயினும்,** சொன்னோக்கால் ஒருவாறு பொருந்துமென்பதும், ''ஆகில் கலங்கழீ இயற்றும்'' என்பதனை ''ஆசி லகந்தழீ இயற்று'' எனத் திருத்திக் கொண்டது பொருந்தாதென்பதும் கூறியவாறாம்.

இனி, இந்நூலாராய்ச்சியாளர், ''கடைஇக் கவவுக்கைதாங்கு மதுகைய'' என்றது பொருணெறியாற் பொருந்தாமையினைக் காட்டுகின்றேன்.

பரணர் மிகச் சதுரப்பாடமையப் பேசும் வன்மைப் படைத்தவர் என்பதனைக் **கண்ணகி** காரணமாக, அவள் கணவன் வையாவிக் கோப்பெரும் பேகன் பால் சென்று பாண்டிய 'அருளாயாகலோ கொடிதே' (புறம். 144) என்று தொடங்கும் பாட்டினை உணர்ந்த அறிஞர் பலரும் அறிவர். அவ்வறிவு நெறியே பற்றி இதனையாராய்தல் வேண்டும். இதுவும் அவர் பாட்டன்றோ!

புறத்தொழுகிப்போந்த தலைமகன் ஆற்றாமை வாயிலாகத் தன்மனைக்கட் புகுந்திருந்தானைப் புலந்த உள்ளத்தளாய தலை மகள் அவனை மறுத்தற்குக்கொண்ட மேற்கோள் ''சாரவிடேஎன் வாரல்'' என்பது. இதனைச் சாதித்ததற்குப் பயனை யேது வாகக் கொண்டு, விடாத வழியெய்தும் ஆக்கமும், விட்டவழி யெய்தும் கேடும் கூறும் கருத்தினளாயினள். ஆக்கம், ''என் தொல்கவின் தொலையினும் தொலைக'' என்பது. கவினது கேடு எவ்வாறு ஆக்கமாம் எனின், தலைமகற்கெய்தும் இன்பம் தனக்கு மெய்திற்றாகப் பேணும் கற்புக் கடம் பூண்டவளாதலின், கவின் தொலைவு தனக்குக் கோடாயினும், பரத்தையிற் பிரிந்த தலை மகற்கு இன்ப நுகர்ச்சி யெய்துதலால் ஆக்கமாதல்கொண்டு ''என் தொல்கவின் தொலையினும் தொலைக'' என்கின்றாள். கேடு, ''விடுக்குவெனாயின்'' என்பது முதலாகக் கூறியன, ''நல்லது செய்தலாற் றீராயினும், அல்லது செய்த லோம்புமின்''

(புறம். 195) என்பவாகலின், ஆக்கமின்றாயினும், கேடின்மையே பெரிதும் நாடப்படுமாகலின் அதனை "ஆகில் கலங்கழீஇயற்றும் வாரல்" என்றாள். விடாவழி நினக்கெய்தும் வருத்தத்தினும், விடுக்குவெனாயின் எய்தும் வருத்தம் பெரிதாம் என்றற்கு உவம முகத்தாற் கூறினாள்.* "ஆகில் கலங்கழீ இயற்று" என்பதனை விரித்தவழி, தீண்டற்காகாத கலத்தைத் தீண்டல் குறித்து அதன் தூய்தன்மை நீக்கிக் கொள்ளுதல்போல, பரத்தையைக் கூடி, அவள் செய்த குறியால் தூய்தன்றாகிய நின்மார்பினை அக்குறி' கெடுத்துக் கூடுதல் நிகழும் என்று விரியும். ஆகில்கலம், பரத்தையைக்கூடிய மார்பாகவும், அதன்பாலுள்ள தூய்தன்மை பரத்தை செய்குறியாகவிம், கழீஇக்கோடல், சாரவிடின் அவனாற்கவவப்படுதல் ஒரு தலையாகலின், அக்காலத்து அவன் மார்பிற்குறிகெட்டுத் தோன்றலால் கூட்டம் நேர்தலாகவும் கொள்க. உள்ளதன் உண்மைகூறி யூடுகின்றாளாகலின், மார்பிற் குறியை, "குவவுமுலை சாடிய சாந்தினை வாடிய கோதையைப்" யென வகுத்துக்கூறினாள். உவமைக்கண், கழீஇயற்று என்றதற் கேற்ப, அவன் மார்பிற் கூடுதல் நேர்தற்கு அவனாற் கவவப் படுதல் வேண்டுதலின், "கடைஇக் கவவுக்கை தாங்கும் மதுகைய" என்றதனைத் தலைவி கைம் மேலேற்றிக் கூறுதல் குற்றமாதல் பெற்றாம். அன்றியும், தலைமகனைச் சாரவிடினும், தலைமகள் சாரப்படாது நீங்கலாமாகலின், அவனை விடுவதால் இவட்குண்டாகும் இழவென்னையெனின், விட்டவழி அவன் கையகப்பட்டு அவள் நீங்குதல் கூடாதாம். ஆகவே அக்கூடாமைப் பொருள் விளங்காமையினாலும், "கவவுக்கை தாங்கும்மதுகைய' என்ற பாடம் பொருந்தாதொழிதல் காண்க. பின், என்னையோ உண்மைப் பாடமெனின், ஏட்டுப் பிரதிகளில் யை என்னும் எழுத்துச் சிலவிடங்களில் யகர ஙகரம் போலத் தோன்றுத லுண்டாதலின், "மதுகையை" என்பதே 'மதுகையங்" எனக் கருத நின்றதென்றுணர்க, "விடுக்குவெனாயின், கடைஇக் கவவுக்கை தாங்கும துகையை" என்பது உண்மைப் பாடமாம். ஏனைச் சாந்தினை, கோதையை என நின்றாற்போல இதுவும் மதுகையை, சாந்தினை, கோதையை யாகலின், ஆகில் கலங் கழீ இயற்று" என இயைந்து முடியுமாறு காணப்படும். படவே, இப்பகுதி,

---

* இவ்வுவமையால், தலைமகனது தூய்மையில் மார்பினைக் கூடுதல் நேரும் எனத் தலைவி தன் வாயாற் கூறுதற்குக் கூசி நிற்பது காண்க.

"..என்
தொல்கவின் தொலையினும் தொலைக; சார
விடேஎன்; விடுக்குவெனாயின், கடைஇக்
கவவுக்கை தாங்கும் மதுகையை; குவவுமுலை
சாடிய சாந்தினை; வாடிய கோதையை;
ஆகில் கலங் கழீஇ யற்றும்;
வாரல்; வாழிய கவைஇ நின்றோளே" எனவரும்.

இதன்பொருள் : நின்னைச் சாரவிடாவழி என் பழமைக்கவின் கெடுவதாயினும் கெடுக. நின்னை என்னருகில் வரவிடேன். விடுவனேல், முற்படச் செலுத்திப் புல்லி நின் அகத்திடும்கைகள் அகப்பட்ட யான் மீளாவாறு தடுக்கும் வலியினையும், பரத்தையின் திரண்ட கொங்கைமூழ்குதலால் சாடப்பட்ட சாந்தினையும் குழைய முயங்குதலால் வாடிய அவளது கோதையினையுமுடைய யாகலின், அது, தீண்டற்காகாத கலத்தைக் கழுவிக் கொள்ளுதல் போல்வதாம்; ஆகலின், என் அருகுவாரல். நின்வரவு அவள் அறியின் பிறிது படுவாளாகலின், நின்னைக் கூடி நின்ற அப் பரத்தை வாழ்வாளாக என்பது.

பிரிவருமை தோன்றத் தன்கவினைத் தலைவி, "தொல் கவின்" என்றாள். சார்பு, கருமச்சார்பு. கடைஇ என்பது மேலே கூறப்பட்டது; இவ்வினையெச்சத்தைக் கவவு என்னும் வினைப்பெயரொடு முடித்து, முற்படச் செலுத்திக் கவவு தலையுடைய கை என்றும் கூறலாம். இருகையாலும் பற்றியவழி, பற்றப்படுபொருள் அகத்திடப் படுதலால், அவ்வாறு அகப் படுமாறு முற்படச் செலுத்தப்படும் கை ஈண்டுத் தலைமகன் கையேயாதலின், அவன் கையை, "கவவுக்கை" யென்றாள். தாங்கும் என்பது "உறுநர்த்தாங்கும்" என்றாற்போல நின்றது. இந்நூலாராய்ச்சியாளர் கூறியவாறு மதுகைய என்றே கொண்டு முன்னே செலுத்திக் கவவுவரும் நின்கைகள் என்னைப்பற்றி மீளாவாறு தடுக்கும் வலியுடையனவாகும் என்ற கூறுவதமையு மாயினும், முன்னர், சாந்தினை, கோதையையென வருதற்கேற்ப மதுகையை எனவரும் இயைபு சிறப்பாகலினாலும், விடுக்குவெனாயின், கழீஇயற்று எனவரும் தொடர்நிலை, மதுகைய என்ற தனால் இடையறுதலாலும், அது சிறவாது. கைகள் பன்மையாயும், மதுகையை என்பது ஒருமையாயும் இருத்தலின், பன்மைப்பெயர் ஒருமை வினைகொள்ளுதல் குற்றமன்றோ எனின் குற்றமாகாது. என்னையெனின், பன்மைச் சினைப்பெயர், முதற்குரிய வினைகொண்டு முடியும்வழி "பன்மைகூறுங் கடப் பாடிலவே" (தொல். சொல். 61) என்று ஆசிரியர் தொல்காப்பிய

னார் கூறியுள்ளார். இச்சூத்திரத்து ஆசிரியர் கையினைக் கூறிற்றிலரெனின், சினைவினை முதன்மேனின்றதென்று கூறிக் கொள்க. கவவு என்பது, பெயராயும், வினையாயும் வருதலை, "அவவுறு நெஞ்சம் கவவு நனிவிரும்பி" யென்னும், "பிரிந்துற லறிபாவிருந்து **கவவி**, நம்போல் நயவரப்புணர்ந்தன" (ஐங். 360, 419) என்றும் முறையே வந்தமை காண்க. அற்றும் என்பதில் உம்மை, ஆக்கங் குறித்து வந்தது. இசைநிறை என்றுமாம்; உம்மை இல்லையாயின், சொல்லொழுக்கம் அறுபட்டு, "வாரல் வாழிய" என்பன முதலியவற்றோடு தொடராதொழியும். ஆகை யால், "ஆசிலகலந்தழீஇயற்று" என உம்மையின்றிக் காட்ட லும் குற்றமாம். தலைமகன் தன்பால் வந்து கவவு விரும்பிச் சார நின்றதனை அவன் பரத்தை, இதுகாறும் அவன் வாரா வகைப் பிணித்திருந்தாள், இதனையறியின் உயிர்வாழாள் என்பாள், "வாழிய கவைஇ நின்றோளே" என்றாள். கற்புக் கடம்பூண்ட பொற்புடை மகளிரே வாழ்த்துதற் குரியராகலின், "வாழிய" வென்றாள்.

இனி, இந்நூலாராய்ச்சியாளர், 'கடை இக், கவவுக்கை தாங்கும் மதுகைய" என்று திருத்திக்கொண்டு, "ஒரு வேளை யான் விடுக்கினும் என் கைகள் நின்னைப் புறத்தே **செலுத்தித்** தடுக்கும் வலியை யுடையனவாகும்" என்று பொருள் கூறினர். "நின்னைச் சாரவிடின், யான் நின் கைகளாற் கவவப் பட்டு மார்பிற் கூடுதலை நேர்தல் நிகழும்" என்பதனைக் கூறு தற்கு நாணி உவமமுகத்தால் உணர்த்திய பெருநாணினளாகிய தலைமகள் தலைமகனைப் புறத்தே செலுத்தற்கு நினைத்தலும் செய்வாளா? "எள்ளின் இளிவாமென்றெண்ணி யவர் திறம் உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு" (குறள். 1298.) என்று கூறும் இயல்பினளாய தலைமகட்கு இக்கருத்து நிகழ்ந்து வாயாற் கூறப்பட்டதாகக் கூறுவது பொருளிலக்கணம் அறியாதார் கூறும் கூற்றன்றோ. ஆகலின், அதுபொருளின்றெனத் தள்ளுக. இவ்வாறு கூறப்படுவன "அறக்கழி வுடையன" என்று கொண்டால் வரும் குற்ற மென்னையெனின், தலைமகனைப் புறத்தே செலுத்தற்குத் தலைமகள் கை துணியினும், நாணின் மையென்னும் குற்றமாய் "மிக்க பொருளினுட் பொருள்வகை புணர்க்க, நாணுத் தலைப்பிரியா நல்வழிப் படுத்தே" என்று ஆசிரியர் **தொல்காப்பியனார்** கூறுதலின், அறிஞரால் கொள் ளப்படாதாம்.

"ஆகிலகந் தழீஇயற்று" என்று தாம் திருத்திக் கொண்ட பாடத்துக்கு, "பரத்தையினது குற்றமில்லாத மார்பைத் தழுவிய

அத்தன்மையுளது'' என்று பொருள் கூறுவர் **பாணர்** என்னும் இந்நூலாராய்ச்சியாளர். விரிந்த பண்புடைமைபற்றி ஆடவர் மார்பு அகலம் எனப்படுமாகலின், ''ஈர்க்கிடை போகாவேரிள வனமுலை'' (பொருந 36) என அகலமின்மையே ஓர் அணியாகக் கூறப்படும் மகளிர் மார்பினைப் பரணர் அகலமென்றார் என்றுகோடல் அசம்பவமாகும். தலைமகனைப் புலந்து மறுக்கும் தலைமகள், பரத்தை செய்த குறிகண்டு பொறாது ஊடுபவள், தான், அவள் மார்பினைத் தழுவிய அத்தன்மையுளது என்று நினைத்தலும், ஒருமகள் வேறொரு மகளின் மார்பினைத் தழுவுவதாக நினைத்தலும் பொருளிலக்கணமறிந்தார் கூறுவனவல்ல. மேலும், ''குற்றமில்லாத மார்பு என்றது குறிப்பு'' என்கின்றார், வெளிப்படையாயின் குற்றமுடைய மார்பு என்பதாம். ஆகவே, அவள், ''வாரல்'' என்றதனோடு நில்லாது ''வாழிய கவைஇ நின்றோளே'' என வாழ்த்துகின்றாளாகவின் அக்குறிப்பு வேண்டாமையறிக. ''ஆசிலகலம்'' என்றும் ''வாழிய'' என்றும், தலைமகள் பரத்தையை ஏத்திக் கூறினும், அவள் உள்ளத்து ஊடலுண்டென்பது பொருளிலக்கணம் படித்த மாணவரும் கூறுப. ''கற்பு வழிப்பட்டவள் பரத்தையேத்தினும், உள்ளத் தூடலுண்டெனமொழிப'' என்பர் ஆசிரியர் **தொல்காப்பியனார்**. இனி விரிப்பிற் பெருகும்.

இதுகாறும் கூறியவற்றால், **பரணர்** என்னும் ஆராய்ச்சி நூல், ''பரணர் பாட்டுக்கள்'' என்னும் பகுதிக்கண், **பரணர்** மலைநாடுகளிலும், பேரூர்களிலும் வதிந்து, ஆங்காங்கு நிகழ்ந்த வழக்கவொழுக்கங்களையும், ஆங்குள்ள பொருள்களையும் நன்கறிந்து தேர்ந்தவர் என்று கூறியதற்கேற்ப, நிரம்பிய ஏதுகூறிற்றிலதென்பதும், இந்நூலாராயத் தொடங்கும் தொடக்கத்தே, தொகை நூல்களுள் பிழைகள் உளவாதல் வேண்டும் என்னும் துணிபு கொண்டெழுந்ததென்பதும், பரணர் பாடிய பாட்டுக்கள் உள்ளதொகை நூல்களைப் பதிப்பித்த ஆசிரியன்மாருட்சிலரைப் பாராட்டி, சிலருடைய முயற்சியருமையினையும் கூறாதொழிந்ததென்பதும், ''பரணர் பாட்டுக்கள்'' என்ற பகுதிக்கண், இந்நூல் காட்டும் திருத்தமில்லாத பாடங்களும் பொருத்தமில்லாத உரைகளும்'' ஆராய்வாருக்கு அக்காட்டியவை உண்மையாகாவென்பதும் வேண்டிய கருவிகொண்டு ஆராயும்வலியின்மையால் எழுந்த மெலிவுரையென்றதற்கு ''வெண்ணெலரிநர்'' என்று தொடங்கும் நற்றிணைப்பாட்டு (350) மேலே ஆராயப்பட்டதென்பதும் அதன்கண் இந்நூல் காட்டிய **திருத்தமான பாடங்களும் பொருத்தமான உரைகளும்** போலி யுரையாயின என்ப

தும் பிறவும், இதனையே விரிய ஆராயின் கட்டுரை பெருகுமென் றஞ்சிச் சில விடுக்கப்பட்டன. என்பதெய்தவும் கூறியவாறாம். பிற பாட்டுக்களிலும் பெரும்பான்மை இப்பெற்றியவே என்றற்கு ஒரு பாட்டு எடுத்துக் கொள்ளப்பட்டது. இனி இந்நூல் ஆராயும் இலக்கணப்பகுதி அடுத்த கட்டுரையில் ஆராயப்படும்.

பரணர் என்னும் ஆராய்ச்சிநூல், பரணர் பாட்டுக்கள்'' என்ற பகுதியின்கண், செய்த ஆராய்ச்சிகளுள் சில பொருந்தா என்பது, ''வெண்ணெலரிநர்'' என்று தொடங்கும் நற்றிணைப் பாட்டினை யாராயுமுகத்தால், முன்னைய கட்டுரைகளில் (மலர் 9,10) காட்டப்பட்டது அறிஞர்கள் அறிந்ததாகும். இனி, அக் கட்டுரையின் முடிப்புரையில் தோற்றுவாய் செய்தவாறு, இந் நூல் ஆராயும் 'இலக்கண வேறுபாடு'' என்னும் பகுதியினை ஆராய்வாம். அறிஞர்கள் ஈண்டுக் கூறுவனவற்றைச் சீர்தூக்கி உண்மை துணிந்து உரைப்பார்களாக.

இந்நூலாசிரியராகிய திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டி யாரவர்கள், ''பெரும் புலவராகிய பரணர் தம் செய்யுட்களின் அமைதி, தொல்காப்பியத்திற்கு மாறுபடுகின்றது .... உயர் திணைப் பெயர்களில், இரண்டாம் வேற்றுமையுருபு விரிந்தே வருதல் வேண்டும் என்பது 'உயர்திணைமருங்கின் ஒழியாது வரு தலும்' (தொல் தொகை. 15) என்னும் இரண்டாம் வேற்றுமைச் சிறப்பு விதிச் சூத்திரத்தால் பெறப்படும். அங்ஙனமாகவும் பரணர் செய்யுட்களில் 'வேந்த ரோட்டிய ஏந்துவேல் நன்னன்' (நற்.270) என இரண்டாம் வேற்றுமை யுருபு தொக்குவந்துளது .... 'உருவக் குதிரை மழவரோட்டிய' (அகம்.1) என்று மாமூலர் பாடியிருப்பதும் இது போன்றதே. இவ்வாறு வருதலைக் கண்டே நன்னூலார். 'உயர்திணையிடந்து விரிந்தும் தொக்கும்' என்று இலக்கணம் அமைப்பாராயினர்'' என்று கூறுகின்றார்கள்.

கூறவே, ஆசிரியர் தொல்காப்பியனார், இரண்டாம் வேற் றுமை யுருபாகிய ஐயுருபு. உயர்திணைப் பெயரிடத்து விரிந்தே வருதல் வேண்டும் என்று விதித்தார் என்பதும், பரணர், மாமூலர் முதலிய நல்லிசைப் புலவர், அவ்விலக்கண விதிக்கு மாறுபட்டு உயர்திணைப் பெயரிடத்து அவ்வுருபு தொக்கு வரச் செய்யுள் செய்தனர் என்பதும் பெறப்படும். மேலும், அவ்வாறு வருதலே நேரிது; தொக்குநின்றவழிப் பொருள் இனிது விளங்காது என்பது திரு ரெட்டியாரவர்கள் கருத்து. இது, ''வேந்தரோட்டிய ஏந்துவேல் நன்னன்'' என்னும் அடியைப் படிக்கும் பொழுது, வேந்தரையோட்டிய நன்னன் என பொருள்

தோன்றுதல் அரிது'' என்று கூறுவதால் அறியப்படுகிறது. அன்றியும், தொல்காப்பியனார் கூறுதற்கு மாறாகப் பரணர் முதலியோர் செய்யுள் செய்தாராயினும், அச்செய்கை பிற்காலத்தார்க்கு இலக்கணமாம் என்னும் கருத்தினால், நன்னூலார், ''உயர்திணையிடத்து விரிந்தும் தொக்கும்'' வரும் என எடுத்துக் கூறினர் என்பதும் இவர் கூறியவாற்றால் தெளியப்படும். இக் கூறியவாற்றால், பரணர் செய்யுட்கள், தொல்காப்பியத்துக்கு மாறாகவும், நன்னூலிலக்கணத்துக்கு ஒப்பவும் நிற்றல் பெறப் படும்.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார் ''உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்'' என எழுத்ததிகாரத்து விதித்தவர், சொல்லதிகாரத்து ''ஆடூஉவறிசொல், மகடூஉவறிசொல், பல்லோரறியும் சொல்லொடுசிவணி, அம்முப்பாற்சொல் உயர்திணையவ்வே'' (சூ.உ) என்றும், பொருளதிகாரத்து, ''தன்னும் அவனும் அவளும் சுட்டி'' (சூ36.) என்றும் கூறிய சூத்திரங்களுள், உயர்திணைப் பெயரிடத்து ஐயுருபு, தொக்குவரக் கூறியிருக்கின்றனர், எழுத்ததிகாரத்து வகுத்த விதிக்குமாறாகப் பிறாண்டுத் தாமே கூறுதல், விதியும் செய்கையும் ஒவ்வாமை கூறலாடகிய குற்றம் ஆசிரியர் தொல்காப்பியனார்பால் எய்துவதாயிற்று. திரு. ரெட்டியாரவர்கள் அடிக்குறிப்பில் (Footnote) ''ஆடூஉவறிசொல் என்று என்று ஆசிரியர் கூறியிருத்தலின் இஃது அமையும் என்பர்'' என்று குறித்தனர் (பக். 162) இதன்கண் ''என்பர்'' எனப் பிறர்மேல் வைத்துக் கூறி யிருத்தலின் அஃது அவர்க்கும் உடன் பாடன்று என்பது துணியப்படும். மேலும் அவ்வாறு தொக்கு நிற்பக் கூறுதல் சிறவாது என்பது தமக்குக் கருத்து என்பது எய்தவே திரு. ரெட்டியாரவர்கள் 'வேந்தரோட்டிய ஏந்துவேல்' நன்னன் என்பதைப் படிக்கும்பொழுது வேந்தரையோட்டிய என்றும் பொருள் தோன்றுதல் அரிதாகின்றதென்று கூறினார் என்பதும் அறியப்படும். படவே ஐயுருபு உயர்திணையிடத்து விரிந்து வருதலே நேரிது என்பதும், தொக்குவர ஆசிரியர் தொல்காப்பியனாரே கூறினும், அஃது அவ்விலக்கண விதிக்கு முரணியதே என்பதும் திரு ரெட்டியாரவர்கள் கருத்தாம்.

இனி, நன்னூலார் ஐயுருபு உயர்திணையிடத்து விரிந்தும் தொக்கும்வரும் என்றும் கூறியது நேரிது என்று திரு. ரெட்டியாரவர்கள் கருதுவர். நன்னூலார் கூறிய கூற்றின் தகுதி நிலையினை ஆராயாது ''உயர்திணையிடத்து விரிந்தும் தொக்கும் என்று இலக்கணம் அமைப்பாராயினர்'' என்று கூறியொழிந்தமையே

அவர்க்கு அது கருத்தென்பது துணியப்படும். ஐ முதலிய வேற்றுமையுருபுகள் தம்மையேற்கும் பெயர்களின் ஈற்றில் விரிந்தும் தொக்கும் தம்பொருளையுணர்த்தும். என்பது பண்டைய ஆசிரியன்மார் அனைவர்க்கும் ஒப்ப முடிந்தது. இது வேற்றுமைகளின் பொது விலக்கணமாகும். ஆகவே ஐயுருபு தானும் இவ்விலக்கண நெறியால் தன்னையேற்கும் பெயரது ஈற்றில் விரிந்தும் தொக்கும்வரும் இலக்கணத்ததாகலின், இஃது ''உயர் திணையிடத்து விரிந்தும் தொக்கும்'' வரும் என்று நன்னூலார் எடுத்துக் கூறுவதால் பயன் என்னை? அஃறிணையிடைத்தும் இப் பெற்றியாகவே வரும் இலக்கணத்ததாகிய இதனை உயர் திணைக்கே உரியது போலக் கூறுதல் குற்றம் அன்றோ? ''சொல் பல நாட்டைத் தொல்கவி னழித்த'' (பதிற். 43) என அஃறிணையிடத்து ஐயுருபு விரிந்தும், ''காரெதிரகானம் பாடினேமாக'' (புற. 144) எனத் தொக்கும் வருதல் காண்க.

ஆகவே, உயர்திணையிடத்து ஐயுருபு விரிந்தே வரும் என்று விதித்த ஆசிரியர் தொல்காப்பியனார் ஏனை நூற்பாக்களில் (சூத்திரங்களில்) அது தொக்குவரக் கூறியதனால், விதியும் செய்கையும் ஒவ்வாமையாகிய குற்றம் அவர்பாலும், இருதிணைப் பெயரிடத்தும் விரிந்தும் தொக்கும் வரற்பாற்றாகிய ஐயுருபு, உயர்திணையிடத்து விரிந்தும் தொக்கும் என வரைந்து கூறிய குற்றம் நன்னூலார் பாலும் கிடைக்கின்றது என்பது இவ்வாராய்ச்சியால் பெறப்பட்டமையின், இவற்றுள், தொல்காப்பியத்தின் உண்மை நிலையினை ஈண்டு ஆராய்வாம்.

மக்களுடைய மனவுணர்வு நாளும் வளர்ந்து விரியும் இயல்பிற்று; அதனை வெளிப்படுக்கும் சிறப்புடைக் கருவியாகிய சொற்றொகுதியும் விரிந்து பல்கும் இயல்பினதாகும். ஆகவே அதன் முடிபு வகைகளும் பலவாய் விரிதல் பெறப்படும். அவற்றை வரைந்து, திணிந்த முடிபுவகைக்கண் அடக்கலுறின், அவ்வளர்ச்சி குன்றும். ஆகலின், அவ்வாறு பெருகிப் பல்கும் முடிபுவகைகள் அவ்வளர்ச்சி கெடாது அடங்குதற்கேற்ப, அவற்றை ஓரெல்லைக்குள் நிறுத்தி, அழகுறவைக்கும் இலக்கண விதிகள், ''பலவகையானும் பயன் தெரிபுடைய'' வாய் அமைந்திருத்தல் வேண்டும். அவை, இலேசு, உத்தி என்பன முதலாகக் கூறப்படும். அவற்றிற்கு உரைகாணப்புகும் புலவர் பெருமக்கள், அவ்வமைதியின் ஒட்பம் தேர்ந்து வேண்டுமாற்றால் அமைப்பது கடனாகும். இவ்வமைதி ''அளக்கலாகாவரும் பொருட்டாகிப், பல்வகையானும் பயன் தெரிபுடையது, சூத்

திரத் தியல்பு'' என்றும், ''சூத்திரத்துப் பொருளன்றியும் யாப்புற, வின்றியமையாதியைபவை யெல்லாம், ஒன்றவுரைப்பது உரை யெனப்படுமே'' என்றும் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறு மாற்றால் உணரப்படும். படவே, உயர்திணையிடத்தும் விரிந் தும் தொக்கும் வரும் இயல்யிற்றாகிய ஐயுருபு, தொக்குநின்ற வழித் தன்பொருளைத் தெள்ளிதின் உணர்த்தும் சீர்ப்பாடின்மை கருதி, ''உயர்திணையிடத்து ஒழியாது வருதலும்''என்றாராயி னும், தொக்குநின்று முன்னும் பின்னும் அடுத்து வரும் சொற் றொகுதியால், தன் பொருளையுணர்த்தும் சீர்ப்பாடு எய்து மாயின், அது விலக்கப்படாதாம். ஆகவே, அதனையும் அடக்குமாறு சூத்திரம் அமைந்திலதாயின். அதன் இயல்பு குன்றுதலின், அதுவும் அடங்குதற்கு. விரிந்தே வருதலும் என்னாது, ''ஒழியாது வருதலும்'' என்று ஆசிரியர் கூறுவாரா யினர். ஆகவே, அவர்பால் முன்கண்ட குற்றமின்மை பெறப்படும். அவ்வுண்மை தோன்றவே, சொல்லதிகாரத்தும், பொருளதி காரத்தும் ஒரு சில சூத்திரங்களுள் உயர்திணையிடத்து ஐயுருபு தொக்குவரக் கூறினார் எனக் கோடல்வேண்டும்.

இப்பெற்றித்தாய அமைதியொடு திகழும் இலக்கண நெறி யின் இயற்கை நலங்களை முற்றவுணர்ந்த ஆசிரியர் பரணர் முதலாயினார், தம் பாட்டுக்களில் ஐயுருபு தொக்குவரவும் பாடினார் என வுணர்தல் வேண்டுமேயன்றி, அவர் கூறியன, இலக்கண முடிபு நாட்டும் தொல்காப்பியத்துக்கு மாறுபட்டன வாம் என்றல் நிரம்பாதாம். இந்நெறிமையின் ஒட்பங்களை யுணர்ந்தே உரையாசிரியன்மாரும், இன்னோரன்னவற்றை இலேசினாலும் உத்தியாலும் பிறவற்றாலும் அமைத்துக் காட்டு வாராயினர். இவ்வியல்பு காணமாட்டாத ஆராய்ச்சியாளர் சிலர், ''சூத்திரத்துட் கூறுவனவே பொருளாவன; உரையாசிரியன்மார் உரையிற் கொணர்ந்து காட்டுவன ஆகா'' என்று கருதுவர். இக் காலத்து நம் நாட்டில் வழங்கும் வழக்குநூல் (Civil, Criminal, Constitutional and other laws of our Country) களின் அமைப் பினையும், அவற்றின் பொருள் காணும் திறங்களையும் தெரிந் துணர்ந்த அறிஞர், இலக்கண நூல்கட்கு உரைகாரர்கள் காட்டும் உரைத்திறம் அறிவின் இயற்கை நிலையொடு இயைந்ததென்றே கூறுவர். இலக்கணமும் வழக்கு நூலேயாகும்.

ஆகவே, தமிழ்ச் சொற்றொகுதிக்கட்படும் முடிவுவகை பல வும் தன்பால் அடங்கியமையுமாறு தொல்காப்பியமாகிய பேரிலக் கணப் பெருமணி நின்று திகழ்கின்றமையின், அம்மணியொளி

கொண்டு, சொற்பொருளின் நுட்பங்களை நுனித்துணர்ந்து தேர்ந்து நல்லிசைப் புலமை நிரம்பிய ஆசிரியர் பரணர் முதலாயினாரது உள்ளம், அந்நூல் நெறியே பயின்ற பயிற்சி வன்மையுடையதாகலின், அதன் கட்டோன்றும் சொன்முடிபுகள் அந்நூன் முடிபுக்குமாறாதல் கூடாமையின், அவர் உள்ளத்துப் பிறந்து சொல் வடிவுபெற்றுப் போதந்த அவர் செய்யுட்களின் சொற்பொருள் முடிபுகளும், தொல்காப்பிய இலக்கணங்கட்கு மாறுபட்டன என்று கோடல் நிரம்பாதென்பது உணரப்படும்.

இனி, பரணர் என்னும் இவ்வாராய்ச்சிநூல் கூறும்வேறோர் இலக்கண வேறுபாட்டினை யாராய்ந்து காட்டி, இக்கட்டுரையின் இப்பகுதியினை முடிக்கின்றாம்.

"பனைத்திர ளன்ன பரேரெறுழ்த் தடக்கை" (அகம்.148) என்னும் அடியில் பனைத்திரள் என்பது பனந்திரள் என வருதலே யமைதி. இது, "பனையும் அரையும்" (தொல்.உயிர். 81) என்னும் சூத்திரத்தால் அறியலாகும். ஆயின், 'ஐகார விறுதிப் பெயர்நிலை முன்னர், வேற்றுமையாயின் வல்லெழுத்து மிகுமே, (உயிர்.78) என்னும் பொது விதியான், பனைத்திரள் என வந்ததால் எனின், ஆசிரியர் பனையென்னும் சொல்லைக் குறித்து மூன்று சூத்திரங்களில் (உயிர் 81-83) சிறப்புவிதி கூறுகின்றாராகலானும், பொதுவிதி சிறப்புவிதியால் கெடுமாகலானும் அஃது அமையாது என்க. அன்றியும், ஆசிரியர் பனைக்கொடியென வருதல் கண்டு, அதனை, 'கொடிமுன் வரினே ஐயவண் நிற்பக், கடிநிலையின்றே வல்லெழுந்து மிகுதி' (உயிர்.83) என்று விதி கூறி யமைத்தாற்போல, பனைத்திரள் என வருதலைக் கூறியமைத்தாரல்லர். இதனால் பனைத்திரள் என வருதல் ஆசிரியர் கருத்தன்மையுணர்க, பனந்துணி' (புறம் 35), 'பனங்குடை' (புறம்.177) என வருதல் ஈண்டு அறியத்தகும்" என்று திரு. ரெட்டியாரவர்கள் கூறுகின்றார்கள்.

இதனால் பனைத்திரள் என்பதனைப் பொதுவிதியால் முடித்தலினும், சிறப்பு விதியால் முடித்தலே அமைதியென்பதும், பனைத்திரள் என்பது ஆசிரியர் கருத்தன்று என்பதும் அவர் கருத்தாதல் பெறப்பட்டது

பனைத்திரள் என்பது பொதுவிதியால் முடிந்ததென்றல் அமையாது என்பது திரு. ரெட்டியாரவர்களின் மேற்கோள். இதற்கு அவர் கூறும் ஏது, "ஆசிரியர், பனையென்னும்

சொல்லைக் குறித்து மூன்று சூத்திரங்களில் (உயி. 81-83 சிறப்பு விதி கூறுகின்றார்'' என்பதும், ''பொதுவிதி சிறப்பு விதி யால் கெடும்'' என்பதுமாகும்.

இவர் காட்டும் பொதுவிதி, ''ஐகார விறுதிப் பெயர்நிலை முன்னர், வேற்றுமையாயின் வல்லெழுத்து மிகுமே'' என்பது ஐகார வீற்றுப் பெயர்ச் சொற்களின் முன், வேற்றுமைப் புணர்ச்சிக்கண் வல்லெழுத்துமிக்கு முடியும் என்பது இதன் பொருள். ''பனையும் அமையும் ஆவிரைக் கிளவியும், நினையுங் காலை அம்மொடு சிவணும், ஐயென் இறுதி அரைவரைந்து கெடுமே, மெய்யவ ணொழிய என்மனார் புலவர்'' என்பது ஒரு சிறப்பு விதி பனை அரை, ஆவிரையென்னும் சொற்கள் அம்முப்பெற்று முடியும் என்பதும், அதுபோது, இவற்றுள், அரையென்பது ஒழிய, ஏனைய இரண்டின் ஈற்று ஐகாரம் தான் நின்ற மெய்யொழித்துக் கெடும் என்பதும் இதன் பொருளாகும். ''பனையின் முன்னர் அட்டுவரு காலை, நிலையின்றாகும் ஐயென் உயிரே, ஆகாரம் வருதல் ஆவ யினான'' என்பது வேறொரு சிறப்பு விதி. பனையென்னும் சொல் முன் அட்டுஎன்னும் சொல் வந்து புணரின், பனையின் ஈற்று ஐகாரம் நில்லாது என்பதும், அவ்விடத்து, ஆகாரவுயிர் வந்து, பனா அட்டு என முடியும் என்பதும் இதன் பொருளாகும். ''கொடி முன் வரினே ஐயவண் நிற்பக், கடிநிலையின்றே வல்லெழுத்து மிகுதி'' யென்பது மூன்றாவது சிறப்பு விதி. பனையென்னும் சொல்முன் கொடியென்னும் சொல் வந்து புணரின், பனைக் கொடியென வல்லெழுத்துமிக்கு முடிதல் நீக்கப்படாது என்பது இதன் பொருளாகும்.

இனி, இவ்விதிகள் செய்யும் செய்கையினை யாராய்வாம். ''ஐகாரவிறுதி'' யென்னும் பொது விதியாற் போந்த வல் லெழுத்துமிகுதி, ''பனையும் அரையும்'' என்னும் சிறப்பு விதியால் கெட, பனையென்னும் சொல் அம்முப்பெறுதலும், ஐகாரம் கெடுதலும் பெறுதல் எய்திற்று. இச்சொல், ''அட்டுவருகாலை'' யென்னும் சிறப்பு விதியால், முன்பெய்திய ஐகாரக்கேடும், (அம் முப்பறு விலக்கி,) ஆகாரப்பேறும் பெறுதல் எய்திற்று, எய்தவே ''பனையும் அரையும்' என்னும் சிறப்பு விதியால் எய்திய அம் முப்பேறு, ஐகாரக்கேடு என்ற இரண்டனுள், பின்னர்ப் போந்த சிறப்புவிதி, அம்முப்பேற்றை விலக்கியவாறு காண்க. ''கொடி முன்றரினே'' என்னும் சிறப்புவிதி, முன்னைய சிறப்பு விதிகளாற் போந்த ஐகாரக்கேடு, அம்முப்பேறு 'ஆகாரப்பேறு ஆகிய மூன்றையும் விலக்கி, பொதுவிதியால் எய்தும் வல்லெழுத்து மிகுதியினையே வற்புறுத்துவதாயிற்று. ஆகவே, ஒன்றனை

யொன்று விலக்கிப் போதரும் சிறப்பு விதிகள் தாமும் முடிவில், பொதுவிதி கூறும் முடிபினையே வற்புறுத்துதலின், அவை வருமொழி நோக்கியவாயும், நிலைமொழிக் குரியவாயும். வந்தன வாயினும், பனையென்னும் சொல்பொது விதியால் முடிபு பெறு தலை நீக்கும் வன்மையிலவென்பது பெறப்படும். படவே, பனை யென்னும் இச்சொல், பொதுவிதியால் முடிதல் அமையாது என்றல் நிரம்பாதாம்.

இந்நிலையில், விதிகளின் இயல்பினைச் சிறிதாராய்தல் இன்றியமையா தாகின்றது. ''விதியெல்லாம் எய்தாததனை யெய்து விப்பதூஉம், ஒருகாலெய்தி ஒருகாலெய்தாதாகற் பாலதனை அவ்வழியும் இகந்து படாமற் காத்து நியமமாக எய்து விப்பதூஉம, ஈரிடத்தும் எய்தற்பாலதனை ஒருமருங்கு மறுப்பதூஉ மென மூவகைப்படும்'' என்பர் மாதவச் சிவஞானமுனிவர். பொது சிறப்பு எனவரும் இருவகையும் அடங்க ''விதியெல்லாம்'' எனப் பொதுப்படக் கூறியது காண்க. இம்முறைப்படியே, ''ஐகாரவிறுதிப் பெயர்'' என்னும் பொதுவிதி 'வேற்றுமையல் வழி'' (தொகை.16) என்புழி எய்தாத வல்லெ 'ழுத்து மிகுதியினை எய்துவித்ததாக,'விசைமரக்கிளவியும்' (உயிர்.79) என்னும் சிறப்புவிதி, அவ்வாறெய்விதிய வல்லெழுத்து மிகுதியினை விலக்கிற்று. இவ்வாறு எய்தியதனை விலக்கி, ''பனையும் அரையும்'' என்னும் சிறப்புவிதி அம்முப்பேறும், ஈற்றுஐகாரக்கேடும் விதிப்ப அதன் பின்தோன்றிய ''பனையின் முன்னர்'' என்னும் சிறப்புவிதி, ஐகாரக் கேட்டை இகவாமற் காத்து, அம்முப்பேற்றை விலக்கி, எய்தாத ஆகாரப்பேற்றினை விதித்தது. பின்பு, ''கொடிமுன்வரினே'' என்னும் சிறப்புவிதி, முன்னைச் சிறப்பு விதியால் காக்கப்பட்ட ஐகாரக் கேட்டையும், ஆகாரப்பேற்றையும் விலக்கி, பொதுவிதி யால் எய்தியதனை இகந்து படாமற் காத்தது; இவ்வாறு, பொதுவிதியால் முடிந்ததனையே, குறித்து வருகிளவி மேல் வைத்து முடித்ததனாற் பயன்,பனையென்னும் சொல், இக்கூறிய சிறப்பு விதிமுடிபேயன்றி, பொதுவிதியால் முடிபுபெறினும அமையும் என்பதாம். இப்பொருள்கோள், எடுத்தோத்தும், இலேசும் இல்வழி உத்திவகையாலும் பிறவாற்றாலும் அமைக்கப் படும் மரபு கருதி.''பனைத்திரள்'' என முடிவதனை ''கொடிமுன் வரினே'' என்ற சூத்திரத்து, ''அவண்'' என்ற இலேசினால் உரைகாரர்கள் அமைத்து முடித்தனர், இந்நெறியெல்லாம் ஆசிரியர் தொல்காப்பியனார் முதலாயினார் காலத்தேயே நம் நாட்டில் நிலவி வந்தனவாகலின், பரணர் முதலிய நல்லிசைப் புலவர்க்கு உடன்பாடேயாம். ஆதலின்,அவர்கள்,இவ்விலக்கண நெறிக்கு மாறுபட்ட முடிபு வகுத்தல் கூடாமையின், ''பனைத்

திரன்'' எனப் பரணர் கூறியது தொல்காப்பியத்துக்கு மாறு பட்டதன்றாம் என்று கொள்ளல்வேண்டும்.

இனி, திரு. ரெட்டியாரவர்கள், ''பொதுவிதி, சிறப்புவிதி யால் கெடும்'' என்று கூறுகின்றனர். மேலே ஆராய்ந்துகாட்டிய வற்றால், சிறப்புவிதிகளால் பொதுவிதி கெட்டழியாது, ஒராற் றால் வற்புறுத்தப் பெற்றமை புலனாமாகலின், அவர் கூறுவது பொருந்தாமை பெறப்படும் மேலும், சிறப்பு விதிகளால், பொதுவிதிகள் கெடுவது உண்மையாயின் ஆசிரியன்மார்பொது விதி வகுத்துக் கூறல் பயனில கூறலாம். அல்லதூஉம், பொது விதிகள் பொருள் பலவற்றிற்குப் பொதுவாகிய இலக்கணம் கூறுவனவாகலின், ஒவ்வொரு பொருளினும் தனித்தனிநிற்கும் சிறப்பிலக்கணம் கூறிச்சேறல் முடியாதாம். ஆகவே, அவற் றைத் தெரிந்துணர்தற்காகவே சிறப்பு விதிகள் தோன்று கின்றன. பொதுவிதி கூறும் பொதுவிலக்கணம் இலக்கிய மெங்கும் பொதுவாய் நிரம்பி நிற்றல்போல, சிறப்பிலக்கணம் நிரம்பி நில்லாது என்பது இலக்கண அறிஞர் எல்லார்க்கும் ஒப்ப முடிந்த வுண்மையாகும். ஆகவே; பொதுவிதி பரந்த பண்புடையதென்றும், சிறப்புவிதி அன்னதன்றென்றும் தோன்று தலின், சிற்றெல்லைத்தாகிய சிறப்பு விதியால், பேரெல்லைத் தாகிய பொதுவிதி கெடுமென்று கூறல் நிரம்பாமை பெறப்படும். அல்லதூஉம், மேற்காட்டிய விதிகள், எய்தாதனை எய்து வித் தலும், எய்தியதனை ஒருமருங்கு விலக்குதலும், எய்தியது விலக்கிப் பிறிதொன்று வகுத்தலும், முன்னர் விலக்கியதனையே ஓராற்றால் எய்துவித்தலும் செய்யக் காண்கின்றோமேயன்றி, பொது விதியைக் கெடுத்து, அது தனக்குரிய இலக்கியங்களின் மேற் செல்லாவாறு தடுப்பதனைக் காண்கிலோம். சிற்றெல்லைத் தாகிய சிறப்புவிதி, பொதுவிதியை விலக்கலுறின், தன்னல்லைக் கண் அஃது எய்தாவாறு விலக்கி, ஒழிந்தவற்றின் மேற்சேறற் கண் அதனை விலக்குதல் கூடாமையின், பொதுவிதி சிறப்பு விதியாற் கெடும் என்றல் அமையாமை காண்க. ஆசிரியர் மாதவச் சிவஞான முனிவரும், ''பொதுவிதி ஆயிரம் கூடினும் விதந்தெடுத்தோதும் சிறப்புவிதி ஒன்றானே விலக்கப்பட்டு, அஃது ஒழிந்தவற்றின் மேற்செல்லும்'' என்றே கூறியருளினர். ஈண்டும் முனிவர் பெருமானார், பொதுவிதி சிறப்பு விதியால் விலக்கப்பட்டுக் கெடும் என்னாது, ''அஃது ஒழிந்தவற்றின் மேற் செல்லும்'' என்றே கூறியிருத்தல் காண்க.

இனி, திரு. ரெட்டியாரவர்கள் ''கொடிமுன்வரினே'' என ஆசிரியர் விதந்தோதியதுபோல, திரள் என்பதனையும்

ஓதாமையின் பனைத்திரள் என்று வருதல் அமைதியன்று என்கின்றனர். ''பனையின் முன்னர்'', 'கொடிமுன்வரினே'' என்ற சிறப்பு விதிகள், வருமொழி நோக்கி எழுந்த செய்கை கூறுவன வாகலின்,'பனையுமரையும்'என்னும் சிறப்புவிதி நிலைமொழிக்கே யுரித்தாயிற்று. ஆகவே, அச்சிறப்புவிதிக்கண், ''நினையுங் காலை அம்மொடு சிவணும்'என்பதற்கு, ''வினை யெனப்படுவது வேற்றுமை கொள்ளாது நினையுங்காலைக் காலமொடு தோன்றும்'' (சொல். வினை. 1) என்றவிடத்து, ''ஆசிரியர் சேனாவரையர் ''நினையுங்காலை'' என்பது பற்றிக் கூறியது போல, ஈண்டு, பனை யென்னும்சொல் அம்முப்பெறாது முடிதலும் உண்டு; அதுவும் ஆராயுங்கால், அம்முப்பெற்று முடிதற்கண் நீக்கப்படாது என்றற்கு ''நினையுங்காலை'' என்றார் என்று கூறிக்கொள்ளல் வேண்டும். கொள்ளவே, ''பனைத்திரள்'' ''பனைப்போழ்'' (புறம். 22) என்பன பனந்திரள், பனம்போழ் எனமுடிவது தோன்றும். தோன்றவே பொதுவிதியால் அம் முப் பெறாது வல்லெழுத்துமிக்கு முடிவனவும், அது பெற்று முடியும் என எய்தியதனை ஒருமருங்கு விலக்குதற்கு வருமொழி குறித்த சிறப்புவிதி யெழுந்தனவாகலின், அவ்வுண்மை காணாது, திரள், போழ் என்பன எடுத்தோதாமையின், தொல்காப்பியத்துக்கு மாறுபட்டன என்றல் நிரம்பாதாம். நச்சினார்க்கினியரும், நன்னூலாரும், உறழ்ச்சி முடிபு கூறுதல் காண்க. ''இரும்பனை வெண்டோடு'' (புறம்.45) ''பனைநுகும்பு'' (புறம்.249) எனப் பிறாண்டும். பனையென்னும் சொல், அம்முப்பெறாமை முடிதல் காண்க. இவையனைத்தையும் ஆசிரியர் எடுத்தோதாமையின், தொல்காப்பியத்துக்கு மாறுபட்டன என்றல்வேண்டும். அன்றி, ஆசிரியர் தொல்காப்பியனார், பரந்துபட்ட வழக்கினவாய்வரும் இம்முடிபுகளை அறியாது கூறினர் என்றல் வேண்டும். பெரும் புலவர்கள் இலக்கணவிதிகட்கு அடங்கியிராது, தம்கருத்தின்படி செய்யுள் செய்வர் என்னும் துணிபு கொள்வதாயின், அக்கொள்கை சிறுபான்மையாமேயன்றிப் பெரும்பான்மையன்மை, வரலாற்று நெறிக்கண் இனிது உணரப்படுதலின், பெரும்பான்மைத்தாகிய இம் முடிபு அந் நெறியின் பாற்படும் என்று கோடலும் பொருந்தாதாம். மேலும், குறித்து வருகிளவிகள் அனைத்தையும் எடுத்தோதி அமைக்கலுறின் இலக்கண விதிகள் வரம்பின்றிப் பல்கும். ஆகவே, எடுத்தோதாமைபற்றி, இதனை மாறுபட்டதெனக் கோடல் நிரம்பாமை பெறப்பட்டது, ''பனைக் கைமும்மதவேழம் உரித்தவன்'' எனத் திருநாவுக்கரசு சுவாமிகளும் கூறுதல் காண்க.

இக்கூறியவாற்றால், பொதுவிதியின் பாந்தபண்பின்கண் அடங்கி, சிறப்புவிதிகளின் சிற்றெல்லையைக் கடந்து நிற்கும் இலக்கிய நெறிபற்றி ஆசிரியர் பரணர் முதலாயினார் காட்டிய சொன் முடிபுகளை, தொல்காப்பிய இலக்கணவிதிக்கு மாறு பட்டனஎன்று கோடல் நிரம்பாதென்பது கூறியவாறாம். இவ் வுண்மை இக்காலவழக்கு நூல் விதிகளின் அமைதியினை அவ்வப் போது உயர்நீதி மன்றங்களில் (High Courts) சான்றோர் வகுத்துக்காட்டும் நெறிபற்றி ஆராய்வார்க்கு இனிது புலனாகும். இனி, ''பனையும் அரையும்'' என்னும் விதி, அம்முப் பெறாதனவும் பெற்று முடிதலையே சிறப்பித்தமையின், அவை அது பெறாது முடிதற்குரிய இயைபு, ''கொடி முன் வரினே'' என்ற சூத்திரத்து சிறந்து நின்றலின், உரையாசிரியர், ''ஐயவண் நிற்ப'' என்புழி, ''அவண்'' இலேசினால் முடித்தனர் என்று கொள்ளல் வேண்டும் உயர்நீதி மன்றத்துச் சான்றோரும், ஒரு முடிபு கருதுமிடத்து, விதிகள் இரண்டு உளவாய வழி, ஒன்று பொதுவாயும், ஏனையது சிறப்பும் நேர்மையும் உடையதாயுமிருப்பின், அவற்றுள் பின்னதே கோடற்குரித்து என்கின்றனர். (When there are two articles which may possibly govern a case, the one more general and the other more particular and specific, the later ought to be applied'' H.C. Mitras Indian limitation Act. 7th Ed n page. 5.)

இனி, இக்காலத்து ஆராய்ச்சியாளர் சிலர் மேனாட்டறிஞ ரின் அறிவு நெறியினைப் பின்பற்றிச் செல்லும் விழைவு மிகுதி யால் சில பொருந்தாமுடிபிணை மேற்கொள்ளுகின்றனர். ஒன்று கூறுவேம். மேனாடுகளுள், ஆங்கில நாட்டு மொழிக்குத் தொல் காப்பியம்போல, வழக்குஞ்செய்யுளும் குறைவற ஆராய்ந்து முடிபு வகுக்கப்பட்டதோர் இலக்கணநூல் இன்று. ''வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனும் பெருவழக்குக்கு இழுக்கு முண்டோ'' என்னும் பொருளுரை அவர்மொழி மரபுக்கு அமைந்ததாகும். அவர் நாட்டுச் சான்றோர் செய்யுட்கள் பொரு ளும், ஓசையும், பிற நலங்களும் செவ்வையாய் அமைந்து விளங்கி, அவர் வழங்கும் மொழியிலக்கண நெறிக்கு மாறுபட்டு நிற்பவாயின் அம்மாறுபாடு நோக்காது, அவற்றைத் தழீஇக் கோடல் அந்நாட்டவர் மரபு. மக்கள் உள்ளத்து எழும் எண்ணங் கட்கேற்ப மொழியும், அவற்றிற்கேற்ப, காலநிலை மாறினும், பெரும்பான்மையும் தம் இயற்கைநிலை மாறாதவகையில் இலக் கணமுடிபுகளும் இயல்பாகவே வாய்க்கப்பெற்ற நம் நாட்டுச் சான்றோர், அவ்வாறு மாறுபடுவனபோலத் தோன்றுவன வற் றையும் இலக்கணத்துள் இடமும், நெறியும் அறிந்து அமைத்துக்

கொள்வர்; அவ்விலக்கண விதிகளும், எதிர்காலத்துப் பிறக்கும் சொன் முடிபுகள் இயல்பாகவே தம்பால் அடங்குமாறு அமைந் திருக்கும். மேலும், இலக்கணவமைதிகடந்து செல்வன ஒரு நெறிப்படாது, பல நெறியினவாய்ச் சென்று வரம்பின்றி நிற்கும் என்பதும். அந்நிலையில் சான்றார், சாலார் ஆகிய இருதிறத்தார் மாட்டும் வேற்றுமையின்றி வரிசையிழந்து நிற்கும் என்பதும் பிறவும் பண்டைக் காலத்துப் பெரியோர் உட்கோளாகும். பண்டைச் சான்றோர் வரிசையறிந்து செய்யப்பெறும் சிறப்பினையே சிறப்பாகக் கொண்டிருந்தனரென்பது அவர் பாடிய யாட்டுக்களால் இனிது விளங்கும். ஆதலின், மேனாட்டு அறிவுநெறி வேண்டற் பாலதேயாயினும், அந்நெறி வகையினுள், நம்நாட்டு அறிவு நெறிக்கும், மொழியமைதிக்கும், இயற்கை நிலைக்கும் ஏற்பனவே கோடற் பாலனவாம்.

தமிழ்ப் பொழில்
கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

தமிழ்

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்

மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லேம்
மாதமிழுக் கேகாந்தர் அல்ல ராகில்

அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்

தங்குபுகழ்ச் செந்தமிழ்க்கோர் அன்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்குங் கடவு ளாரே.

லக்மி பிரிண்டர்ஸ், காக்கா வட்டாரம், தஞ்சாவூர். போன்: 22141